அகஸ்தியர்

ஏமதத்துவம் என்னும்

பஞ்சகாவிய நிகண்டு

தாமரை நூலகம், சென்னை-26.

அகஸ்தியர்

ஏமதத்துவம் என்னும்
பஞ்ச காவிய நிகண்டு

பதிப்பாசிரியர்
எஸ். பி. ராமச்சந்திரன்

தாமரை நூலகம்

எண் - 7, என். ஜி. ஓ. காலனி,
வடபழனி,
சென்னை - 600 026.
தொலைபேசி எண் - 48 00 249.

தாமரை வெளியீடு : எண். 192
முதல் பதிப்பு : ஜூலை - 1997
பதிப்புரிமை பெற்றது

நூலைப் பற்றி

நூலின் பெயர்	:	அகஸ்தியர் ஏமதத்துவம் என்னும் பஞ்ச காவிய நிகண்டு
பதிப்பாசிரியர்	:	எஸ். பி. ராமச்சந்திரன்
வெளியிட்டோர்	:	தாமரை நூலகம் எண்-7, என்.ஜி.ஓ. காலனி, வடபழனி, சென்னை - 600 026.
பதிப்பு ஆண்டு	:	ஜூலை 1997
உரிமை	:	பதிப்பகத்திற்கு
நூல் வடிவம்	:	21 செ. மீ x 14 செ. மீ
அச்சுத்தாள்	:	16 கி. வெள்ளைத்தாள்
எழுத்துக்கள்	:	12 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	270 + XIV
பிரதிகள்	:	1000
பைண்டிங்	:	செக்ஷன்
நூல்விலை	:	ரெக்சின் ரூ. 100-00 சாதா ரூ. 80-00

அச்சிட்டோர்: ஸ்ரீ மகாலட்சுமி ஆப்செட், 9A, கணபதி தெரு, சென்னை-33.

தமிழ்நாடு ஆவணக்காப்பகம்,
எழும்பூர், சென்னை 600 008.

க. எண். 17124 / ஆநூ / 96. நாள் : 7. 5. 1997

அனுமதிக் கடிதம்

பொருள் : தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம் - அகஸ்தியர் ஏமதத்துவம் என்னும் பஞ்ச காவிய நிகண்டு - மறுபதிப்பு செய்தல் - அனுமதி வழங்கப்படுகிறது.

பழைய அரிய தமிழ் நூல்களைக் காப்பாற்றி, மக்கள் படிக்க வகை செய்யும் வண்ணம், அரிய தமிழ் நூல்கள் மறுபதிப்புச் செய்யும் திட்டம் ஒன்றினை தமிழக அரசு, கல்வித்துறை அரசாணை (நிலை) எண். 372 (கல்வி), நாள் 20. 4. '92ல் வெளியிட்டுள்ளது. அத்திட்டத்தின்படி, அகஸ்தியர் ஏமதத்துவம் என்னும் பஞ்ச காவிய நிகண்டு என்னும் நூலை மறுபதிப்பு செய்வதற்காகத் தாங்கள் செய்துகொண்டு மனு ஏற்றுக்கொள்ளப்பட்டு, அனுமதி வழங்கப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,
(ஒ-ம்)
ஆணையருக்காக.
12. 5. '97.

பெறுநர்,

தாமரை நூலகம்
எண்-7, என். ஜி. ஓ. காலனி,
வடபழனி,
சென்னை - 600 026.

பதிப்புரை

அகஸ்தியர் ஏமதத்துவம் என்னும் பஞ்ச காவிய நிகண்டு என்ற இந்நூல் மிகவும் சிறப்பு வாய்ந்தது.

அகஸ்திய மாமுனிவர் பஞ்ச காவியங்கள் என்பன, 1. வாத காவியம், 2. ஞான காவியம், 3. மாந்திரீக காவியம், 4. இலட்சண காவியம், 5. பூரண காவியம். இந்நூல்கள் ஒவ்வொன்றின் சிறப்பினைப் பற்றியும் தனி நூல்களே எழுதலாம்.

இந்நூல்கள் பெரும்பாலும் 'பரிபாஷை' என்ற மறைப்பு மொழியிலேயே எழுதப்பட்டுள்ளதால் சாதாரணமாகப் படிப்பவர்கள் புரிந்து கொள்வது கடினம். அகஸ்தியர் பெருமான் இந்நூல்களுக்கு ஒரு நிகண்டினையும் வழங்கியுள்ளார். ஆயினும் அதைப் புரிந்து கொள்வதும் மிகவும் கடினமாகவே உள்ளது.

சித்தர்கள் நால்வகைப் பெண்களைப் பற்றியும் அவர்களின் பிண்டங்களைப் பற்றியும் கூறுவதை பெண்களின் கர்ப்பத்தை பற்றியே கூறுவதாக தவறாகக் கருதி மயங்கியவர்களால் சித்த மருத்துவத்திற்கே பேரிழுக்கு ஏற்பட்டது எனலாம்.

சித்தர்கள் நால்வகைப் பெண்களாகக் கூறியது நாலீ வகை நிலங்களையே என்றும் அந்நிலங்களில் உண்டாகும் அண்டக் கற்களையே பிண்டம் என்று குறிப்பிட்டனர் என்றும் அண்டக்கல்லை அறுத்தால் அதற்குள்ளிருந்து கசியும் நீரே குடநீர் என்றும் மதுரை பரம்பரைச் சித்த மருத்துவர் அப்துள் ஜப்பார் அவர்கள் சென்னை மருத்துவக் கல்லூரியில் விளக்கிக் காட்டியதைக் கண்டு பலரும் வியப்பும் திகைப்பும் அடைந்தனர்.

குடநீர் என்பது கருப்பையில் வளரும் சிசுவைக் சூழ்ந்திருக்கும் நீர் அல்ல என்பதைப் புரிந்து கொள்ளவும், அதை ஏற்றுக் கொள்ளவும், பலருக்குக் கடினமாகவே இருந்திருக்கும். ஆனால் இந்த மாதிரி மூடி மறைக்கப்பட்ட உண்மைகளை வெளிக்கொண்டு வருவதும் அவற்றை நடைமுறையில் பயன்படுத்திப் பார்ப்பதும் இன்று சித்த மருத்துவத்தின் அவசரத் தேவைகள் எனலாம்.

மறைப்பு மொழி (பரிபாஷை) என்ற சிக்கலிலிருந்து விடுபட்டால் தான் சித்த மருத்துவம் தனக்குரிய பெருமையை அடைய முடியும், இன்னும் விடை காணப்படாமல் இருக்கும் மருத்துவப் பிரச்னைகளுக்கு பழம்பெரும் சித்த வைத்தியர்களிடம் விடைகள் உள்ளன. அவர்கள் வெளியிடவும் மாட்டார்கள். தங்களோடேயே அழிந்து போகட்டும் என்று பிடிவாதமாக இருக்கிறார்கள். தமிழின் பெருமையும் தமிழ் நாட்டின் மருத்துவச் சிறப்பும் உலகறிய வேண்டுமென்றால் இவர்கள் தமக்குத்தாமே போட்டுக் கொண்டுள்ள மனப்பூட்டுக்களைத்திறக்கச் செய்ய வேண்டும். உலகளாவிய ஒரு பயன் கருதி இவர்கள் உண்மைகளை வெளியிட வேண்டும்.

பணம் ஒன்றே நோக்கமாகக் கருதுவதென்றால் இவர்கள் தங்களுக்குள்ளேயே மருத்துவ இரகசியங்களை அழித்துக் கொள்வதால் மட்டும் பணம் கிடைத்து விடப் போகிறதா என்ன?

இந்தப் பஞ்ச காவிய நிகண்டில் அகஸ்திய முனிவர் பல அரிய இரகசியங்களையும் தொழில் நுட்பங்களையும் கூறுயிருக்கிறார். ஒவ்வொரு பொருளுக்கும் எட்டுப் பெயர்களைக் கூறியுள்ளார். அந்த எட்டுப் பெயர்களுமே எட்டு விதமான பண்புகளை வெளியிடக் கூடியனவாக உள்ளன.

சித்தர்களின் வைத்தியம், வாதம், யோகம், ஞானம் என்ற பெரும் கடல்களைக் கடக்க உதவும் சிறு துடுப்பாக, ஆம் துடுப்பாக மட்டுமே உதவக் கூடியது என்றாலும் இந்த நூலின் பயன் மிகமிகப் பெரியது. இந்த நூல் நீண்ட காலமாக மறைந்து கிடந்தது ஒரு பெரிய, ஈடுகட்ட முடியாத இழப்பாகும். நல்ல காலம் தமிழக அரசின் ஆவணக் காப்பகம் இதை அரும்பாடுபட்டுக் காப்பாற்றி வைத்திருந்து மறுபதிப்பு செய்ய அனுமதியும் வழங்கித் தனக்குப் பெருமையைச் சேர்த்துக் கொண்டது.

ஆவணக் காப்பகத்திற்கு நன்றி தெரிவித்துக் கொண்டு இந் நூலினைத் தமிழக மக்களுக்கு வழங்குகிறோம்.

வணக்கம்,

எஸ். பி. ராமச்சந்திரன்,

பதிப்பாசிரியர்.

பஞ்சகாவிய நிகண்டு - 800

முதற்காண்டம்

இரண்டாவது காண்டம்

மூன்றாம் காண்டம்

நாலாவது வயித்தியகாண்டம்

ஐந்தாவது காண்டம்

ஆறாவது காண்டம்

ஏழாவது காண்டம்

எட்டாவது காண்டம்

அகத்திய மகாமுனிவர்

திருவாய் மலர்ந்தருளிய

ஏமதத்துவ மென்னும்

பஞ்சகாவிய நிகண்டு

எண்ணூறு

இஃது

களத்தூர்

வேதகிரி முதலியார் - குமாரர்கள்

ஆறுமுக முதலியாராலும்

ஆயுள் வேதபாஸ்கரர்

கந்தசாமி முதலியாராலும்

பரிசோதிக்கப்பட்டுத்,

திருவொற்றியூர்

இரிசப்பமுதலியார் - குமாரர்

பரசுராம முதலியாரால்

தமது - பரப்பிரம்மமுத்திராக்ஷர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

முதற்பதிப்பு காப்பி - 600

சிவமயம்

அகஸ்திய முனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

திறவுகோலாகிய

ஏமதத்துவமென்னும்

பஞ்சகாவிய நிகண்டு - 800

முதற்காண்டம்

காப்பு

சீரான சிவனுமையாள் பாதம் போற்றி
செங்கையின்மான் மழுவேந்துந்தேவர் போற்றி
காரான கணபதியின் கந்தன் போற்றி
கனவீரபைரவர் தன்கமலம் போற்றி
வாரான நந்திமாமறையோர் போற்றி
மறைநாலும் வேதத்தின் அகண்டம் போற்றி
ஆரான தன்வந்திரி அசுவனியே போற்றி
யண்டசராசரஞ் சூழ்ந்த அம்பாள் காப்பே. 1

அண்டமெலா நிறைந்திருந்த பூரணத்தின் பாதம்
அதைச்சூழ்ந்த பிண்டரவி மதியின் பாதம்
சண்டமாருதக் கமலவிமலோர் பாதஞ்
சதுர்முகனுஞ் சரஸ்வதியின் சோதிபாதம்
விண்டமால் திருவுருவின் கருவின் பாதம்
விதித்தருத்திரன் மயேஸ்பரத்தின் குருவின் பாதம்
மண்டலங்கண்மூன்றும் உற்பவித்தோன் பாதம்
வாணிபத மகேஸ்வரி வல்லபை காப்பாமே. 2

வாணிசதாசிவ ப்தத்தின் முன்னோர் காப்பு
மகத்தான முனிவோர்கள் பாதங் காப்பு
வேணியென்ற ஆதியந்தஞ் சோதி காப்பு
மேவுசுடர் சடாதார பீடங்காப்பு
யோனியென்ற நால்யோனி பிண்டங்காப்பு
உதித்த தத்துவ ஞான மவுனங்காப்பு
பாணியென்றரு தீவுசூழண்டங் காப்பு
பஞ்சகாவியங்காப்பு சௌமியங் காப்பாமே. 3

காப்பாகும் பூரணமே சின்மயமே ஐயா
கருதுவோம் பாரிலுள்ள சித்தர்க் கெல்லாம்
சேப்பாகும் சோதியை தெட்சணாய னென்பேர்
செப்புகிறோம் புலத்தியனே சொல்லக்கேளு
நேர்ப்பாகு மிந்தநூல் நிகண்டெண் ணூறுதான்
நிலைபெருங் காண்பதினாறு லட்சத்துக்கு
தோர்பாகச் சொல்லுகிறோம் மறைந்த தெல்லாந்
தெளிவான நூல்களிட திருட்டைக் காணே. 4

காணுநீ இந்நூல்தான் காண்டமென்று
காவியமாம் நிகண்டெண்ணூறு சகலத்துக்கும்
வாணுநீ வாத காவியத்துக்காக
வசனித்தோ முதற்காண்டம் இரண்டாங் காண்டம்
மூணுநீ மூன்றாவது காண்டஞ் சொன்னோம்
முடித்தோம் நாமிதற்குள்ளே கருவெல்லந்தான்
வேணுமென்று ஒவ்வொன்றுக் கெட்டுபேரு
வுரைத்தோம் நாம் வாதத்தின் பேரைத்தானே. 5

பேரான முப்பூவின் வழலையாதி
பேசினதோர் முன்னோர்கள் புரட்டெல்லாந்தான்
மூரான முந்நாறு பாடலுக்குள் முக்கருவின்
பேரையெல்லா முடித்தோம் நாமும்
வாரான வயித்திய காவியத்துக்காக
வசனித்தோம் நாலாங் காண்டைந்தாங் காண்டம்
ஏரான விவ்விரண்டு காண்டத்துக்குள்
எடுத்தோமே மூலியொன்றின் பேரெட்டாமே. 6

எட்டான வயித்தியத்தின் கருவெல்லாந்தான்
எடுத்துரைத்தோம் இருநூறு பாடலுக்குள்
வட்டான வனமூலி மறைப்பெலாந்தான்
மகத்தான கடைசரக்கின் திருட்டெல்லாந்தான்
மட்டான பரிபாஷை யில்லாமற்றான்
பரிவாகப் பாடிவிட்டோம் இவ்வெண்ணூறில்
திட்டாந் திரத்தினிடப் பொருள் போற்காணுஞ்
சித்தர்களுக் கெல்லாங் குருநூல் தெளிவதாமே. 7

தெளிவாக மாந்திரிய காவியத்துக் காகத்
திறமாகச் சொல்லிட்டோம் ஆறாங்காண்டம்
ஒளிவான வொருநூறு பாடலுக்குள்
ஒளித்துவிட்ட மந்திரத்தினுயிரே சொன்னோம்
வளிவான உட்சரத்தின் எட்டுபேரும்
வசனித்தோம் ஐம்பத்தோர் அட்சரத்துக்குத்தான்
தெளிவான மந்திரத் தரத்தின் தொழில்களெல்லாந்
துதிபெறவே பரிபாஷைத் துகை சொன்னோமே. 8

சொன்னோமே ஞான காவியத்துக் காகத்
தொடுகுறிபோ லேழாவது காண்டஞ் சொன்னோம்
என்னோமே ஒரு கருவுக் கெட்டுபேரும்
இயம்பினோம் பிராணாய தத்துவப்பேர்
ஒன்னோமே யொருநூறு பாடலுக்குள்
ஒளிந்திட்டோ மெஞ்ஞான பாழையெல்லாங்
கென்னேரமே யெட்டுதிசை சித்தர்க்கெல்லாம்
எடுத்துரைத்தோம் இவ்வெண்ணூறு இயம்பக்கேளே. 9

இயம்பக்கேள் லட்சண காவியத்துக்காக
எட்டாவது காண்டமதும் இயல்பாய்ச் சொன்னோம்
இயம்பக்கேள் ஒவ்வொரு லட்சணத்துக்காக
நிலத்திட்டோ மெட்டுபேர் நேராத்தானும்
ஒயம்பக்கே ளொருநூறு பாடலுக்குள் ஒளித்திட்ட
பாஷையெல்லாம் ஒவ்வொன்றாய்ச் சொன்னோம்
நயம்பக்கேள் நாடியுட லெட்சணங்கள் சொன்னோம்
நாநமரையின் யூட்டெல்லாம் நாம் சொன்னோமே. 10

விரிவு நூல் தொகுப்பு வேறு

சொன்னோமே எழுபத்தி ராயிரந்தான் சொன்னோஞ்
சுருக்கி ஐம்பத்தொ ராயிரமாய்ச் சூட்டினோம்பார்
அன்னோமே முப்பத்தோ ராயிரந்தான் சொன்னோம்
அருளினோம் இருபத்தோ ராயிரந்தான் சொன்னோம்
பன்னோமே பதினாயிரந் தரந்தான் சொன்னோம்
பகர்ந்தோமே அறுபத்து நாற் கலைக்கியானம்
வன்னோமே அறுபத்து நான்குசலம் சொன்னோம்
வசனித்தோம் லட்சத்தெண் பதினாயிரந்தான் பாரே. 11

பாரப்பா ஐம்பத்தோ ராயிரத்திற்
பதினாறு லட்சநூல் பேரைச் சொன்னோம்
தேரப்பா ஐயாயிரம் பாரிதற்கெல்லாம் நீதான்
தெளிவாக நிகண்டிதுவாய்க் கொண்டு நாம்பார்
ஆரப்பா அறிவார்கள் ஐயாயிரத்தை
அதைக் குறுக்கி இவ்வெண்ணூறு அருளினோம்பார்
வேரப்பா ஐந்நூலைச் சித்தர் கண்டால்
விடாரையா ஒரு நாளுங் கைவிடாரே. 12

கைவிடார் கனகமது கொடுத்தால் ஈவார்
கலியுகத்து மாண்பரோடு ஒருக்காலுங் கூடார்
கைவிடார் பெரியோர்கள் மனத்தைக் காண்பார்
கருவாளி தனையறிந்து கைபாகங் காண்பார்
கைவிடார் பஞ்சகாவியத்தின் நேர்மை
கண்ணாடி ஒளியது போல் இந்நூல் காணும்
கைவிடார் முன்னோர்கள் இந்நூல் எண்ணூறு
கைதொழுது அடிபணிந்தாரிந்த நூலை. 13

இந்த நூலிலாவிட்டால் ஒன்று மகா
ஈசன் உத்தாரப்படி இயம்பினோம் நாம்
கந்துபரிபாஷை யெல்லாம் இதிலே சொல்வோம்
காவியத்தின் கோர்வை நூல் புரட்டைச் சொல்வோம்
பந்து பதினெண் பேர்களுட மறைப்பைச் சொல்வோம்
பாடியதோர் நூல்களிட திறப்பைச் சொல்வோம்
எந்த நூல் புரட்டெல்லாம் இதிலேகாணு
என்னாணை இந்நூலைக் கைவிடாதே. 14

(நூல் கொடுத்தால் சாபம்)

விடாதே வெளியொருக்காலும் விட்டாயானால்
விழுகுதடி தலைதெறித்து நசித்துப் போவாய்
விடாதே யிவ்வெண்ணூறைப் புலத்தியா கேள்
விருதாவிற் கர்மநோய் வினைவந்தெய்தும்
விடாதே திக்கில் நாற்றிசையும் விடவேகேளும்
விளங்கு வடதெற்கு விதுரண்டுந் தள்ளு
விடாதே ரெண்டுதிசை தனிலுந்தேறும் பேர்கள்
வீணரப்பா பொய்புளுகர் கள்ளர் தானே. 15

நாற்றிசை மனிதர்

கள்ளரப்பா தெற்கிலுள்ள மனிதரெல்லாங்
கனபுளுகு பொய்சூது கபடரையா
கள்ளரைத்தான் சேர்த்தை யானால் கொல்லுவார்பார்
கருவான நூலிதனைக் கொண்டு போவார்
கள்ளருக்குள் கோடியிலே ஒருவனுண்டு
கருவாளி தருமபுத்திரன் புண்யசாலி
கள்ளரிலே அவனொருவன் உனதிடமே வந்தால்
கருதுவாய் பனிரண்டாண்டு மனஞ்சோதித்தே. 16

சோதித்தால் வடக்கிலுள்ள மனித ரெல்லாஞ்
சூதுகன்னங் களவுமெத்த கழுத்தறுப்பாரையா
சோதித்து அவர்களைத்தான் அகலத்தள்ளு
சொற்கோணா மனிதரிலே கோடிக்கொன்று
சோதித்தால் ஒருவனுண்டு தருமபுத்திரன்
தொழிலாளி புண்யசாலி யவர்தான்பாரு
சோதித்து அடுக்கடுக்கா யிந்நூலைத்தான்
சுருதி முடிவானதிந்த எண்ணூறையா. 17

அவர்வந்து உனதிடமே சேர்ந்தாரானால்
அவர்மனமே சோதித்து பனிரண்டாண்டு
அவர்க்கீவா இந்த எண்ணூறு கருவைச் சொல்வாய்
அருளினதோர் மறைப்பெல்லாம் அவருக்கீவாய்
அவரான மேற்குதிசை மனிதர் தானும்
அருளினோஞ் சூது கன்னங் கபடோவில்லை
அவரான மனிதரெல்லாம் பேதைமான்பர்
அனைவர்க்கும் ஈவிரக்கந் தயாளமாமே. 18

தயாளமென்று மனிதருக்கும் அறிவேயில்லை
தரணியிலே அதுவதிகமேற்கு ராசியந்தான்
தயாள மென்ற ராச்சியத்தில் சித்தர் மெத்த
தருவான மனிதருக்கு அறிவிருந்தால்
தயாளமென்ற வெகுசித்தர் தேறுவார்கள்
தான் தேறுங் கன்னடியர் அநேகம்பேர்தான்
தயாளமென்ற அறிவிருப்போன் உனதிடமே வந்தால்
தருவிப்பா இந்த எண்ணூறு கருசொல்வாயே. 19

சொல்லுவாய் மறைத்த தெல்லாம் சூட்சமாகச்
சூட்டுவாய் பலகலையும் அவர்க்கு நீயும்
வெல்லுவாய் கிழக்கு திசை மனிதரெல்லாம்
வெகுகல்வி அறிவுடையோர் விவேகமுள்ளோர்
சல்லுவாய் தானதர்மம் புண்ணியஞ் செய்வோர்
சமீப தேவதைக்கு வணக்கஞ்செய்வோர்
அல்லுவார் ஐயாயிரத்தி லொருவனுண்டு
அறிவான பரிபாஷை அறிவான் பாரே. 20

நால் சாதி கரு- பிர்மகுலக்கு

அறிவதற்கு உனதிடமே அவர்தான் வந்தால்
அருளுவாய் இந்த எண்ணூறு அவர்க்கேயீவாய்
அறிவதற்கு முப்பூவின் பொருளைச் சொல்வாய்
அஷ்டமா சித்தாடக் கருவே சொல்வாய்
அறிவதற்குக் கற்பமதின் பாகம் சொல்வாய்
அருளுவாய் வாசிநிலையோகம் சொல்வாய்
அறிவதற்கு நாலுதிசை மனிதர் சேதி
அருளினோம் புலத்தியனே அடவிதாமே 21

பிர்ம குலம்

அடவான நாற்சாதி கருவைக் கேளு
அருளினார் முன்னோர்கள் மறைத்த சூட்சம்
பிடவான பிரமகுலங் கருவெடுத்தால்
பிலவசியம் யோக சித்தி பிண்டத்தாலே
மடவான மாதீன்ற தலைச்சனாலே
மாற்று நாற்பத் தெட்டாந் தலைச்சனாகும்
எடவான க்ஷத்திரிய குலத்தின் மாது
இடைச்சனப்பா அவளின் விடச்சனாமே. 22

க்ஷத்திரியர்-பிண்டம்

நாமென்ற பெண்ணிடைச்சன் ஆனுமாகும்
நவிலுவோம் வெகுவசிய மவுனமாகும்
ஆமென்ற பிண்டம் ஆவதனால ஐயா
ஆடலாந் தொண்ணூற்றால் மாற்றமாகும்
பேமென்ற பிண்டமே வழலையாதி
பெண்ணடியே பூநீறு சவர்க்காரந்தான்
மாமென்ற மாதுக்கன்னி பிரவடை ஆனாக்கால்
மது நாத மயங்காதே தனிச்சா றாமே. 23

வைசியர்

கனியான வைசியகுல மாதேகேளு
கருவாகும் பெண்ணடிதான் பிண்டமாதி
அனியான தலைச்சன்அவளீன்ற பிண்டம்
அது சாதி ஆண்பெண்ணும் இரண்டுமாகும்
பெனியான பிண்டத்தால் பெலவசியமாகும்
பேரான மெய்ஞ்ஞானம் பெலவசியமாகும்
வனியான பிண்டமதே வழலையாதி
மாப்பிண்டம் இடித்ததுவே பாவேபூநீர். 24

மாவென்று மயங்கினார் உலகத்தோர்கள்
மண்ணுமேல் விளையும் உப்பை வழலையென்பார்
நீயென்றும் உயிராச்சே நீ மண்ணாச்சே
நிணமாச்சே ஆதியந்தம் நீயேயாச்சே
ஆவென்ற கருவாச்சே எண்சாணாச்சே
அதிலெடுத்த வதிலை நீறாச்சே
தாவென்றும் உனது சடம் தனந் தானாச்சே
சாகிறதும் பிறக்கிறதும் உனதாலாச்சே. 25

கருங்கோழிமுட்டை

உனதுருவால் சகலகலை அறிவுண்டாச்சு
உருக்கரும் உட்கருவும் உனதேயாச்சே
உனதுருவால் முடியாச்சு தலையுண்டாச்சு
முடிதனிலே பஞ்சகர்த்தா ளாதாரமாச்சு
உனதுருவாற் சவர்க்கார காரமாச்சு
உனது சடம்கைகாலு கண்மூக்காச்சு
முனதுருவால் விந்தாச்சு உடலதானாச்சு
மூலமென்ற தொண்ணூற்றாற் கருவியாச்சே. 26

கருவியிலே யுருவுபற்றிக் கருவுண்டாச்சு
தருவான உருவதுவே சொரூபமாச்சு
கருவியென்ற சுரோணித்தில் விந்துவீழ்ந்து
கருவாகி திரண்டெழும்பிக் கடுஞ்சூலாகி
கருவியிலே யுருளை யென்ற முட்டை போலாகி
கனத்த கருவாகு நாள் காண்பீராகில்
கருவியிலே நீயறிந்து மருந்தே யூட்டிக்
கல்லென்ற பிண்டக்கல் கருவைவாங்கே. 27

பிர்மக்கல்

கருவான மூன்று திங்கள் கருவே பார்த்தால்
கருங்கோழி கன்னிமுட்டை அதுபோற்காணும்
கருவான தெள்ளைக் கல்லதற்கு உண்டாச்சு
காமரதி சூரியனுஞ் சந்திரனு மாச்சு
கருவான அரனுரைத்த மொழியைக் கேளும்
கருதினாற் பிர்மக்கல் கற்பமென்றார்
கருவான அக்கல்லும் ஆர்தான் காண்பார்
கலியுக மெல்லாம் அதுவே காணலாமே. 28

ஆமேதான் அக்கருவும் லபியுள்ளோர்க்கு
அரைநொடியி லெய்துமது அகத்தியனுஞ் சொன்னேன்
மாமேதான் கர்மமென்றும் பேருண்டாச்சு
மகத்திலே விளையுங் கருக்கல்லே யாச்சு
காமேதான் காகமென்றும் அகமுண்டாச்சு
காமகரு கல்லென்றும் அற்குண்டாச்சு
வேமேதான் கருங்காகம், உருவது போலாச்சு
மேலெல்லாம் மூன்றரைக் கோடி ரோமமாச்சே. 29

வெள்ளிக்கு

ஆச்சுதே யிந்நூல் தானென்னூற் பீடம்
யாருக்குங் கிடையாது அரிதான நூலு
வாச்சுதே தனங்கோடி ஈந்தாலுந் தான்
வாராது ஒருக்காலும் வந்துதானால்
காச்சுதே தாய்தகப்பன் செய்த பாக்கியம்
கருவுக்குள் விந்துத்தன யோகராசி
வேச்சுதே இந்த எண்ணூறு வெகுபதனம்
வெளிவிடா திந்நூலை நீயடக்கம் பண்ணே. 30

பரவெளிவைசியகுல பிண்டம்

அடக்கமாம் வெளிக்கருவை விளம்பவேகேள்
ஆருக்கும் வெளிவிடாதென்மேல் ஆணையப்பா
அடக்கமாம் வைசியகுல பெண் பிண்டத்தால்
ஆடலாம் நூற்று நாற்பத்து நாலுமாற்று
அடக்கமாம் பிண்டமதின் மாவினாலே
ஆதியென்றும் பேராச்சு அந்தமாச்சு
அடக்கமாம் பரவெளியும் அதற்குண்டாச்சு
ஆகாச வெளியென்று மதற்குண் டாச்சே. 31

உண்டான பரவெளியை யார்தான் காண்பார்
உள்மூலம் புறமூலம் மும் மூலமாச்சு
உண்டான விந்ததுவே அகார மாச்சு
உள்மூலம் அடியென்றும் பேருண்டாச்சு
உண்டான நாதமதே உகாரமாச்சு
உடன் சேர்ந்த புறமூலம்தற் அகுண்டாச்சு
உண்டான நடுவென்றும் உயிர்தானாச்சு
ஓகோகோ பிண்டமென்றும் ஓங்காரமாச்சே. 32

காரமென்றும் பிண்டமது ஓங்காரத்தால்
கருவியெல்லா முடியாச்சு கருதானாச்சு
காரமென்ற சடலமெல்லாம் உப்புண்டாச்சு
கருவியெல்லாஞ் சாரமதாய் மாவேயாச்சு
காரமென்ற உப்பதனால் அப்புண்டாச்சு
கருவான பாண்டமதில் செயநீராச்சு
காரமென்ற சுரபாண்ட கண்ணீர்
கருவியிலே சுத்தசலப் பனிநீராச்சே. 33

பனியான மேகசலம் எங்கே என்றால்
பாலகன்தான் கருப்பற்றித் திரளும் போது
பனியான தாயுண்ட சாரமெல்லாம்
பனிக்குடம் போற் பாலகன்றான் அருகிருக்கும்
பனியான பாலகன்றான் விழுமுன்னாகப்
பனிக்குடமாக் கருவுகொடி பரிவாய்வீழும்
பனியான பனியறிவார் யாருமில்லை
பனியிருக்கும் எண்சாணும் உடம்பிதாச்சே. 34

உடலான சரீரமதின் ரசனை யெல்லாஞ் சேர்ந்து
ஒரு முழந்தான் உமையதுபோல் உருவுண்டாகி
உடலான பையதிலே கமலம் போல்
ஓரிலைத் தாமரைத் தண்ணீர் உருயிருண்டாகி
உடலான தண்ணீரைச் சலமதாகி
ஒருமுலைப்பால் நீராகச் சுத்தசலமாகி
உடலான சுத்தசல கெங்கையாகி
உடலுக்குள் சலாநிதியும் உண்டதாச்சே. 35

உண்டான சலாநிதியை யார்தான் காண்பார்
உடலறிந்த தத்துவங் கண்டோர் அவரேகாண்பார்
உண்டான மூலமதை யாருங் காணார்
ஊர்தோறுந் திரிந்தலைவார் உலுத்தமாண்பர்
விண்டாலுங் கண்டிடார்கள் ஒருக்காலுந்தான்
விருதாவிற் சுட்டலைவார் வீணர்கோடி
கண்டாலும் பேசார்கள் கருவறிந்தோர்
காணவிந்த நிகண்டெண்ணூற் கருவைக்காணே. 36

கருவான சூத்திரகுல பிண்டத்தாலே
கனவசிய முத்திசித்தி சித்தனாவார்
கருவான சூத்திர குலமாது ஈன்ற
கன்னிப்பெண் ஆணாகுங் கலக்கமில்லை
கருவான பெண்ணடிதான் ஆதிமூலம்
கருவான உருவந்த வழலையாதி
கருவான சூத்திரகுல வம்மிசத்தில்
கருப்பேதம் இல்லையப்பா காணுகாணே. 37

(சூத்திரகுல பிண்டம்)

காணுகின்ற பிண்டமாக் கருவினாலே
கருவாச்சு உருவாச்சு காரமாச்சு
காணுகின்ற மாக்கருவே பூநீ றாச்சு
கல்லென்ற சவுட்டுப்புச் சாரமாச்சு
காணுகின்ற மாவதனைச் சுத்தசலம் விட்டுக்
கரைத்து வன்னியடுப்பேற்றி ரவியில் பத்துமுறைதான்
காணுகின்ற அதையெடுத்துப் பார்த்தீராகிற்
கடுங்கார உப்பாச்சு கல்லுப்பாச்சே. 38

(பிண்டம் 16-க்கு விபரம்)

உப்பான அப்புசலம் விட்டே மத்தி
ஓர்ரவியில் வைத்திடவே ஜெயநீராச்சு
உப்பான சூத்திரகுல வம்மிசத்தில்
ஓகோபார் பிண்டமே சாதியாகும்
உப்பான தலைச்சனிலே மாற்றுபத்து
உருவான யிடைச்சனிலே பதினாறுமாற்று
உப்பான வுருமூன்றில் மாற்றிருபத்திரண்டு
உரு நாலில் இருத்து எட்டு மாற்றே. 39

மாற்றென்ன உருவைந்தில் முப்பத்தினான்கு
மாற்றதிக உருவாறில் நாற்பது தானாகும்
மாற்றென்ன உருவேழில் நாற்பத்தாறு
மகத்தான எட்டாம்பிறப்பும் ஐம்பத்திரண்டு
மாற்றென்ன உருவொன்பதில் ஐம்பத்தெட்டு
மற்றபத்தாம் பிறப்பும் அறுபத்து நான்கு
மாற்றென்ன உருபதினொன்றில் மாற்றும்
அருளினோம் எழுபதுதான் பனிரெண்டிற் கேளே. 40

இரண்டான மாற்றி தான் எழுபத்தாறு
இயம்புகிறோம் பதின்மூன்று உருவிற்கேளு
இரண்டான மாற்றதுதான் எண்பத்திரண்டு
நிலைத்த பதினான்கு உருவிலெண்பத்தெட்டு
இரண்டான பதினைந்து உருவில் மாற்று
இயல்பான தொண்ணூற்று நாலதாகும்
இரண்டான பதினாறும் பெற்றுவாழ்வார்
நிச்சயமாய்ச் சொல்லிவிட்டோம் நூறு மாற்றே. 41

(முதற்றிங்கள்-இரண்டாந்திங்கள்)

நூறான பதினாறு மட்டுமாகும்
நுண்மையப்பா சூத்திரகுல பிறப்பதாகும்
காறான ஒருதிங்கள் கருவைக்கேளு
கலங்கிருக்கும் இளநீர் போல்வழலைக்காகா
வாறான அவ்விளநீர் தொழிலுக்காகும்
மற்றிரண்டு திங்களிலே செயநீர்க்காகும்
பாறான பசுமை நிறம் கருப்பற்றாது
பசளையென்ற திராவகத்துக் கூடும்பாரே. 42

திங்கள்

கூடான மூன்று திங்கள் கருவைக் கேளு
குருவண்டு நாபியது கருவேயாகும்
கூடான விளநீரின் வழுக்கை போலாங்
குருவான வழுக்கையின்மேல் சவ்வுண்டாச்சு
கூடான சவ்விதுவே கோழிமுட்டைக்
குருவிந்து நாதமுந்தான் இரவுதனிற் சேர்த்து
கூடான பரப்பிரம சுருபமாகிக்
கூறினதோர் நாதசத்தி ரூபமாமே. 43

ரூபமென்ற ஆகாசவெளி தானாகில்
உலகசத்த சாகரமும் அதற்குள்ளாகில்
அரூபமென்ற பீறிதிவு அப்பு தேய் வாய்வு
ஆகாசத் தோடைந்துருவும் அதற்குள்ளாகி
சுரூபமென்ற மூலாதாரம் சுவாதிட்டானம்
சுருதிமணிபூரகம் அநாகதம் விசுத்தி
கருவமென்ற ஆக்கினையோடு ஆறுஞ் சேர்ந்து
கருவி கரணாதி தொண்ணூற்றாறு மாமே. 44

ஆறான ஆதாரம் அதற்குள்ளாகி
ஐயுங் கிலியுஞ் சவ்வுமென்று மூன்றுமாகி
ஓறான ஓம் நமசிவாயமாகி
ஓரெழுத்தாய் மறிமென்று முயிருமாகி
மாறான மண்டலஞ் சூழகண்டமாகி
மதியாகி உருளையென்ற ரவிதானாகி
பேறான ஓங்காரம் வில்வளைத் தாப்போலே
பிறைமேகஞ் சூழ்ந்தது போல் பிறவியாச்சே. 45

சமாதி கல்லுப்பு

பிறவியாம் மூன்று திங்கள் அண்டமாச்சு
பேசாத ஊமையென்றும் பேருண்டாச்சு
பிறவியாம் வெள்ளைக்கல் பிரமமாச்சு
பேர் பெரிய வெண்காரம் அதுவேயாச்சு
பிறவியாம் அகமாச்சு பூர்வமாச்சு
பேசின்னதோர் விஷக்கல்லும் அதுதானாச்சு
பிறவியாய் கல்லுப்பு விதித்தவீடு
பிறமூல சமாதியிலே பிறந்ததாமே. 46

பிறந்ததொரு வீடதிலே சமாதியாச்சு
பிறமூலம் விஷக்கல்லும் அதிலுண்டாச்சு
பிறந்த திங்கள் மூன்றினுட பெருமை பேசார்
பேசாத ஊமையென்று கல்லைப்பேசார்
பிறந்த சொரூபத்திலெடுத்த வழலையாதி
பேர்பெரிய அண்டபிண்டம் விந்துநாதம்
பிறந்ததொரு மூன்று திங்கள் பெருமை சொன்னோம்
பேரான நாலுதிங்கள் கருவைக்கேளே. 47

நான்கு திங்கள்

நாலான சுரோணிதத்தில் விந்து வீழ்ந்து
நல்லபனி நீரதுபோ லருவிப்பாய்ந்து
வேலான நாதவிந்தும் ஒன்றாய்ச் சேர்ந்து
வேலிபோல் வளர்ந்து கட்டி விந்துமுத்தி
தாலான தயிரு போலாய் நிறமதாகி
தத்துவம் போல் மேற்றோலு சவ்வுண்டாகி
ஆலான செம்மருந்து அண்டம் போலே
அது உருளைக் கருவாகிக் கல்லதாகி. 48

கல்லான கல்லுக்குள் கருவுண்டாகி
கண்மூக்குச் செவிகாது காலுண்டாகி
கல்லான கல்லதிலே கையுண்டாகி
கருவிகரணாதிமுதல் பூதமாகி
கல்லான ஆதாரம் ஆறுண்டாகி
கனபூத பஞ்சாதி யூமையாகி
கல்லான ஓங்கார வகாரமாகிக்
கருவாகி யுருவாகி உகாரமாமே. 49

உகாரமென்ற அட்சரமே நாதமாகி
உருவான வகாரமதே விந்துவாகி
உகாரமென்ற ஓங்காரம் சவ்வதாகி
உருளையென்ற சவ்வது மேலண்டமாகி
உகாரமென்ற அண்டபிண்டம் ஒன்றாய்ச் சேர்ந்து
உபானவாய்வு வபானவாய்வு சமானவாய்வு
உகாரமென்ற இம்மூன்றால் பையுண்டாகி
ஒருமுழந்தான் பைக்குள்ளே உறவதாமே. 50

உருவான நாலுதிங்கள் பிண்டமாகி
ஒருவரறியாத கருவுதக மாகி
உருவான பிண்டமதே சைலமாகி
உபமாகி நிபமாகி சொரூபமாகி
உருவான ரவிமதியும் இரவியாகி
ஓரெழுத்தாய் மறிமென்றும் உதித்ததாகி
உருவான மருந்தூட்டிப் பிண்டம் வாங்கி
உருளையென்ற சவ்வுபோக்கி உரலிற்றாக்கே. 51

தாக்கியிடி மாவாக்கி மாக்கரைத்து
தருவான பனிநீரால் சலமதாக்கி
தாக்கி வன்னிமூட்டியே கொதிக்க வைத்து
தருவான ரவிபத்தும் இறுத்தீராகில்
தாக்கி யிருத்திட பத்துமுறை சென்றாக்கால்
சந்திரன்போல் நாலாங் காய்ச்சல் உப்புண்டாகும்
தாக்கி உப்பை உரலிலிட்டுப் பனிநீர் வார்த்து
சாடிமாப்போலிடித்துச் சலமதனிற் போடே. 52

அதனிலிட்டுக் கரைத்து வன்னியக்கினியை மூட்டி
அருள் பெறவே கொதித்துதென்றால் குழம்பைக்கொண்டு
அதனிலிட்டுக் குழம்பதனை ரவிபத்துநாள்
அக்கசிவை இறுத்து பத்துமுறை சென்றாக்கால்
அதனிலிட்ட ரவியுப்பாம் ஆறாங்காய்ச்சல்
ஆருமறியார்கள் இந்த உப்பின் நேர்மை
அதனிலிட்ட உப்பு அதற்கு அனேகம் பேர்கள்
அருளுகிறோம் இரண்டாங் காண்டம் அறிந்துபாரே. 53

அறிந்துபார் ஆறாங்காய்ச்சல் உப்பைவாங்கி
அதனிடைக்கு ஆண்விந்து சரியாய்ச் சேர்த்து
அறிந்துபார் வஸ்துபிறவசை நாதந்தான்
அது சரியாயிட்டு உரல்மாப் போல்சாடி
அறிந்துபார் அம்மாவைப் பாண்டத்திட்டு
அதுயிடைக்கு சுத்தசலம் வார்த்துக்கரைத்து
அறிந்துபார் வன்னியென்ற அக்கினியை மூட்டி
நன்றாகக் கொதிக்கவைத்து இறக்கிடாயே. 54

இறக்கியே பீங்கானில் இரண்டிலிட்டு வார்த்து
இயல்பான ரவிபத்து மூன்றுமுறை நாள்தான்
கறக்கியே வைத்திறுத்துப் பார்த்தீராகில்
கார்மேக செயநீரும் இறங்கும் பாரு
அறக்கியே யறுபத்துநாலுதசரக்கெல்லாம்
அதில் தோய்த்து வாட்டிடவே மெழுகதாகும்
நறக்கியே உபரசங்கள் அதிலே தோய்த்து
நன்றாக ரவியில் வைக்க மெழுகாப் போமே. 55

போமென்ற நவரத்தினங்கள் இதிலூற வைத்துப்
புகழாக இருநாழி சென்றெடுத்து
தாமென்றசரக்கு மெழு கவசங்கட்டி
தனிக்காடைப்புடம்போடச்சுன்னமாகும்
ஆமென்ற ஆறாங்காய்ச்சல் உப்புபலங் கொண்டு
அரைத்துப் பன்னீராலே வழித்துக் கொண்டு
நாமென்ற நவரத்தினத்தின் மேல்கவசஞ் செய்து
நல்லவெண் கருஞ்சீலை யேழுஞ் செய்யே. 56

செய்துவோர் நாள்ரவியில் உலர்த்தி வைத்தெடுத்து
செயம்பெறவே கோழியென்ற புடத்திற் போட்டால்
முய்துநீர் முருக்கம்பூ ஒளிபோலாகும்
மூதண்ட செந்தூரம் இதற்குப் பேரு
வெய்து ஒருசேர் செம்பு செயநீரில் தாக்கி
விளங்க ஒருநாள் ஊறவைத் தெடுத்து
கைதுமூசை யதிலிட்டு ஊருக்கி நீயுங்
கடுகளவு செந்தூரம் போட்டுப்பாரே. 57

போடயிலே மணியதுபோல் ஆடி நிற்கும்
புகழான வேதையிது யாருஞ் சொல்லார்
ஆடயிலே மாற்றுபதினாறுங் காணும்
அதிகமிந்த வெண்ணூறு வேதைபாரு
காடயிலே முன்செயநீர் இறங்கிற்றானால்
கருவான ஏழாங் காய்ச்சல் கல்லுப்பாகும்
தேடயிலே யிந்த எண்ணூற்றேட வேணுந்
தெளிவான சௌமியத்தை வைத்துச் செய்யே. 58

வைத்ததொரு பூரணமாம் அண்டபிண்டம்
மகத்தான வழலையடா ஆதியந்தம்
சித்தருக்குத் தோன்றுமடா செடலக்கூறு
செனித்துதடா கம்பியுப்பு பர்ப்பிரம்மந்தான்
கைத்தவிதி அமைப்பிருந்தால் கருவேகாண்பார்
கருவாளி கருவறிவார் உருவங்காண்பார்
எத்திசைக்குங் சீர்த்திபெறு மிந்தவெண்ணூறு
இயம்புகிறோம் ஐந்து திங்கள் பிண்டந்தானே. 59

பிண்டமென்ற அண்டமதை யாருங்காணார்
பிரமமென்ற சுருபமதை எவருங்காணார்
கண்டோமென்பார் சில பேர்கள் செகத்தில்கோடி
காசினியில் ஒருவனுண்டு கண்டோன் ஆசான்
அண்டர்பிரான் அவனாகும் விண்டிடார்கள்
ஆருந்தான் காணரிது அவரே கண்டால்
கொண்டாடி யுனைமகிழ்ந்து கருவைச் சொல்வார்
கோடான கோடிசித்து அளிப்பார்தானே. 60

சித்தென்றால் சித்தல்ல சித்தர்கோடி
சிரசுதையங் காணச் சேயுனையே காண்பார்
அத்தென்ற சித்தர் தெரிசனமே கண்டால்
அன்றுவுன்னைப் பிடித்ததுவும் அற்றுப்போச்சு
ரத்தென்றால் உனைவிடார் தேவசித்தர்
நல்வினைக்கே பரகதியை நாட்டுவார்பார்
முத்தென்றால் அதுசித்தர் மூலங்கண்டாய்
முடித்த கருஞ்சூலஞ்சாம் பிண்டம்காணே. 61

(ஐந்து திங்கள் பிண்டம்)

அஞ்சுதிங்கள் பிண்டமென்றால் பிண்டமல்ல
அத்தியானை விந்து தித்த ஐந்தாந் திங்கள்
கஞ்சுகதிர் முனைப்பாய்ந்து யோனிபிண்டம்
கதிரொளிபோல் பவனிவரும் அமுர்தம் போலாம்
நஞ்சுதின்று நெஞ்சடைத்த கர்த்தன்தானும்
நவிலுமதில் ஐந்தூரு காணியாகி
பஞ்சையறிவாரோ இப்பவனிமூலம்
பாதாள நங்கையடா ஐயுந்தானே. 62

ஐயென்ற அட்சரமாம் அதற்கு பீடம்
அறிம்மென்ற கோசமடா அகாரபீசம்
மெய்யென்ற அவ்வுக்குக் கிலியும் பீசம்
மேலான அட்சரமாங் கிறிங் கோசம்
உய்யென்ற உகாரமடா உயிரெழுத்து
உற்றெழுத்து மகாரமடா சவ்வுங் கோசம்
தையென்ற தனியெழுத்து முறியும் பீசந்
தனிப்பேசும் எழுத்து யீறிம் கோசம் உவ்வே. 63

உவ்வான அட்சரமாம் ஐம்பத்தொன்று
உயிரதற்குப் பனிரண்டு எழுத்துமாகும்
பவ்வான பலவெழுத்து வேறொன்றில்லைப்
பாடியதோர் ஐந்துதிங்கள் பிண்டமாகில்
கவ்வான இவ்வெழுத்து கால்தலையாய்க் கொண்டு
கருவாகப் பதிந்தியங்கக் காண்பீராகில்
எவ்வான வெகுசாதி யானாலென்ன
இனஞ்சரியாய்க் கூடுஞ்சதி புருஷர்தானே. 64

கூடினால் நாற்சாதிக்குள் ளேயாகுங்
கோடிகோடி யச்சாதி கூறிலையா
ஆடினால் ஆண்விந்து விள்ளலாகா
அதிற்சூடு பற்றுவிந்து ஆகாதையா
காடினால் அவ்விந்து சுரோணிதத்தில் வீழ்ந்தால்
கலிதமாம் வளர்நாதங் கருவதாகும்
தேடினால் அண்டபிண்டம் ஆருங்காணார்
தேசத்தோர் மௌனகுரு நாதமாமே. 65

நாதமென்ற விந்ததுவும் ஒன்றாய்ச் சேர்ந்து
நவகோடி ரவிசூரியன் உதித்தாற்போல
வாதமென்ற அபான வாய்வு உபானவாய்வு
மருக்குஞ் சமானவாய்வும் இதுமூன்றுந்தான்
சேதமில்லாப் பையாகிச் சுரோணிதந் திரமுண்டு
திரண்ட பைய்தற்குள்ளே நாதவிந்தூறிப்
போதமென்ற புதையலது போலமுர்தமாகிப்
பூரணச்சந்திரன் போலப் புகன்றவாறே. 66

வாறான சூரியனுஞ் சந்திரனுஞ் சேர்ந்து
மரவிபோல் ரூபமதாய் திங்கள் முதலாகும்
ஆறான சிவந்தநிற ஐங்காயமாகி
யண்டம்போல் சுரோணிதப் பையதிக ரூபமாகி
வேறான முப்பதுவும் இரண்டாமாதம்
வீறான தேன்வாய நிஷம்பானை போலாகி
நாறான கருவாகி மூன்றாமாசங்
கால்முகம் வாய்க்கண்ணு செவிமுடி யுண்டாமே. 67

முடியாகி உகாரத்தின் பீசமாகி
மூலமாம் பன்னிரண்டும் உடலதாகி
அடியாகி அகாரத்தின் செடலமாகி
ஐந்துருவுக் காணியாய் ஐம்பூதமுமாகி
வடிவாகி பிறிதிவியோடு அப்புமாகி
யுவசனித்த தேயுவாய் ஆகாச மாகி
கடியாகி காரசாரம் இரண்டுண்டாகி
கருவான பிண்டம் நாலுக்குள்ளாச்சே. 68

நாலான பொருளறியார் தாமும் மாந்தர்
நலத்த நாலாமாதங் கருவாருங்காணார்
ஆலான திங்கள் நாலில் வடிவுண்டாகி
ஐந்துதிங்கள் அண்டக்கல் விஷக்கல்லாகும்
காலான அக்கல்லைக் காணாமாண்பர்
கண்டவர் போல் அனேகமெல்லாங் கருதுவார்பார்
தோலான யோனிவந்த வழியேகாணார்
தொடுஅம்பு பாணம் வந்தவழிகாணாரே. 69

கமலமெழுகு

காணாத பொருளப்பா ஐந்தாம் பிண்டம்
கருமருந்து இட்டுவிஷக் கல்லைவாங்கி
நாணாத கல்லென்ற பிண்டந்தன்னை
நவிலைந்து சவ்வதனை நலமாய்வாங்கி
ஆணாத உரல்கல்லு அதிலேயிட்டு
அருளினதோர் முன்கலித நாதம் வாங்கி
மாணாத நாழிபடியாகச் சேர்த்து
மகத்தான பிண்டத்தோ டொக்க ஊற்றே. 70

ஊற்றியே யிருபுலகை கொண்டே சாமம்
உச்சரித்து இடித்துமா தோண்டிக்கொண்டு
ஆற்றியே மூன்றுருப்பேற் றெடுத்த மாதா
அவளுடைய பனிக்குட மார்சேர்த்துக் கொண்டு
போற்றியே பாண்டத்திட்டு அன்னீர் தன்னைப்
பூரணமே யென்று மனம் உறுதியாக
நாற்றிசையாம் மாவதனை அதிலேயிட்டு
நல்லசித்தி பெறக்கரைத்து பத்துமுறை தெளிவே. 71

தெளியவைத்துத் தெளிவத்தனைப் பாண்டத்திட்டு
சீராக வன்னியிட்டுக் கொதிக்கக் காய்ச்சி
தெளிவதனை இறக்கி ஆறவைத்துப் பீங்கான்
தெளியவொரு பீங்கானி லிட்டுநீயும்
வளியாவி பத்துமுறை ரவியில் வைத்து
அதின் கசிவை இறுத்துப் பத்தாநாளில் பார்த்தால்
பெளிய பீங்கானடியில் பாறையுப் புக் காணும்
பெலத்தவுப்புப் பாறையைத் தான்பேத்திடீரே. 72

பேர்த்திட்டுப் பாறையதைக் கல்வத்திலிட்டுப்
பேணியே கழிந்த நாதம்விந்துஞ் சேர்த்து
ஏர்த்திட்டப் பாலனுடத் தயிலஞ்சேர்த்து
பிளமாதர் முலைப்பாலுங் கூடச் சேர்த்து
பார்த்திட்ட ஒவ்வொன்றுக் கிருபலமதாகப்
பாறையதல் விட்டொரு சாமமாட்டக்
கார்த்திட்டக் கமலமெழுகா யிறுகிக்கட்டுங்
கசடருக்கு இம்முறையைக் காட்டாதே. 73

காட்டிடாய் மெழுகுதனில் வெள்ளை நாயுருவி
கருவான செந்நாயுருவி அத்திப்பாலும்
ஏட்டிடா இதுமூன்றும் ஒவ்வொன்றுக்கும்
இருபலந்தான் இயல்பாக விட்டுச்சாடி
ஆட்டிடாய் அரக்கு மெழுகும் பாரு
அனேகம்பேர் இதற்குச்சொல்ல நாவேயில்லை
நாட்டிடாய் அவ்வரக்கில் கற்பூரவள்ளி
நல்ல இலைக் கள்ளிச் சாறு பிர்ம தண்டாமே. 74

கருவண்டுநாபி

தண்டான பாலத்திலே யிருபலம் வாங்கித்
தருவான விருசாறில் நாலுபலம் வாங்கி
அண்டான விதுமூன்று மரக்கல்லிட்டு
ஆட்டுவாய் ஒரு சாமம் ஆட்டினாக்கால்
நண்டான குருவை கொண்டு வண்டேயாச்சு
நல்லகுரு வண்டென்றும் நாபியென்றும்
வண்டான வண்டென்றும் காமென்றும் பேர்
வசனித்தோம் சிவசாரப் பாஷாண மாமே. 75

சவ்வீரம்

சாரமென்றும் அதிசார மென்றும் பேரு
சங்கையில்லா அண்டசரா சரமென்றும் பேர்
ஆரமென்ற கருச்சார மென்றும் பேரு
அவரான மதிச்சார மென்றும் பேரு
வீரமென்ற சவ்வீரமென்றும் பேரு
விசிதமுள்ள திசைவீரமென்றும் பேரு
சாரமென்ற சாரசிங்கி யென்றும் பேரு
சவ்வீர மென்றதற்கு வஞ்சிப்பேரே. 76

பேரான சரக்கதுவின் மெழுகுக் கொண்டு
பீங்கானில் சுத்தவெள்ளைப் படிபால்விட்டு
நாரான நாதவிந்து நாற்பலந்தான் வார்த்து
நன்றாகக் கரமதுவால் கரைத்துநீயும்
ஆராகக் கரைக்கையிலே குழம்பது போலாகும்
அக்குழம்பை ரவியில் பத்து முறைவைத்தப்பா
பாரான கலகிறுத்தால் பசுமை நிறங்காணும்
பாடினோம் ஆறாங்காய்ச்சல் உப்பாகும்மே. 77

ஆறாங்காய்ச்சலுப்பு

உப்பான கம்பியுப்பு என்றும் பேரு
உறைந்த நாதசத்தி என்றும் இதற்குப்பேரு
அப்பான சவுட்டுப்பு என்றும் பேரு
அருளான சுயவல்லியுப்பென்றும் பேர்
கையான கடுப்பு யென்றும் பேரு
கருவான வளையலுப்பு யிந்துப்பென்றும்
செப்பார்கள் ஒருவருந்தான் செயவுப்பென்றுஞ்
செப்பினோம் ஆறாங்காய்ச்சல் உப்பின்பேரே. 78

செப்பினோம் உப்பதனைச் சீசாவிலிட்டுச்
சின்மயமாம் பூரணத்தைத் தெரிசித்தப்பா
அப்பினோம் அடிபணிந்து உப்பில் சேர்கொண்டு
ஆறாங்காய்ச்சல் உப்பதனைக் கல்வந்தாக்கி
தப்பினோம் பன்னீருரண்டு பலம் விட்டு
நாதவிந்து வொன்றாச்சேர் யிரண்டுபலந்தாக்கி
ஒப்பினோம் பூநீறு வொருபலந்தானிட்டு
ஒருசாமம் மெழுகதுபோல் உறுதிபெறத் தாக்கே. 79

தாக்கி வழித்ததனையே பாண்டத்திட்டு
தருவான பனிக்குடத்திற் சலம்படி தானிட்டு
தூக்கி மேனிச்சாற்றைப்படி தானிட்டு
தூதுவிளங் காய்ச்சாறு அரைப்படி தானிட்டு
போக்கி பொடுதலைச் சாறுஅரைப்படி தானிட்டுப்
பூமுலையாள் முலைப்பாலு நாழியிட்டு
ஆக்கி பத்துமுறை கரைத்து தெளிவதனை வாங்கி
அத்தெளிவைப் பாண்டமிட்டு வன்னியடுப்பேற்றே. 80

ஏற்றியொரு சாமமதைக் கொதிக்கவைத் தீராகில்
என் சொல்வேன் குழம்பதுவும் இந்திரகோப நிறமாம்
ஆற்றியதை இறக்கி ஆறவைத் தீராகில்
ஆவின்தயிர் போலதுவு மதுபாகங் காணீர்
சாற்றிய பீங்கான் றனிலே குழம்பதனை வார்த்து
சச்சிதானந்த பரிபூரணத்தைப் பணிந்து
ஏற்றி ஏழாங்காய்ச்சல் உப்புச் செய்வதாக
எடுத்துநீ உதயரவி காலமதில் வையே. 81

வையப்பா பூபதியே புலத்தியனே கேளு
வளமாகப் பத்திதுநாள் முழுதுமுறைதப்பாத
பையப்பா பாகம் பத்துமுறை சென்றதே யாகில்
படருமதில் கல்லுப்புப் பாரு பாரதனை
பொய்யப்பா சொல்லவில்லை யிந்தநூல் காவியம்
புகழ்பெற்ற சித்தருக்கு நிகண்டகராதி
கையப்பா வாசமலர் பரிமளங்கள் போலே
கருவாகச் சொல்லுகிறோம் இந்த நூறெட்டே. 82

எட்டான வொன்றிரண்டும் பத்தாய் நின்ற
ஏகபரி பூரணமாம் பிரம சொரூபம்
நெட்டான எவ் வுயிர்க்கும் பரமாய்நின்ற
நிகழ்ந்த விருதய கமல சகாரபீடம்
வட்டாலும் ரவிமதி வாழிதற் கீடுண்டோ
வண்மை மாணாக்களுயிர் மாய்கைப்போடு
தொட்டாலும் புருஷ சென்மம் புவியில் கோடி
தொல்புவியில் ஒருவனுக்குத் தொத்தவாறே. 83

வாறான முன்சொன்ன ரவியிலுப்பா
மாணாக்காள் அறிந்து கொள்ளும் ஏழாங்காய்ச்சல்
காறான ரவிபத்து மதின் கசிவை இறுத்தால்
காளகண்ட யேமமென்ற செயநீராகும்
சேரான பூபதியே புலத்தியனே கேளு
செயநீரைச் சீசாவில் பதனஞ் செய் நீ
தேறான சகத்தோர்கள் உண்மை யறிவாரோ
செகராஜ சுந்தரமே செப்புவோமே. 84

(வேறு)

செப்புவோம் நாமிந்தப் படியறிந்து சொன்னோம்
செய்வினையைஅகற்றிநின்றோர்க்குஒன்றேயொ ன்றுமனமாம்
இப்புவியில் யாரறிவார் புலத்தியனே கேளு
இந்த எண்ணூற் கருவறிவோர் அறிவுவா சானோர்க்கு
தப்பு ஒருக்காலுமதில் வாராதையா
தகைமை யறிந்திடுவோர் அறிவர் தரணிதன்னில்
முப்பூவை யறிந்திடுவோர் முன்னோர்க்கும் அதிக
நாலுவேதாகமத்தின் விதியறிவார் தாணே. 85

தானவன் போலிருந்த பவொளியே காணார்
தனித்த பொருள் பூரணத்தை யாருங்காணார்
நீயவனே நானீயே என்று சொல்லி
நீடுலகில் திரிவோர்கள் அனந்தங்கோடி
சேனைபதி மகராச யோகம் பெற்றோர்
செல்வ பூபதியவர்தான் சிவயோகியாகும்
ஆனவள்தான் பூமாது வசியமவர்க்கு இருப்பாள்
அளவற்ற சித்தியெல்லாம் அவர்க்கிவாள் பாரே. 86

(கல்லுப்பின் பெயர்)

பாரப்பா சுந்தரமே புலத்தியனே கேளு
பாடினதோர் ஏழாங்காய்ச்சல் உப்பு கல்லுப்பாம்
ஆரப்பா அடியென்றும் முடியென்றும் சேர்
அகாரமென்றும் உகாரமென்றும் நடுவென்றும் பேர்
ஊரப்பா ஓங்காரமெனு மூன்றுக்கும் பேர்
ஓகோகோ சிகாரமென்றும் மகாரமென்றும் பேர்
வாரப்பா வகாரமெனு மதற்குப் பேரு
வாசமென்ற கல்லுப்பும் அதற்குப் பேரே. 87

உப்பென்ற அப்புஜலம் ஊரிற்றானால்
உதிரசுக்கிலம் விந்து நாதமாகில்
அப்பென்ற வாண்விந்து சிவமேயாகில்
அதிசார உபசரமென்றதற்குப் பேரு
கப்புவென்ற கருநாபி கருவென்றும் பேர்
காரியமென் றதற்குப்பேர் வீரமென்றும்
சப்பென்ற சாரசிங்கி யென்றும் பேரு
சச்சிதானந்த வெளிஜெயநீரதன் பேரே. 88

ஏமதத்துவமென்னும்

இரண்டுபேரிதனை யெவர்காணார் பாரு
ஏழாங்காய்ச்ச லைந்து திங்கட் கருவிது பாரையா
தொண்டுபண்ணும் பெரியோர்கள் கைவிடாரிம் முறையை
தோதகமாய்ச் சொல்லிவிட்டோம் இம் முறைகேளு
அண்டு ஆறாந்திங்களது வாரணியின் மனிதர்
அவரவர்கள் ஜாதி யென்றாற் கட்டுமையா கொண்டகுமைக்
கண்டுவும்மைக் கொத்தடுமைக் கொள்வார்
குறுவறிய புலத்தியனே கூறக்கேளே. 89

(பனிநீரின் பெயர்)

கூறக்கேள் ஆறாமாதப் பிண்டமேயாகில்
கூறரிய சுக்கிரன் நாள் பிண்டமே வாங்கி
சாறக்கேள் நாதமான நீரென்றாக்கால்
சார்வான பெண்ணடியின் பனிநீரதை வாங்கி
கோரக்கேள் கோதை யிளமாது பனிநீரில்
குப்பமேனிச்சாறு படியைந்து படிவாரு
தேரக்கேள் நீரதனைக் கலக்கி ரவிமுகத்தில்
தெளியவைத்து வோர்நாட்சென் றெடுத்துப்பாரே. 90

எடுத்து அதைப்பார்த்திரே யாமாகிலையா
என்ன சொல்வேன் அதற்குப் பேர்சுத்தஜலமாகும்
அடுத்தகுடப் பனிநீரென் றதற்குப்பேர்
ஆருங் காணாத ஜலநதியென்றும் பேரு
கடுத்தழல் சங்கையென்றுங் கொங்கையென்றும் பேரு
காரமென்றுங் கருமேக ஜலமென்றும் பேர்
சடுத்தசாகர மென்றும் அப்புவென்றும் பேரு
சலாநதி யென்றதற்குப்பேர் பனிநீரதின்பேரே. 91

அதுவான சைதன்னிய நீரென்றும் பேர்
அருளுகிறோம் நாதநீரென்றும் பேரு
அதுவான வாசிநீர் வஞ்சிபனி நீரும்
மயக்கிநீர் தியக்கிநீர் காரசாரநீரு
அதுவான தேகநீர் மாசற்ற நீரு
ஆருமறியார் கல்நீரறிந்து மிருப்பார்கள்
அதுவான வையகத்திலெங்கு முண்டு அந்நீர்தான்
மாணாகர் மயங்காதே மாதீன்ற நீரே. 92
(பாடபேதம் : புதுவான சுய கன்னி நீரென்றும் பேரு.)

நீரான நீர்தன்னை உலகமதில் விண்டால்
நின்சிரசு வெடித்துதலை தெறித்துப்போவாய்
வாரான ராஜரீக மதற்கு ஏற்காது
வையகத்துக் கேற்காது சித்தராகில்
ஏரான அவர்களுக்கும் மற்றோர்க்காகா
விதியமைப்புஉள்ளவர்க்கு உடனே சித்தி
நேரான இதையறிந்து நாழிகொண்டுநீயும்
நேராக மூன்றுநாளிரு பலந்தா னாமே. 93

(மாது நீர்க்கிருதம் அறியவும்)

ஆமப்பா புலத்தியனே சீரகஞ் சேர்த்து அரைத்து
அதில் பனையின் வெட்டு கற்கண்டு சேர்த்து
ஏமப்பா இரண்டையுந்தான் தூளாகச் செய்து
எடுத்தபனி நீரதிலே இரண்டையுந்தானிட்டு
ஆமப்பா கூட்டியதை மத்தித்து மதியில்
வைத்திடவே பனிவிழுந்து மதுகிருதமாகும்
நாமப்பா மனோன்மணிதன் வாலைபூசை செய்து
நலமான மாதுபனி நீர்க்கிருதமாமே. 94

கிருதமென்ற கோடா கோடி வகையறுக் கெல்லாங்
கிருதமதுக் கீடுண்டோ எதுவுமிதுக்கிடா
விருதமென்றக் கிருதமதில் இரண்டுபலம் வாங்கி
விளங்கவே ரவிசூரியனுதிக்கு முன்பாக
நிருதமென் றுயிர்க்கிருதம் இரு போதுண்டானால்
நிராமயம் போல் மண்டலத்தில் நீ பூபதியாவாய்
எருபமென்று ஐயாயிரத்திலொருவனுக்குச் சித்தி
எய்துமென்ற கருமமெல்லாம் எய்துமவர்க்காமே. 95

எய்துமென்ற மானிடர்க்குக் கன்ம நோய்வந்தால்
எடுத்தாடுமுயிர்க் கிருதங்குன்றி யிடை வாங்கி
கய்துமென்ற ஓர்நாளுக்கோர் குன்றியாகும்
கருணைபெற வதிகால மிடைதவறா தெடுத்து
நைய்துமென்ற ஆவின் வெண்ணெய் பாக்களவு கொண்டு
நல்லவிடைக்குன்றி யெடுத்ததற்குள்ளே வைத்து
பைதுமென்ற பாவத்தால் வந்த நோய்க்குத்தான்
பாய்ச்சுவாய் பண்டிதம் பொய்வாரா தென்றோதே. 96

ஓதவே சடலமதில் உத்தநோயெல்லாம்
ஒரு நொடிக்குள் ஓடிவிடும் உண்மையிதுபாரீர்
சேதமொரு நாளும் உனக்கணுகாது பாரீர்
ஜெகராச பூபதியைச் செப்பினோமுண்மை
வாதுயிம் முறை செய்து குலகுரு வென்று
வந்தாலும் வையகத்து மானிடர் கண்மயங்க
காதமென்ற விக்கிருதங் குன்றியிடை கொண்டால்
கனயோக பூபதிபோல் ராஜயோகியாமே. 97

ஆமென்ற இக்கிருதங் கொள்ளயிலே கேளு
அதிகாரக் கறியுப்பு அதிகப் புளிப்பாகா
போமென்ற பெண்போக மாகாது பாரீர்
புணர்ச்சி செய்தாலுடற் சூடுறாமூலச்சூடுபற்றா
வேமென்ற விந்து களிலிம்பகளாகி
விரகத்தால் மேகச்சூடதிக மயலாகி
ஓமென்ற சடலமெல்லாங் காஞ்சுரைபோல் உலர்ந்து
உதட்டது தான் தடிப்பது போல் தடிக்கும் அதுபாரே. 98

கடிக்கின்ற தேகத்துக் கதிகசூடாகில்
கமவன்னி யக்கினிபோல் காங்கலதுவாகில்
செடிக்கமுன் தேகமெல்லாந் தினவது போலாகில்
சடலமெல்லாஞ் சொரிசிரங்கு காந்தல் மிகவாகி
அடிக்குமுன் தேகமது அழிந்து போகுமையா
அகத்தியன் மேலாணை படிபத்தியங் குறவாக்
குடிக்குத்துடிநொடிக்குள்ளே வெடித்துப் போம் சடலம்
துரைராச பூபதியே சொன்னோம் இதுவாமே. 99

சொன்னோமே அமுர்த சஞ்சீவி கிருதமாகும்
துடியானை பலம்போலாம் கிருதமிதனாலே
வன்னோமே ராஜயோகஞ் செய்து
வாசியோகம் பிராணயோகம் அதுவுஞ்செய்து
முன்னோமே கணயோக புண்ணியசாலிபோல
மூன்றாசைதனை விட்டுப் பரகதிக் காளாகி
அன்னோமே யறுபத்து நாலுகலை யறிந்து
ஆருமறியாம லிருப்பார்கள் பண்போரே. 100

ஓரான மாதுபனை நீரின் கிருதம்
ஓகோபார் புலத்திய னே உசிதமதுவாகும்
நேரான கிருதமதைப் பதனமாய்ச் செய்து
நின்றிடமாம் பிண்டமது கண்டு அதையெடுத்து
வாறான மாணாக்காள் மலைத்திட்டீரையா
மாது அவளீன்ற பிண்டம் முன் சொன்னதுவு மாகில்
கூறான அப்பிண்ட முடியதனை வாங்கிக்
கூச்சமயிர் சவ்வதுவின் கோறையதைப் போக்கே. 101

போக்கான போக்கதுவில் அனந்தமுண்டு பாரீர்
போக்கிதுதான் சித்தருக்கு இது குரு தானாகும்
வாக்கான அமுர்தமுனி அகத்தியன் வாக்கிதுதான்
வாலையெந்நாளும் பதினாளாக வாழ்ந்திடுவாய்
தூக்கான சேதியெல்லாம் நிறுத்து ஓரிடையாய்த்
துதிபெறவே சொல்லிவிட்டோங் கருவாளியானால்
நாக்கான யெலைகாண்பார் காலையதைக் காண்பார்
நாலாங்கால் ஐந்தாங்கால் ஆறும் ஏழுங்காணே. 102

காணும் பெரியோர்களிட அனுமதியே வேண்டுங்
கண்ணாடி முகம் பார்த்தப்பா வினை போலாகில்
வேணுமொருபுத்தி மனஞ்சகியாவல் வேண்டும்
ஓதறிவால் நல்வினையைக் கண்டடுக்க வேண்டும்
ஆணும் பெண்ணும் எந்நாளும் மருகலாகாதையா
அது தள்ளி வொளிபாழுமடித்து விஷமுண்டால்
தேனும் பழம் பாலமுர்தமுண்ட பாவனைபோல்
தித்திக்கும்அதியமுர்த முண்டார் பெரியோரே. 103

(முடிமயிர்)

பெரிதான காலென்றாற் காலு மதுவல்ல
பெலமான மண்ணடிதான் ஆருங்காணார்கள்
அரிதான அறிவென்றால் அறுபதுவும் அல்ல
அன்று உற்பவித்த மண் அடியதனைக் காணார்
எரிதான நந்தியொளி பேரொளியைக் காணார்
எங்கும் சோதி ஆதியந்தம் எவரும் அதைக்காணார்
ஸிரிதரனின் பரகதிதான் என்றல்லோ மணந்தாள்
ஜெடலாவி பிறிதிவியின் சேறுமுடவாமே. 104

(மூலையின் பெயர்)

முடியான அகங்காரமதின் முதற்கருதானாகும்
மூலவெளி சச்சிதாநந்த வெளியாகும்
அடியான படியாகும் பரவெளியுமாகும்
அந்த மெனும் ஞானவழிஆகாய வெளிதான்
குடியால மூலவெளி கைலை வெளியாகும்
குருவிருப் பாரண்ட வெளியகண்டமெனும் பெயர்
செடியான பேரண்டபேரொளியென்றும் பெயர்
செப்பினோமிந்தபடி சிரசதுவின் பேரே. 105

(முடியின் மாமிசத்தின் பெயர்)

சிரசான சவ்வதுவின் பேரதனைக்கேளு
கிக்கென்று பிடித்திழுத்தால் நாரது போல் நீளும்
நரசான நரம்பாணிக் கேவாணியென்றும்
நாதவச்சிர வாணி யென்னு மதிதப் பேரதற்கு
கரசான கலவாமலென்றும் பேரதற்கு
கருவியுட வெளிவிடுத்தா யென்றும் பேரு
அரசான அண்டசவ்வு குலசவ்வென்றும் பேரு
அருளினோம் முடியண்டச் சவ்வதுவின் பெயரே. 106

சவ்வான முடிமயிரின் பேரதனைக் கேளு
சாற்றுகிறோஞ் சலமர்ச்சாறையது கோரை
இவ்வான இப்புவியில் அரியும் பெரியோர்கள்
இங்கீத சங்கீதரோமமென்றும் பெயர்
பவ்வான பருஞ்சூரை காரையென்றும் பேர்
பாடினோமிந்தபடிபவளிவருவோர்க்கு
ஒவ்வொன உலகமதிலுண்டு வகையிதுதான்
உசித வடியழகி யென்று முடிமயிரின் பெயரே. 107

இனமான வோங்காரஞ் சூழாய் நின்ற
எழிலான பிர்மத்தாலெடுத்த கூறு
வனமான கூடாஞ்சந்நத மென்றும் பேர்
வசந்த நதிக்கரையென்றும் பெயர்
தனமான கிரியென்றும் மலையென்றும் பெயர்
சச்சிதானந்த வெளிமேருவென்றும் பெயர்
குணமான வீடாச்சே பிந்து குறியுமாச்சே
குடிவீடு முடியண்டயதீத மிதின்பெயரே. 108

வீடான முடியண்டம் விபரீதமே சொன்னோம்
விசித குணலட்சணவான் மேவுக்கொடி கொண்டு
காடான வீடதிலேயிருந்த விளம்பாலை
கண்ணுவிட்ட பாவனை போற்கசிந்த விளநீரா
தேடான தேன்வழுக்கைப் பால் வழுக்கத்
தயிர்தான் திரட்டும் வெண்ணெய் நெய்மோர்திவிரசமாகில்
நாடான அமுர்த சஞ்சீவி பூடென்பேரு
நல்ல சாம்பவி வழுக்கை முடிமுளையதின் பேரே. 109

(மூளை ஜலத்தின் பெயர்)

மூளையென்ற மூலையதின் மூலமதைச் சொன்னோம்
மூளைமாங்கிஷத்தினிட பேரதனைக் கேளு
காளையென்றும் வாளையென்றும் வேளையென்றும் பேரு
கருநாவி சூதமென்றும் பேரு
கோலையென்றும் பேரு குருவான நவநீத
பூடென்றும் பேரு பூளையென்றுங் கண்
பூளைப்பாய்ச்சி யென்றும் பேரு
புளிதமென்ற தலைமூளை மாங்கிஷத்தின்பேரே. 110

மாங்கிஷத்தில்அனேகமுண்டு போதனையைச் சொல்ல
மாளாது வானார் கால்மருவின் வீதஞ்சொன்னேன்
ஆங்கிஷத்திலுள்ள படியருவி நீரோடும்
அதுகங்கை சுத்த பனிநீரென்றும் பேரு
நாங்கிஷத்தில் நவநீத நதியென்றும் பேரு
நவிலுபர மானந்த நீரென்றும் பேரு
தூங்கிஷத்தின் சுத்த நதி மெத்த பதி யென்றும்
துங்கநதி செங்கழுநீர் மூளைஜலத்தின் பெயரே. 111

ஜலமான முடியதனை மெழுகு சுன்னமாக்கச்
சமர்த்துண்டோ புலத்தியனே சமர்த்தறிவாய்நீயும்
ஜலமான முடியாகச்சே முடியண்டமாச்சே
சகலத்துக்குங் குருவாச்சே அப்புவுப்புமாச்சே
ஜலமான காயேச்சே மலைக்காயு மாச்சே
சத்தாச்சே கல்லாச்சே வெள்ளைக் கல்லாச்சே
உலமான ஆதிக்கல் அந்தக்கல்லென்றும்
ஓகோகோ சோதிக்கல் அண்டக் கற்பெயரே. 112

அண்டமென்றால் அண்டமல்ல அகண்ட வெளியாகில்
அதற்கப்பால் சச்சிதானந்த வெளியாகில்
கண்டமென்ற பிண்டவெளியே பேரொளியுமாகில்
கைலாச வெளியுறுகில் கலந்த தென்றும் பேரு
அண்டமதற் கீடாமோ அமுத ரசமாகில்
வளியாகிப் பாடினோர் பலகலைகள் அனேகர்
தொண்டறிவாரோ இந்தஅகண்ட வெளிகாணார்
சொல்லுமிந்நூற் காவியந்தான் எட்டு நூறாமே. 113

(இளவழுக்கை)

நூறான கருவியிலே நோயணுகாதாகில்
நுணுக்கங்கள் கண்டறிவார் உண்மை இதுபாரு
வாறான மகாமுடியைக் கொண்டுசுந்தரமே
மயிர்க்கோரை சவ்வுமுதல் அதன்விஷமே போக்கி
சூறான அம்முடியைச் சுத்தப் படுத்திராய்
சுயம் பெறவே கல்லுரலில் முடியதனையிட்டு
நேரான சதிபுருஷர் சழியும் நாதவிந்தில்
நெறிதவறாதிந் நாழிமுடியதுவில் தாக்கே. 114

தாக்கிவகை சொல்லுகிறோம் துரைராஜ பூபதியே
தரணியிலே தவமறிவோர்கள் யோகசாலி
தாக்கும் இருப்புலக்கை கொண்டு ஒரு ஜாமஞ்சாதித்தால்
சடையிலே மாவது போலாகும்
தாக்குவதின் பிறகு சுத்த நாதமருந்தூட்டி
தரணிதனிலொருவர் அறியாமற் கைக்கொண்டு
தாக்குவொரு ஜாமம் சுத்த நாதமதைவிட்டு
சாடினால் இளவழுக்கைச் சாரமதுவாமே. 115

சாரமென்ற விளவழுக்கைச் சாரமதின் பெயரைச்
சாற்றுகிறோம் அதனில் ரசஞ்சாதித்தாலையா
பாரமொன்று பச்சைஇளம் நாவிப்பழச்சாறாம்
பழம் புளியின் மேரு ரசம் வாலை யென்றுபேரு
ஆரையென்ற ஆத்துமாவின் சூதமென்றும் பெயர்
அறிவின் ஒளியமுர்த மதிரசம் என்றும் பெயர்
காரமென்ற கருநாபி வீரமென்றும் பெயர்
கற்பூர கலாசத்துச் சாரத்தின் பெயரே. 116

சத்தென்றால் சத்தல்ல விடித்த இளவழுக்கைச்
சாற்றுகிறோஞ் சகலரும் அறியும் படியாக
சத்தென்றால் மரம் வழுக்கை ஆதியண்ட வழுக்கை
தலையண்டக் கருவழுக்கைக் காரசார வழுக்கை
சத்தென்றால் மேருஇளவழுக்கை யென்றும் பெயர்
ஜாதிலிங்கக் காரமென்றும் வழுக்கையதின் பெயர்
சத்தென்றால் வேகாத தலைவழுக்கை யாச்சே
சராசரந்தாங்கியிளம் வழுக்கையதின் பெயரே. 117

வழுக்கையென்றால் வழுக்கையல்ல வழுக்கையதிற்கேளு
வாலசுத்த விந்துதனில் நாழியது வாரு
வழுக்கையதிற் சுத்தவிந்து விட்டு ஒரு ஜாமம்
மரமெழுகு போல அதை வாட்டிச் சாதித்தால்
வழுக்கை யெல்லாம் போய்ச் சுத்தமெழுகு ஐங்காயமாகும்
வசனித்தோம் பரிபாஷையறிந்து வறிவதனால்
வழுக்கைக்கு அனேகம் பேரென்னாற் சொல்ல
எளிதோ மக முடியினண்ட மெழுமகிமை யதையறியே.118

அறிவைங்காய அண்டமெழு அகண்ட மெழுகென்றும்
ஆதிமெழுக் கந்தமெழுக்கந்தமெழுக்கந்தகருணாபிமெழுகு
அறியும் பச்சைநாவிமெழுது ருசி மெழுகென்றும்
வாலை யென்ற சூதமெழு ரசமெழுகதாகும்
பறியுங் கெந்தி மெழுகென்றும் பாஷாணமெழுகென்றும்
பாடினோ மிந்தபடி பரிபாஷை அறிந்து
துறிகனோமிந்த வெண்ணூறு நிகண்டுவகராதி
துடியண்ட முடிமெழுகின் துரையான பெய்ரே. 119

துரையான துரையெல்லாம் ஆய்ந்து வழிகண்டு
சூக்ஷாதி சூக்ஷமெல்லாஞ் சொல்லறிவாற் பிடித்து
வரையான பரிபாஷைக் கரையறிய நாமும்
வசனித்தோம் காவியமாய் இந்த எண்ணூறு
குறையாது ஒரு பொருளுந் துரைகாணலாம் பார்
கோடியுப்பு விழி சினைரு கூறதனைவிட்டால்
பரையான பரகெதியில் சாயுச்சியம் போலாம்
பானுசத கோடிவரை பதினாறாம் வாழ்வே. 120

(வெளிப்படுதல் கங்கைபனிநீர்)

வாழவென்றாலண்ட மெழுவழித்ததனை யெடுத்து
வசிகரமாம் பாண்டமதிலிட்டு மெழுகாக்கி
வாழவென்றா லுலகமதிற் பிறந்த பனிக்குடத்தில்
வாழுமோரிலைத் தாமரை வஞ்சிக் குளமாகில்
வாழவென்றால் பூர்வக்குளம் அதற்குப் பேரு
வாழையடி வாழைநதி சங்குநதியென்றும்
வாழவென்றாற் சலாநதி யென்றதற்குப் பேரு
வற்றாத சுத்தஜலப் பனிநீரின் பெயரே. 121

சுத்தமென்ற ஆண்கூறு பெண்கூறேயாகில்
சுரோணிதத் தாலுண்டாச்சே கூறிரண்டாச்சே
அத்தனரு ளாலயத்தால் அகாரமது வாச்சே
அகாரத்தால் உகாரமதாயு மதுவாச்சே
பெத்தவாச லொன்றாச்சே யுகவாசலாச்சே
பேரொளியாம் வாசல் விட்டாற் பிண்டம் வெளிப்படுங்காண்
கைத்ததனாற் கல்வியது நடுவிற் பாழாச்சே
கருவிமுன்னே வெளிப்படுங்காண் கங்கை பனிநீரே. 122

நீரான நீரையெல்லாம் பாண்டமதில் வாங்கி
நிண்ணயமாய்ப் படிப்பதற்குப் பலந்தான் மெழுகிட்டு
நீரான நீரையதைக் கரமதுவாற்கரைத்து
நீடுரவிபடவே ஒரு நாளுமதைவைத்தால்
நீரான மெழுகதனால் அகார நீரிறங்கும்
நீமகனே யன்னீரு சுத்த பனிநீரு
நீரான நீர்தெளிவு வதிதமென்னாற் சொல்ல
நிலைக்குடத்துச் சலமதனைச் சீசாவில் தாக்கே. 123

அதுவான முன்சொன்ன பாண்ட மெழுகாகில்
அம்மெழுகிற் பனிக்குடத்து நீரைந்து படிதான்
அதுவான அதுவிலின்னீர்விட்டு நீகரைத்து
அந்தணனாங்கதிர் சூரியன் ரவிபத்து நாழிகைதான்
அதுவான அமுர்தமதை ரவியில் வைத்து
அது பத்து முறையாகில் தெளிவதனை வாங்கி
இதுவான நீர்த்தெளிவைப் பாண்டமதிலிட்டு
இயல்பான அக்கினி வன்னியடுப்பிலேற்றே. 124

ஏற்றிமர மொன்றில் விறகெடுத்துத் தீமூட்டி
இருஜாம மொருகாலா க்கினியாய் மூட்ட
சாற்றிய பொன்மாரியது வானமழையதில்
சாரல் பனிமேக ஜலசாயலதைப் போல
நேற்றியாய் நுரையோங்கி வழிந்திட நடமாடும்
நிகரில்லையிதற் பெயர் நிலையிதனார் சொல்ல
காற்றுத் தீமூட்டி யிடைவிடாதே யிருசாமங்
கருநுரையை எடுத்துச் சிமிளில் பதனமாய்ச் செய்யே. 125

செய்து கார் நீரதனை யிறக்கியாற வைத்துச்
சித்திரமாம் பீங்கானி லிரண்டு வாங்கிட்டு
கொய்து குளம்பதை இறுத்துரவி பத்துநாள்தான்
குழம்பதுவிற் சாரச் செயநீரது தானிறங்கும்
தொழுது நந்திபதம் போற்றித்தியான பூசைசெய்து
தூரான சாரசெயநீர் பதனஞ் செய்து
பையது பத்துநாள் முறையுந் தவறாதேயாகில்
படருமண்ட வெள்ளைகலப்படர்ந்த வுப்பைவாங்கே. 126

படரான உப்பதற்குள் அநேகம் பேர்கள்
பாடவென்றான் நாவுமில்லை பாடக்கேளையா
அடரான ஆதியென்றும் அந்தமென்றும் பேரு
அடியென்றும் முடியென்றும் நடுவுமென்றும் பேரு
துடரான சோதியென்றும் சுரூபமென்றும் பேரு
சொல்லாத ஊமையென்றும் உருளையென்றும் பேரு
மடரான பிறிதிவியோடைந்து மென்றும் பேரு
மகத்தான அண்டதலை முடியுப்பின் பெயரே. 127

முடியான முடியல்ல மூலவுப்பென்றும்
மூவருரை பேசுமொழி வேகாதுப் பென்றும்
சடியான மரணமிதற் சாகாதுப் பென்றும்
சலவுப்பு அமிர்தவுப்பு சத்துப் பென்றும்
துடியாமல் வேதைதனைக் கொல்லு முப்பென்றுந்
துடியான வகண்டக்கா வண்டவுப் பென்றும்
அடியார்கள் வாழும் வாழை ஆகாயவுப்பென்றும்
அருளினோம் முடியண்டப் படருப்பின் பெயரே. 128

அண்டமான பூதவுப்பென்றும் பேரு
அஞ்சுருக் காணியுப்பது வென்றும் பேரு
கண்டோமென்பார் சிலபேர்கள் கண்டோமென்பார்
கல்லான கல்லண்டக் கருவை அறிவாரோ
துண்டமாம் பகிரண்டம் இடிமின்னற்சிதரும்
துன்மார்க்கர் ஒருவரறியார்கள் இது பாரீர்
விண்டோமே இப்பொருளை வெளியில் விடாதவர்க்கும்
விண்ணிலண்ட இடியதுவால் விழிசிதறிப்போமே. 129

போவதற்கு யோனியாசை ஆகாதையா
போனாக்கா லுன்பிறகே தொடரும் பாரு
ஆனாக்கால் அறிவாலேமனவாளைக் கொண்டு
அறுத்துவிடு சிலேட்டுமத்தை அறுத்தாயானால்
ஆனாக்கால் மாயாசத்தி கிரியாசத்தி
அதிமாய்கையற்றுதடா நமனோயில்லை
கூனாக்கால் குருடாகி வின்னமாகிக்
குறைவில்லாச் சடலமதை ஜென்மமாமே. 130

ஜென்மம் வருமேதென்றால் தீவினையினாலே
ஜெகத்தோர்கள் செய்யுமவர் தொழிலினாலே
குன்மம் வருங் காமநோய் வாமத்தோர்க்கு
குருவினிட அனுக்கிரகங் கூடாதாகில்
வன்ன செந்தமிழ்ப் புலவோர் அகத்தியன் வாக்கிய
மாமுனிவோன் சொன்ன மொழி மறைப்பிராது
என்னத்தால் தமிழ்ச்சிந்தாமணி யிந்நூல் தான்
எல்லவரும் அறிந்திடினும் அறிவுள்ளோரே. 131

5

அறிவுள்ளோர் நல்வினைக்கே அருளேயாவர்
அருளுமறுபத்து நாலுகலை அவர்க்கு மெய்தும்
நெறியுள்ளோர் அகராதி நிகண்டெண்ணூறு இது தான்
நிலைபெற்ற பதினெண் பேர் பரிபாஷை அறிவார்
நெறியுள்ளோர் இந்நூல் நிகண்டு காவியந்தான்
நாலுமறைவேதமொடு பாதையிது பாரீர்
நிருவுள்ளோர்க்கு அமைக்கு மின்னூல் முதற்காண்டம் நூறும்
செப்பியதோர் பாடல் முப்பதுவும் பாரே. 132

பாரும் பலகலையறிவும் இந்நூலிற் பாரு
பரிபாஷை மெய்ஞ்ஞான பரகெதியைப் பாரு
ஆருமறிவறிந்திடினும் உலகமது வெய்தும்
ஆரணியிலொருவர் வரஞானியர்ஆவார்
தேறுமனம் புத்தியறிவாலே தெளிவாகுந்
திரிபுவன நாதவொளி வாழ்பதியைக் காண்பாய்
கோறுமுதற் காண்டமிது குறைவராதாய்ந்து
குருவான பரகெதியில் தெளிந்து வாழ்முற்றே. 133

முதற்காண்டம் - முற்றிற்று

கடவுள் துணை

அகஸ்திய முனிவர் திருவாய் மலர்ந்தருளிய

பஞ்சகாவிய நிகண்டு - 800

இரண்டாவது காண்டம்

காப்பு

பரமகுரு பூரணத்தினாதி பாதமணிந்து அவர்
கமலைப் பதம் பண்பாய்ப் போற்றி
பரமகுரு பசுபதியின் பாதங்கண்டு
பரப்பிரம சுடரொளியின் ரவியே போற்றி
பரமகுரு பிரம சரஸ்வதியின் பாதம்
பகலிரவாயவர் கமலப்பதமே போற்றி
பரமகுரு ஆதியந்த மெங்கு மெல்லாம்
பாதாள குண்டலித்தாய் பாதங்காப்பே. 1

பாதமென்ற கணபதியும் கந்தன்காப்பும்
பசுபதியும் உபயநடனமும் பரமேகாப்பு
வாதமென்ற விசுவனிட வுமையாள் காப்பு
டவல்லபை குண்டலித்தாயர் வாணி காப்பு
பேதமில்லா பேரொளித்தாய் சாருபங்காப்பு
பிண்டமெனும் அண்ட பிண்டம் பிரமன்காப்பு
தாதுவிதி நாதவிந்தினாதிகாப்பு
சச்சிதாநந்த வேதாந்தங் காப்பே. 2

வேதமென்ற வொரு வேதமவுன பீடம்
விளங்குபரமெய்ஞ்ஞான மூல பீடம்
பூதமென்ற ஐம்பூத வாய்வு பீடம்
போதமென்ற ராஜயோக வாசிபீடம்
சாதமென்ற மகாராச பசுபதியின் பீடம்
சச்சிதானந்த வரையாதார பீடம்
காலமில்லாக் கருவிதனி லானபீடங்
கரணாதி முதலதனாற் காயமாச்சே. 3

காயமென்ற ஐங்காயக் கூறினாலேகருவி
தொண்ணூற்றாறு முதற்சமைந்த கூறு
ஞாயமென்ற அநின் லழியைத் தள்ளிப்போட்டால்
ஞானபர தேசிகனா லமைந்தகூறு உபாயமதாய்க்
காயமதைக் காணவேண்டும் ஓடுகிற
நிலையறிந்து வொடுங்க வேண்டும்
பாயமென்றால் அ பாயம்வந்து பழியோர்க் கெய்தும்
பண்புடைய புண்ணியவான் பார்த்து த்தேறே. 4

பார்ப்பதற்குக் கோடியிலே யொருவர்க் கெய்தும்
பலகோடி யண்டமெல்லாம் பதிவாய்க் காண்பார்
கார்ப்பதற்கு மனருசியறிவ தினாலே
கானும் புலவோர்களுலகோர் களதிலமெத்த
பூப்பதற்கு பூமலரின் வாசமது போல்
புகலுமுதற் காண்டமதின் பூட்டதனையறியும்
சேர்ப்ப தருளான பதிமேவும் பதிவாசன்
தெட்சணா மாமுனிவர் செப்புமிது நூலே. 5

நூலான பதினாறு லக்ஷ முறையாகில்
நூதனாமா மதிநூலைச் சாதனையாய்ப் பாரார்
வாலான மாமறையோர் முன்னோர்களாகில்
மாமுனிவோர் சொன்ன வாக்கியத்தைப் பார்த்து
காலான காலிதுபார் செந்தமிழன் வேதம்
கரைதலிது யாரறிவார் பாதையின்வழியை
காலான வேதத்திற்கு அதிக மெஞ்ஞானம்
நந்தியொளி வாலைசுழி நாதபரவெளியே. 6

வெளியான வெளியல்ல சகலருங் காணவேதாந்தம்
வெகுதூரம் விந்து வழியாகில்
களியான சடலமதைக் கார்த்தோன் அவன் ஈசன்
காராட்டால் காயம் புலப்படுகிறது மில்லை
வளியான துறையெல்ல மனக்கண்ணில் தோய்த்து
மகாபாவ வெளிக்கண்ணை அப்புறத்தே தள்ளு
அளியார்கள் துறையறிவார் கண்ணைக்காணார் பார்
அரிதரிது வுலகமதில்அறிவுள்ளோர் பெரிதே. 7

பெரிதான பேதைமையைப் பெரியோர்கள் அறிவார்கள்
பிணமான சுடுகாட்டுப் பிசாசு அறியுமோதான்
கருவான கருவதுதான் மனக்கருவைக் கண்டால்
காலன் நமன் வருஞ்சாயல் ஓலமிடும் வாசி
அரிதான வாய்வெல்லாங் கூட்டமிட்டையா
அந்தகன் என்ற எமன்வரத் துரத்திட்டு
எருதான யெமன் வெளிப்பட்டதே யாகில்
ஈசன் பிரகாசிப்பார் எண்ணு நெஞ்சே. 8

நெஞ்சசு மொருவிதம் நிலையாத அறிவுகேள்
நிகருமதி பாவமதினால் நிலையாத
சஞ்சலம் வெகுவீதிபாழாகும் நேர்சமுசார வாழ்க்கை
பஞ்சமா பாதகந்தனில் வரும்பாடு கேள்
பாழான செடலமிதுதான் பலகலைகளறுவும் மனஅமுர்த
ரசகலை அறிவழிவித்துக் குருடனாவர்
அஞ்சவேண்டார் வெட்டு பழிக்குலைக் கஞ்சார்
அறிந்து மனம்நிலையாது அவரறியுமோ
மாறுபடுந் தெரியுமெய்ஞானபதி அப்பாசுபதிதான்
வெஞ்சமா முனியிந்த செந்தமிழைச் சொல்லுங்கவி
வெகுசித்தர்அறியவுந்தான் விமலத்தன் அருளித்த குருவித்தை
யிதுபோல மேவுங் கயிலாசபதியே. 9

மேவுங் கயிலாசபதி மேரு முக்கோணமிட
மேல் வாசலாலயந் தீதான்
மெய்ஞானத் தருள்சித்தர் மெய்ஞானம்
இதுபோல மேலாருஞ் சொல்வாரில்லை
ஆவும்புலி மேவுகடமான அமிர்த மாகிலிசை
அதுகூடி நிற்கும்அளவற்ற நிலையோடு
குலவித்த மதுவமுர்தமது கூடிஉண்ணுமதுபார்
தாவுதவி மாவறுவு தாவுதவிநேர்நிலைகள்
பாவம் வருமே தொழில்களால்கண்டுமன
தொண்டறிவால் விண்டறிவால்
மொழிதவறும் கழுதைசென்மப் புலையர்தான்
மாவும்புலி போல்மருவி மனமழியாதே
மனஞ்சிதனி யெமனாகுவார்
மனமஞ்சார் கொலைக்கஞ்சார் நிலைக்கஞ்சார்
அறிவித்தை மவுனவேதாந்த பதியே. 10

குலமனமே அதிமதியை மனவிதமே யறியார்கள்
குவலயத்து மனிதர்மிக தான்கொடியமன கலையாறுவால்
படியுமெஞ் ஞானபதி குருவாசான் அருளும் விதியால்
அதுமனமே ஒப்பாதகலை மறுஓடாது துன்பம் வருமே
அரியுமவர் துதிராச பூபதிகள் மதிமகிழும் மனமதனால் சொல்
லரிவாய்வேதமுறையேஅவமானசெல்லமதுஅழியாதேகுத்தம்வரும்
ஆருமரி நேற்குரையும் வார
ஆசானை அரறிவார் பேசாதே வாய்மூடு
ஆயரகு கோண வாசல்
வலமாக கிரிசாரல் முக்கோணபிரதிஷ்டை
வந்திடினும் வாசியதானால்
வாலைகுரு சாமிபதங் காலை நகர் வரும் பவனி
மகறாக யோக பதியே. 13

(வேறு)

யோக மென்ற முன்சொன்ன வுப்புசேர் வாங்கி
உறுதிபெறக் கல்வமதில் உப்பதனையிட்டு
வாகமென்ற காரசயநீர் பலம் நாலுமிட்டு ஒரு
சாமமரைத்து மெழுக்கு போலாக
நாகமென்றததை வழித்துச் சதுரபில்லை செய்து
நாயகியாள் நாதமதில் சீலைகொண்டு தேய்த்து
வேகமென்ற வில்லையதை ரவியில் ஐந்து தரம் வைத்து
மேலான நாதவிந்தாற் சீலை ஏழுசெய்யே. 14

செய்து அண்டவோட்டினிட மெழுகுவிருபலந்தான்
செயம் பெறவே பில்லையதில் மேல்கவசஞ் செய்து
நைய்து ரவிமுகந்தனிலே ஒருசாமம் வைத்து
நல்ல அண்டவுப்பினிடப் பில்லையதைக் கொண்டு
பெய்து பாண்டத்தோடு இரண்டு சாத்திரமதாய்ச் செய்து
பண்மைபெற அவ்வோட்டில் பில்லையதை வைத்து
மைது மேலோடு மூடிச் சந்துவாய் செய்து
மகத்தான மண்சீலை யேழுமது செய்யே. 15

சீலையேழுஞ் செய்ததனை ரவிமுகத்தில் உலர்த்தி
செயலாகக் கோழிபுடஞ் செய்வீரேயாகில்
வாலையாம் அண்ட சுன்னமிது போலெது வுண்டே
வசனித்தோம் வாதமதுக்காது பீடம்
சேலையன்ன மாதுகிளிவாலை சிரோமணியாள்
செப்புமொரு மாமுனிவன் செந்தமிழாற் சொன்னோம்
காலையறி வாய்மனமே ஞாலமிது அறியேன்
கைலாச மோக குருசார மிது பாரே. 16

அகண்ட சுன்னப் பெயர்

சாரமென்ற சுன்னம தின் பேரதனைக் கேளும்
சகலரறிய வசனமிது சாற்றுகிறோம் நாமும்
பாரமென்றுந் துறுசுக்கு ஆதியென்றும் பெயர்
பாஷாண மென்றதற்கு அந்தமென்றும் பெயர்
காரமென்ற கர்க்கடகஞ்சோதி யென்றும்பெயர்
கருநாபியதற்கு விஷமமுர்த மென்றும் பெயர்
சாரமென்றும் பூணிறுக்கு வேணுயென்றும் பெயர்
சலாசத்துச் சச்சிதாநந்த மென்றும் பெயர்
தாரமென்ற அரிதார நாகமென்றும் பெயர்
சாற்றினோந் தலைச்சனிட முடிச்சுன்னப் பெயரே. 17

சுன்னமென்ற ரசசூதம் விந்தென்றும் பெயர்
சூச்சமாங் கேந்திக்யக்கினி யென்றும் பெயர்
அன்னமாம் பூரத்துக்கு ரூபமென்றும் பெயர்
அருளினோம் வீரத்துக்கு வகித மென்றும் பெயர்
வன்னமாம் லிங்கத்துக்கு ருத்திரமென்றும் பெயர்
வண்ணானென்ற வனிடத்துக் குவாலையென்றும் பெயர்
கன்னமென்ற சூடன் கற்பூர மென்றும் பெயர்
கைலைமூர்த்தியென்று முடிதலைச் சுன்னப் பெயரே. 18

தலையென்ற முடியுப்பு வெடியுப் பென்றும் பெயர்
சத்துப்பு வென்றதற்கு இந்துப்பென்றும் பெயர்
கலையென்ற கல்லுப்புக்கு கம்பியுப்பென்றும் பெயர்
கரியுப்பால் செடமெடுத்த காரவுப்பென்றும் பெயர்
வலையென்ற ரவிமதி வஸ்துப் பென்றும் பெயர்
வாலைகாலை கண்டரென மாவுப்பென்றும் பெயர்
சிலையென்ற குருவுப்பு வாதியென்றும் பெயர்
சிகாரத்தால் நடுவிழந்த சிகாரமென்றும் பெயரே. 19

சிகாரமென்ற கல்லானை வெள்ளைக் கல்லென்றும் பெயர்
சிகாரகிரிவோர் நதிக்கிளிஞ்சி யென்றும் பெயர்
மகாரமென்ற மவுனக்கல் உப்பென்றும் பெயர்
மண்சவுடு நீரென்றிதற்குப் பெயர்
வகாரமென்ற வானைக்கண் சத்தமென்றும் பெயர்
நாட்டுக்கரு வீட்டு உப்புஎன்றும் பெயர்
அகாரமென்ற யானைரசப்பாறை யென்றும் பெயர்
வதுசல்லி மாமுனிவன் அண்ட உப்பின்பெயரே. 20

அண்டவுப்பின் பெயர்

உப்பான தலையண்ட முடியின் சுன்னம்
உசிதமென்ற எண்ணூறு இரண்டாங்காண்டம்
தப்பாமலந்த நூல் சகலத்துக்கும்
சற்குருவாய் வெள்ளைக்கல் சுன்னஞ் சொன்னோம்
அப்பான பிண்டமதின் கூறெல்லாந்தான்
அடவெல்லா மினிமேலுரைப்போம் அறிவாய்க் கேளு
செப்பான முடியின்கீழ் பாதமுதற் கொண்டு
செப்புகிறோம் பிண்டமென்ற கூறைக்கேளே. 21

கூறான வாதமென்ற நூல்கட் கெல்லாங்
குருநூலிந்த வெண்ணூறின் கருவே கண்டோர்த
வாறான உலகத்தோ னீசனாவான்
மாணாக்காள் பாவம்வாராத் தொழிலே செய்யும்
காரான மாமுனிவன் மொழிந்த வாக்குக்
கருவறியார் இன்னூலைக் கருத்தாலாய்ந்தால்
சீரான பிண்டகரு வதித சித்தி
சித்திக்குங் கருமையெல்லாம் செயமென்றே. 22

என்றான பிண்டமதின் கூறெல்லாங் கேள்
இயம்புகிறோம் புலத்தியனே இனிமேலிதுவையா
அண்டான முடிசுன்னஞ் செய்தபின்பு
அண்டத்தின் கூறினிட வடவெல்லாங் கேள்
கண்டாயோ பிண்டமென்றால் அப்பிண்ட மதுவல்ல
கருவான பிண்டமது சுந்தரி தானாகும்
தண்டான தேசியென்றும் சோமகுரு வென்றும்
செப்பினோம் கேசரியின் கெவுன கருவுண்டே. 23

கருவான கிளிஞ்சி யென்றும் பிண்டான யென்றும்
கருவை பெறுஞ்சிப்பி கும்பிடானை யென்றும் பெயர்
எருவான வேறிவற்றவ் மண்ணானை யென்றும்
இயல்பான வண்டபிண்ட அங்கமென்றும் பெயர்
தருவான தலைபான யகண்ட மென்றும் பெயர்
தாவித்தோம் பிண்டமதின் நிலையான பெயர்கள்
அருவான செடலமென்று அயங்கமதின் கூறு
அருளினோம் கண்டமென்ற பிண்டமதின் பெயரே. 24

சவ்வின் பெயர்

மாங்கிஷத்தின் பெயர்

அகண்டமெனு மந்திராங்க மென்றம் பேரு
அருவான தலையுண்ட மென்றும் பேரு
நகண்டமெனு நாமத்துரு வென்றும் பேரு
நஞ்சுகுழல் மந்திரிக மென்றும் பேரு
துகண்டதோர் துணிதபார் சங்கமென்றும்
சொல்லிவிட்டோம் கவுனாதி பின்டமென்றும்
மகண்டமென்ற வங்கமதின் சவ்வுங்கெட்டு
மாட்டினோஞ் சுந்தரமே சவ்வாம் பாரே. 25

பேரான மாங்கிஷத்தின் பேரதனைக்கேளும்
பிளியான ரச்சாரைக்கோளி பிக்க மாங்கிஷமாம்
ஆரான அந்தமென்றும் அங்கி ஷமென்றும் பெயர்
அடவான பூதக் சுழலென்றும் பேரு
வேரான வேதிய நிஷமென்றும் பெயர்
வெள்ளையானை வேரென்று மிதற்குப் பேரு
தேரான தேகவடி கூறவடியென்றும் பேரு
தெளிவான மாங்கிஷமா மதிதப்பாதே. 26

அடியீரலின் பெயர்

அத்தமாய்ச் சொல்லுகிறோம் சுந்தரமே கேளு
அடியீரல் மண்ணிரல் பேரதனைக் கேளு
வத்தமென்ற மண்பாச்சி வராளியென்றும் பெயர்
வாமரோதய வாஞ்சிமாஞ்சி யென்றும் பெயர்
கத்தமென்ற காராபிமரோபி யென்றும் பெயர்
காத்துவி பசாவென்று மதுக்குப் பெயர்
வத்தமென்ற மகராச மூலியென்றும் பெயர்
வசனித்தோ மடியீரல் மண்ணிரலின் பெயரே. 27

அங்கத்தின் பிச்சின் பெயர்

பேரென்ற அங்கிஷத்தின் பிச்சென்றும் பெயர்
பேசினோம் மோகநிதப் பிச்சென்றும் பெயர்
ஆரென்ற வக்கவசப்பூடென்றும் பெயர்
ஆருந் தின்னாத மூலியளப்பெமென்றும் பெயர்
நாரென்ற சமமென்றும் நாற்றமென்றும் பெயர்
நாரேவிஷப் பூடென்றும் அதுக்குப் பெயர்
சேரென்ற மாயாமா மூலியென்றும் பெயர்
செப்பினோ மங்கத்தின் பிச்சதுவின் பெயரே. 28

மணிக்குடலின் பேர்

பேரான நஞ்சுவிஷமணி யென்றும் பெயர்
பேசினோம் நஞ்சுமுறி மூலியென்றும் பெயர்
ஆரான அரவமணிக் கல்லென்றும் பெயர்
ஆத்துமாவின் கொடிமணியென்றும் பெயர்
தேரான தேவதாமணி யென்றும் பெயர்
தெளிவான விஷக்கல்லு சமாதிக்கல்லென்றும் பெயர்
வாரான மணிக்குடலுக்கு வதிதப் பெயர்கள்
வாசித்தோம் வாசி மணிக்குடலின் பெயரே. 29

சல்லிக்குடலின் பெயர்

மணியான சல்லிவேர் தொட்டியத்திலாடும்
அறுபத்து நாலு சாலமம் அவராவாடும்
வெணியான வேறென்ற அக்குடலின்
விளங்கும் வைகமூலி முலங்கமென்றும் பெயர்
கணியான மயக்கியென்றும் மதிமயக்கியென்றும்
கருவான வெள்ளிவேரென்றும் பெயர்
அணியான மாலை வன்னியென்றும் பேரு
அடவான மேகவேர் சல்லிக் குடலதுவின் பேரே. 30

கொடிமூலச்சல்லிமை

குடலான கொடிமூலமாதி கருவாலே
கூத்தாடுஞ் சகலசித்தும் வசியமாகும்
செடலான செந்தமிழ் மாமுனிவன் சொன்ன
செகவித்தை சல்லியம் ஆயிரத்துக்கையா
நடலான கொடிமாலைச் சல்லிமூலம்
நாட்டுகிறோ மிந்த வெண்ணூறுக் கருவே கேளு
மடலான மாக்கொடிதான் முதலே மூலம்
மகத்தான சரகுலத்தே யக்கொடி வைத்தானே. 31

கொடிச்சுன்னம்

உலத்த வகைகேளு நன்றாய் புலத்தியனேயையா
உய்ய வாயமுர்த மென்ற பனிநீர் தன்னில்
வலத்த கொடிச் சல்லிமூலத்து உள்ளிருக்கும்
வளமான சாணமதைக் கழட்டி நீயும்
அலத்த யான பனிநீரி லொருநாள் வைத்து
அதின் பிறகு வூறினதோர் கொடியைக்கொண்டு
மலத்த கழுநீரு தன்னிலப்பிக் கொண்டு
மறுசெல மாமுர் கெங்கை சலஞ்சுத்தி செய்யே. 32

செய்து சுத்தசல மதுவிற் கொடியைத் தோய்த்து
செயமான வில்வமதின் கழிமேல் கட்டி
எய்துவொரு நாளுக்கு வொருதரமே தோய்த்து
இந்த படியெட்டு நாள் எடுத்துக்கட்டி
சைய்து சல்லியத்தினிட விதி தப்பாமல்
சாடனமாய் மேல் வித்தை சகலத்துக்கு
மையது விந்தப்படி செய்து வசியஞ் செய்யலக்ஷம்
ஆடுமப்பா அஷ்ட கெசம் எட்டும் தானே. 33

எட்டான தேவதைகள் எட்டுஞ் சித்தி
ஏகமென்ற மகாசத்தி வசியமாவாள்
அட்டான அம்பாள் உனக் கருளானாக்கால்
அறுபத்து நாலுசித்துஞ் சாபம் போச்சு
நெட்டான நீகோறுந் தவங்க ளெல்லாம்
நிச்சயமாம் அதிதசித்தி நிலைக்கும் பாரு
வட்டான வசியமுதலெட்டுஞ் சித்தி
வாலையென்ற மனோன் மணித்தாய் வசியமாமே. 34

வசியமாம் இக்குடலைமுன் சொல்வீதஞ் சுத்தி
வளமாகச் செய்து இந்த வீதஞ் சரகாயுலர்த்தி
வசியமாம் ஆண்புத்திரன் முப்பதுகீழ்
அகாரவிந்து மருந்தூட்டி யதனைக்கேளு
துசியமாம் விந்ததவுங்கால் சேர்வாங்கி
தோதகமாய்ப் பீங்கானில் சரக்கைவிட்டு
விசிதமாய் விந்ததுவைப் பனிநீரிற் சுத்தி
விளங்கவோர் நாள்வீதம் வைத்து மறுநாளே, 35

மறுநாளில் விந்ததனை ஊறவைத் தெடுத்து
மகத்தான மாக்கொடியைச் சரகதுவெய் நீயும்
ஒரு நாளு முழுதுமதைச் சரகதுவாய் உலர்த்தி
யுறுதிசட நோயில்லா வுதகமாக வென்று
நேர்நாளின் சரகுவென்ற சல்லி வேறதனை
நீமகனே கல்வமதில் நிச்சயமாய்த் தாக்கி
போநாளுமிருவர் சதிபுருஷர் புணர்ந்ததுதான்
பிசகாமலது விடைக்குப் போடு பலந்தானே. 36

விந்துசுத்தி

போட்டு விருசாமமது ஆவின்வெண்ணெய் போல
பூட்டுவாய் கல்வமது புகட்டிடும் போது
நாட்டுவாய் சலகங்கை மயங்காதே கேளு
நாலுபலம் பனிநீரு நன்றாய்த் தாக்கி
காட்டுவாயிது சாமமிள வழுக்கைபோல
சாதித்தாற் பனைநுங்குச் சடையது போலாகும்
ஆட்டுவாம் நஞ்சமிர்தப் பிசினியது போலும்
அத்திப் பாலமுர்தமெனு நிறமது போலாமே. 37

ஆமென்ற முடிசயநீர் ஐந்துபலந் தாக்கி
ஆட்டிடுவா யிருசாமமாட்டி விடும்போது
நாமென்ற முடிசுன்னங் கடுகளவு தாக்கி
நாட்டியரைத்திடவே பிசினாரது போலாகும்
வாமென்ற சல்லிவேர் மெழுகதனை
வழித்து வளமாகச் சதுரமதாய் வில்லையதுசெய்து
காமென்ற பனிநீரும் விந்ததுவுங் குழைத்துக்
கருணைபெற வில்லையது கவசமது செய்யே. 38

செய்யப்பா புலத்தியனேராச யோகவானே
தெக்ஷணா முனிவன் சொல்செந்தமிழ்க் கவிதான்
ஐயப்பா நிகண்டடடென்னுரெக ராகியாதிபீடம்
அனர்த்த மென்ற சகலவுயிர் அதீதபரிபாஷை
உய்யப்பா வொருவருக்குந் தோணாத நேர்மை
உறுதியுடன் இரண்டாங்காண்டம் உளமுருகச்சொல்வோம்
மையப்பா யிப்பொருளை யாரறிவார் மக்காள்
மனமறிவைச் சோதித்து மகிழ்ச்சி யருள்காணே. 39

காணுகின்ற வில்லையதின் மேற்கவசமேழு
கருவான விந்ததுவில் தோய்த்ததனை யெடுத்து
வாணுகிற வில்லையதின் மேலேழு செய்து
வட்டவோடு இரண்டுகொண்டு வில்லையதை வைத்து
மேனுகின்ற மேலோ மூடிநீர்தானும்
மேகநிறமான மண் சீலையேழுஞ் செய்து
ஆணுகின்ற ரவியில் பதினெட்டு நாள் உலர்த்தி
அதையெடுத்து மயில்புடத்தில் புடம்போடுவாயே. 40

போடுவா யோர்நாள் முழுதும் புடங்குலையாமல் தானும்
போட்டெடுத்து மேலோட்டை பொற்றிவிடு நீயும்
ஆடுவாய் வில்லையதின் மேற்கவச மெடுத்து
அரகரா சீஷாவில் சுன்னமதை விட்டு
நாடுவாய் நஞ்சுகொடி சுன்னப்பேர் குறித்து
நாதாந்த சிரோமணியின் பூசைசெய்து
தேடுவாய் உலகமதின் மூலியின் பேரெல்லாந்
தெளிவான சல்லிவேர் சுன்னமது வாமே. 41

மதுவான சுன்னத்துக்கு அதீதப்பேர் சொல்ல
மாளாது கோடாகோடிமாட்ட வெள்ளேடில்லை
அதுவான வெண்சாமரைச் சுன்னமென்றும் பெயர்
அருளான நஞ்சுகொடிச்சுன்னமென்றும் பெயர்
அதுதான சல்லிகொடிச்சுன்ன மென்றும் பெயர்
வசனித்தோம் வஞ்சி கொடிச்சுன்ன மென்றும்பெயர்
கதுவான காலகோட்டி விஷசுன்ன மென்றுங்
காட்டினோம் இன்னூலிற் குடற்சுன்னப் பெயரே. 42

பேரான திகைமூலச்சுன்னமென்றும் பேரு
பேர்சொல்லாப் பூடதுவின் சுன்னமென்றும் பேரு
கூரான குலாமல்லி மூலிச்சுன்ன மென்றும் பேரு
கூறினோம் வெள்ளாரைச் சுன்னமென்றும் பேரு
காரான தயிலப் பேரென்னாற் சொல்லக்
கனிநாவும் வசனிக்கக் கனிவாயோயில்லை
தேனான தட்சணத்துப் புலவனாவேன்
செந்தமிழாற் சொல்லுகவி யெண்ணூ றுமாமே. 43.

நூறான சவர்க்காரங் கூட்டுவகைக் கெல்லாம்
நுண்ணிதமாம்இச்சுன்னம் கடுகளவு போடு
பேரான இச்சுன்னம் போடாவிட்டால் அப்பேர்
பொய்த்துப்போஞ் சித்தியில்லை நாரமில்லை
வாரான வாதமது பொய்த்துப் போமென்றாக்கால்
வழலைக்கு விச்சுன்னம் வேண்டும் பாரு
சீரான திராவகத்தாலாடு வித்தைக் கெல்லாம்
செய்வீரா விச்சுன்னஞ் சித்தியிதுமாமே. 44

சொக்குபொடி

சித்தியாஞ் சொக்குபொடி சகலத்திற்கும்
செகசால மதிதத்துக்குச் சுன்னம் வேண்டும்
வத்தியாம் வசியமுத லெட்டுக்குந்தான்
வசனித்தோமிச் சுன்னஞ் செய்வீராகில்
பத்தியாஞ் சகலத்திற்குஞ் சல்லிமூலம்
பாடினோம் வெகுநூலு யாருங்காணார்
வெந்தியாமிந்த வெண்ணூற் சகலபேர்க்கும்
வெகுசித்தி யின்னூலிற் பதனம் பண்ணே. 45

ஈரற் சுன்னம்

பண்ணப்பா பிண்டவீரற் சுன்னங் கேளு
பாடினார் முன்னோர்கள் அதீதமா யின்னூல்
அண்ணப்பா யாருந்தான் சொல்லவில்லை
அதீதமதா யின்னூலில் நாம் அருளக் கேளு
கண்ணப்பா குலையோடே ஈரலதை வாங்கிக்
கருணைபெற வன்னீரை ஐந்துபடி கொண்டு
அண்ணப்பா பாண்டமதிலன்னீரை விட்டு
அளவான ஈரல் தனையதில் ஊறவையே. 46

வைத்து வொருநாள் முழுதும் வைத்ததனை
எடுத்து மகத்தான பனிநீரில் அந்தவிதஞ்செய்து
ஐந்து விந்து விந்ததனைப் படிசெய்து
அதின்பிறகு வெடுத்ததனை ஆள்புழங்கா விடத்தில்
நைத்ததனை ரவியிலிருபது நாள் உலர்த்தி
நவிலும்படி யீரல்தனை கல்வமதி லிட்டு
சுத்துமுன் சொன்ன முடியுப்பில் நாலுபலந்தான்
தோதகமாயிட்டு ஆண்விந்துபலம் ரண்டே. 47

எடுத்த வில்லை சீலையெல்லாம் கழற்றி நீ எறிந்து
இயலான மேலோடு என்மகனே யெடுத்து
கடுத்திடாச் சுன்னமிதைப் பார்த்திரேயாகில்
சந்திரன் போல் ஒளிவாகுஞ் சார்ந்துபாரையா
எடுத்திடாச் சுன்னமிதை சீஷாவிலிட்டு
செயமாக வாலையுட பூசையது செய்து
அடுத்திடாச் சுன்னமதில் அனேகவித்தையாடும்
அருளுகிறோம் ஈரலதின் சுன்னமதின் பெயரே. 52

சுன்னமென்ற வசுநாத பிச்சுன்னமென்றும் பேரு
சுகசிவாதி சுன்னமென்றும் அதற்குப் பேரு
அன்னமென்ற வவநாத சுன்னமென்றும் பேரு
அத்துளர் வெத்துளாச்சுன்ன மென்றும் பேரு
வன்னமென்ற வரலாதிச் சுன்னமென்றும் பேரு
வாளாதிச் சுன்னமென்று மதற்கு பேரு
சொன்னமென்ற சோதிமாச் சுன்னமென்றும் பேரு
சொல்லிவிட்டோம் ஈரலுடச் சுன்னமதின் பெயரே. 53

சொல்லியதோர் இச்சுன்னம் வாதமதுக்காகும்
சூக்ஷமாஞ் சொன்னமதால் பத்தரையுமாகும்
அல்லியதோர் ஆடுகிறவித்தையதுக் கெல்லாம்
ஆகுமிச் சுன்னந்தொட்டு ஆடும்புலத்தியனே
வல்லியதோர் வயித்தியத்திற்கு இச்சுன்னமாகும்
அறுபத்து நான்கு சரக்குதனையே சொல்வேம்
எல்லியதோர் எட்டெட்டுஞ் சுன்னம தாலாகும்
எய்துமென்ற கருமமெல்லாம் இதனாலாமே. 54

நரம்பின் பேர்

ஆமப்பா புலத்தியனே சொல்லக்கேள் ஐயா
அறையுகிறோம் சடலமதின் நரம்பதுவின் பெயர்கள்
நாமப்பா நாற்கழலி வேர்க்கழலி ஒன்று
நாவிட மென்றதற்குப்பேர் வர்க்கமென்றும் பேரு
வாமப்பா வஸ்துநாற் கழலியென்றும் பேரு
வச்சிராதி பூதவேர் என்றும் அதற்குப் பேரு
தாமப்பா தண்ணியமாம் வேரென்றும் பேரு
சரமென்றும் சடலமதின் நரம்பதுவின்பேரே. 55

நரம்பான நரம்பெடுத்து அஷ்டகம் பச்சிலைக்கு
நன்னயமாய்த் தயிலமுதல் சகலத்திற்குமாகும்
நரம்பான ரசமணிக்கு யிதுநரம்பாற் சேர்த்து
நலமாகச் செபஞ்செய்ய எட்டெட்டும் ஆடும்
நரம்பான குளிகைக்கு நரம்பதனைச் சேர்த்து
நவிலுவோம் கழுத்ததினில் நன்றாகக் கட்டி
நரம்பான நரம்பதுவால் சகலதுரையாடும்
நன்றாகச் சொல்லிவிட்டோஞ் சடலநரம்பாமே. 56

கொழுப்பின் பெயர்

ஆமேதான் புலத்தியனே நன்றாய் கேளு
அடவான சடலமதின் கொழுப்பின் பேர்கள்
நாமேதான் சொல்லுகிறோஞ் சுந்தரமே கேளு
நாதரவி வாதரவி பூதரவி யென்றும்
வாமேதான் வாதரவியென்றதற்குப் பேரு
வாடபதி நிராடபதி மாலபதி யென்றும்
தேமேதான் திருவான விருவான லென்றுஞ்
செப்பினோஞ் சடலமதின் கொழுப்பதுவின் பேரே. 57

நகத்தின் பெயர்

கொழுப்பான தந்தமென்றும் ஆனைபதியென்றும்
கூரான மேற்பலகைக் குறி தந்தம்என்றும்
அழுப்பான வலறிக்கண்ணாடி என்றும் பேரு
ஆகாசதந்தம் என்றும் அதற்குப் பேரையா
நழுப்பான நந்தமலராதி யென்றும் பே ந
நாம் சொன்னோம் திதப்பா நன்றாகத்தானும்
வழுவான புலத்தியனே இவ்வெண்ணூ றில்
வசனித்தோஞ் சடலமதின் கால் நகத்தின் பெயரே. 58

ஞானக்கண்ணின் பெயர்

நிகமான நிரஞ்சன மென்றதற்குப் பேரு
நிகரில்லா ஆசான் என்றதற்குப் பேரு
அகமான வாதிக்கண்ணென்றும் பேரு
ஆருமறியாத விதியறிவுக் கண்என்றும் பேரு
செகமான சித்திக் கண்ணென்றதற்குப் பேரு
செப்பினோம் பூரணமென்றதற்குப் பேரு
சுகமான அசோகக் கணரிஷியென்றும் பேரு
சொல்லிவிட்டோம் செடலமதின் ஞானக்கண்ணின் பெயரே.59

கண்ணான வெளிப்பாழு சுத்தபாழென்றும்
கலங்குநீர் சுழலென்று மத்தப் பாழென்றும்
விண்ணான வெளியென்றுஞ் செயலென்றும் பேரு
மெய்யென்றும் சையென்றும் இதற்குப் பேரையா
வண்ணான சடலமதி வெளிக்கண்ணின் பேரு
வசனித்தோங் கோடாகோடிபேர் பொருக்குமணிபோலே
நண்ணாகச் சொல்லிவிட்டோம் புலத்தியனேயையா
நலமான சடலமதின் வெளிக்கண்ணின் பேரே. 60

வெளியான வேந்தர் நிலைக்கால நிலையென்றும்
விளங்கினோம் போதநிலை யாதமென்றும் பேரு
அளியான வாறுவிதப் பாதமென்றும் பேரு
ஆதார நிலையுண்ணும் என்றதற்குப் பேரு
களியான செக்மோது மடியென்றும் பேரு
காட்டினோம் மூலகவேர்ப்பாத மென்றும் பேரு
செளியான செடலமதின் பாதத்தின் பேர்கள்
செப்பினோம் இவ்வெண்ணூற் செயலதுவின் பேரே. 61

எலும்பின் பெயர்

செயலான கச்சியென்றும் மச்சியென்றும் பேரு
செகதங்க மாகுச்சி யென்றதற்குப் பேரு
அயலான வச்சியம் உச்சிரமென்றும்
அருளினோம் அரவாடையெலும்பு என்றும் பேரு
குயலான குறிநட்டு வென்றதற்குப் பேரு
கோதண்ட வேரெலும்பு வென்றதற்குப் பேரு
சயலான புலத்தியனே எலும்பதுவின் பேர்கள்
சான்றினோங் கணுக்கால் எலும்பதுவின் பெயரே. 62

எலும்பான முட்டை முடக்கெலும்பென்றும் பேரு
ஈசுகணு வெலும்பென்று மதற்குப் பேரையா
அலும்பான வக்காவ லெலும்பென்றும் பேரு
அத்தங்கி யெலும்பென்லும் அதற்குப் பேரையா
நலும்பான நஞ்சாதவெலும் பென்றும் பேரு
நத்திவேர் சுத்தெலும்பு வித்தெலும்பு என்றும்
கலும்பான வெலும்பினிட வதீதப் பேரிதுதான்
கட்டினோம் முழங்காலின் எலும்பதுவின் பேரே. 63

காலான படுவென்றுந் தொடுவென்றும் பேரு
    கல்லான கூண்டெலும்பு வென்றதற்குப் பேரு
சோலான கச்சிவமத் துரதிக மென்றும்
    துத்துவா ரெலும்பென்றும் அதற்குப் பேரையா
ஆலான துரோனிதமெலும் பென்றும் பேரு
    அஷ்ட நவகண்ட மென்றுமதற்குப் பேரையா
வில்லான குறிவில்லு யென்றதற்குப் பேரு
    விளம்பினோம் பழுவெலும்பின் விசிதமென்றும் பேரே. 64

விசிதமென்ற வேதபூர நாதவே ரெலும்பு
    விபரமென்ற சுக்கெலும்பு வென்றதற்குப் பேரு
யதிதமென்ற மசௌத்துரு எலும்பென்றும் பேரு
    அதீதப் பொன்னாவடம் எமன்றதற்குப் பேரையா
நசிதமென்ற நற்கணாதியெலும்பு என்றும்
    நாகரொட்ட வெலும்பென்றும் அதற்குப் பேரு
வசிதமென்ற மார்க்கண்டி யென்றதற்குப் பேர்
    வசனித்தோ மாறினிட வெலும்பதிவின் பேரே. 65

மாரான வொட்டக யெலும்பென்றும் பேரு
    மகத்தான மண்ணாட்டி யுண்ணாட்டி கண்ணாட்டி யென்றும்
ஆரான வன்னாட்டு வெலும்பென்றும் பேரே
    அக்கெலும்பு உக்கெலும்பு அதற்குப் பேரையா
வாரான வடிவெலும்பு மேனமென்றதற்குப் பேரு
    வாசமென்ற முடிசுருளைனயெலும்பென்றும் பேரு
நாரான நாகவா லெலும்பென்றும் பேரு
    நாம் சொன்னோம் புலத்தியனே கோடாகோடிபேரே. 66

கோடியென்ற பொறுக்கிமணி கோர்த்த பாவனைபோல்
    கூறினோம் இப்பொருளை யாருக்குஞ் சொல்லார்
வாடித்திரியார் இன்னூல் பார்த்த பேரையா
    வசனித்தோம் என்னாணை வாதியென்றுமாவார்
நாடியென்று நாதாந்தச் சித்தருக்கு மதிகம்
    நல்லபர கெதியாவார் நாட்டவொண்ணாது
பேடியதாய்த் திரியாதே பேய்மக்காள் கேளும்
    பேசினோ மிவ்வெண்ணூர் காண்டம் இரண்டாமே. 67

இரண்டான முன்சொன்ன பிண்டமதை வாங்கி
ஈரல் பிச்சுக்குடலுள் எமூலமெல்லாந் தள்ளி
நிரண்டான சலம்விட்டு வுள்சுத்திசெய்து
நிலைபெறவே கல்லுரலிற் பிண்டமதைத் தாக்கி
அரண்டான சுத்தசலம் அரைப்படிதான் விட்டு
ஆட்டுவா யெழுவுலக்கைக் கொண்டு விருசாமம்
இரண்டான மாங்கிஷமும் எலும்பு முதற்கொண்டு
விசைந்த பச்சரிசி மாவது போலாமே. 68

அதுவான மாங்கிஷத்தின் அதைத்தோண்டிலையா
அடவான வாள்பழங்கா விடமதினிலேகி
நதுவான மாங்கிஷத்தைப் பலகை மீதிலிட்டு
நன்றாகச் சரகது போல் நலமாக வுலர்த்தி
கொதுவான சித்திரநாள் இருபத்தொன்று மட்டும்
கூறாகச் செய்துலர்த்தி யெடுத்துக் கொண்டு
சதுவான கல்லுரலில் சரக்கதனையிட்டு தையல்
மாதுடை யவள்தன் முலைப்பால் நாழிவாரே. 69

வார்த்து யிருசாமமது சாடினாலையா
அதுபொடியாய்த் தூளாகும் அத்தூளாவதனில்
சேர்த்த நீர்சுத்தசலம் நாழியது விட்டு
சுருளாக விருசாமஞ் சூட்டிவிடும்போது
ஆர்த்துவது மாப்போலாம் பிண்டமது வாகும்
ஆருமறியார் சுளிந்தப் பிண்ட மாவின்கூறு
சேர்த்து விதிலாண் விந்து நாலு பலமிட்டுச்
சீராகத் தாக்கிவிடு விருசாமந் தானே. 70

தானென்ற மாவுக்கு வனேகம் பேருண்டு
தாபிக்க வென்னாலே சொல்லத் தெரியாதையா
நானென்ற பிண்டபூநீறென்றும் பேரு
நன்றான பூமியுட நாதமென்றும் பேரு
நானென்ற சவுட்டு மண்ணு வுழமண்ணென்றும் பேரு
சமர்த்தான உவர்நாதம் பூநீரென்றும் பேரு
மானென்றும் தளைநாதமென்றும் பேரதற்கு
மாலைபிண்ட மாவுக்கு பூநீரென்றும் பேரே. 71

மாவான மாவதனைப் பனிநீரிற் கரைத்து
வளமாகத் தெளியவைத்துப் பத்துமுறை யாகில்
பதுவான இத்தெளிவைப் பாண்டத்தில் இட்டுப்
பண்மைபெறப் பாண்டமதை யடுப்பிலதை யேற்றி
அதுவான வக்கினியை மூட்டியதை யையா
அரகரா கொதிக்கவைத்துக் குழம்பது போலானால்
நதுவான விறக்கி யாறவைத்து நீயையா
நலமான பீங்கான் ரண்டில் குழம்பதுவை வாரே. 72

வார்த்து பத்துநாளு வீதமுறை தப்பாதையா
மகத்தான மாக்கசிவை இறுத்தால் எண்ணைப்போல்
பார்த்துப் பத்து நாளுவீதம் இக்கசிவை யிறுத்தால்
படரும் பூநீருப்பு பாறையது போல
சேர்த்து அப்பாறையுப்பை நாவதனாற் சொல்ல
செவிகேட்க வேறு செவி செய்ய முடியாது
நாற்றிசையில் இந்தவிதஞ் செய்யாத கொடுமை
நாதமென்றும் பூநீறு செய்தார் மண்ணைத்தானே. 73

தானான பிண்டசுன்னஞ் செய்யும் வகைகேளும்
தருவான கல்லுரலில் இருந்தந்த மாவை
வேனான மாவதனைத் தோண்டி நீயெடுத்து
விளங்குபிண்டக் குழித்தயிலம் இரண்டு சேர்கொண்டு
கானான கல்வமதிற் பிண்டமாவை யிட்டுக்
கருவான பிண்டக் குழித்தயிலமதைத் தாக்கி
ஆனான இருசாமம் ஆட்டிவிடும் போது
அதுவுளி போல் வன்னமதா யாகுமதுகாணே. 74

காணப்பா சுந்தரமே புலத்தியனே கேளும்
கருவான புளியதினில் விந்து சேரிட்டு
நாணப்பா நாற்சாம மெழுகது போலாட்டி
நாரது போலாகுமது பாகமதைக் கண்டு
கோணப்பா சதிபுருஷர்களிந்த யவநாதங்
கூறினோ மரைசேரு புளியதனில் தாக்கி
பேணப்பா விருசாமம் பிசினியது போலப்
பெலமாக வாட்டி வழித்திடுவாய் அதைத்தானே. 75

பெலமாக வழித்ததனை வில்லையதாய்ச் செய்து
பேரான சித்திரை நாள்ரவி முகத்திலையா
முலமாக முப்பதுநாள் ரவியிலதை வைத்தால்
மூதண்ட வெங்கலமாஞ் சத்தமது போல
கலமாக விறுகியது கல்போலது கட்டும்
கசிவெல்லாம் எண்ணையைப்போற் கழண்டுவது போகும்
வலாமாகக் கழன்டு மணியது போலதுவானால்
வச்சிரமாம் வில்லையதை எடுத்திடுவாய் தானே. 76

எடுத்து பில்லையதின் மேலே விந்துசீலையேழு
இயல்பான வண்டமேழு சீலையேழுஞ் செய்து
கடுத்துரவி முகந்தனிலே வைத்துவொரு சாமம்
கருவான பில்லையதை எடுத்துநீயையா
தடுத்தீராயிரண்டோடு சதுரமதாய் கொண்டு
தருவான பில்லையதை யோட்டில் வைத்ததனை
எடுத்து நீ மேலோடு மூடிமண்சிலைசெய்து
மேலான ரவிமுகத்தில் உலரவைத்துப் பாரே. 77

பாரப்பா உலர்ந்த பிறகெடுத்ததனை யையா
பன்றிபுடம் போட்டு நீர் பாத்திரேயாகில்
பேரப்பா பிண்ட சுன்னம் ஆறின பின்எடுத்து
பெலத்தமண் சீலையுடக் கவசமதை வாங்கி
சேரப்பா இச்சுன்னம் பார்த்திரே யாகில்
துடியான சரக்கு அறுபத்து நாலையுந்தான்
சூரப்பா சுன்னமுமாஞ் செந்தூ ரமாகும்
துடியான மெழுகு கட்டுஞ் செயநீரது வாரே. 78

செயமான உபரசங்கள் உருக்கிலங் களாகும்
செய்யுகிற வித்தையெல்லாந் தங்க நிறமாகும்
வயமான வாதத்துக்கு இது வாதியாகும்
வயித்தியத்துக்கு இதுவாதி துறைகாணாக்கோடி
அயமான இரும்பதற்கு இச்சுன்னம் பட்டால்
அப்பனே இரும்பெல்லாம் பொன்மயமாய்ப்போகும்
நயமான சூதமதில் இச்சுன்னம் பட்டால்
நல்ல சாரணையாகுங் குளிகைமணியாமே. 79

ஆமப்பா சித்தர்கள் தான் இம்முறைதான் அறியார்
அனேகம்பேர் நாதாக்கள் இம்முறை தானறியார்
நாமப்பா சொல்லிவிட்டோம் பொய்யில்லாப் பொருளாய்
நாட்டினோம் இன்னூலில் நாம் சொன்னோமையா
மாமப்பா மானுவந்தான் மாய்கை காமியந்தான்
மகடித்து வோட்டிட்டவனே மவுனசித்த னாமே
ஏமப்பா யிதுமூன்றால் சாவுவந்தெய்தும்
இதுமூன்றுந் தள்ளினவரேகவுபமாமே. 80

உபமான சுருபத்தால் ஒன்றதுவே ஆவாய்
உலகத்தோர் இந்தப் படிஉறுதி யுடன்நிலைத்தால்
வேமப்பா கசப்பு வந்து வமுர்தம் போலாகும்
வேதாந்தம் அவர்களுக்கு விளங்குமது பாரு
செபமான தியானமெல்லாஞ் சித்திக்கும் பாரு
தீனக்ஷ முதல் மந்திரங்கள் செயசித்தியாகும்
சுயமான காயமதிலுள்ள கபமெல்லாங்
கழன்றுவிடும் பிண்டசுன்னக் கருவதுவாலாமே. 81

பிண்டச் சுன்னம்

கருவான பிண்டசுன்னப் பேரதனைக் கேளுங்
கம்பியுப்புச் சுன்னமென்று அதற்குப் பேரையா
பருவான பாறைசுன்னங் கற்சுன்னமென்றும்
பரிவான வங்கசுன்னமென்றும் யந்தசுன்னமென்றும்
அருவான களிச்சுன்னம் மறவச்சுன்ன மென்றும்
அடவான விந்ததினால் ஆனசுன்னமென்றும்
தருவான நாதத்தாலான சுன்னமென்றும்
நாம்சொன்னோம் பிண்ட கருவாலான சுன்னப் பேரே. 82

பேரான பேர்களெல்லாம் பொறுக்கி மணிபோல்
பேசுகிறோம் இந்த வெண்ணூற் பிரபல்யமாக
காரான இரண்டாவது காண்டமதில்
கருவியால் எடுத்த விதிகணைக் கெல்லாந்தான்
வேறான வேதாந்தம் பார்த்து நீ தேறி
விளங்கு மதின் கருவெல்லாம் அறிவார்கண்டு
தேறான தெளிந்தறிவாற் பாத்திட்டாக்கால்
தேகக்கூர்கருவி யெல்லாந் தெளியுந்தானே. 83

தெளிவாக வாதிகட்குத் துயரமில்லாமல்
தேறுதற்குச் சரக்கினிட கூறெல்லாந்தான்
அளியாதே புத்திவான்நன்றாய்க் கேளு
அறுபத்து நாலுசரக்குதிக மெல்லாம்
பொழிவாகப் பொன்மாரி பொழிந்தாப் போலப்
புகலுவோமிந்த வெண்ணூர் புகழோமெத்த
களிவாக இருந்ததினால் ஆவதென்ன
கண்கெட்ட மூடர்களே கருத்தாற் காணே. 84

சிவசாரத்தின் பெயர்

காணப்பா புலத்தியனே யோத்திரமென்றும் பேரு
கந்திரம யோகடமென்றும் அதீதப் பேரதற்கு
ஆணப்பா சிவசார மென்றும் பேரு
ஆதித்தா சிவமென்றும் அதற்குப் பேரு
நாணப்பா நாதசார மென்றும் பேரு
நாதாந்த மவுனசாரமென்றும் பேரு
கோணப்பா வாராது குருசாரமென்றும்
கூர்ச்சாரமென்று அதற்குச் சிவசாரத்தின் பேரே. 85

சத்தசாரத்தின் பெயர்

சாரமென்றாற் சாரமல்ல ஓமமென்றும் பேரு
சாற்றினோம் ஓங்கிடமாங்க மென்றும் பேரு
வாரமென்ற வதிசாரமென்றும் பேரு
வாலைச்சார மென்றதற்குப் பேருண்டாச்சு
ஆரமென்ற நருளிகச் சாரமென்றும் பேரு
ஆடவச் சாரமென்றுமதற்குப் பேரு
பாரமென்ற படாச்சார மென்றும் பேரு
பதிபரமாஞ் சத்திசாரத்தின் பேரே. 86

அரிதாரத்தின் பெயர்

சத்தியென்ற வுளிக்கார மிலிங்கித னென்றும்
சாற்றினோ மயிர்வோத மென்றும் பேரு
மத்தியென்ற மலிக்கார மென்றும் பேரு
மண்ணூளிக் காரமென்றும் அதற்குப் பேரு
அத்தியென்ற அலங்கிதன் என்றும் பேரு
அவதிசய காரமென்று மதற்குப் பேரு
சித்தியென்று மாயோன் விந்தென்றும் பேரு
செப்பினோம் நன்றாக அரிதாரத்தின் பேரே. 87

வெண்காரத்தின் பெயர்

தாரமென்ற வடங்கனென்றும் பேரு
தருவான சீலையென்றும் வேலையென்றும் பேரு
ஆரமென்ற வங்கநட மென்றும் பேரு
அதமத சம்மேக நசமென்றும் பேரு
காரமென துடங்கன மென்றும் பேரு
காடீச மென்றதற்குப் பேருண்டாச்சு
தூரமில்லாப் பேரிதுபார் எவ்வெட்டாச் சொன்னோம்
சூட்சமதாயிந்த வெண்ணூற் வெண்காரத்தின் பேரே. 88

பொரிகாரத்தின் பேர்

காரமென்றாற் காரமல்ல புலத்தியனே கேளும்
கருவான விரிகாரம் படுகாரந்தான்
வாரமென்ற துரிகார மென்றும் பேரு
வனமான வரிகாரம் நரிகாரமென்றும்
சீரமென்ற குருகார லகுகாரந்தான்
காகிகாரம் பெதிகார மென்றும் பேரு
சாரமென்ற கெறிகார மென்றும் பேரு
சாற்றினோஞ் சுந்தரமே பொரிகாரத்தின் பெயரே. 89

சீனக்காரத்தின் பெயர்

சாற்றினோஞ் சிவமூல காரமென்றும் பேரு
சதாசிவ சத்திவரிநார மென்றும் பேரு
போற்றினோம் பூபதி காரமென்றும் பேரு
பூட்டினோம் பூவாதி காரமென்றும் பேரு
வேற்றினோம் வேதியன் காரமென்றும் பேரு
விலாட யுரகார மென்றுமதற்குப் பேரு
வாழ்த்தினோம் வாலை ரகுபதி காரமென்றும்
வளமாக வசனித்தோஞ் சீனக்காரத்தின் பெயரே. 90

வெடிகாரத்தின் பெயர்

சிரான சிரோசக காரமென்றும் பேரு
சிலைகாரம் வலைகாரம் என்றதற்குப் பேரு
ஆனான வைரஞ்சக் காரமென்றும் பேரு
அலங்கார மென்றதற்குப் பேருண்டாச்சு
வானான வாதிகார மென்றும் பேரு
வசனித்தோம் வடகாரமென்றும் பேரு
தேனான திருகடல்வாழ் காரமென்றும் பேரு
செப்பினோம் காதெளிவால் வெடிகாரத்தின் பேரே. 91

படிகாரத்தின் பெயர்

வெடியான வெடிகசீரதி யென்றும் பேரு
விரும்புவாதிக்கார மென்றதற்குப் பேரு
அடியான யோனிகார மென்றதற்குப் பேரு
அடவான வொலிகாரமென்றும் பேரு
துடியான தனுகார மென்றும் பேரு
தனஞ்செயகார மென்றும் அதுக்குப் பேரு
கடியான காலிதமென்றும் பேரு
கவடிதகார மென்றும் படிகாரத்தின் பேரே. 92

இந்துப்புவின் பெயர்

படியான வாணிமாக் கசங்கென்றும் பெயர்
பறிவான சயிந்தலவ னென்றும் பேரு
சடியான சைந்திலக மென்றும் பேரு
சார்வான நாகதெய் மென்றும் பேரு
வெடியான வித்திக மென்றும் பேரு
விளங்கினோம் அதிரவணம் என்றும் பேரு
கடியான கனிமாசம் என்றும் பேரு
காரகஞ் சாரம் இந்துப்பினிடப் பேரே. 93

வளையலுப்பின் பெயர்

விந்தான மேடியென்றும் நாடியென்றும் பேரு
விவேச மதியுப்பென்று மிதற்குப் பேரு
விந்தானவீராதவுப் பென்றும் பேரு
விசித ஒளியுப்பென்றும் இதற்குப்பேரு
முந்தான முயலுப்பு வயலுப்பென்றும் பேரு
மூதண்ட பசுமை வெளியுப் பென்றும் பேரு
சந்தான சயிலுப் பென்றும் பேரிதற்குச்
சரமாகச் சொல்லிவிட்டோம் வளையலுப்பின்பேரே. 94

வெடியுப்பின் பெயர்

உப்பான புரதம் அபரதா னென்றும்
ஒருமாதக் கருப்பென்று மதற்குப் பேரு
அப்பான ருத்திர உப்பென்றும் பேரு
அந்நதனென்ற உப்பதற்கு வதீதப் பெயர்கள்
செப்பான செயலக வுமயுப் பென்றும் பேரு
செங்கடிவாயுப் பென்றுமதுக்குப் பேரு
தப்பாமற் சொல்லுகிறோம் நவற்குப் பென்றும்
தாபித்தோம் தமிழ் செய்தோர் வெடியுப்பின்பேரே. 95

கரியுப்பின் பெயர்

தமிழ் பெறவே பியிர்மவுப்பு சத்துப்பென்றும் பேரு
தருவான மணியுப்பு கணியுப்பென்றும் பேரு
அமிழ் பெறே யரிவுப்பு நரியுப்பென்றும் பேரு
ஆதவழி உப்பென்றும் அதற்குப் பேரு
தமிழ் பெறவே நாதவடி யெறிவுப்பென்றும் பேரு
நல்லபர முகவுப்பென்றும் பேரு
வளமான வஸ்துப்பு வென்றும் பேரு
வாத மயவுப்பென்றுங் கரியுப்பின் பேரே. 96

பூரணாதியுப்பு

கல்லான கருவியுப்பென்றும் பேரு
கருவாதி யுருவாதி யுப்பென்றும் பேரு
அல்லான சிவநாதி யுப்பென்றும் பேரு
யாகவுப் பென்று பேரதற்குண்டாச்சு
வில்லான வீரவுப்பு வென்றும் பேரு
விளங்கினோஞ் சல்லாப வுப்பென்றும் பேரு
புல்லான புனலுப்புவென்றும் பேரு
பூரணாதி யுப்பென்று மிதற்குப் பேரே. 97

சத்தியுப்பு

பூரமென்றும் பூதமென்றும் அதுக்குப் பேரு
புகழான தீரமென்று மதற்குப் பேரு
ஓரமென்றும் பேரமென்று மதற்குப் பேரு
ஓகோகோ திரிகோண உப்புவென்றும் பேரு
தூரமென்று மதியாதி யுப்பென்றும் பேரு
சுரனவாதி உப்பென்றும் அதற்குப் பேரு
காரணத்தாலே யிருந்தால் எல்லா மெய்துங்
கதும்பை யென்று மதீத பேர்சத்தியுப்பின் பேரே. 98

ஜாதிலிங்கத்தின் பெயர்

அதீதமென்ற விருலிங்க வட்டியென்றும் பேரு
அருளான விந்தூக மென்றும் பேரதற்கு
நதீத மென்ற விருக்கு மென்றுமதற்குப் பேரு
நாட்டினோஞ் சயிலந்த மென்றும் பேரு
வதீத மென்றசான மென்று மதற்குப் பேரு
வளமான பங்கியென்று மதற்குப் பேரு
மதீத மென்ற அயங்கி யென்று மதற்குப் பேரு
மகத்தான பேரிதற்குச் சாதிலிங்கத்தின் பேரே. 99

பாஷாணம்

சாதியென்ற எரிமருந்து வென்றும் பேர்
சாம்பாங்கி என்றதற்குப் பேருண்டாச்சு
ஆதியென்ற பிற்மனிந் தென்றும் பேரு
அரக்கியென்று மருளினோ மேற்கியென்றும் பேரு
வாதியென்ற வாதாக்கி யென்றும் பேரு
வசனித்தோம் அமுர்தங்கி யென்றும் பேரு
நீதியென்ற நீடுரமென்றும் பேரு
நிகரில்லா பாஷாண மதற்குப் பேரே. 100

கெவுரி பாஷாணம்

மதுவென்று மடக்கீத நடக்கீத மென்றும் பேரு
மடவான கெரிதவ காளியென்றும் பேரு
அதுவென்று வானைமடையென்றும் பேரு
அக்காடித மென்றதற்கு வதீதப் பேரு
நதுவென்று நன்றாச் சியென்றும் பேரு
நாராயணித மென்றதற்குப் பேரு
நதுவென்ற தாரை சின்னிப் பாஷாண மென்றும் பேரு
நாபித்தோங் கெவுரி பாஷாணத்தின் பேரே. 101

கெந்தியுரி பாஷாணம்

கெவுரமென்ற கெடம்வாதி யென்றும் பேரு
கெலிக்கடி யென்றதற்கு மதீதப் பேரு
எவுரமென்று விருஞ்சிக் குடீயென்றும் பேரு
யெம்பாரி யென்றதற்குப் பேருண்டாச்சு
அவுரமென்றும் அத்தஞ்சட மென்றும் பேரு
ஆடாரச மென்றதற்கு அதீதப் பேரு
நவுகரமென்றும் நாட்டுக் கேந்தியென்றும் பேரு
நாட்டினோ மிந்தபடி கெந்தியுரி பாஷாணத்தின்பேரே.102

பச்சை கற்பூரத்தின் பெயர்

கெந்தமென்றும் அந்தமென்றும் அகிற்
கொம்பீர மென்றுங் கிரிராளி மருவாளியென்றும் பேரு
விந்தமென்றும் விரலிபச்சையென்றும் பேரு
விலாதுருடி கெளித்தி பச்சையென்றும் பேரு
நந்தமென்றும் யுவுரி பச்சையென்றும் பேரு
நாம்சொன்னோம் புலத்தியனே மகராச யோகி
சொந்த மென்ற இந்தவெண்ணூர் சித்தர்க்கெல்லாம்
சூட்டினோஞ் சூக்ஷமதாய்ப் பச்சை கற்பூரத்தின் பெயரே. 103

வெண்பா

பேரான பூமலராம் ரசகற்பூரம்
பெரிதான மேதினியில் பிரம்மாகும்
காரான நீதியுடன் கற்பமென்ற
கருவான கருவதனை யழிக்கும் ராசன்
சீரான மாமுனிவர் தேர்ந்த நூலாம்
சித்தர்களுக் கின்னூல்தான் குருநூலாகும்
வாரான அமிர்தமென்றும் வடநூலென்றும்
வசனித்தார் குருமுனிவர் வகுத்தவாறே. 104

கவியான நிகண்டு எண்ணூர் கருவறியார்
சகலமுறை வருவாகக் கொன்றுமனவுறு தியினால் வருமறையோர்
அவியாதக் கவியது போலாடியதோர்
திருநடனம் யிறவாதக் கல்வியதுவறியேனே வந்ததனால்
தவியாத மூலகருகருக்கு சாதகமாய்க் காவியத்தில் முற்றி
பெறவேவாசி முதற் காண்டம் யோகஞ் சொல்லுயிர் நிலைகள்
புவியிலுள்ள மாணாக்கான் புகழ் பெறவே
வேண்டுமென்றால் கவியான அப்பியாசம் கண்டறியே.105

கண்டிடினும் பெரியார்கள்

கைமுறையைக் காணவென்றால் - யெண்டிசையில்
காமுகர்க்கு யெய்துமே யெய்தும் வகை
தோன்றிடினும் - பன்னிரண்டு
தொகுப்பிரண்டில் காத்ததனால் விண்டிடாது
ஒருக்காலும் வீணருக்கும் பகைவருக்குங் காண்
கட்டி உலகோர் புலையர் தாரணியில் வெகும்டையர்
கொண்டடிமை வருதல்போல் - கொஞ்சுவர
உறவாடினொண்டிடினும் அண்டர்தொழும் துண்மை
அறிவாலதுவே கண்ட மிதுவே
கால்ச் செதரா காட்சியதே. 106

இரச கற்பூரம்

இதுவான ரசமென்றும் நிரஞ்சனமென்றும்
இனியாடம் புவியாட மென்றும் பேரு
அதுவான ரசகற்பூர மென்றும் பேரு
அதுஅதிலோக மருஞ்சாக மென்றும் பேரு
வதுவான பொருமிதாத மென்றும் பேரு
வசனித்தோம் இந்த வெண்ணூற் வாஞ்சைபாரீர்
மதுவான அமுர்தம் உண்டது போலையா
வசனித்தோம் நதீதரச கற்பூரத்தின் பேரே. 107

இரசத்தின் பெயர்

பூரமாஞ் சூதமென்றும் வேதமென்றும் பேரு
புகழ் மங்கை வாலையென்று மிதற்குப் பேரு
சாரமாம் வாதமென்றும் இதற்குப் பேரு
சத்தமிரசம் என்றும் இதற்குப் பேரு
காரமாம் நீச்சத்தாணி யென்றும் பேரு
கருவானி யென்றதற்குப் பேருண்டாச்சு
சூரமாம் அசுநாதி யென்றும் பேரு
சொல்லிவிட்டோம் பூபதிகேள் ரசத்தின் பேரே. 108

வாலைரசத்தின் பெயர்

பதியான வெள்ளானை அத்தியென்றும் பேரு
பரப்பிரம விந்தென்று மிதற்குப் பேரு
சதியான புருஷோத்தம மென்றும் பேரு
சைதன்னிய மென்தற்கு வதீதப் பேரு
மதியான வமுர்த விந்தென்றும் பேரு
திரவியென்றும் சூரியன் விந்தென்றும்
விதியான மாமறையோர் விந்தென்றும் பேரு
விளங்கினோம் வாலை ரசமதி னுடையப்பேரே. 109

சுத்த ரசத்தின் பெயர்

பேறான நாதவிந்துவை நன்றாய்ச் சேர்த்தால்
பெலத்து திந்தக் காயமது சுத்தரசமாச்சு
வாறான வாலையாஞ் சுத்த முதுண்டால்
வச்சிராக மென்றுமிதற்கு வதீதப் பேரு
தேறான தேகவச்சிர மென்றும் பேரு
திருரசம் வுருரசம் குருரசந் தானென்றும்
யாறான வழலைரசம் பிண்டவண்ட ரசந்தான்
அஷ்டதிசை ரசமென்றுஞ் சுத்தரசத்தின் பேரு. 110

விந்தின் பெயர்

இரசமான வளாதியென்று வரலென்றும் பேரு
நகரான மென்றுமாதிபதி யென்றும் பேரு
யசமான சிகாரமென்றும் நாபிரசமென்றும் பேரு
ஆகாச விந்தென்றுமதற்குப் பேரு
வசமான வாசுகி யென்றும் பேரு
வாகார மல்லய காதமாம் மவனவிந்தென்றுங்
கசமான கழிவிந்து என்றும் பேரு
கருணை பெற சொல்லிவிட்டோம் விந்தின் பெயரே. 111

நாதம்

விந்தானநாதமென்றும் உகாரமென்றும் பேரு
விளங்கினோம் தேகியென்றுங் கேசரிதானென்றும்
முந்தான மூலமென்றும் ஞானமென்றும் பேரு
மூதண்டங் கோதண்ட மென்றும் பேரு
நந்தான மகாரசிங்கி யென்றும் பேரு
மலைநாத மென்றதற்கு பேருண்டாச்சு
அந்தான விந்த படியறிந்தே சொன்னோம்
அறிவுள்ளோர் பெண்ணாத மதிதப் பேரே. 112

தண்டின் பெயர்

நாதமென்றால் மனமதுவுலர்ந்த மென்றும் பேரு
நாம்சொன்னோம் நாகரிகம் செம்பென்றும் பேரு
வாதமென்றால் வளவுதடியளவு தடியென்றும்
வசனித்தோம் மூலதடியென்றும் பேரு
போதமென்ற பொலிமத மென்றும் பேரு
புகழான மன்மத வாளியென்றும் பேரு
பூதமென்ற வாசிலிங்க மென்றும் பேரு
புகழான றதிமான மோகவிந்து தண்டின் பேரே. 113

யோனியின் பெயர்

தண்டான பரயோனி யென்றும் பேரு
தார்வாசற் பீடமென்றும் அதற்குப் பேரு
உண்டான பிண்டயோனி யென்றும் பேரு
ஓர்வாசல் பூரணம் என்றிதற்குப் பேரு
யெண்டான இமையகிரி மகாமுடியென்றும் பேரு
யெல்லவர்க்கும் பெருவழியா மிந்த வாசல்
கண்டாயே பூதவழி நாதபர வாசல்
நால்மறைகள் உதித்த கருநாத யோனியதின் பேரே. 114

பொன்னின் பெயர்

இனியான வியலென்று கிறணிய மென்றும்
நிலையான வாசையென்று மிதற்குப் பேரு
தணியான ஆடகமருத்த மென்று பேரு
தருவான வருளமென்று மதற்குப் பேரு
வணியான வதித மென்றும் அதற்குப் பேரு
வசனித்தோம் அரியென்றும் அதற்குப் பேரு
துணியான நாதவொளி பவனிவரும் போதே
சொல்லிவிட்டோம் பொன்னிடப் பொருளின் பேரே. 115

தங்கத்தின் பெயர்

பொருளான பரியென்றுந்திரி யென்றும் பேரு
பூமல டுற மென்று மதற்குப் பேரு
அருவான வன்னமென்றுங் சுன்னமென்றும் பேரு
அசுபதி யென்றதற்கு அத்தீதப் பேரு
மருளான தசபரிமாத் தென்றும் பேரு
மக்களீ மென்றதற்கு வதிதப் பேரு
இருளான வீரமென்றதற்குப் பேரு
என்ன சொல்வோமதின் பேருந் தங்கத்தின் பேரே. 116

பூமியின் பெயர்

தங்கமென்ற பூமியென்றும் பூக்கால மென்றும்
தரணியென்றும் நீலமென்றும் சாரமென்றும் பேரு
அங்கமென்ற வத்தகர்க் குந்தமென்றும் பேரு
ஆறணிகாறணி யென்றும் அதற்குப் பேரு
சங்கமென்ற சயிலாதி யென்றும் பேரதற்கு
தராதர மென்றண்டத்துக்கும் பூமிக்கும் பேரு
வங்கமென்ற வடபூமி நிலத்தின் பேர்கள்
வசனித்தோம் சுந்திரமே பூமியின் பேரே. 117

தென்பூமியின் பெயர்

பூமியென்ற பூமிரச வாசமதி யென்றும்
பூட்டினோம் பூட்டியோக நில சுவர்வமென்றும் பேரு
வாமியென்றும் தளக்காளரி பூமியென்றும் பேரு
மாருதப்புவி யென்றுமதற்குப் பேரு
காமியென்ற கருதிரச பூமியென்றும் பேரு
கணவாதி நிலமென்று மதற்குப் பேரு
தாமியென்ற தாரபத மென்றும் பேரு
சன்னாசப் பூமியென்றுந் தென்பூமியின் பேரே. 118

தெனமானப் பிதநிலகாத நிலமென்றுந்
தெளிவான கருவாண்ட பூமியென்றும் பேரு
வனமான கிரிசாரப் பூமியென்றும் பேரு
வாசசஞ்சீவி பூமியென்றும் பேரு
கனமான கபிலை பூமிநிலமென்றும் பேரு
கதம்பா ருபூமி யென்றும் அதற்குப் பேரு
மணமான மூறாட நிலமென்றும் பேரு
மகத்தான துருவடுமண்ணென்று பூமியின் பேரே. 119

நால் திசைபூமியின் நீரின் பெயர்

மண்ணான லட்சண மநிகநிதானென்றும்
மறைநில மண்ணென்றும் அன்னமென்றும் பேரு
கண்ணான வெளிகழிமண்மழி மண்ணாகும்
கசித்த நிலமேகநில மென்றும் பேரு
எண்ணான வுருத்த மண்ணென்றும் பேரு
உறைப்படு நிலப்பூமி யென்றும் பேரு
புண்ணானக் காயமண்ணு நிலமென்றும் பேர்
போற்றினோம் நால்திசை மண்கீழ் பூமியின் பேரே. 120

வடபூமியின் பெயர்

பூமியாங் கருமணந்த மென்றும் பேரு
பூவாத மாதியென்று மதற்குப் பேரு
வேமியாம் வேதமண்பாதமண்ணென்றும்
விளங்கினோம் வீதிவறண மென்றும் பேரு
ஆழியாம் ஆங்கார மென்றும் பேரு
அல்லாதிவறண மென்றுமதற்குப் பேரு
நேமியாம் நெசலக மென்றதற்குப் பேரு
நிறைஞ்சன மாதிறை யென்றும் வடபூமி மண்ணிறத்தின் பேரே.121

தென்பூமி

பூமியென்று புகலமென்று திகிலமென்றும் பேரு
பொறிவாசை நரிதாசை யென்றும் பேரு
காமமென்ற தாமங்கமென்றும் பேரு
கருதுவோங் கமஞ்ச மென்றுமதற்குப் பேரு
நாமமென்ற நாலாசை யோகாதித மென்றும்
நவிலு குருவேதாந்த மென்றும் பேரு
சேமமென்ற செனக்கல்வி யென்றும் பேரு
செந்தமிழென்ற வனநீ தென்பூமி மண்ணிறத்தின் பேரே.122

மேல்பூமி

நிறமா நீரசெம்மண்ணென்றும் பேரு
நிகர மறாடமென்று மதற்குப் பேரு
வறமான வல்ல காமநல்லன் மாதமென்றும்
வறடராமதுறு மேலாய் மகத்துவ மென்றும் பேரு
சறமான சாதகரிக மென்றும் பேரு
சவுலகல காதமென்று மதற்குப் பேரு
மறமான மறசெம்ப றென்றும் பேரு
மகத்தான மேல்பூமி மண்ணிறத்தின் பேரே. 123

கீழ்பூமி

நிறஞ்சனமாம் விகிதஞ் சம்பு கைதஞ்சமென்று
நிகமோகமதுததஞ்சல மென்றும் பேரு
அறஞ்சனமாம் தலோகறவிறா சிண்டமென்றும்
அருளினோங் கல்மதமென்றும் பேரு
வறஞ்சனமாம் வாதைவுருவென்றும் பேரு
வசனித்தோம் மூறலா மென்றும்பேரு
கறஞ்சனமாம் கந்து நஞ்சன மென்றும் பேரு
கருவானக் கீழ்பூமி மண்ணிறத்தின் பேரே. 124

விடபூமி ஜலம்

கீழான கெங்கை யெல்லாஞ் சங்கநீரென்றும்
கேணிமா பாறைநீரென்றும் பேரு
வாழான வாதசவமாதசல மென்றும்
வளமான காசிவோநங்கை சலமென்றும்
மாழான பழுவெட்டி சலமென்றும் பேரு
மாறாச நீரென்றும் அதற்குப் பேரு
தாழான துந்துநீ ரென்றும் பேரு
துருவான வடபூமி சலத்தின் பேரே. 125

தென்பூமி ஜலம்

சல்மான நதிலட்சைய மென்றும் பேரு
சாமநீர் பூமநீர் மாமநீரென்றும் பேரு
வலமான வசந்தநீர் வுகந்த நீரென்றும்
வசனித்தோம் லட்சணநீர் என்றும் பேரு
குலுமான குருடநீர் வருட நீரென்றும்
கூறினோந் தெட்சண நீரென்றும் பேரு
அலமான வாமனச் சலமென்றும் பேரு
அருளினோந் தென்பூமி சலமதுவின் பேரே. 126

மேல் பூமி ஜலம்

அருளினோமின் சலமா சைலமென்றும் பேரு
மடவான வோலாதிச் சலமென்றும் பேரு
மருளினோம் வாட்டுசலமென்றும் பேரு
நாலாதி சலமென்றும் வாசசல மென்றும்
நருளினோம் கெம்பீர சலமென்றும் பேரு
நாவாடை சலமென்றும் அதற்குப் பேரு
வருளினோம் வாருதிசல மென்றும் பேரு
வசனித்தோம் மேல்பூமி சலமதுவின் பேரே. 127

கீழ் பூமி ஜலம்

வினமான விறாளி சலமென்றும் பேரு
விமல சலங்குமுள சலநமன மென்றும்
கெனமான கிறிசல மென்றும் பேரிதற்கு
கிறான சலமென்றதற்கு அதீதப் பேர்கள்
மினமான மிரசல பெரமசல மென்றும்
மேலாதிச் சலமென்று மிதற்குப் பேரு
வனமான வானிசல மென்றும் பேரு
அருளினோம் கீழ் பூமிசலத்தின் பேரே. 128

சத்தத்தின் பெயர்

தினமென்ற கெவுனசத்தி மாகாசமென்றும்
திரேகம் வான்சத்தி யென்றும் பேரு
அனமென்ற பாசத்த மாதிறாந் தகனதான்
ஆதிசத்த மொதைய மென்றதற்குப் பேரு
மேனமன மென்றுசத்த குணமென்றும் பேரு
மேலான வருவா லுகஉமென்றும் பேரு
கானமென்ற வுலகத்தவ பாவசத்த மென்றும்
கருணைபெறச் சொல்லிவிட்டோஞ் சத்தத்தின் பேரே. 129

ஆகாயம்

சத்தான சாரிவாமம் நீர்மடந்தானென்றும்
சாறாடி றோக கிரிஞ்ச மென்றும் பேரு
வித்தான சதாசிவ மென்றும் பேரு
விகுறாந் தமாமாங்க மென்றும் பேரு
புத்தான புல்லிவான மென்றும் பேரு
பூசுகடோ டாசமென்று மதற்குப் பேரு
முத்தான சதிறாச மென்றும் பேரு
மூதண்ட சறதங்காசம் ஆகாயத்தின் பேரே. 130

மேகம்

ஆகாய பானமென்று மதுபான மென்றும்
அன்னூறு யோசனை யென்றும் பேரு
வாகாச வால்மேக வளமேக மென்றும் பேரு
மஞ்சள் மேகம் செம்மேக மென்றும் பேரு
பாகாக மென்ற பதுமேக மெனும் பேரு
சேகசா மென்ற செகமிருக மேகமென்றும் பேரு
செப்பினோம் ரவிவதனால் மேகத்தின் பேரே. 131

பேறான தெட்சணமா முனிவ னோதும்
பீசாக்ஷர மாலைபிசகா தொருநாளும்
வாறான செந்தமிழாலோது மொழிதவறா
மாமுனிவர் சொன்ன எண்ணூறு வாசமலர்வீசும்
காறான முதற்காண்டம் அக்கருக்கிடையாய்க்
காணும் கருவான விண்காண்டங் காட்சி பெறுமின்னூல்
வேறான பாடலிது நூத்தி முப்பதுக்குள்
விளங்கினோஞ் சலகலக்கியான பூரணமே. 132

பூரணமாய் முன்னோர்கள் சொன்ன மொழிக்கெல்லாம்
பூமலரின் வாசம் போல்புகட்டினோம் நாமும்
வாரண மாபதினாறு லட்சங் கவிபாடல்
வசனித்தோம் அதில்மறைத்த சூட்சமெல்லாம் விண்டோம்
காரணமாய் இந்தவெண்ணூ ற் கட்சி முதலாய்ந்தால்
கருவாளி புலவனென்றுங் காய்வானாவார்
யாரணமாமிந்த நூல் இரண்டாவது காண்டம்
ஆதிமுதலந்தத் தோடருளினோம் முற்றே. 133

2-வது காண்டம் முற்றிற்று

கடவுள் துணை

அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

பஞ்ச காவிய நிகண்டு - 800

மூன்றாங்காண்டம் - பாடல். 120

ஆதிய முதல்வன் அருளந்தம் போற்றி
அம்பிகா சத்தியுட கமலம் போற்றி
சோதிநிறைஞ்சன மான குண்டலியே போற்றி
சுழிமுனையில் கருவறிந்தோம் பிரமன் போற்றி
சாதிபல வகைக் குறித்தோன் பாதம் போற்றி
சருவாணி யுமையாள் சரஸ்வதியே போற்றி
வாதியமா முனிவர் ஓதும்மறை போற்றி
மகத்தான வா காவியங் காப்பாமே. 1

வாதமென்ற நூல்களெல்லாம் குருநூல் பீடம்
கருதியிந்த வெண்ணூற் நிகண்டாய்ப் பாடி
பாதைவழியாகப் பரிபாஷை யெல்லாம்
பகல்போலே ஒவ்வொன்றாய் ஆய்ந்து ஆய்ந்த
பூதமெனும் ஐம்பூதநிலையே கண்டு
போதறவாய் வாசியொட்டி ரவியினாலேகாத
வழிப் போகாமற் கருத்தோடாமல்
காலறிந்து நிலையில் நின்று கருதினோமே. 2

ஓமென்ற பூரணத்தால் உலக மாச்சு
ஓகோகோ பிரிதிவியால் பிண்டமாச்சு
வேதமென்ற நிராயபத்தால் தேய்வுமாச்சு
விளங்குமே வாசியதினாலே அதுவுண்டாச்சு
வாதமென்ற வாசியதால் வாய்வுண்டாச்சு
மகத்தான வாசியதால் சத்தமாச்சு
பூதமென்ற போதமதை அறிவோதாகி
பூடதி போல் அரச யோகம் பெறுவர்தாமே. 3

அஸ்தினி, சங்கினி, சித்தினி, பத்மினி

பெருவதற்குப் பெண்ணிடச் சாதி நாலும்
பிறித்து நாம் ஒவ்வொன்றாய்ப் பேசக்கேளு
வருவதற்கு வஸ்தினிதான் பிற்மகுலமாகும்
யடவானிச் சங்கினிதான் க்ஷத்திரிய குலமாகும்
வறுவதற்கு வசியாளே சித்தினி தானாகும்
வசனித்தோம் பத்மினிதான் சூத்திர குலமாகும்
நறுவதற்கு நால்சாதி குலமே சொன்னோம்
நவிலுவோம் நாலினிட வரணங் காணே. 4

நால் சாதி வரணம்

காணப்பா புலத்தியனே பெண்சாதி நாலும்
கருவறிந்து சொல்லுகிறோம் வரணங்கேளீர்
பேணப்பா அஸ்தினி ஸ்தான்கேரும்
பேணிப்பார் வெளுமை வரணம் பேதமில்லை
நாணப்பா சங்கினி தான் மஞ்சள் நிறமாகும்
நலமான சித்தினி தான் செழுமை நிறமாகும்
ஆணப்பா பத்மினிதான் கருப்பு வரணமாகும்
அருளினோம் நால்சாதி வரணம் இதுவாமே. 5

அஸ்த்தினியின் பெயர்

வரணமாம் புஷ்பரதி புஷ்கரணியென்றும்
வசனித்தோம் அதுமாது பூமாது வென்றும்
யறணமா மயபிசாங்கி யென்றும் பேரு
அருளினோம் அது மடந்தை யென்றும் பேரு
சொறணமா மதிரதி யென்றும் பேரு
சோதிரவி மாலியென்றும் அதற்குப் பேரு
மரணமாம் புருஷரதி யென்றும் பேரு
கருணைபெறச் சொல்லிவிட்டோம் அஸ்தினியின் பெயரே.6

சங்கினியின் பெயர்

சொல்லென்ற சோதையென்றும் விமலியென்றும் பேரு
சொரணகஞ்சி யென்றதற்கும் பேருண்டாச்சு
யல்லன்ற வரோதி நங்கை யென்றும் பேரு
யராமவல்லி யென்றதற்கும் பேருண்டாச்சு
நல்லென்ற நாயகி வாணியென்றும் பேரு
நடராசன் என்றுமதற்குப் பேரு
வில்லென்ற விஞ்சாதியென்றும் பேரு
விளங்கினோம் அதிதப்பேர் சங்கினியின் பேரே. 7

சித்தினியின் பெயர்

சங்கையென்ற சத்மி யென்றும் பேரு
சாதவல்லி மாதவல்லி யென்றும் பேரு
அங்கமென்ற வறிவாணி யென்றும் பேரு
அஸ்திபுருஷ ரத்தின மென்றதற்குப் பேரு
நங்கமென்ற நவமல்லியென்றும் பேரு
நளின கெங்கையென்றதற்குப் பேருண்டாச்சு
புங்கமென்ற பூதகண்ணியென்றும் பேரு
புகழாக சொல்லிவிட்டோஞ் சித்தினியின் பேரே. 8

பற்பினியின் பெயர்

புகழான சித்தியா நந்தி யென்றும் பேரு
போதமையா சாதிரதி யென்றும் பேரு
அகழான அபதங்கியே மதங்கி யென்றும் பேரு
அடவான சிவரத்தின மென்றும் பேரு
நகழான நராசியென்றும் பேரு
நல்லிட்டா மாசியென்றும் அதற்குப் பேரு
துகழான தொண்டத்தி யென்றும் சூட்டினோஞ்
சூக்ஷமதாய்ப் பற்றினியின் பேரே. 9

பாரப்பா சுந்தரமே புலத்தியரே கேள்
பாடினோ மின்னூல்போ பாரினிலு முண்டோ
ஆரப்பா வின்னூலை அறிவார் மாண்பர்
அறிவறியார்ப் பரிபாஷை யாருங் காணார்
நேரப்பா நாம் சொன்னோம் இந்த நூலு
நிகருண்டோ வின்னூலுக்கு எதிர் நூலுண்டோ
காரப்பா காவியமாம் நிகண்டெண்ணூர் தான்
கருவறிவோர்க் கிந்நூலு குருநூலாமே. 10

குருவான குருவறியார் குருட்டு மாண்பர்
குணமறியார்ப் பிணம்போலே திரிவாரையா
யருவானப் பதியறியார் யாருங் காணார்
ஆதியென்றும் அந்தமென்றும் இரண்டைக் காணார்
திருவானக் கருவறியார் உருவுங்காணார்
சிதம்பரத்தின் நடன சபை பவனி காணார்
மருவான பூமலரின் வாசம் போல
வசனித்தோங் கடைக்காண்டம் பிராணாயம்பாரே. 11

நூலுவிபர மறிய சவுமியம்

காண்ட மென்ற வசுனிதன் காண்டம் நாலில்
கனயோகம் நிலைக்க சித்தி காண்பீராகில்
யாண்டமாஞ் சவுமியத்தின் சூத்திர மெண்ணூர்
அறிந்திடு வாயன்னூறு பாடல் மேலே
நாண்டமாம் பலதிரட்டு யன்னூறுக்குள்
நாட்டினோம் விந்துபலம் நன்றாய்க் காணும்
வாண்டமாம் இதுநூற்று வன்பதுக்கும்
வசனித்தோம் ரசிதபற்பம் வாழுவோர்க்கே. 12

சூத்திரம் 80-க்கு 50-க்குமேல் பலதிரட்டு - 50

வாழவென்றால் ஞானக் காவியத்தைப் பார்த்து
மகத்தான சிவசத்தி ஞானதீட்சை யோது
ஆழவென்றால் வேதாந்தம் எண்ணூற் பாரு
அனுதினமென்ற கருத்தோன்று மன்னூல் தன்னில்
ஊழவென்றால் மாந்தரிக மாயிரத்தைப் பாரு
உறுதிமெத்த சித்தி யெல்லா முடனே காணும்
மாழவென்றால் லக்ஷண மாயிரத்தைப் பாரு
அதின்கோர்வை முச்சூடும் அறிந்து பாரே. 13

அறிந்துபார் வயித்திய காவியத்திற் சொன்ன
மகத்துவந்தான் மெத்தவுண்டு உடல் நோய்கூறு
அறிந்துபார் பண்டிதத்தின் துறையெல்லாஞ் சொன்னோம்
வசனித்தோம் அதின்கோர்வை வளமாய்ப் பாரு
அறிந்துபார் அறுபத்து நாலுகலைக்கியானம்
அருளினோம் மகாசாலம் அறுபத்துநாலும்
அறிந்துபார் சவுமியத்தில் கருவைப்பாரு
கடைத்தேறப் பஞ்சகாவியத்தைப் பாரே. 14

வீரத்தின் பெயர்

பார்க்க வென்றால் அருளியென்று முருளியென்றும் பேரு
படுவீரமென்றதற்குப் பேருண்டாச்சு
ஆர்க்க வென்றால் ஆனைவீரமயக் கத்தானென்று
அருளினோம் புதிராக மென்றும் பேரு
நார்க்க வென்றால் னாவதாரு வென்றும் பேரு
நல்ல பசுவீர மென்றும் அதற்குப் பேரு
ஏர்க்க வென்றால் ஏய்லக்கமென்றும் பேரு
இயம்பினோம் அதீதப்பேர் வீரத்தின் பேரே. 15

வீரெமன்ற காருசிதம் மெல்லா மென்று
மட்டமடா வென்றதற்குப் பேருண்டாச்சு
ஆரமென்ற அத்திவீரமென்றும் பேரு
அடவான சிறியானை வீரெமென்றும் பேரு
பாரமென்ற பலவீரமென்றும் பேரு
பசுபதியின் வீரெமன்றும் அதற்குப் பேரு
நாதமென்ற பலபேரு நாம் சொன்னோமே
நன்றாகச் சவ்வீரத்தின் பேரே. 16

கெந்தியென்கிறதின் பெயர்

பேரென்ற கேடரியென்றுங் கெவுனமென்றும் பேரு
பேரான பிறானித மென்றும் பேரு
ஆரென்ற சிருவான் வித்தென்றும் பேர்
அசுலி யென்றும் அறு கோக மென்றும் அதிதப் பேரு
நானென்ற நவகெந்தி யென்றும் பேரு
நற்பாச கெந்தியென்று மதற்குப் பேரு
ஊவென்ற நாதபீச கெந்தி யென்றும்
உரைத்தோம் புலத்தியனே கெந்தியதின் பேரே. 17

சூடன் பெயர்

கெந்த மென்றசிறாடக் காரமந்த மென்றும்
கெணிதமென்று நித்தருவென்றும் பேரு
சொந்தமென்ற தீபசோதி யென்றும் பேரு
சுடரொளி யென்றதற்குப் பேர தீதப்பேரு
சுந்தமென்ற காருவென்று மதற்குப் பேரு
கருவான பூரமென்று மதற்குப் பேரு
விந்தமென்ற விஷசோளி யென்றும் பேரு
மேலான குடனென்றுங் கற்பூரத்தின் பேரே. 18

பூரமென்ற வாறாட்ட வதும்பரமென்றும் பேரு
புகழான தாம்பர மென்றதற்குப் பேரு
காரமென்ற கடுவையென்று வடுவையென்றும் பேரு
கட்டுவை யென்றதற்கு வதிதப் பேரு
வாரமென்ற வட்டசங்கியென்றும் பேரு
வாதுமை யென்றதற்குப் பேருண்டாச்சு
தாரமென்ற தாபதி யென்றும் பேரு
தருவாஞ் செம்பினிட வதிதப் பேரே. 19

இரும்பு

அதீதமென்ற வாதிபச்சை குக்கரும்பொன்னென்றும் பேரு
அடவான நிரும்பொன் என்றும் அதற்குப் பேரு
வதீதமென்ற சுரும்பொன் னென்றதற்குப் பேரு
வசனித்தோம் அரும்பொன் னென்று வதற்கும்பேரு
நீதமென்ற மாசற்ற சுதகமென்றும் பேரு
நிலையான தாம்பர சங்கமென்றும் பேரு
ததீதமென்றுந் திரும்ப னென்றும் அதற்குப் பேரு
சாத்தினோம் அதிதப் பேர்யிரும்பின் பேரே. 20

பித்தளை

திரும்பான நீர்கூட மாறக்கூடாது
நிறைகூட மென்றதற்குப் பேருண்டாச்சு
அரும்பான வங்கங் குடுசிங்கங்குடு வென்றும்
அருளினோம் அக்கிறந்த மென்றும் பேரு
வரும்பான வாளைக்க மென்றும் பேரு
வருகூட மென்றதற்குப் பேருண்டாச்சு
அரும்பான தலைநித்த மென்றும் பேரு
தருவித்தோம் புலத்தியனே பித்தளையின்பேரே. 21

சூரிய காந்தம்

தலையான தனுவென்றும் கங்கமென்றும் பேரு
தனுவங்க மென்றதற்கு வதிதப் பேரு
வளையான வாரிசோளி யென்றும் பேரு
வசநீலி யென்றதற்குப் பேருண்டாச்சு
அளையான வங்கமண்ட மென்றும் பேரு
அத்தி சுங்கமென்றதற்கு அனேகம் பேரு
கனையான கரிபுங்க மென்றும் பேரு கருணைபெறச்
சொல்லிவிட்டோஞ் சூரியகாந்தத்தின் பேரே. 22

சந்திர காந்தம்

காந்தமென்றும் மதிகாந்தமென்றும் பேரு
கருக்காந்தஞ் சிறுக் காந்தமென்றும் பேரு
வாந்த மென்ற வருக்காந்த மென்றும் பேரு
வறநிதிக் காந்தம் என்றுமதற்குப் பேரு
ஆந்தமென்ற வனக்காந்த மென்றும் பேரு
ஆதியொளிக் காந்தமென்று அதற்குப் பேரு
நாந்தமென்ற நாவலற் காந்தமென்றும்பேரு
நாம் சொன்னோஞ் சுந்திரமே சந்திரகாந்தத்தின் பேரே.23

ஊசிகாந்தத்தின் பெயர்

சந்தமென்ற சத்தறிவத்தறி தானென்றும்
சக்கடி காந்தமென்றும் அதற்குப் பேரு
வதீதமென்ற வீரகாந்த மென்றும் பேரு
வீமஞ்சி காந்தமென்றுமதற்குப் பேரு
அதீதமென்ற மந்தனக் காந்தமென்றும் பேரு
அக்கோர மென்றதற்கு வதீதப் பேராச்சு
நதீதமென்ற நாபியரு காந்தமென்றும் பேரு
நலமாகச் சொல்லிவிட்டோம் ஊசிகாந்தத்தின் பேரே. 24

பவளம்

ஊசியமா முக்குறாசி யெந்தமென்றும் பேரு
உசித மாதுகாம மென்றும் தும்புவென்றும் பேரு
வாசியாய் லிங்கமென்றும் இதற்குப் பேரு
வசனித்தோம் வடமென்றும் அதற்குப் பேரு
ஆசியாம் கங்கனுச என்றும் பேரு
அடவான வக்கனம் மென்றும் பேரு
பாசியாம் பதிக்கடக என்றும் பேரு
பாடினோம் இந்தப்படி பவளத்தின் பேரே. 25

குங்கிலியம்

படியான துசவசமென்று மசமென்றும் பேரு
பாடினோந் தேவகந்த மென்றும் பேரு
அடியான தெருகெந்த மென்றும்பேரு
அருளினோந் தேவதார மென்றும் பேரு
வடியான வகருமந்த மென்றும் பேரு
வளமான விந்தது தேகமென்றும் பேரு
சடியான சலித்தக மென்றும் பேரு
சார்வாகச் சொல்லிவிட்டோங் குங்கிலியத்தின் பேரே. 26

தகரம்

குங்கமாத் துருவனென்றும் துகசெனென்றும் பேரு
தோமென்றும் வீதமென்றும் அதற்குப் பேரு
அங்கமாம் சூலியென்றும் நாலியென்றும் பேரு
அருளினோம் புலத்தியனே உனக்காய் தானும்
வங்கமாம் வாமசலமென்றும் பேரு
வளமாக கோம சலமென்றும் பேரு
சிங்கமாம் செடமதற்குப் பேரு
செப்பினோஞ் சுந்தரமே தகரத்தின் பேரே. 27

வெள்ளி

தகரமென்றும் ரசிதமென்று முசிதமென்றும் பேரு
தறுவான நீதரகித மென்றும் பேரு
அகரமென்ற வதிரத்தின மென்றும் பேரு
அல்லசங்க மென்றதற்கு அதிதப் பேரு
பகரமென்றப் பரூரசித மென்றும் பேரு
பரிவல மென்றதற்கு அதிதப் பேரு
கெரமென்றுஞ் சில்லதக மென்றும் பேரு
செப்பிவிட்டோஞ் சித்தருக்கு வெள்ளியின் பேரே. 28

சித்தரென்றும் பத்தரென்றும் விங்கரமென்றும் பேரு
சாலியென்றும் வீலியென்றும் அதற்குப் பேரு
யத்தெரெனு மயவலக்க மென்றும் பேரு
அடவாக வக்கவஞ்ச மென்றும் பேரு
பத்தரனு முத்தவங்க மென்றும்பேரு
யபதுசூலை யென்றதற்குப் பேருண்டாச்சு
குத்தமிக வாராமல் சித்தற்கு கெல்லாம்
கூறினோ மெண்ணூறு உண்மைதானே. 29

வெள்ளி லோத்திரம்

உண்மையாஞ் சிருட்டி கஞ்சுப்பியாக மென்றும்
ஓகோபார் அதிலவத மென்றும் பேரு
தண்மையாந்த வதலமென்றும் பேரு
தருவானந் தரித்திரிய மென்றும்பேரு
வண்மையாம் வாஞ்சகுளி யென்றும் பேரு
வாட்சியென்ற குறகுலத்தப் பேரு
அண்மையாம் அபீரக மென்றும் பேரு
அருளினோம் பூபதியே வெள்ளி லோத்திரத்தின் பேரே. 30

சிப்பிமுத்து

லோத்த மென்ற குண்டுசிப்பி குறிச்சிப்பி யென்றும்
லோகசிப்பினால் சிப்பியென்றும் பேரு
சாத்தமென்ற சாரசிப்பி முத்தென்றும்பேரு
சால முத்துசிப்பி யென்றுமதற்குப் பேரு
வாத்த மென்ற வக்கசிப்பி முத்தென்றும் பேரு
உடசிப்பி யென்றதற்குப் பேருண்டாச்சு
பூத்த மென்ற பூதசிப்பி முத்தென்றும் பேரு
புகட்டினோம் புலத்தியனே சிப்பிமுத்தின் பேரே. 31

சாதிமுத்து

முத்தென்றால் முருகபம்ப யருகபந்தா னென்றும்
முதண்ட சீறமரமென்றும் பேரு
சித்தென்றால் குத்தசி யென்றும் பேரு
சீறான சிறக்கிமுத்து வென்றும் பேரு
அத்தென்றால் அதிடக மென்றும் பேரு
ஆலவருமுத்து வென்றும் அதற்குப் பேரு
வித்தென்றால் வீரமுத்து வென்றும் பேரு
விளங்கினோம் அதிதமதாம் சாதிமுத்தின் பேரே. 32

வச்சிரக்கல்

சாதியெனும் ரவிவச்சிர மதுவச்சிர மென்றும்
சாரவச்சிரம் மாரவச்சிர மென்றும்பேரு
ஆ' மெயனு வமதியென்று மதற்குப் பேரு
அல்லப் பாசாதி வண்டவதிதப் பேரு
நீதியெனும் நீலவச்சிர மென்றும் பேரு
நேறுகுழை சலிக்குழை யென்றும் பேரு
வாதியெனும் விபூதி ருடமென்றும் பேரு
வசனித்தோம் என்மகனே வச்சிரக்கல்லின் பேரே. 33

வைடூரியம்

கல்லான கனபுருஷ மதிபுருஷ மென்றும்
கருக்கல்லு வச்சிரமென்றும் அதற்குப் பேரு
சொல்லான சொர்ணகன மென்றும் பேரு
சோதிதன மென்றதற்கு வதிதப் பேரு
வில்லான விவேகறஞ் சிதமென்றும்பேரு
மேதிநிடவச் சிரமென்றும் இதற்குப் பேரு
அல்லான வழைப்புறாதி யென்றும்பேரு
அதிதமென்ற புசங்கூறு பாஷை வைடூரியத்தின் பேரே. 34

புஷ்பராகம்

ஊரியாம் யுக்னின முக்கயொளி யென்றும்
ஊடுபூசாவதி யென்றும் பேரு
வாரியாம் வத்தற கில்லி யென்றும் பேரு
வாழ்குறடு விறாக மென்றுமதற்குப் பேரு
தாரியாத வடகதி யென்றும் பேரு
தருபதிலா மென்றதற்கு பேருண்டாச்சு
மாரியாம் வறாகமென்றும் பேரு
வாரிபுகழ் செந்தமிழ் தனை புஷ்பராகத்தின் பேரு. 35

கோமேதகம்

நாகமெனும் விபரததச மென்றும் பேரு
நன்றாக தகம்பு வியார்த்த மென்றும் பேரு
ஆகமெனு மேகபதி யென்றும் பேரு
அருளினோ மென்றதற்குப் பேருண்டாச்சு
வாகமெனுந் தேகலோகமென்றும் பேரு
வடிவாம மென்றதற்கு வதீதப் பேரு
தேகமெனுந் தெளிசரமென்றும் பேரு
தெளிதமிழால் சொல்லிவிட்டோம் கோமேதகத்தின்பேரே. 36

பச்சை

தகமான தாளிலாம் னாகலா மென்றும்
சகிக்காங்க மென்றதற்குப் பேருண்டாச்சு
அகமான வயிவீத மென்றும் பேரு
அக்கிறாடம் என்றதற்கு வதீதப் பேரு
செகமான திலதமா யென்றும் பேரு
சேலைசாட மென்றதற்கு வதீதப் பேரு
நகமான நடவாதி யென்றும் பேரு
நாம் சொன்னோம் மரகதப் பச்சைக் கல்லின்பேரே. 37

கெம்பு

பச்சையென்ற மித்துறோத சத்துறோத மென்றும்
பண்மையறா மென்றதற்குப் பேருண்டாச்சு
அச்சையென்ற வாக்கைறவி யென்றும் பேரு
அடவான வசனெழுமை யென்றும் பேரு
மச்சையென்ற வளபூதமென்றும் பேரு
மகிசார மென்றதற்குப் பேருண்டாச்சு
தச்சை யென்ற தகறோமென்றும் பேரு
தருவித்தோம் சகலகறா கெம்பினிடப் பேரே. 38

மாணிக்கம்

கெம்பென்ற திவ்வியநா மனுரத்தின மென்றும்
கெணிறாளம ரத்தின மென்றுமதற்குப் பேரு
நம்பென்ற சீவரத்தின மென்றும் பேரு
நாக மாணிக்கம் என்றும் அதற்குப் பேரு
அம்பென்ற ஆதிரத்தினம் என்றும் பேரு
அலை மனோதியசி யென்றும் அதற்குப் பேரு
தும்பென்ற துரைபூபதி யென்றும் பேரு
துறவான லயபாஷை மாணிக்கத்தின் பேரே. 39

மரகதம்

மாணிக்க சலமென்றும் புக்காமலென்றும்
மகாவிம்ப மென்றதற்கு வதீதப் பேரு
யாணிக்கறா மாதியென்று மதற்குப் பேரு
அசுலதய மென்றதற்கு அதீதப் பேரு
யேணியென்றால் இல்லறத்தின் புவியென்றும் பேரு
இதமான தளமென்ற அதீதப் பேரு
பாணியென்றால் கைநீரு சிலரத்தின மென்றும்
பாலித்தோம் நயனபாஷை மரகதத்தின் பேரே. 40

கலிவெண்பா

மரகதவாள் மானேகேள் மாநிலத்தோ ரெல்லோரறியப்
பிரியமதாய்ச் சொல்லிவிட்டோம் பேசக்கேள் - மாதரசே
விரகத்தாலூனழியும் விந்தைவிட்டால் வெளிப்பாழ்
துரகிதத்தால் வருமோசஞ் சொல்லக் கேள் - தீவினையால்
புரதவாழ் நரகில் புகைசெதறும் வாசிபலன்
திருமறையோர் சொன்ன மொழி சிதறாது - வாய்விட்டால்
நரகத்துக் குயிராவார் நாஞ்சொன்னோமுள்ளபடி
பரகிதமாம் நவரத்தினப் பண்ணுமிதே. 41

சந்தவிருத்தம்

நவரத்தினமொடு முரிரத்தின தமிழ் வயரத்தினை
யிது முயலிப்படியரி கருவித்தனை விதம் - குணமாலே
முலகங்களியிது வருகு முயலெனமுனரும்வருவிளை
குருவின்னருள் புதி மறுவின் முனகறுவிதியாலே
மவரத்தின பதி உயரத்திதயென புருஷத்தின
பதி யுயிரத்தமத மதமரு வித்த துகரு குருயோகம்
மகராசபதி கனயோகத்தினில் நெறியாதப்பல மறியா
தொருவருங் குரியா ணொருவலில் இவரேகாண்
அவரத்தின மெனுங் குணலட்சணமிது உறைவித்தது
மொழி மறுவித்தவராக்து துரையித்தனை விதங்காணீரோ
ஆாதிக்கருவிது லோரித்தவர் பலம்நீதித் தமிழிது
வாதிக்குயறிரி சாதித்தவரருள் மிகவாழ்வார்
திவரத்தின மெனுங் குருறத்தின மிதி மொழிபெத்தவர்
முகயெனையித்தனை யொரு மனமத்தவர் துறைகாரை
காண்பார் உருநடனபதி வரும்பவனிபாடி உலகுலம்படி
தட்டானச் சலகட்டு வென்றும் பேரு
சலாந்திர மூலியென்று மதற்குப் பேரு
வட்டான மேகநாத்தி மூலியென்றும் பேரு
வாழவாசிப் பூடென்று மதற்குப் பேரு
செட்டான செங்கதிரோன் மூலியென்றும் பேரு
செப்பினோங் கட்டுக்கொடி அப் பேரே. 95

அதீதமென்ற நூல்களெல்லாம் ஆய்ந்து வாய்ந்து
அணியணியாய்ப் பேர்களெல்லாம் மணியாய்ச் சேர்த்து
வதீதமென்ற வோர்வகைக்குப் பேர்களெட்டாய்
வசனித்தோ மிந்தவெண்ணூர்க் கவியாய்ச் சொன்னோம்
பதீதமென்றப் பரிபாஷையில்லாமல் தான்
பாடினோம் அகராதி யஞ்சாங் காண்டம்
மதீதமென்றப் புலத்தியனே யுனக்காய்ச் சொன்னோம்
மானிடர்க்கு விந்த நூலை மறிவிடாதே. 96

மரிவிடாதிந் நூலைப் பார்த்துத் தேறி
மகத்தான நூல்களிடப் பாஷை யெல்லாம்
அறிந்திடா அறிவதனால் அடக்கஞ் செய்து
ஆறுக்கு மிந்நூலிருக்குதென்று அருள வேண்டாம்
குருவில்லா வித்தையெல்லாம் மனதால் தோற்றும்
கூறினோ மென்னை வெளிவிடாதே
கருவிடா தொருக்காலும் பேர் சொல்லாதே
காமுகரை சேர்க்காதே கடக்க நில்லே. 97

நில்லப்பா மனமதனைப் பறிவாலொட்டி
நீமகனே பூரணம்போல் பார்த்திராகில்
கல்லப்பா வெளிவிடாப் பொருள்களெல்லாம்
கண்ணாடி முகம்பார்த்த பாவனை போற்றோனும்
சொல்லப்பா சுழிமுனையு மங்கே தோனும்
சோதியொளி யாதியென்றச் சுவந்தந் தோன்றும்
வில்லப்பா நாணிகொண்டு வாசியோட்டி
மேவியே சுருபமதைத் தெரிசிப்பாயே. 98

தெரிசிப்பாய்ப் புலத்தியனே ஐந்து காண்டம்
தெளிவாகச் சொல்லிவிட்டோந் தேறுந்தேறும்
பரிசிப்பாய் சுந்தரமே நிகண்டெண்ணூறும்
பார்த்தாக்கால் பரிபாஷை யெல்லாந் தோற்றும்
கரிசிப்பாய்க் கடைச்சரக்கின் கூறுதன்னைக்
காட்டினோங் கவியாகக் கருணைகூர்ந்து
அரிசிப்பாய் தினந்தோறும் ஐந்தாங் காண்டம்
அருளினோம் பூரம்போ லதிதமுத்தே. 99

ஐந்தாவது காண்டம்
முற்றுப் பெற்றது.

கடவுள் துணை

அகஸ்திய முனிவர் திருவாய் மலர்ந்தருளிய

பஞ்சகாவிய நிகண்டு - 800

ஆறாவது காண்டம்

பூரணமாம் பராபரத்தின் பாரம் போற்றி
புகழுஞ் சுழிமுனை யாதியந்தம் போற்றி
வாரணமா மண்டபிண்டம் நிறைந்த சோதி
மகத்தான குண்டலித்தாய் பாதம் போற்றி
ஆரணமாம் கணேசன் அருளாய் போற்றி
அனுக்கிரகம் என்ற சிவவம்பாள் போற்றி போற்றி
காரணமா மெந்தன்குரு கந்தன் போற்றி
காளவயிரவன் போற்றி காப்புத்தானே. 1

காப்பான பாடல் நூற்று முப்பதுக்குள்
காண்டமொன்றில் மாந்தரீகக் கூறெல்லாந்தான்
சீர்ப்பான பட்சியிடக் கருவின் கூறும்
செயலான மிருகங்கள் பூச்சிக்கூறும்
மாப்பானப் புழுகுனிட மூலிக்கூறும்
மகத்தான பறவையின் வளப்பக்கூறும்
சேர்ப்பாகச் சொல்லுகிறோம் ஆறாங்காண்டம்
செவியுகந்து புலத்தியனே சீராய்க்கேளே. 2

சீராக மாந்திரிகம் அக்ஷரத்தின் கூறும்
செப்பாத சக்கரங்கள் தியானக் கூறும்
மாறாத முன்னோர்கள் மறைத்தக் கூறும்
மகத்தான நிகண்டு பரிபாஷைக் கூறும்
மாறாத மும்மூல வாசிக் கூறும்
மவுனமெய்ஞ் ஞானியிட சித்தக் கூறும்
தேறாதப் பேர்களிடக் களவின் கூறும்
திருவான வேதாந்தஞ் செப்பக் கேளே. 3

செப்பார்கள் முன்னோர்கள் பாஷை யெல்லாம்
செப்பினதோர் நூல்களெல்லாம் திரட்டிச் சொன்னார்
ஒப்பாகப் பொருளெல்லா மிந்தநூலில்
ஓர் கருவிஇடை விடாமல் சரியாய்ச் சொல்வோம்
தப்பார்கள் சித்தரெல்லாம் மூடிப்போட்டார்கள்
சங்கையாங் களறிவதில்லைச் சார்ந்துபாரு

அப்பாகேள் புலத்தியனே காவிய மைந்துக்கும்
அருளினோஞ் சவுமியத்தின் கோர்வை காமே. 4

ஆமென்ற பாடல் பதினாறு லட்சம்
அதீதத்துக்கு விந்நூலி லாய்ந்து பார்த்தால்
ஓமென்ற பொருளெல்லாம் ஒன்றாயத் தோன்றும்
ஒடுங்கி நின்றதல மெல்லாம் வெளியாய்க்காணும்
நாமென்ற வெகுநிகண்டு அகராதி சொன்னோம்
நலமான வெண்ணூறுக் கொன்றீடில்லை
போமென்ற புலையருக்குஞ் சூதருக்கும்
புகட்டாதே யிந்நூலைப் புகழ்ந்து பாரே. 5

ஆயிரத்தின் ஞானிகளின் விபரத்தின் பெயர்

புகழ்ந்துபார் புலத்தியனே யையா கேளு
பூதலத்தில் சகலருமே சித்தரானால்
நகழ்ந்துபார் ராவேதுபகல் தானேது
ரவிமதிய மண்டலத்தோடு ஆதியேது
எகழ்ந்து பார் ஈசுவரனாய் எல்லாரானால்
எங்கிருப்போம் அகுத்தியனான வரிசனைக்காண
அகழ்ந்து பார் அணைகட்டிப் பயிரே செய்தால்
ஆயிரத்திலோர் கழனி விளைவு தானே. 6

அகார யோனியசை தள்ளுறுவின் பெயர்

விளவான வகாரமடா விந்து விந்து
விந்துதிக்கப் பிருதிவியின் மணந்தானாச்சு
அளவான வம்மண்ணில் விரைவிந்திட்டால்
அதுவிளையும் பாதமடா வப்புவாச்சு
பளமான நல்வினைத் தீவினையினாலே
பண்மை பெறும் ஆண் பெண்ணும் உதிப்பதாச்சு
உளமான உகாரத்தால் உதித்த தாச்சு
ஓகோகோ யோனியினால் பிறவியாச்சே. 7

தாயையறிய விபரம்

பிறவியென்ற வேதாந்தம் பார்க்க வென்றால்
பெண்வயிற்றில் உற்பவித்துப் பிறகுகூடா
தரவியென்ற பெண்ணோடே கூடினாக்கால்
தாயாச்சு உலகமெல்லாம் மாதாவாச்சு
ஓரவியென்ற யோனியெலா மொன்றதாச்சு
ஓங்கார மென்றும் அனுக்கிரக மாச்சு
சரவியென்ற சைதன்னியம் அதுவேயாச்சு
சதாகாலந் தாயைத்தான் தெரிசிப்பாயே. 8

தாயென்றால் தாயல்ல சுந்தரமே கேளு
    தாய்ச் சுருபம்போல் நின்றாளாத்தாள்
வாயென்றக் கனிவாயை மூடிக்கொண்டு
    மவுனமதாய் வாசியைக் கொண்டிழுத்து நீயும்
ஓமென்றா லோருறுதி சத்தியதமாக
    ஓகோகோ வோராண்டு வருஷங்குப்பி
காயன வாசியது நால்சாமத்துக்கும்
    கனிந்துவிட்டு நாமமது அப்பியாசஞ் செய்யே. 9

அப்பியாச மோராண்டு அனுக்கிரக மானால்
    அபான வாய்வு மூலத்தி லடங்கிப் போச்சு
கைப்பாகமாகவும் நீசுந்தரமேகேளு
    கருனை பெறவதின் பிறகு கற்பங்கொள்ளு
தப்பியாச மாகபத்து ஆண்டுமட்டுந்
    தவறாது கற்பமுண்டு யோகஞ் செய்தால்
செய்யப்பா வேகாத் தலையைக் காண்பாய்
    சிவசிவா சாகாத காலைக்காணே. 10

காணப்பா உயிருநிலை அப்போகாணும்
    கருவான மந்திரத்தில் எழுத்துங் காணும்
வேணப்பா விருதாவில் கற்ப முண்டால்
    விளங்கினோம் விந்தழிந்தோர் நாற்பதுக்கு மேல்
ஊணப்பா முப்பூவை செய்துக் கொண்டு
    மூதண்ட சரக்குக்குக் கப்பி யிட்டு
சேணப்பா செந்தூர லேகியங்கள்
    செய்துமதை நோயணுகாத் திரேக நில்லே. 11

நில்லப்பா மூன்றையுந் தானறிவாற்கூட்டி
    நிராமயம் போல் இல்லமதில் சமாதிசெய்து
செல்லப்பா ஒருவருஷத்துள்ளே யையா
    செடலமதை நோயில்லாத் திரேக மாக்கி
அல்லப்பா ஒருவருஷம் அப்பியாசஞ் செய்தால்
    அதின்பிறகு கற்பமதை உண்ணுஉண்ணு
கல்லப்பா பத்தாண்டுக் குள்ளே நீயும்
    கனயோகச் சித்தராய்ப் பொதிகைக்கு வாவே. 12

பொதிகைக்கு வந்தா யென்றால் உபதேசஞ்சொல்வோம்
புகழான சித்திசெய்து என்போலாவாய்
யோகியென்றால் வனயோகி யதிக ஞானி
உத்தம தேசிகந்தான் மவுனியாகும்
விவேகி யென்றால் லட்சணவான் பரமஞானி
விதியில்லான் மறுபிறவிப் பிறப்புமில்லான்
போகியென்றப் புலையருக்கு வாயாதையா
புலையரிட மாணைபரிட புத்திகேளே. 13

புத்தியென்றும் பிறக்கச்சே ராசியுள்ளோன்
பிறந்தா னென்றால் ஐந்தாண்டுக்குள்ளே யையா
வத்திப்பான் பரராச முதல் கற்ப முண்பான்
பாசியோகத்துக் கிடையாய் மாண்பர்கூடான்
அத்தியானைப் பலந்தான் பதினாறுக்குள்
ஆயிடுவான் பிறவிச் சென்மமற்று
குற்றமற்றுப் புலவனாயிருந்து வாழ்வான்
குறைவுறாதச் செல்வத்துக்கு உடையவானே. 14

சித்திகளுக்கு விபரம்

உடையவான் துலாராசி முழுதும் பக்ஷம்
உச்சத்தில் ரேவதியு மகம் பூராடம்
துடையவானி வர்மூன்று முடியில் நிற்பார்
துடன்கழுத்து வுத்திரமும் மேஷமாகில்
படையவானி ரண்டாமிடம் மூலபட்சம்
பசுபதியுங் குருவியாழம் நேத்திரத்தில் நிற்பான்
இடையவான் சரஸ்பதியும் நாவில் நிற்பாள்
என்னாளுஞ் சடலமெல்லாம் பிர்மந்தானே. 15

தாளென்ற சூரியனும் புருவத்தில் நிற்பான்
சந்திரனும் முகமொளி வாயெங்கும் நிற்பான்
வாளென்ற கலையெல்லாஞ் சந்திர கலையாகும்
மைந்தசனி செவ்வாய் கேதுராகு பாதம்
பானென்ற பாதமிதில் இவர் இருப்பார்
படைவராதி வரமிதில் பார்ப்பாரையா
ஆனென்ற யிவரையல்லோர் எடுத்துக்கொண்டு
அரகரா மவுனியது வருவார் காணே. 16

காணப்பா முதல்பட்சம் புதனுடையப் பார்வை
கவிவராத வருக்கு இருபத்தஞ்சில்
மாணப்பா மண்டலங்களெல்லாம் ஒன்றாய்
மதிபதியா யாசான் வானத்தின் பேரைக்கேளு
மூணப்பா முப்பதிலே ராசயோகஞ் செய்வான்
முடித்த முப்பூ முப்பத்தஞ்சில் யோகியாவான்
ஊணப்பா நாற்பதுக்குள் ஞானவானாகி
உறுதிபடச் சாயுச்சியம் பெறுவார் தானே. 17

பெறுவதற்கு சிவதீட்சை சத்தி தீட்சை
பிராணாய மும்மூல கணேச தீட்சை
இறுவதற்கு வென்னாளும் இதுமூன்றும் பெற்று
இதன்பிறகு தசதீட்சை சித்தியாவான்
வருவதற்கு முன்னங் கணேசநாதி யோகஞ்செய்து
வாழ்வான் அதிக சித்தி பெற்று
பெறுவதற்குக் கர்த்தரிடத் தெரிசிப்பான் பார்
இருப்பார்கள் கோடாகோடி யுகங்கள் தானே. 18

சிவந்தியின் பெயர்

தானான புலத்தியனே ஐயா கேளு
தர்ம புத்திப்பேர் களிடத் தண்மை பாரு
ஏனான லேகிதங் கிரத மென்றும்
இயம்பினோம் மனோதய மென்றும் பேரு
வானானத் தலகித மென்றும் வாமத்துக்குப்பேரு
வளமானப் பூதரசித மென்றும் பேரு
ஆனான வாதமதந்த மென்றும் பேரு
அடவான சேனைக்கிராத மென்றும் வசனித்தோமே. 19

கருவண்டின் பெயர்

வசனித்தக் கட்டானக் கல்லென்றும் பேரு
வளமானக் காரும்பாதி யென்றும் பேரு
மசனித்த வாடொங்கிந்த தூ ருமாபதி
மகத்தான வந்தண மென்றிதற்குப் பேரு
அசனித்த வலங்கித மென்றதற்குப் பேரு
அருளினோந் தேவபூதமென்றதற்குப் பேரு
துசனித்த மாதசுருபி யென்றும் பேரு
துதிசெய்தோம் நன்றாகக் கருவண்டின் பேரே. 20

இந்திர கோபத்தின் பெயர்

வண்டான வனமாருதம் தம்பலப் பூச்சியென்றும்
வளமானச் சிலகுக்கம் என்றும் பேரு
அண்டான ரத்தங்கித மென்றும்
அருளினோம் வேந்தர் படையென்றும் பேரு
நண்டானப் பட்டுடையாதி யென்றும் பேரு
நல்ல காமேதக மென்றுமதற்குப் பேரு
கண்டானக் கனலாதிப மென்றும் பேரு
கருவான இந்திரகோப மதற்குப் பேரே. 21

கருங்குளவியின் பெயர்

கருவான விங்கித ராத மென்றும்
கதிர் செங்கை யொளிதமென்று மதற்குப் பேரு
அருவானப் பங்கையொத்த நாலிவாடி
ஆரென்று மடவான மாட்க்கனிவா யென்றும் பேரு
எருவான வெடையந்தக மென்றும் பேரு
இயம்பினோம் முருகடைப் பூசியென்றும் பேரு
வருவான வாறாட மங்கமென்றும் பேரு
வகையானக் கருங்குளவி யதற்குப் பேரே. 22

செங்குளவியின் பெயர்

வகையானக் கல்வாசங் கடுப்பு தேன்று
வானென்றும் வாசமான மேயந்த னென்றும் பேரு
முகையான மொகத்தாருட யென்றும் பேரு
மூதண்ட முடுங்கன லென்றும் பேரு
மகையான விப்பரசங்க மென்றும் பேரு
மருளான கொட்டு விஷக்காலி யென்றும் பேரு
அகையான வாகாமாதக மென்றும் பேரு
அடவானச் செங்குளவி யதற்குப் பேரே. 23

சுழல்வண்டின் பெயர்

குளவியதா நீர்ச்சுழலிவள் நிலைபெற்ற சூடா
கூறான ஜலச்சுழலுள்ளோ னென்றும் பேரு
கௌவிதநாங் கொங்கை பவனிதா னென்றும்
கெணிதமென்ற சராசரந் தாங்கி யென்றும்
களவியதாந் தண்ணீர்க்கரை தானென்றும்
தலைபவனி வருவானென் றதற்குப் பேரு
நளவியதா நடன குழலா லென்றும்
நளினமென்றச் சுழல் வண்டினதற்குப் பேரே. 24

திகைப்பூச்சியின் பெயர்

வண்டினமாந் திமயக்கி புத்திமந்த மென்றும்
வசனித்தோங் குணம்பா முன்னடை யலங்கமென்றும்
நண்டினமாம் நாவடமாஞ்ச னென்றும்
நலமான வொட்டாத்தாலிப னென்றும் பேரு
ஒண்டினமா மேருபுவியுடையோ னென்றும்
உற்பவித்தோஞ் சத்துவளைய னென்றும் பேரு
அண்டினமா மகவெட்டுப் பேருஞ் சொன்னோம்
அருளினோந் திகைப்பூச்சி யதற்குப் பேரே. 25

முட்டைச்சிலந்தியின் பெயர்

பேரானக் குமுடக்கனிவழி யென்றும் பேரு
பேசும் மூடாதியந்த மென்றும் பேரு
வாரான வரவொளி பாசபத்திக் கினமாடன்
அருளினோம் ரேகையுடையோ னென்றும்
சேரானச் செடத்தாரிசை யென்றும் பேரு
சிரான முட்டைக் கிலோத மென்றும்
மாரான மண்டவாரிதி யென்றும்
அருளினோ முட்டைச் சிலந்தியின் பேரே. 26

ஈயின் பெயர்

முட்டையென்ற வோரெழுத்தார் ஈசனேறும்
ஓகோகோ வாரிவான வனமாலென்றும் பேரு
மட்டையென்ற க்ஷுரத்துடையான்என்றும் பேரு
மடவான மந்திரவாதி யென்றும் பேரு
மட்டையென்றனந் துடையோ னென்றும் பேரு
மகத்தான வெங்குமிருப்புழு கென்றும் பேரு
சட்டையென்றச் சன்னதங் கொள்வாளென்றும் பேரு
சமர்த்தான பேரெட்டு மீயின் பேரே. 27

கொசுவின் பெயர்

சமர்த்தென்ற செட்டைபுடுங் கன்றாவில் சூழோன்
சார்வான திழவறுமங்க மென்றும் பேரு
பமத்தானப் புரைத்தாண்டிடு வாளென்றும்
புகழான வரைக்கடந் தாதியென்றும் பேரு
பமத்தானப் படைமுறிவா ளென்றும் பேரு
பத்தியங்கள் கூறுவாளென்றும் பேரு
நமத்தானப் பட்சய மாதரென்றும் பேரு
நாம்சொன்னோங் கொசுவதற்கு எட்டுப்பேரே. 28

பசுவின் பெயர்

அனேகமென்ற வாவுதயங் கங்கறாக் கனியாளென்றும்
அமுர்த மூட்டுவாளென்று மதற்குப் பேரு
பனேகமென்றப் பாலமுர்தக் கனியென்றும் பேரு
பண்மைபெருங் காமசுந்தர மென்றும் பேரு
வனோகமென்ற வாமத்துடையா ளென்றும் பேரு
வளமான வல்லோர்க் கனிவாளென்றும் பேரு
அநேகமென்ற வெல்லோர்ப் புகழடையா ளென்றும்
இயம்பினோம் நன்றாகப் பசுவதுவின் பேரே. 29

எருமையின் பெயர்

இயம்பினோ மேதை பெருதானிச னென்றும்
இயல்பான வேமனாரு தையென்றும் பேரு
மயம்பினோ மயிரமாளிகை யென்றும் பேரு
மகத்தானப் பேயைப் பிங்குயரென்றும் பேரு
புயம்பியதோர்ப் பூதவாஞ்சய னென்றும் பேரு
புகழான காமுகக் களனென்றும் பேரு
சயம்பினதோர்ச் சாணத்த வாகடமென்றும் பேரு
சங்கையில்லா எருமையென்று மதற்குப் பேரே. 30

வெள்ளாட்டின் பெயர்

எண்டமென்ற நாடக்கரிவாள் நீட்டுக் கதியோன்
இயல்பான வன்னத்த முதுடை யென்றும்
அண்டமென்ற வானகுழலா ளென்றும் பேரு
அடகான வெல்லோரு மந்தகனென்றும் பேரு
கண்டமென்ற வனக்கறி மாதரென்றும் பேரு
கருவானச் சின்னஞ்சிறு கருவென்றும் பேரு
நண்டமென்ற மெகத்தழுத வானென்றும் பேரு
நாட்டினோம் வெள்ளாட்டின் அதீதப் பேரே. 31

காட்டெருமையின் பெயர்

ஆட்டினமாத் துண்மைதுக் கழுமென்றும் பேரு
அடவான னெட்டுடையாதி வட்டக்கோடை
நாட்டினமாம் வனந்தரிவா ளுயரென்றும் பேரு
நல்ல காட்டோடங்க மென்றும் பேரு
மாட்டினமா மாடத்ததிபதி யென்றும் பேரு
மகத்தாகு சேனையிடக் கருவென்றும் பேரு
தாட்டினமா மடிப்பை யாதமென்றும் பேரு
அருளினோம் காட்டெருமை யதீதப் பேரே. 32

கழுதையின் பெயர்

பெருமைஎன்றத் தேசிமாத வரென்றும் பேரு
இயலான பெருவாயன் என்றும் பேரு
விருமையென்ற விலாடபுரணிம னென்றும் பேரு
சேவிவிடையான் என்றதற்குப் பேருண்டாச்சு
அருமையென்ற வானத்தாசிக் காசிக்குடபதி யென்றும் பேரு
அதீதமென்ற வண்ணானிடத்தி யென்றும் பேரு
கருமையென்றச் சுடுகாட்டுச் சப்பாவிளையென்றும் பேரு
சுருதிபெற்றக் கழுதையின் அதீதப் பேரே. 33

கலைமானின் பெயர்

அதீதமென்ற வோசமாபதி யென்றும் பேரு
திருவொரு மானிடையா ளென்றும் பேரு
யதிதமென்ற வேகரித்திரி வானென்றும் பேரு
இதிதமென்ற வொட்டாக்காகரி வளென்றும் பேரு
கெதிதமென்ற பாய்ந்துட நங்கையாசந் தழகி யென்றும்பேரு
எரிக்குத் தக்காரி யென்று மதற்குப் பேரு
ததிதமென்றத் தவம்புரியா மாதரென்றும் பேரு
தனுவென்றக் கலைமானதற்குப் பேரே. 34

வேங்கைப் புலியின் பெயர்

தறுவானப் பூதவறாளி தஞ்சண்ட மாறுதக்கள்
தருவான வேங்கையூறாக மென்றும் பேரு
நறுவான றாடசுத்தாளி யென்றும் பேரு
நலமான னிறாடகோல மென்றும் பேரு
மறுவான மாறுதவாணி யென்றும்
மகத்தான நரிஞ்சுதராட மென்றும் பேரு
வறுவான சிறுவாணி யென்றும் பேரு
வசனித்தோம் புலியினிட வதீதப்பேரே. 35

சிம்மத்தின் பெயர்

வேங்கையதாம் லோகவா சங்கரியென்றும்
விளங்கினோ மாமையோடங் கல்வேலாயுதமான
வேங்கையதாம் வேங்கிக் குறித்தோ னென்றும் பேரு
விவேக மென்றவர் தங்குமென்றும் பேரு
மங்கையாந் தர்மனோதயமா னென்றும் பேரு
மடவான மாசிவிளக்கொளி யென்றும் பேரு
செங்கையதாஞ் சிங்கநாறு மென்றும் பேரு
செப்பினோஞ் சிம்மத்தி னதீதப் பேரே. 36

செந்நாயின் பெயர்

சிம்மமென்ற வன்னாகக் கருணைக்காட்டு
வாழ்வுவங்கம் திருபாவநாட மென்றுமதற்குப் பேரு
மம்மமென்ற மாடிலாதீத மென்றும் பேரு
இயம்பினோந் தபமேகத மென்றும் பேரு
தும்பமாந் துறாடச்சிங்க மென்றும் பேரு
தோன்றும் வாரிசையென்று மதற்குப்பேரு
கம்பமென்றக் கண்ணாயருட மென்றும் பேரு
கருணைபெறச் சொல்லிவிட்டோஞ் செந்நாயின் பேரே.37

கருநாயின் பெயர்

கருணையென்றக் காளமோதகணங் கருவடிதாச மென்றும் பேரு
கிருவான நிலகர ருடமென்றும் பேரு
அருணையென்ற நெஞ்சைப் புகவா ளென்றும் பேரு
அருளினோ நதிரோதயம் மாடமென்றும் பேரு
வெருணையென்ற வஞ்சனமாலி யென்றும் பேரு
வதுபாரிட மென்றதற்கு மதிதப் பேரு
மருணையென்ற வனந்தவோபய மென்றும் பேரு
மடவானக் கருநாயின் அதிதப் பேரே. 38

பூனையின் பெயர்

வானமா துருவானை மலடிக் கானுவாள்
மகத்தான பாவறோசனை யென்றதற்குப் பேரு
மானமாம் பகத்தி செனமாது வென்றும் பேரு
புரிவான வாதிலங்கள மென்றும் பேரு
ஆனமாங் கோரநீடென்றும் பேரு
அரகுரா சாகாதய மென்றும் பேரு
ஞானமா மாலாதுரிசிவ மென்றும் பேரு
நலமாகச் சொல்லிவிட்டோம் பூனையதின் பேரே. 39

குதிரையின் பெயர்

நலமையென்ற வேமப்பரித மென்றும் பேரு
நாக்கித மாமிருவாளிதம் மேகப்புரவத மென்றும் பேரு
வலமையென்ற கேசரமாருத மென்றும் பேரு
வளமானப் புரவாச பாயமென்றும் பேரு
அலமையென்றப் பாயுங்கவுரி யென்றும் பேரு
அருளினோங் காரிவிதாரி யென்றும் பேரு
கலமையென்றக் கங்கொடிய மென்றதற்குப் பேரு
கருதுகையென்ற தொரு குதிரையின் பேரே. 40

யாளியின் பெயர்

கருதுய மென்றிராயன யமையோர் பாரீர்
கருவாத சகமென்றும் அதற்குப் பேரு
வருதுகையாம ராடராட சதமென்றும் பேரு
வாலமாடி மென்றுமதற்குப் பேரு
அருதுகையாம் நட்சபாரிடத மென்றும் பேரு
அருளினோஞ் செம்படாரித மென்றும் பேரு
பருதுதையா மடாதஞ்ச மென்றும் பேரு
மாவடி வாராளி யென்றும் யாளியின் பேரே 41

ஆனையின் பெயர்

யாளிமத மெருகமென்று மதற்குப் பேரு
அடவான கெஜகங் கடாந்தும்பித் துடானை
காளி கரிபதபாரி யென்றும் பேரு
கருதுவோம் விக்கின விநாசமென்றும் பேரு
மாளிகவு வதிறோகய மென்றும் பேரு
மகத்தான வருக்காச னென்றும் பேரு
வாளியத் திறாதாளி யென்றும் பேரு
வசனித்தோம் ஆனையிடவதிதப் பேரே. 42

ஒட்டையின் பெயர்

வதிதமென்றும் நேர்வள மென்றும் பேரு
வசனித்தோங் கழுத்தாடாளி யென்றும் பேரு
அதிதக் காடினோசய வழகினி யென்றும் பேரு
அதிதப் பேர்வட்ட சிங்கிர மென்றும் பேரு
நதிதவாமத் துடதியாமென்றும் பேரு
நறுவொரு மாடளப்புளென்று மதற்குப் பேரு
கத்தமுழிக் கண்ணாடித்தி யென்றும் பேரு
கருதவென்றால் கழுநுழையா யொட்டையிதின் பேரே. 43

குரங்கின் பெயர்

கழுத்துடனா மாதிசமயு பரிதசங்க மென்றும் பேரு
சகல கறாவண மோதமென்றும் பேரு
அழுத்துட னறாமலாதிக மென்றும் பேரு
அகலவாலி சுறோத மென்றுமதற்குப் பேரு
நழுத்துடன் விஷ்ணுமாயரச மென்றும் பேரு
நலமதியோன் மறுபுறகமென்ற தற்குப் பேரு
மழுத்துடன் மாலைமாடப் புரவியென்றும் பேரு
மாளணாக் காறிந்திடு நீகுரங்கின் பேரே. 44

அணிப்பிள்ளையின் பெயர்

குரங்கான வணியாத்தரங்க னென்றும் பேரு
கூறியே மாடுன்னிப்பாச மென்றும் பேரு
அரங்கான வவறோ வாலைய மென்றும் பேரு
அக்காடச் செல்லிகண்ட னென்றும் பேரு
வரங்கான வமறோத்திரச மென்றும் பேரு
வசனித்தோம் வேதியன் வீகமென்றும் பேரு
நரங்கான வீறுதிங்கனி பூலையென்றும் பேரு
நலமான வணிப்பிள்ளையதற்குப் பேரே. 45

பச்சோந்தியின் பெயர்

பேரான பேரெல்லாம் மணிகளாகப்
பேசுகிறோம் புலத்தியனே பேணிப்பாரு
ஆரான வச்சதிந்தஞ் செந்தியிரத மென்றும் பேரு
மடவானக் குந்தி கரையோ னென்றும் பேரு
நாரான மூத்தவாரைச் சந்திரபச்சை யென்றும் பேரு
நாம்சொன்னோம் சார்வாழிலாச மென்றும் பேரு
மூதான முடகமறியோ னென்றும் பேரு
மூதண்ட வாகடபாரியென்று பச்சோந்தியின் பேரே. 46

ஓணான் பெயர்

ஒந்தான வொருபிடிவாய னோலாத்த கண்டன்
ஓகோகோ கருபாடக் காரியென்றும் பேரு
காந்தான தாய்தரா மென்றும் பேரு
கருவானத் தாலையகண்ட மென்றும் பேரு
சந்தானத் தருமடக்கனியா னென்றும் பேரு
தலைநீட்டராச னென்றுமதற்குப் பேரு
வந்தான வழிவலியுடை யோனென்றும் பேரு
மகத்தான பேரிதற்கு வோணான் பேரே. 47

பல்லியின் பெயர்

நதிலான மல்லிதாசி வல்லி ராசன்
நல்லசெட ராசமா னென்றதற்குப் பேரு
அதிலான செல்வவிஷப் போதமென்றும்
அருளானச் செம்பக வல்லியென்றும் பேரு
முதிலான முதிரை மாண்டமென்றும் பேரு
மூதகமென்ற வாதிரையரை யோனென்றும் பேரு
மதிலான மாலைவரச் செட்டியென்றும் பேரு
மகத்தானப் பல்லியதற்கதித் பேரே. 48

எலியின் பெயர்

மகத்தான கட்டிமாத ரென்றும் பேரு
மடவானக் கண்டுள் மல்லியென்றும் பேரு
அகத்தான மேதிசைக் குழலாளென்றும்
அந்தக ரூபியென்றும் அதற்குப் பேரு
மகத்தானவ் வறோதமென்றும் பேரு
மாத சுருபித மென்றுமதற்குப் பேரு
நகத்தான மானசராசி யென்றும் பேரு
நாம்சொன்னோம் புலத்தியனே யெலியின் பேரே . 49

பெருச்சாளியின் பெயர்

இனமென்ற வாளியங்க ளென்றும் பேரு
இயல்பான வயிரக்களிந்த ளென்றும் பேரு
அனமான வாறீழை வல்லியம்பிகைக் குழலாள்
அலதாசாலி யென்றுமதற்குப் பேரு
மகத்தான மதுரை மாணிக்கமென்றும் பேரு
மகத்தான கேசமெருவிக் களமென்றும் பேரு
நகத்தானச் சுறோணிசத மென்றதற்குப் பேரு
நளினமென்றப் பெருச்சாளி யதற்குப் பேரே. 50

அட்டையின் பெயர்

காளியென்ற நீறுதடன வாழ்த்தி நீலகக்கன்னி
சார்வான சன்றுப் புடுங்கா னென்றும் பேரு
ஆளியென்றச் சத்த நாறாச மென்றும்
அடவான சதகோட்டு வோனென்றும்
வாளியென்ற வதையுட மோட்டி வந்துடனாதி
வசனித்தோம் புலத்தியனே யருக்கி யந்த
நாளியென்றும் பேரிதற்கு நன்றாய்ச் சொன்னோம்
நளினமென்ற வட்டையதற்கு வதீதப் பேரே. 51

மக்ஷத்தின் பெயர்

அட்டையாஞ் சலசாத ரங்கமென்றும் பேரு
அடவானச் சாத்துனி மாதாசட்டியீரரியோன்
வெட்டையாஞ் சகலவாக்குதவி யென்றும் பேரு
வசனித்தோம் வித்தமாத னென்றும் பேரு
நட்டையாம் வீடுண்ணசாலி யென்றும் பேரு
நலமானக் காரீயம் பலத்தியென்றும் பேரு
மட்டையா நாவளனோக்கி யென்றும் பேரு
மகத்தான பேரிதற்கு மக்ஷத்தின் பேரே. 52

கீரிப்பிள்ளையின் பெயர்

மகூஷமென்ற தூட்டியரச னென்றும் பேரு
மகத்தான வாலகண்ட அறையனென்றும் பேரு
சகூஷமென்றச் சற்பத்தெதிறான் சார்விழிநாசம்
சமத்தான வாரமதப் பாணியென்றும் பேரு
அட்சமென்ற வல்லியோரங்கை சேவலஞ் சித்தி
அருளினோ மருளினோ மறுமணிப்பிள்ளை யென்றும் பேரு
வட்சமென்ற பேர்களுக்கெல்லா மதிதஞ் சொன்னோம்
வளமானப் பேரிதுதான் கிரிப்பிள்ளையின் பேரே. 53

ஜலத்தின் பெயர்

பிள்ளையாம் பாணிகங் காலாய மென்றும் பேரு
பேறானத் தண்ணீர்ச் சாதிரசந் தேவதைப் பவனீதமென்றும் பேரு
அள்ளையாஞ் சலைச்சத் தமேத மென்றும் பேரு
அருளினோ நிற்தகாச மென்றும் பேரு·
வள்ளையாந் தடாகசெங்கை யென்றும் பேரு
வசனித்தோம் நதிநீர்பாணி யென்றும் பேரு
நள்ளையாஞ் சடாக்காரி யென்றும் பேரு
நாம்சொன்னோந் தடாகமென்ற ஜலத்தின் பேரே. 54

மறவட்டைப் பேர்

சலமான வட்டையாசரம் அடமாதி லேபம்
சார்வானக் கண்டச்சிரட மென்றும் பேரு
அலமான அற்பசந தறகமென்றும் பேரு
அரகரா தூடதூல மென்றும் பேரு
வலமான வாடைப் பிரளமங்கப் பிறளியென்றும் பேரு
வாகான சட்டைக் கலுத்தானென்றும் பேரு
துலமானத் தோதகமாய்ச் சொன்னோம்
நாமுமது தியன மரவட்டை யதிதப் பேரே. 55

செய்யான் பெயர்

அதிதமென்ற வயறற் கனதுய்யோன் கடிவிஷந்தானென்றும்
அருளினோ மரிவிஷந் தீண்டியென்றும் பேரு
வதிதமென்ற யெரியாருட வசமென்றும் பேரு
வளமான மறுமண்டலீக னென்றும் பேரு
சதிதமென்ற சீசகலகல்வாஞ்சை யென்றும் பேரு
சத்தபோட மென்றுமதற்குப் பேரு
துதிதமென்றக் குப்பக்கூளி யென்றும் பேரு
துருவானச் செய்யாதனதற்குச் சொன்னப் பேரே. 56

நாகப்பாம்பு

சொன்னதொரு வருநிலப் பாசமறக் கனியானென்றும் பேரு
சொல்லிவிட்டோம் அதீத விஷந்திண்டியென்றும் பேரு
அன்னதொருத் திருன்பாக்கடி யென்றும் பேரு
அடவான வருநங்க னென்றதற்குப் பேரு
வமனதொரு விஷமதி லாரியென்றும் பேரு
வசனித்தோம் பிர்ம சூராங்க மென்றும் பேரு
பென்னதொருப் பிடிமானுழை விழிதானென்றும் பேரு
பேசினோம் நாகப்பாம்பின் அதுக்குப் பேரே. 57

சாரைப்பாம்பு

நுடமான வாலடித் தண்டன் வடிவான வைத்தன்
நுண்மையா மறச்சந்த காரனென்றும் பேரு
அடமான வேதத்துடங்க னென்றும் பேரு
அருளினோம் விருமட மாவியென்றும் பேரு
படமான மாருதப் பொழியானென்றும் பேரு
பரிவான மடவாஞ்சை யென்றும் பேரு
வடமான மாறோதியம்ப னென்றும் பேரு
மகத்தான பேரிதற்கு சாரைப்பாம்பின் பேரே. 58

பச்சைப் பாம்பின் பெயர்

பாம்பானச் செடிமீன்கறோதி கெத்தைக் கரும்பந்தளென்றும்
பண்மை பெரும் பச்சை வடிவாளென்றும் பேரு
ஆம்பான வெலையொளி மாதொன்றும் பேரு
அருளினோந் திவசன்னாசி யென்றும் பேரு
வரம்பானத் தபரியோ னென்றும் பேரு
வளமானத் திருவடி தநில மென்றும் பேரு
தெம்பான தெசரச னென்றும் பேரு
செப்பினோ மகாதெளிவாய்ப் பச்சைப் பாம்பின் பேரே.59

கருநாகத்தின் பெயர்

பச்சையாங் காலகண்டங் கருவாதிறைஞ்சும்
பாடினோம் பாருடவாளி யென்றதற்குப் பேரு
அச்சையா மேகரஞ்ச மெட்டுயர் கடிப்பான்
அடவான சஞ்சீவிக் கண்டமென்றும் பேரு
கச்சையாங் கறுகண்டு டத்திக் காளடேரத்தி
கருணைபெறச் சொல்லிவிட்டோங் கருவுள்ளோர்கள்
நச்சையா மாமுனிவன் சொன்ன மொழிப்பாரு
நலமானக் கருநாகத்தின் அதீதப் பேரே. 60

துருஞ்சலியின் பெயர்

நலமான வுத்திர நங்கசம் ஓரகுயிலண்ட மென்றும் பேரு
நளினமென்ற வேர் துரையா னென்றும் பேரு
அலமான மதுரைவாளிசை யென்றும் பேரு
அருளினோம் கோயில்குடியா னென்றதற்குப் பேரு
வலமானத் தேவாலை மாதரென்றும் பேரு
வளமான சுண்வீச்சாட மென்றும் பேரு
பலமானத் தேவருண னென்றும் பேரு
பாடினோம் மகாத்தெளிவாய்த் துருஞ்சலின் பேரே. 61

முசலின் பெயர்

தெளிவான வுசவோற்க மென்றும் பேரு
திருவான வசக்காரிதம் போது றொளிவீச்சு
வளிவானப் பொட்டகக் கறுங்க மென்றும் பேரு
ஆசான வனுயிரென்று மதற்குப் பேரு
களிவானப் பாசமுடத் தாசனென்றும் பேரு
கருவானப் பருவண்டம் பூண்டென்றும் பேரு
அளிவான வாசளி வாஞ்சியென்றும் பேரு
அருளினோம் அதீதப் பேர் முசலின் பேரே. 62

உடும்பின் பெயர்

முசலான வலரிஷ போதமென்றும் பேரு
முக்கியமா மலறம் மதுறாட மென்றும் பேரு
நெசலான ரெட்டைநாதக் கோளியென்றும் பேரு
நிலையானப் புடைப்பொன் னாலில் நல்லிடையாள்
அசலான மலைவனகாசி யென்றும் பேரு
அடவான மகாமன் னாடமென்றும் பேரு
மசலானச் சிகறமொதகம் தாளென்றும் பேரு
பாடினோம் இந்தப்படி உடும்பின் பேரே. 63

தேவாங்கின் பெயர்

உடும்பானப் பாடமாடக் கனியென்றும் பேரு
ஓர் மாந்துங்கி யவனிவாறாட மென்றும் பேரு
அடும்பான வாலொளிவக்கா வென்றும் பேரு
அடவான வேற்குஞ் சாகமென்றும் பேரு
நடும்பான வாயாலெரை யுடனென்றும் பேரு
நலமான முன்பின் தொங்கலென்றும் பேரு
வடும்பான முடிகிழா வண்ணாளென்றும் பேரு
வசனித்தோந்தேவாங்கின் மகத்தானப் பேரே. 64

நாரையின் பெயர்

மகத்தான வறாமதி கொங்கி யென்றும் பேரு
மடிவான நாறாயணிச் சதமாலு மாறுதமென்றும் பேரு
அகத்தான ஆகாசப்பறவை யென்றும் பேரு
அருளினோம் பெரும்புட சாலியென்றும் பேரு
நகத்தானப் பிதுரோகமாசியென்றும் பேரு
நளினமென்ற முனைமுதலாக மென்றும் பேரு
மகத்தான முனிவோன் தவசியென்றும் பேரு
வாழ்மயிலே கேள்செவியால் நாரையின் பேரே. 65

கொக்கின் பெயர்

நாரையென்றக் கனிசாரி வக்க வல்லாரி
நல்லதுக் கனாசற்றி தூதுநந்தி
வாரையென்ற துரைமறாட மென்றும் பேரு
வளமான வேழையா னொறுதலையாளென்றும் பேரு
வேரையான வேலிக் கொக்கிடைய னென்றும் பேரு
வயல் சுத்தித் திரிவானென்றதற்குப் பேரு
கூரையென்றும் வாராது கும்பமுனியென்றும்
குருமுனிவன் ஓதுகின்ற கொக்கின் பேரே. 66

கருங்கூளியின் பெயர்

முழியான கோரகுழம்பங்க மென்றும் பேரு
முகருமுண்டலிகங் கழுகங் காகம்
விழியானப் பெருமாங்சிகத்த மோப்பினம் பிடுங்கான்
வசனித்தோந் தியா லுதிர மென்றும் பேரு
அழியான மடப்பசுதி யென்றும் பேரு
அருளினோந் திருளசாதி யென்றும் பேரு
துழியாகச் சொல்லிவிட்டோ மாறாங்காண்டம்
துகூளியென்றக் கருங்கூளி யதீதப் பேரே. 67

வெண்கூளியின் பெயர்

அதீதமெனும் வண்ணக்கூழிச்சந்தா னென்றும்
அறாவட மாஞ்சிடம் வெள்வெளியங்க மென்றும்
நதீதமெனுநீ தத்துவக் கூழதமனநீ தானென்றும்
நலமான மதுமங்கட மென்றும் பேரு
வதீதமெனும் வாறோ வங்கானஷ்டமா பதியென்றும்
வசனித்தோ மக்கார சிங்கனந்தானென்றும்
மதீதமெனு மாமுனிவன் சொன்ன வெண்ணூர்
மகத்தான நிகண்டிதுவே வெண்கூளியின் பேரே. 68

பருந்தின் பெயர்

வெண்மான மருந்துணைச் சாதியென்றும் பேரு
விளங்கினோஞ் செருமாலைப் பாலஞ்சத்த தூவம்
அன்பான நாதியதாய மென்றும் பேரு
ஆரியெனா மூரிவலனாதி யென்றும்
பண்பானப் பருவஞ்ச மென்றும் பேரு
பரிவானப் பங்கைப் பருவானென்றும் பேரு
தெண்பானத் தெளியசிங்கி யென்றும் பேரு
சுணிதமதாய்ச் சொல்லிவிட்டோம் பருந்தின் பேரே. 69

செம்பருந்தின் பெயர்

பருந்தான வம்பகாந்த மென்றும் பேரு
பண்புபெருங் கெருடகாந்தகந் தும்புறாட்சம்
மருந்தான நாறதச் சிங்கி யென்றும் பேரு
மனுக்கிரக நலமாம் படையென்றும் பேரு
கெருந்தாலென்ற கொலக்குரிமையாசானென்றும் பேரு
சூர்வாளி யென்றதற்குப் பேருண்டாச்சு
மருந்தானத் துஷ்டாந்த னென்றும் பேரு
வசனித்தோஞ் செம்பருந்தின் அதீதப் பேரே. 70

விச்சுளியின் பெயர்

அதீதமாய்ச் சொல்லுகிறோமச் சுழியாதி வச்சுபார்படைதானென்றும்
அருளினோங் சுச்சுக் கறுவலந்தா னென்றும்
மதீதமதாய்ச் சொல்லுகிறோந் தூதாளோடி
மகத்தான வலம்வரும் வாண்டியென்றும் பேரு
வதீதமதாய்ச் சொல்லுகிறோ மெதிரிப்படை முறித்தானென்றும்
வளமானக் கலக செந்தைய னென்றும் பேரு
சுதீதமதாய்ச் சொல்லுகிறோங் கட்டுபடா ரஞ்சனென்றும்
கருவான விச்சுளிக்கி யெட்டுப் பேரே. 71

சிறுகாடையின் பெயர்

எட்டான நறுங்காடை ஞாலமென்றும் பேரு
இயல்பானத் திருநடைச் சிட்டுலா நாலாஞ்சகந்தானென்றும் பேரு
நட்டான மலர்க்குழை கண்ணனென்றும் பேரு
நலமான மதுவசியி னென்றும் பேரு
அட்டான வம்போத பந்தகந் தானென்றும் பேரு
அருளினோ மலம்பானச் சாதியென்றும் பேரு
தொட்டானத் தெறும்படி மாலையென்றும் பேரு
தெளிவாகச் சொல்லிவிட்டோஞ் சிறுகாடையின் பேரே. 72

கட்டுக்காடையின் பெயர்

கடையான வட்டுகட்டுடாச மென்றும் பேரு
கருவான நட்டச்சாருதம் மாணிமாலைப் படை
நடையானக் கட்டிவிட்டதி யென்றும் பேரு
நலமான விட்டொளி விசுவனென்றும் பேரு
தடையான வுட்டோப ளிங்கமென்றும் பேரு
தருவானச் சித்திரக்கூளி என்றும் பேரு
வடையானச் சிறுவால்பிறவி யென்றும் பேரு
வளமானச் சொல்லிவிட்டோங் கட்டுக்காடையின் பேரே. 73

கருக்குருவியின் பெயர்

கட்டென்ற வருக்கருக்குரு மாமுனி யென்றும்
கருவான வழிமறைச்சானென்றும் பேரு
தொட்டனென்ற நாட்டுரிவி யெடமென்றும் பேரு
அடவான நால்தலைய னென்றும் பேரு
சட்டென்ற விந்துமறைப் பொழியென்றும் பேரு
சார்வான வெலங்கருங் குழலென்றும்
வெட்டென்ற வெரிட கந்தனென்றும் பேரு
விளங்கினோ மதித்தமாய்க் கருக்குருவியின் பேரே. 74

ஊர்க்குருவியின் பெயர்

விளங்கினதோ ரெதென்றால் குருகாசியக் கருகச்சிட்டு
விசிதமென்ற மாளிகை வாள்பேரானென்றும் பேரு
அளங்கினதோ ருன்றுறகந்தக னென்றும் பேரு
அருளுத்தச் சாரமென்று மதற்குப் பேரு
களங்கினதோர் முச்சு கருவளியென்றும் பேரு
கருவானப் பேச்சுக் கிடையானென்றும் பேரு
உலங்கினதோர் மகாமேரு சூட்சடையடி பாலனென்றும் பேரு
உறுவானப் பெரியபாச மென்றும் ஊர்க்குருவியின் பேரே.75

தூக்கணாங்குருவியின் பெயர்

குருவான மஞ்ச லோகய மென்றும் கூறினோம்
மாலிகை மாண்டக் கன்று நரம்பான்
அருவானக் காதுட னிருக்கா னென்றும் பேரு
அருளான வாசியோ டாலி யென்றும் பேரு
நருவான மகாசித்தாட னென்றும் பேரு
நாம்சொன்னோம் ஓங்கிய மான்வடிவென்றும் பேரு
மருவான ஹூரிலுசர னென்றும் பேரு
மகத்தானத் தூக்கணாங் குருவியதின் பேரே. 76

வேறு-களி- மாந்தரிகம்

குருவியெனுங் குருமுனிவ னோது மொழிவாக்கு
கொடிய வினைசெய்திடனுங் குறைவரா துண்மை
மருவியெனும் மந்திரத்தின் கருவைக் காணார்
மகத்தானப் பறவையிடக் கருவுங் காணார்
நருளியெனு மதித வெண்ணூ ராறாங் காண்டம்
நாம்சொன்னோ மிந்தநூல் அகராதிபீடம்
மிருவியெனும் வேதாந்த நூல்கட கெல்லாம்
மகாபீடமிந்த வெண்ணூர் மாந்திரிக மாமே. 77

மந்திரமாம் வேதாந்தம் பிறந்த நேர்மை
மறைப்பெல்லாம் விதியமைப் பாலதீத மாச்சு
அந்திரமா மெழுத்ததனை யாருங் காணார்
அறிவான அக்ஷரத்தின் உயிருங் காணார்
விந்திரமா மகராதி யெண்ணூர்ப் பீடம்
மேலான பரிபாஷை யெல்லாந் தோன்றும்
முந்திரமாம் மும்மூல மாறாதாரம்
மூதண்டப் பிராணாயம் முடிவைக் காயே. 78

ஐங்காயச் செயநீர்

காணப்பா புலத்தியனே சொல்லக் கேளு
கருவானப் பிண்டமடாச் சூத்திர ஜாதி
ஏணப்பா தலைப்பிள்ளை முடியை வாங்கி
எதிர்க்கோரை மயிர்ச்சவ்வு மிசவாய்ப் போக்கி
காணப்பா முடியதனைக் கல்லுரலி லிட்டு
கருங்கழுவு ரெத்தமது நாழியிட்டு
கோணப்பா விருஜாம மிருப்புலக்கை கைக்கொண்டு
கூறாகச் சாடி வரக்குறு மாப்போலாமே. 79

குருவான மாவெடுத்துப் பாண்ட மதிலிட்டு
குணமான நாட்டுப் பால்கழுதை யிடப்பாலு
அருவானப் பால்கறந்து நாழியது கொண்டு
அப்பாண்ட மதிலிட்டுக் கூழது கோல்கறைத்து
மருவானக் கரைத்த தொருப் பாண்டந்தன்னை
வளமாக வெடுத்ததனைக் கவசஞ் செய்து
புருவான மண்சிலை யேழுஞ் செய்து
புகழானச் சுடுகாட்டுச் சமாதியிலே வையே. 80

வையப்பா நாலுமுளங் குழிதான் னோண்டி
வைத்திடவே சமாதியெறு மேலே மூடி
ஐயப்பா மண்டலந்தான் சென்று தானால்
ஐங்காயச் செயநீரு மெறங்கும் பாரு
மெய்யப்பா வப்பாண்ட மெடுத்துநீயும்
மேல்கவசஞ் சீலைமண் லகுவாய்த் திறந்து
பொய்யப்பா சொல்லவில்லை யச்செயநீர் வேகம்
புவனமெல்லாஞ் சோதியதாய்ப் பிரகாசிக்குந்தானே. 81

தானான செயநீரைப் பீங்கானில் வாங்கி
தருவான வஞ்சிக் கொடிச்சுன்னங் காலிட்டு
கோனான முப்பூவுங் கூடவிட்டுக்
குணமான ரவிமதியும் கூடச் சேர்த்து
தேனான வழலையுட அருவும் சேர்த்து
தெளிவான சந்திரனுப்புக் கூடச் சேர்த்து
வானான வஸ்துவென்ற வழலை யாகும்
வாதமுறைக் கெல்லாமிந்தச் செயநீராமே. 82

நீரானச் செயநீரு மெழுகாய்ப் போகும்
நேரான வைங்காய மெழுகிதாகும்
மாரான மாந்தரிய மஷ்ட தொழிலாடும்
அறுபத்து நாலுசித்து மாகு மதனாலே
பேரான வெளிக்கருவு மதுதானாகும்
போகு மென்ற நாட்டுக்கரு வீட்டுக்கருவாகும்
ஆரான காட்டுக்கரு வதரணக் கருவாகும்
அருளினதோர்க் கருவெல்லா மிதற்குப் பேராமே. 83

புருஷ *வசியம்*

ஆமப்பா புலத்தியனே சுந்தரமே கேளு
அருளினோம் வசியத்துக் கருளக் கேளு
நாமப்பா சொல்லுகிறோம் ஐங்காய மெழுகுதன்னில்
நளினமதாய்க் குன்றியிடை நன்றாகு வெடுத்து
வாமப்பா கஸ்தூரி பணவெடைதான் கொண்டு
வசனித்தோம் புனுகதிலே பணமெடை தானெடுத்து
தாமப்பா வுள்ளங்கை யிலிதுமூன்று மிட்டு
தருவானக் கன்னிமுலைப்பால்விட்டு மத்தியே. 84

ஸ்ரீகளைப்பேர்க்குறித்து - அழைப்பிக்கும்மை

மத்தித்துச் சுப்பிரமண்ணியர் மூலங்கை கொண்டு
மண்டலத்தி லுருசெய்து வசியமாக்கி
அத்தித்து வறுகோணஞ் சித்தியாக்கி
அருளான லக்ஷமுறுத் தாயிதமே செய்து
கத்தித்தைத் கன்னியர் மேலாசை வைத்திராகில்
கடுகளவு மத்திதக் கருமையைக் கொண்டு
சத்தித்து நெற்றிதனில் திலகமது தீட்டி
தையலரை வாவென்று பேர்குறித் தழையே. 85

குறியான ஐங்காயம் அதனைவிட்டு
கோதையரை வாவென்றால் கூடத்துட வருவாள்பார்
அறியான ஆரிழை உன்னாசையது தீர்த்து
அதின்பிறகு வனுப்பிவிடு அருளக் கேளையா
நறியான மாதரவர் வசியமதே யானால்
நாட்டுவார் நீகேட்டடப் பொருள் தருவாரையா
வெறிகொண்டுச் சதாகால முனைப்பிரியாரையா
வெகுசுளுவு இந்தவித்தை வெளிவிடாதே பாரே. 86

புருஷ வசியம்

பாரப்பா புருஷ ரெல்லாம் வசியமாக
பரிவான வைங்காய மெழுகில்குன்றி வாங்கி
மாரப்பா பச்சோந்தி செவ்வாலரணை ரெண்டின்
மகத்தான பிச்சதுவை வாங்கிக் கொண்டு
ஆரப்பா ஐங்காய மெழுகில் சேர்த்து
அருளான கொச்சிமஞ்சள்தூள் பணமுமிட்டு
வாரப்பா கஸ்தூரிப் பணவிடைதானிட்டு
வசனித்தோம் புனுகதிலே பணமிடைதான் தாக்கே. 87

தாக்கியே அளிஞ்சி முத்துத்தயிலம் வாங்கி
தறுவானத் தயிலமதில் பணமிடைதானிட்டு
மாக்கியே மத்தித்துச் சிமிள்தனிலே வைத்து
வாலையிட மூலமதில் லக்ஷமுறு வோதி
சாக்கியே தாயாரை வசியமுதற் செய்து
வார்வான முக்கோணம் வசியசித்துசெய்து
ஆக்கியே கடுகளவுத் திலர்தந் திட்டுவிராய்
ஆரணியில் உள்ளவர்கள் அடங்கலும் வசியமாமே. 88

வசமாவார்ச் சகலருமே புருஷ ரெல்லாம்
மயங்கியே யுன்பிறகேத் துடறுவார்கள்
அசமானப் புருஷர்கள் தான் வசமேயானால்
அதிதமெல்லாம் வெகுவசிய மாகுமாகும்
தெசமாரிவ் வசியமார்தான் சொல்வார்
தெளிந்த பணப்போ ரவரறிவார் செய்துபாரு
பசமாவார்ப் பதிநாறு லக்ஷணங் கவிசொன்னோம்
பாடினோ மிதுபோலப் பாயாதென்றே. 89

ராஜவசியம்

என்றான ராஜவசியஞ் சொல்லக் கேள்
எடுத்துரைப்போ மாணாக்காள் இங்கிதமுமாக
வண்டானத் தேவாங்கும் பிச்சுகொண்டு
வளமான ஆந்தையிடப் பிச்சுமிரண்டு மாகும்
குண்டான ஐங்காய மெழுகில் குன்றிவாங்கி
கூறான விருப்பிசினுங் கூடக்கூட்டி
அண்டானச் சந்தன மரத்தினாலே
அருளானத் தயிலமதை யன்பாய் வாங்கே. 90

வாங்கியேத் தயிலமதைப் பலந்தான் கூட்டி
வலியினிட ரத்தம் விட்டு வளமாலையா
தாங்கியே கஸ்த்தூரிப் புனுகுமொவ்வொன்றுபணம் வாங்கி
தருவா விதமெல்லா மொன்றாகச் சேர்த்து
ஆங்கியே மத்தித்து சிமிளதனிலே வைத்து
அகோர வீரபத்திர மூலம் வசியஞ்செய்து
நாங்கியே மத்தித்த மையில் கடுகளவு வாங்கி
நாட்டிலுள்ள ராஜரெல்லாம் வசியமெனக்கூறே. 91

ஜெகவசியம்

கூறியே நெற்றிதனில் திலர்தந் தொட்டுவீராய்
குணமாகத் திலர்தமிட்டு ராஜரிடஞ் சென்றால்
வாளிமலர் பொன்மாரிப் பொழிந்தது த்ரன்போல
வசனித்தோம் ராஜரெல்லாம் உன் முகத்தைப் பார்த்து
வீறியேப் பலப்பல ஆசனந்தானிட்டுப் பாரித்து
வெகுமதிகள் சித்தினிவனென்றுச் செய்து
நாறியே கொடுத்துனக்குத் தேவனிவ னென்று
நமஸ்கரித்துப் பணிந்திடுவார் ராஜர் தானே. 92

தானென்ற புலத்தியனே மகராஜ யோகி
　　தருவான ஜெகவசியஞ் சொல்லக் கேளையா
நானென்ற வெங்காய மெழுகில் குன்றிவாங்கி
　　நல்லகரம் உள்ளங்கையில் நலமாக வைத்து
கானென்றக் கருங்காக்கைச் செம்போத்தித்து ரெண்டும்
　　கருவானப் பிச்சதுவும் உள்ளங்கையிலிட்டு
பேனென்றத் தலைப்பிண்ட நெய்யில் பணவிடைதான்
　　பேறாக விதையிட்டுக் கஸ்தூரிப் புனுகுமாமே. 93

வெண்பா

புனுகானக் கஸ்தூரிப் புகலும் பணவிடை தானென்று
　　அதுவான புனுகதுவுமப்படி தானதிவாய்க்கேள்
பனுகானப் பூமுலையாள் புகலுஞ்சிசுப் பாலனுண்ணும்
　　தனுவான அமுர்தம் பணவிடைதானிட்டு அதில்
புனுகான விதமெல்லாம் பூட்டிடுவாய் மத்தித்து
　　வகையாக வழித்துச் சிமிளில் வைத்திடுவா யுத்தமர்ச்சொல்
புனுகான பூமாதுப் பவனையிட மூலமதில்
　　நினைவாகச் செபிலட்சு முறுநிலை பெறவே. 94

சேவிப்பாய்ச் சிறோமணியைச் சித்திபெற நித்தம்
　　உருபவிப்பாய் மாதுமையைப் பணிந்திடுவாய்க் கனித்ததுவால்
மேவிப்பாய் ஜெகவசிய மேலான வித்தையிது காணுமப்பா
　　நெத்திதனில் கதிறொளியைத் திலர்தமிது
மாவிப்பா விட்டு ஜெகமனிதர் கிட்டச் சென்றாக்கால்
　　மோகிப்பார் மகாவசியம் உலகமெல்லாம் சகலவுயிர்
ஆவிப்பாய்த் திலர்தமருளின தோராமாகில்
　　நாவிப்பாய்ச் சித்தரெல்லாம் நன்றிதுவே. 95

நன்றிதுவாய் நீகேளு நாம்சொல்வோம் மாமுனிவன்
　　கன்றுக்கருவறி வார்கள் கனம்பெறுவார்த் தொண்டரெனும்
பண்டிதத்தோர் தாண்டிவரப் பரிபாஷை யொடுக்கமெல்லாம்
　　கண்டறிவோர்ச் சொர்க்க கெதிகாணுவார் விண்டுடையார்
மண்டலத்தில் சித்தர்களில் மகிபூபதி யறிவார்
　　அண்டமெல்லாம் நிறைந்தக் கருவானார் விண்டவிதி
கண்டமென்பா ருலகத்தோர் கைலாச மேருவைத்தான்
　　துண்டுதுண்டாகவும் நாம் தொடுத்ததுவே. 96

தொடுத்த மென்றக் காமுகர்க்குத் தொந்தமென்பாரொருவர்
அடுத்தவரை காத்தது போலனுசரிப்பார் சொந்தமதாய்
எடுத்தவிலத் தொடுக்கறியார் இழிகுலத்தோராகையினால்
அடுத்தவரைக் கழுத்தறுப்பார் அறிந்துபார் ஜெகமனிதர்
சுடுத்தசலிக் கற்மிகட்குக் கடத்தேறச் சொன்னாலும்
உலுத்தமட்டி மாண்பருக்கு வுணர்வில்லைப் பார் பண்மாசை
குடத்து கெட்டக் கடன்காரன் குண்டினியாய்த் திரிவதுபோல்
படுத்தும் புலையர்ச் செய்யுந் தொழில் பதறுவதே. 97

வேறுவிருத்தம் - தன வசியம்

பதறில்லா வைங்காய மெழுகில் குன்றிடைதான்
பரப்பரந்து மிச்சதுவுங் கோட்டான் விச்சுங்கொண்டு
சுதறில்லாப் பசுந்தவளைப் பிச்சுஞ் சேர்த்து
கஸ்தூரிப் பணமிடைதான் புனுகுப் பணமிடைதான்
வதரில்லாச் சந்தனத் தயிலஞ் சேர்த்து மத்தித்து
சிமிளிதனில் வைத்து வறாகிப் பூசை செய்து
அதரில்லா மூலமதில் லட்சமூலஞ் செபித்து
அகிலமாதாவை நீ வசியமது செய்யே. 98

செய்யப்பா வறாகியிடப் பூசை செய்து
திலர்தமிட்டு நெத்திதனில் ஜெகமீதில் சென்றால்
அய்யப்பா வழிதனிலேப் போகு மானிடர்கள்
அவர்கொடுப்பார் வேணதெல்லாம் ஆதி குருவென்று
தய்யப்பா தரணிலுள்ள மனிதரெல்லாம்
தனக்களஞ்சி யங்கட்கு நடத்திடு வாரையா
மெய்யப்பா சொல்லிவிட்டோந் தனவசிய மாகும்
மேலான வித்தையிது மேவிப்பா ரென்றே. 99

மிருக வசியம்

பாரப்பா சுந்தரமே யின்னமொன்று கேளு
பாரிலுள்ள மிருகமெல்லாம் பலுவசியமாகும்
சேரப்பா செம்பருத்து செங்கழுகு ரெண்டும்
செயலானப் பிச்செடுத்துச் செப்பக் கேளு
தாரப்பா தலைப்பிள்ளை முடித்தயிலம் வாங்கி
தகறுவாள் ஐங்காய மெழுகில் குன்றிடைதான்
ஆரப்பா விதுவகைகள் உள்ளங்கை யிலிட்டு
ஆண்பிள்ளைக் குடிக்கு முலைப்பாலுங் கூட்டிச் சேரே. 100

சேருநத்தைச் சூரியிடச்சாறுங் கூடச் சேறு
செம்பருத்திப்பூவினிடச் சாறுங்கூடச் சேரு
ஆருமறியாதக் கருமையெனவே கூறி
அருள்பெறவே மத்தித்துச் சிமிழ்தனிலிட்டு
தேருந்திரி புரையுடைய மூலமதிலே லட்சம்
தீருவொரு மண்டலம் ஜெபிப் பீறாகில்
தூறு வாராது தேவிக்கிருபை யதினாலே
துருவான மையெடுத்துத் திலர்தம் திட்டுவீரே. 101

திட்டியே தீவு தீவாந்திரமே யேகி
தேவியுட மூலமதில் நூற்றெட்டுச் செபி
வாட்டியே வாவெனவேச் சீட்டுநாடிச் செய்தால்
வானாந்திரத்தில் மிருகமெல்லாம் வந்துவுன்காலி ல்
பாட்டியே பணிந்திடுங்காண் மிருகமெல்லாம் பாரீர்
பலுவசியமிது போலப் பாலிப்பாரில்லை
நாட்டினிலே யிவ்வித்தை செய்தாரே யானால்
நமனேது வெமன்வாக்கு நாடொண்ணாதே. 102

லோக வசியம்

நாட்டொண்ணா வசியமொன்று சொல்லக் கேளு
நவறாசப் பூபதியே லோக வசியந்தான்கேள்
காட்டொண்ணா ஐங்காய மெழுகில் குன்றி
கலைமானின் பிச்சதுவுங் கடம்பைப் பிச்சுங்கூட்டி
தீட்டொண்ணாத் திருமேனி யழகிச் சார்விட்டு
சிவகரந்தைச் சாறுமதுக்கூட நீ சேர்த்து
பூட்டொண்ணாப் புனுகளஞ்சிக் கஸ்ரிக்களஞ்சி
பூமுலையாள் நாதம் விட்டுப் புகழுமத்தியே. 103

மத்தித்துச் சிமிள் வைத்து அம்மாதேவி
மகத்தான மூலமதில் லக்ஷமுறு செபித்து
அத்தித்து மைதனிலே கடுகளவு வாங்கி
அருள்பெறவே நெற்றிதனில் திலர்தமிடுவீறாய்
நத்தித்துத் திலர்தமிட்டு லோகமதில் சென்றால்
நாதாக்கள் அவர்லோகம் நாடலாகும்
பத்தித்துத் தேவனிவ னென்று மகிழ்ந்து
பணிந்திடுவார் லோகமெல்லாம் பலுவசியமாமே. 104

வசியமாம் புலத்தியனே பூதவசியந்தான்
மாணாக்களிது அரிது வசனிப்போம் நாம்
அசியமாம் ஐங்காய மெழுகில் குன்றிவாங்கி
அதீதமா முசல்பித்து முதளைப் பித்துச் சேர்த்து
வசியமாம் பேரண்டத் தயிலமது கூட்டி
பரிவான ஊமத்தஞ் சார்த்தாழைச் சாரும்விட்டு
நசியமாம் புனுகுக்களஞ்சிக் கஸ்தூரிக் களஞ்சி
நாயகியாள் முலைப்பால் விட்டு மத்தியே. 105

பூத வசியம்

மத்திப்பாய் மத்தித்துச் சிமிள் தனிலேவைத்து
மயேந்திறையின் மூலமதில் லக்ஷமுறு மண்டலம்
ஒத்திப்பா யுருசெய்து மையதனை யெடுத்து
ஓகோகோ நெற்றிதனில் திலர்தம் போட்டுத் தொடுவீறாய்
அத்திப்பாய் திலர்தமிட்டு மயேந்திறையின் உறுநூறு
அருளுவாய் வாவெனவே அதுவருகும் பாரு
உத்திப்பாய் லோகமதில் உள்ள பூதகணங்கள்
ஓடிவரும் உன்னெதிரே உசிதமிதுவாமே. 106

உசிதமென்றப் பூதகணம் வசியமாம் பாரு
ஓகோகோ இவர்ஞானி என்றுப் பணியுமப்பா
அசிதமென்ற வாண்பிள்ளை நீயோ சித்தனாகில்
ஆடலா மைங்காய மெழுகுக் குருவுனாலே
வசிதமென்ற வாய்ப்பேச்சாய்ப் புலம்பித் திரிவோர்க்கு
வாயாது இந்தவித்தை வசனிக்கக் கேளு
கசிதமென்றக் கருவாளி நீயே யானால்
கருவறிந்து இத்தொழிலைக் காணுகாணே. 107

தேவதைகள் வசியம்

காணப்பா புலத்தியனே பூபதியே கேளு
காசியிலே தேவதைகள் அதீதமதாய்க் காணும்
ஏனப்பா இவ்வசியந் தேவதைகள் வசியம்
எல்லவரும் மனமகிழ்வர் இந்த வித்தை
ஆனப்பா ஐங்காய மெழுகில் குன்றிடைதான்
ஆதியென்ற குதிரைப்பித்துக் கழுதையிடப் பித்து
நாணப்பா இந்திரகோபங் குழியானை யிதுரெண்டு
நன்றாகப் பாடிசெய்து நல்லெண்ணைதான் வாரே. 108

எண்ணையாங் கஸ்தூரிப் புனுகுஞ் சேர்த்து
இந்திர வல்லிச்சாறுஞ் சிறியாநங்கைச் சாறும்
அண்ணையமான விந்துப் பணமிடை தானிட்டு
ஆரிழையாள் முலைப்பாலும் அடவாக விட்டு
கண்ணையமாங் கருவாக மத்தித்துச் சிமிளில்
கருணைபெற வைத்துச் சாமளையினுடத்தியானம்
நன்னையமா முறுலக்ஷம் மண்டலமே ஜெபித்து
நன்றான மையெடுத்துத் திலர்தந்திட்டீரே. 109

தீட்டியே தேவதைகள் மூலமதைச் செபித்தால்
திருநடன மாடுவார்த் தேவதைகள் தானும்
மாட்டியே தேவதைகள் அதீத வசியந்தான்
ஆடலாம் இத்தொழிலால் அனேகவித்தை தானும்
நாட்டினோம் இந்த நூலெண்ணூறு ஆகச்சொன்னோம்
நளினமென்றக் காண்டமெட்டு அகராதி நிகண்டு
வாட்டினோம் பலகலைகள் பண்பெறநாமும்
பரிப்பாஷை யில்லாமல் பாடினோம் பாரே. 110

பாரப்பா புலத்தியனே ஆறாவது காண்டம்
பார்தனிலார் கொடுப்பார் பரிபாஷை அறிந்தோர்
வேரப்பா இன்னூலில் கசலத்துரைக ளெல்லாம்
விளங்கினோங் கருக்கிடைதான் வெளியாங்கமாய்த் தோன்றும்
ஆரப்பா அறிவார்களிந்த வெண்ணூற்பீடம்
ஆதியிது குருநூலு அரிதரிது பாரீர்
சேரப்பா சர்க்குருவை அடுத்தால் பத்தாண்டு
கூறினோங் குறித்திடுவார் குறை வாராதென்றே. 111

மாந்திரிக வழலையுப்பு

என்றான மாந்தரிக வழலையுப்பைக் கேளு
எடுத்துரைத்தார் முன்னோர்கள் அனகம் பேரிதற்கு
அண்டான வண்டரென்றால் தலைச்ச னதுவாகில்
அதின் முடியைத் தள்ளிவைத்து அங்கமதைக் கொண்டு
நண்டானக் கால்கை நிகந்தன்னை வாங்கி
நாமப்பா நரம்பதனை அணியணியாய் எடுத்து
பண்டான நரம்புநிகம் பதனமாகச் செய்து
பரிவான அங்கமதை உட்சுத்தி செய்யே. 112

செய்யப்பா அங்கமெனு முள்சுத்தி செய்து
ஜெயமாக வாளப்புணங்கா விடமதிலே வைத்து
நய்யப்பா ரவிமுகத்தில் உலர நீ செய்து
நளினமதாய் மண்டலந்தான் சென்ற பிறகெடுத்து
செய்யப்பா கல்லுரலில் அங்கமதையிட்டுக்
கருவாகச் சென்னலென்ற வரிசிபடி மூன்று
மெய்யப்பா பாண்டத்திட்டு அன்னமதாய்ச் செய்து
மேலாகவடித்த சலம் மேவக்கேள் தானே. 113

மேவக்கேள் ஆறுமாசம் ரவிதனிலே வைத்தால்
மேன்பெறுங் காடியதாய் மேவுமது பாரு
நூ வக்கேள் நுரையதுபோல் பொங்கி வழிந்திடும்
நுண்மைபெரும் நுரைவருதல் பாகந்தனைக் கண்டு
தாவக்கேள் ஆறுமாசங் காடிதனைக் கொண்டு
தழவானக் கல்லுரலில் தனதாகவிட்டு
நாவக்கேள் நாதவிந்து வீதஞ் சேரிட்டு
நலமாக விருஜாமம் இருப்புலக்கைச் சாடே. 114

கொண்டு நீசாடயிலே மாவது போலாகும்
குருவான மாவதனைத் தோண்டி யெடுத்தையா
பண்டு நீபாண்டமதில் மாவதனை யிட்டு
பனிக்குடத்து நீரதனில் படிநீர்தான் வார்த்து
அன்று நீயதைக் கறைத்து ரவி முகத்தி லோர்நாள்
அருள்பெறவே வைத்திட்டால் தெளிந்த சலமாகும்
மற்றுநீ மறுபாண்டமதில் ஜலத்தை விட்டு
மாணாக்காள் அடுப்பில் வைத்து அக்கினியை மூட்டே. 115

மூட்டியே விருசாமம் எரித்தீரே யாகில்
முக்கியமுள்ளக் கொழம்பாகும் மோசம்வராதுண்மை
ஆட்டியே யதையிறக்கி மறுபடியும் பனிநீர்
அரைப்படி தானதிலிட்டுக் கரைத்து ரவிவைத்தால்
பாட்டியே பசும்பால் போல் தெளிந்து ஜலமாகும்
பரிவான ஜலமதனை மறு பாண்டத்திட்டு
நாட்டியே இந்தமுறை யார்சொல்வா ரையா
நளினமென்றப் பாண்டமதைக் கவசமது செய்யே. 116

செய்யப்பா மண்சீலை யேழுமது செய்து
செழுமையுப்பு ஆவதற்குப் பாண்டமதை யெடுத்து
அய்யப்பா ஆடறுக்குந் தொட்டிகிட்டே செய்து
அருளான சாண்குழி யதற்குள்ளே மைந்தா
பையப்பா பாண்டமதைக் குழிதனிலே வைத்து
பண்மைபெற ஆட்டெருவும் அதின்மேலே மூடி
மையப்பா மண்டலந்தான் புதைத்திரே யாகில்
மகத்தானச் செழுமை செயநீரதுவு மாமே. 117

வழலைநாதத்தின் பெயர்

அதுவான நாள்சென்றுப் பாண்டமதை யெடுத்து
அதின் கவசமண் சீலையேழுமது வாங்கி
மதுவானச் சென்மை செயநீரதனை யெடுத்து
மகத்தானப் பீங்கானில் அன்னீரை வார்த்து
நதுவான ரவிதனிலேப் பத்துநாள் வீதம்
நலமாக வைத்திட்டால் செயநீரது கட்டும்
பதுவானப் பாகது போலாகி விடும்பாரு
பாரதிலே நீரிறங்க கசுவது தானாமே. 118

ஆமென்றக் கசுவதனைப் பத்துநாளையா
அடவானப் பீங்கானிலி ருத்திரே யாகில்
வாமென்ற வழலைநாத மென்றதற்குப் பேரு
வானகுமரி நாதமென்றும் கன்னநாதமென்றும்
நாமென்ற வாலையிட நாதமென்றும் பேரு
மயக்கினீர்த் தியக்கினீர்ப் பூமாது நீரென்றும்
பாமென்றப் பாலைநாத மென்றதற்குப் பேரு
பறைநாத மாழளகி வாலைநாதப் பேரே. 119

நாதமென்ற நாதமதை மூன்று நாள் ரவியில்
நலமாக வைத்திடவே நாதங் குளம்பாகும்
வாதமென்றத் தெண்டகப் பக்ஷிணிதான்
அதற்கு வெல்லா மிதுநாதமாடி வருகும்பாரு
போதமென்ற நாதமதைச் சிஷா தனிலுமிட்டு
பயிரவத்தின் பூசைசெய்துப் பதனம் வைத்ததனை
பூதமென்றச் சர்வத்துக்கு மிதுநாதச் செயநீர்
பூட்டினோஞ் சுந்தரமே புலத்தியனே கேளாய். 120

கேளப்பா பத்துநாளுக்குள்ளே பீங்கானில்
கிருபையதாய்ப் பூப்பூர்க்கு முப்பூவையா
நாளப்பா சொல்லாது முறுக்கம் பூவர்ணம்
நாதவுப் பிதனின் பேரை நாதாக்கள் சொல்வார்
ஏளப்பா உப்பெடுத்துப் பார்த்திரே யானால்
என்சொல்வேன் இருகண்கள் சோதி யொளியாகும்
வேளப்பா எரித்த சிவனெனக்கு இந்த முறையை
வெளிவிட்டார்க் கோடிகாலந் தவசிருந்தோ மிதற்கே. 121

இதுவான வுப்பதனை பீங்கானதில் இட்டு
மேன்மை பெறநாதச் செயநீர் மூன்றுபலமிட்டு
மதுவானப் பிசைந்ததனைப் பொட்டகத்தில் வைத்து
மண்டலந் தானிந்படி நாதநீர் தெளிந்தால்
பொதுவாகப் பிசைந்து வைத்தவுண்டை யெல்லாம் மைந்தா
பேறான நாதமுப்பூப் பூர்த்துமது விருக்கும்
அதுவான வதுவொளிவு வென்னால் சொல்லப் போமோ
அருளினோம் இந்திரகோப நிறமிதாமே. 122

வழலைநாத முப்பூவின் பெயர்

நிறமான வழலைநாத முப்பூவென்றும் பேரு
நீலிக்கரு நீலியென்றும் அதீதப் பேரதற்கு
செரமானச் செங்கத்தாளை யென்றும் பேரதற்கு
சென்னாவல் வெண்சாரைக் கொழுப்பென்றும் பேரு
கறமானக் கருஞ்சாரைக் கொழுப்பென்றும் பேரு
கருவானச் செஞ்சாரைக் கொழுப்பென்றும் பேரு
திறமான மஞ்சள் சாரைக் கொழு பென்றும் பேரு
திருவான வழலைநாத முப்பூவின் பேரே. 123

பேறான முப்பூவைச் சுன்னஞ் செய்யக்கேளு
பீங்கானிலிருந்த முப்பைப் பிசகாமலெடுத்து
சார்வானக் கல்வமதில் முப்பூவை யிட்டு
கருவான நாதசெயநீர் நன்றாய்ச் சேர்த்தாக்கி
ஆறான ஆண்விந்து அஞ்சுபலமிட்டு
அதைச்சாடு விருஜாமம் ஆடினீராகில்
நேறான மெழுகது போலாகும் அதுபாரு
நிறமென்னால் சொல்லுதற்கு நேர்மையிராதென்றே. 124

நெறுமையென்ற மந்திரவாதி நீயேயானால்
நிலைக்கு மதுவறுபத்து நாலுசித்து மாகும்
வறுமையென்றும் அணுகாது விந்தமெழுகு
வழித்து வசனித்தோஞ் சதிரமதாய் வில்லைபோற் செய்து
தறுமையென்றுஞ் சித்திரைநாள் ரவிமுன்னேழ் தன்னில்
நலச்சதிர வில்லையதை உலரவைத்து நீயும்
சிறுமையொன்றும் வாராது வில்லையதை யெடுத்து
செழும்பருத்திச் சீலைதனிலேழுஞ் செய்வாயே. 125

செய்வாயே புலத்தியனே பூபதியே கேளு
சிறுகாடை அண்டமதின் விந்தே கொண்டு
அய்வாயே யவ்விந்தைச் சீலைதனில் பூசி
அச்சதிரம் வில்லையதில் போல்கவசஞ் செய்து
பய்வாயேச் சுண்ணாம்புச் சீலையேழுஞ் செய்து
பத்திரப் பத்திரியாக விரண்டோடு கொண்டு
மெய்வாயே அவ்வோட்டில் வில்லையதை வைத்து
மேலோடு மூடி மண்சீலை யேழுஞ் செய்யே. 126

வெண்பா - செந்தூரம்

செய்யுமடமாதே கேள் செப்பரிது வுலகருக்கு எய்து
மென்றக் கருமமெல்லாம் இதிலெய்தும் புண்ணியத்திற்கு
செய்யுமட மாதேகேள் செப்பினதோர் வில்லையதை
உய்யரவி மூன்றுநாள் உலரவைத்து நீமெய்யிதுபார்
செய்யுமட மாதேகேள் சிறுமயிற்புடம் போட்டு
ஆறினதோர்ப் பிறகதனை யெடுத்துக் கவசமெல்லாம்
செய்யுமடமாதே கேள்சிலை யெல்லாங் கழட்டெடுறிந்து
உய்யச் செந்தூர மதை யுருக்காணே. 127

காணு முலகோர்களிடக் கருத்தறிய வேணுமென்றால்
வேணுஞ் சிவயோகிகளின் விருத்தாந்தம் உறுதிப்பண்ணி
காணுமன மலரொளிவைக் கண்டு கவிக்கூர்ந்தவர்கள்
வேணுமென்று மனம்வேத்தோர் ஒருவனுண்டு வையகத்தில்
காணுமிது நாதத்தால் கருவான முப்பூவை ஊனுயிரு
லோக பூபதியிது தான் செந்தூரம்
காணுமிது செந்தூரங் கடுகளவு தானெடுத்து
மான்மழு ஏந்துங் கரமதில் வைத்திடே. 128

விருத்தம்

கரமானக் கரமதிலே செந்தூரம் வைத்து
சுதிரவி முகம்படவே காண்பித் திராகில்
சரமான மண்டலம் ரவிமதியுங் காணும்
சரலோகச் சாமீபச் சாருபச் சாயுச்சியுங்காணும்
மரவானச் சுழிக்கண்ணை மனக்கண்ணா லோட்டி
மதிரேசகப் பூரகம் ரவிக்கும் பகந்தான்
திரமானப் பிராணாயம் வாசியதை யோட்டி
சிங்கென்று வங்கிதிலே வங்கென்று நாட்டே. 129

நாட்டியே செந்தூரம் நங்கென்று பார்த்தால்
நாற்சதிரக் கிருசால மேறுவது போல
பூட்டியே அம்புதுரந் தொடுத்த வாவனைபோல
பூதாதி யைந்தினிட நேர்மையது காணும்
மேட்டியோஞ் சூட்சாதி சூட்ச பீடங்கள்
மேலானக் கைலாச மேருவது காணும்
காட்டினோ மனமறிவால் கண்ணாடி வைத்து
கைப்பாகம் போலெண்ணூர் கண்ணாடியாமே. 130

ஆமேதான் புலத்தியனே சுந்தரமே கேளு
ஆட்டினதோர்ச் செந்தூர மதித மெய்யாகும்
நாமேதான் சொல்லி விட்டோஞ் செந்தூரத்தை
நாடதிலே யொருவருக்கு மொட்ட வேண்டாம்
சேமேதான் செந்தூரம் தனைக் கொண்டு
சிஷாவில் பதனமாய்ச் சேர்த்தி டீர்தான்
வாமேதான் சிதம்பரத்தின் பூசை செய்து
வசனித்தோஞ் செந்தூரம் பதனம் பண்ணே. 131

கிளிச்சுன்னம்

பதனமிது செந்தூர மந்திர வாதிக்கு
பாடினோ மிதுபோலப்பா யாதொன்றய்யா
சுதனமது செம்பதனை யுருக்கிக் காய்த்திட்டுக்
கசடெல்லாம் வாங்கியதைக் கனசுத்தி செய்து
ததனமது மெனுனுஞ் செம்பதனைத் தகடதுவாயடித்துத்
தருவானச் செந்தூர முமிநீரால் குழைத்து
பதனமெனுந் தகடதுமேல் பூசிக் கெசப்புடந்தான்
போட்டதே யாமாகில் கிளிச் சுன்னமாமே. 132

சுன்னமாந் தாம்பரச் சுன்னமிது பாரு
சூக்ஷத்தில் விளையாடும் வேதையினாலே
வன்னமாஞ் சரக்கு வறுபத்து நாலுஞ்சாகும்
அபநிதமு முபநிதமு முபசங்கள் சாகும்
அன்னமா மதியிதுச் சரக்கெல்லாம் மெழுகாகும்
அறுபத்து நாலு சுன்னஞ் செந்தூரமாகும்
வின்னமது வாகாது சொர்ண மதினாலே
வேதைகளெல்லாம் முடியும் வாதியென்னே. 133

ஆதியாம் பூலோகப் பூபதியென்றும் பேரு
அருளினோஞ் சவுமியத்தி லாடுமிகுஞ் சூக்ஷம்
வாதியெனும் வருவோற்கு விருணூறுஞ் சொன்னோம்
வசனித்தோம் ரசித பற்பமதுவே வாகில்
தேசியிது வெகுபேரு வென்னால் சொல்லப் போமோ
சேஷ்டுமங் கோழைபோம் மூலச்சூடும் போகும்
பூபதியாம் பற்பமிதில் பூபதியே யிட்டுப்
போற்றுவாய் மண்டலந்தாலுண்டு கறையேத்து. 134

கறையாதக் கல்போலாந் திரகமாகில்
கசடான மேகமெல்லாங் கயன்றே போச்சு
திறையானக் காமியத்தில் வெகுசாய் நோந்தால்
திரேகம்போம் குண்டழியுஞ் செடலம் பாழாம்
பறையான விந்தழிந்துச் சூடேகொண்டால்
பாவத்தால் நோயுண்டாந் தியாலாச்சு
வறையாறுங் கடப்பதற்கு ரசித பற்பம்
வசனித்தோஞ் சுந்தரமே வறுமை வராதென்றே. 135

வாரானச் செந்தமிழ் மாமுனிவ ரோதும்
வடமொழிக்கு அதீத மின்னூ லெண்ணூர் பீடம்
தேரான யேமத்தத்துவம் எண்ணூறுக்கும்
நேர்மையாங் கருக்குருவு மிதிலே தோன்றும்
சேரான முப்பூவும் வெளியாய்ச் சொன்னோம்
சிறப்பான வழலையுட பேருஞ் சொன்னோம்
காரான காவியந்தான் சித்தர்க் கெல்லாங்
காட்டினோம் இன்னூல் போல் அருளினோமே. 136

அருளான வாதியிது மாந்திரிகம்
அதினுடைய கருவிதுபார் அடவாய்ச் சொல்வோம்
ஒருளானச் சகலருமே யொளித்த குருவிதுதான்
ஓகோகோ லோகபூபதிச் செந்தூரங் கொண்டு
வருவான இந்திரக் கோபமின்னொளிப் பூச்சி
வையகத்தில் பச்சைநாபி வீதம் விராகனிடைதான்
எருளானப் புனுகுடனே கஸ்தூரிப் பணவிடைதான்
இதனைத் தான்தூள் பண்ணிச் செந்தூர மதிற்சேரே. 137

சேர்த்து அரைச்சேர்கொண்டு கபாலஓட்டிலிட்டு
செயமான நாதச் செயநீரைச் சேரிட்டுப்
பார்த்து அதைமத்தித்து அதின்மேலோடு மூடி
மகத்தான வெண்கருவால் கவசமது செய்து
ஆர்த்துப் பூநீர் மண்ணுச் சீலையேழும் விரலால்
ஆனபிறகெடுத்ததனைப் பாண்ட மதிலிட்டு
பார்த்து வொருப்பச்சைப் பாம்படித்து அதில்போட்டு
பரிவானப் புத்துமண்ணுஞ் சத்துவாய்ச் செய்யே. 138

மாந்த்ரீகக் கருவு

செய்து மண்டலஞ் சுடுகாட்டிலிதைப் புதைத்து
செப்பினோ மெடுத்ததனைப் பார்த்திரே யாகில்
நய்து ரசப்பாண்டம் அதாய்முழுதும் நிற்கும்
நாடதிலேக் கருவறிந்தோர் நண்பாய்ச் செய்வார்
அய்துபாண்ட மதற்குள்ளே யிருந்தக் கபாலவோடு
அதுரசமாய் முழுதும் வாலைபாத்திரமாய்க் காணும்
மய்துக்குள்ளே தான்சிவரத்னப் பூபதி
மகத்தானக் களைகொடி மாணிக்கமாமே. 139

மாணிக்கமா மாந்த்ரீகக் கருவே யாகும்
மகத்தானக் கருவது போலெவருஞ் சொல்லார்
ஆணிக்கமாம் இதுவாதி நிமைப் போதினிலக் கொல்லும்
அஷ்டமா சித்து முதலாடு மாடும்
காணிக்கமாங் கருவாகச் சேயொளித்தார்ச் சித்தர்
கருக்குருவானிந்த வெண்ணூர் கவியாய்ச் சொன்னோம்
வாணிக்கமாங் கருவாளி நீயேயானால்
வசனித்தக் கருவதனைச் சிமிளில் வையே. 140

ஜாலநூல்வகை

வையப்பா சுந்தரமே புலத்தியனே கேளும்
அழகானச் சிவஜாலஞ் சத்தி ஜாலம்
மையப்பாச் சண்முக ஜாலமதுவாகும்
மானதாஞ் சக்காதேவி மூலமுறு லட்சம்
மெய்யப்பா மண்டலத்தில் தேவிவசியஞ் செய்து
மகத்தானப் பூசைகளிகூறச் செய்து
பொய்யப்பா சொல்லவில்லை புலத்தியாகேள்
அகத்தியனிட மகாஜால மாயிரத்திரு நூறே. 141

நூறான விந்திர ஜாலம் மயேந்திரஜாலம்
ஓகோகோ கெசகரணங் கோகரணந்தான்
சேரானச் செப்படிச் சொல்லியஜாலம்
செகஜாலம் ஆயிரத்தியிரு நூறுக்கும்
ஆரான அறுபத்து நாலு ஜாலம்
அனேகவித்தை அதரணசாஸ்திர நூலாகில்
கோரான சூஸ்திரங்கள் கோடாகோடி
கூறினோம் அதற்கெல்லாங் குருவிதாமே. 142

குருவான குருவறிய வெகுநாள் செல்லும்
கூறினோம் இந்த எண்ணூற் குழந்தைகட்கு
மருவானப் பூமலரின் வாசம் போலே
வசனித்தோம் அகராதி நிகண்டாய்ச் சொன்னோம்
அருளான இக்குருவை அருளினோம் பார்
ஆறாவது காண்ட மதித வித்தை
புருவானப் புண்ணியர்க்கே எய்தும் இந்நூல்
பொல்லாத காமுகர்க்குப் புகலாதென்னே. 143

பஞ்சாக்ஷரத்தின் விபரம்

எண்ணவே ஐந்தெழுத்தின் பிரமெல்லாம்
எடுத்துரைப்போம் சுந்தரமே இயல்பாய்க் கேளு
பெண்ணவேப் பிறிதிவி யோடப்பு தேய்வு
பேரான வாய்வு ஆகாசத் தோடைந்து
அண்ணவே சத்தத்தோ டாறுமாகில்
ஆதார மாறுமாகில் மூலா தாரம்
மண்ணவே சுவாதிஷ்டான மணிப் பூரகந்தான்
அனாகதம் விசுத்தி அக்கினை யோடாறே. 144

ஆறானப் பிறிதிவு நகாரமாகில் மகத்தான
அப்புவுக்கு மகாரமது வாகில்
தேறானத் தேய்வுக்குச் சிகாரமது வாகில்
தெளிவான வாய்வுக்கு வகாரமதுவாகில்
ஆறான ஆகாசம் யகாரமது வாகில்
ஐந்தெழுத்தால் உலகம் நின்ற மகத்துவமாகும்
நேறான பூதமைந் துவீடே ஆறு
நேர்மை பெறுமெழுத்தைந்து உடலொன்றாச்சே. 145

ஓங்காரத்தின் பெயர்

ஆச்சப்பா புலத்தியனே அகாரமென்றும் பேரு
அடவான ஓங்கார மென்றும் பேரு
வாச்சப்பா வைத்தமென்றும் இதழ்தமென்றும் பேரு
வசனித்தோம் மதுகழஞ்சம் என்றும் பேரு
நாச்சப்பா நாவழத மென்றும் பேரு
நளினமென்ற உபநிகழ்த மென்றும் பேரு
பாச்சப்பா பதிழ்கார மென்றும் பேரு
பாடினோம் இந்தப்படி ஓங்காரத்தின் பேரே. 146

நகாரத்தின் பெயர்

பேறானப் பிரமழா மென்றும் பேரு
வளமானத் தாறாழ தகமென்றும் பேரு
வேறான நிசாரழ மென்றும் பேரு
வளமானத் தறாழ தகமென்றும் பேரு
வேறான விந்துழா மென்றும் பேரு
விழாசழச்ச மென்றதற்குப் பேருண்டாச்சு
காறானக் கலாவிதம் என்றும் பேரு
கருணை பெறச் சொல்லிவிட்டோம் நகாரத்தின் பேரே. 147

மகாரத்தின் பெயர்

நகாரமென்ற மகாராசா தமடழாதங்க
நலமான மணிபோத மென்றும் பேரு
அகாரமென்ற வழல்தார னென்றும் பேரு
அருளினோம் முதாலைய மென்றும் பேரு
வகார மென்ற பழிதிதா மென்றும் பேரு
வசனித்தோங் கானாதினாத மென்றும் பேரு
தகாரமென்ற தறாநிகழ மென்றும் பேரு
தருவான அக்ஷரமாம் மகாரத்தின் பேரே. 148

சிகாரத்தின் பெயர்

மகாரமாம் அருத்திறாங்கஞ்சி வறாங்கமென்றும் பேரு
நாம்சொன்னோம் நடுவணைப் பதியென்றும் பேரு
விகாரமாம் விழைச்சாபாட சரிகமென்றும் பேரு
விளங்கினோந் தாயடாத மென்றும் பேரு
நகாரம் நோன்புர மென்றும் பேரு
நாதபாத மென்றதற்கு வதீதப் பேரு
நிகாரமாம் நிறுவியென்று வதற்குப் பேரு
நிலையானச் சிகாரத்தின் வதீதப் பேரே. 149

வகாரத்தின் பெயர்

அதீதமாம் வாசிப்பிரம மென்றும் பேரு
அலாதிகழாம் பிரகா தீடசாமென்றும் பேரு
மதீதமாம் அலைப்படல மென்றும் பேரு
மனோராதி யென்றதற்குப் பேரு
வதீதமாம் வாமழரா மென்றும் பேரு
வசனித்தோங் கியானதர மென்றும் பேரு
நதீதமா லாசழா மென்றும் பேரு
நாம் சொன்னோம் நன்றாக வகாரத்தின் பேரே. 150

யகாரத்தின் பெயர்

காரமென்ற ராக்கினமதாய்ச் சினந்தா னென்றும்
கருவாகச் சொல்லுகிறோம் நமதாய மென்றும்
ஆரமென்ற வாதிசாயாக்கின மென்றும் பேரு
அடவான வல்லமோ சனாதியென்றும் பேரு
வாரமென்ற வலபநாதி யென்றும் பேரு
வளமானச் சடுதாதிச் சாசமென்றும் பேரு
சாரமென்றச் சத்தபரிப் பூரணமென்றும் பேரு
சாற்றினோம் சுந்தரமே யகாரத்தின் பேரே. 151

ஐயின் பெயர்

சுந்தரமா ஆறெழுத்தின் பேர்நன்றாய்ச் சொன்னோம்
குக்ஷமாய் மூன்றெழுத்தின் பேர் நன்றாய்க் கேளு
அந்தரமாம் எழுத்ததனை யாருங் காணாரையா
அருளினோ மிந்த வெண்ணூர் ஆறாங்காண்டம்
முந்தரமாஞ் சகல பீடமது பாரு
முன்னோர்கள் சொன்னமொழிக் கெல்லாமிதுக்கருதான்
மந்திரமாம் பரிபாஷை மகாகோடிநூலின்
மறைப்பெல்லாம் வெளியாக அருளினோமே. 152

அருளினோஞ் சுந்தரமே யின்னங் கேளும்
ஆர்பீசங் கண்டபீசம் மையமறிமாம்
வருளினோ மீறிமசயா மறிமயாயம்
வளமான வுருபேத மென்றும் பேரு
நருளினோம் நரிநமமென்றும் பேரு
நாம் சொன்னோம் வபலாய மென்றும் பேரு
கருளினதோர் கறாடாயா மென்றும் பேரு
கருணைபெறச் சொல்லிவிட்டோம் ஐயின் பேரே. 153

சவ்வின் பெயர்

ஐயானச் சவழாட முபசாட மென்றும் பேரு
அடவானப் பாராணய மென்றதற்குப் பேரு
வையான வசிராணய மென்றும் பேரு
வசனித்தோம் பிறடாழ மென்றும் பேரு
பையான பரிமாழ மென்றும் பேரு
பதுமலாதித மென்றதற்குப் பேரு
துய்யானத் துரிதாதிழ மென்றும் பேரு
துறுவானச் சவ்வினிட விதிதப் பேரே. 154

கிலியின் பெயர்

சவ்வான சிங்கிளிங் கிராமென்றும் பேரு
சாற்றினோங் கிறிபளிய மென்றும் பேரு
அவ்வான வவாழாய மென்றும் பேரு
ஆதிலினாம் புவசம் படுவென்றும் பேரு
நவ்வான நிறசாய மென்றும் பேரு
நளினமென்ற தியாழத மென்றும் பேரு
பவ்வானப் பம்மாடய மென்றும் பேரு
பாடினோ மிந்தபடிக் கிலியின் பேரே. 155

நிகண்டஞ்சரியுப்பு

பேறான பேர்களெல்லாம் பொறிக்கி மணிபோல்
பேசினோம் பரிபாஷை விளவதாக
மாரானக் காண்டமிது வாறாங் காண்ம்
மகத்தான நிகண்டிதுதான் எண்ணூற் பீடம்
வாரான பெரியோர்கள் சொன்னமாற்கம்
மறைத்து வைத்தார் நூல்களிட கருவையெல்லாம்
சீரான வென்குருவின் கடாக்ஷத்தாலே
செப்பினோமிந்த வெண்ணூற் காண்டமெட்டே. 156

எட்டும் பத்தும் பதினெண் சித்தர் சொன்ன
இயம்பினதோர் நிகண்டு பதினெட்டதாகும்
எட்டும் பத்தும் பார்த்திட்டால் நிகண்டு பதினெட்டில்
இயல்பான நிகண்டிது தானைந்துண்டெண்ணு
எட்டும் பத்து மைந்துக்கு நிகறொவ்வாது
இயம்பினோம் ஐயாயிரந்தான் இயல்பாய்ப்பாரு
சட்டமுடன் என்குருதான் அசுவணியாந் தேவர்
சாற்றினதோர் நிகண்டுதனைப் பாருபாரே. 157

சித்தர் நூல்

பாரப்பா புலத்தியனே சிவயோகி நீகேளும்
பாடினார்ச் சிவவாக்கியரா யித்திருநூறு
ஆரப்பா வதையறிவாரந் நூல் பாரு
அருளினோம் நிகண்டெண்ணூறிற் சூக்ஷா சூக்ஷம்
தேரப்பா ராமதேவ ரன்னூறுஞ் சொன்னார்
செப்பினோர் மச்சமுனி யொருவெண்ணூறு
வீரப்பா கருவூரார் சொன்ன மார்க்கம்
விசிதமது வறிவாளிக் காணுவாறே. 158

வெண்பா

காணுமடமாமயிலேக் கற்பினையாய்ச் சொல்லிவிட்டார்
தோனுமென்றுப் போகரவர் உறுதியினால் அறிவதுகேள்
காணுமடமாமயிலேக் காவியத்தைப் போலொரு நூல்
ஊணுப் புவியி லரியோதுவர் கேள் வாழ்வவர்கள்
காணுமடமாமயிலேக் கலைக்கோட்டு மாமுனிவர்
ஓமென்றுக் கருக்குருவா யோதினார் ஏதென்றால்
காணுமடமாமயிலேக் கருவான தறுநூறு
மேதினியோர்த் தானறியார் மேவியிதே. 159

கனயோகசித்தி

மேவக்கேள் இதுவதிகம் மேதினியால் சித்தருக்கும்
தாவக்கேள் என்னூறு தந்தாய் முந்திநூல்
மேவக்கேள் ஆதியந்த மேலண்டஞ் சூழ்ந்து நின்ற
பாவக்கேள் பரப்பிரமஞ் சுருபமொன்றாம் அறிவமதால்
மேவக்கேள் சுந்தரமே மேலாம் பரவாசல்
சாற்றக்கேள் படுமனமே தவியாதே தீவினையாம்
மேவக்கேள் நல்வினையாம் போலதிகம் சாயுச்சியம்
பாவக்கேள் இதுவென்றும் பயனெறியே. 160

அறிவதற்கு இடம்ஏவல் அறியும்பொருளிது மூன்றும்

குறிதாக்ஷி யில்லாமைக் கொடுமையினால் வருங்கணங்கேள்
அறியகுரு வாசானையடுத்து வொருமன மறிவால்
பெருமனமே தொண்டுக்குள் குறிகேள்
அறியமகா ராசயோகமதின் பிறகுச் செய்திடு வார்க்
கரையறிவார் மறையோர்கள் கருவிதுப்பார் உறையறியா
அறிவதாகு வுலகத்தோர்க் கொவ்வாது
அதிலொருவர்க்க கனயோக மதிவுடையோர்க் காணுறதே. 161

வேறு - விருத்தம்

காணப்பா புலத்தியனே ராசயோகி
கருவான நிகண்டிது தானெவருங் காணார்
நாணப்பா பூரணமா வெண்ணூறு பீடம்
நாதாக்கள் தேறும் அகராதி சித்தும்
கோணப்பா காண்டமெட்டு ஆயிரமாஞ் சோடசஞ்
சொல்லிவிட்டோம் மாந்தரிகக் கருவினைவிட்டோம்
ஊணப்பா ஆறாவது காண்ட நிறஞ்சனந்தான்
ஒருநூ ற்று யறுபது பாடல் மொழிகள் முற்றே. 162

ஆறாவது காண்டம்

முற்றிற்று.

கடவுள் துணை

அகஸ்திய முனிவர்

திருவாய் மலர்ந்தருளிய

பஞ்சகாவிய நிகண்டு-800

ஏழாவது காண்டம்

மொழியமெனுஞ் சுழிநடுவில் சுடரொளியாய் நின்ற
மூலகுரு ஆதியந்த முதலே போற்றி
வழியமெனும் மூலகுரு குண்டலியின் பாதம்
வல்லபை கணேசன் கந்தன் வயிரவன் போற்றி
விழியமெனும் ரவிமதியும் பிரகாச வழியாகில்
விளங்கும் பரசமையாகில் ஐம்பூதம் போற்றி
பொழியமெனும் பூரணமாம் வேதாந்தத்தின்
பொறியைந்தின் கமல பதமைம் பூதங்காப்பே. 1

பூதமெனும் பூரணமாம் ஞானபீடம்
போத வேதாந்த சிவஞ்சத்தி காப்பு
வாதமெனும் முப்பொருளின் கருவின் பீடம்
வாசிகுருவான சிதம்பரத்தின் காப்பு
வேதமெனும் சதுர்வேத வம்பாள் பீடம்
விளங்கு முக்கோண வாலைகமலங் காப்பு
நாதமெனும் விந்துநாத பீடங்காப்பு
நாதாந்த அறுபத்தின் ஞானங் காப்பே. 2

அருவமென்றுஞ் சித்தர் பதினெண் பேர்க்காக
அருளினோம் இந்த எண்ணூர் ஆதியந்தம்
சுருவமென்னும் சூக்ஷாதி சூட்ச மின்னூல்
சுருதி முடிவான தெல்லாந் தொகுப்பாய்க் காண
பருவான பருவ மிதுவென்று நாமும் பாடினோம்
பரிபாஷை பார்த்து நேராய்
விருவெல்லாம் விருவமெனு முற்பவித்தோம்
யார்கண்டார் வேதாந்த மெண்ணூறு காண்டமென்றே. 3

காண்டம் ஏழாவது இதுகருவாய்ச் சொல்வோம்
கமலமலர் அமுர்தம் எனுங்கனியுள்ளாக
ஆண்டமா மறுவுள்ளோர் அறியவென்று
அருளினோம் இந்த வெண்ணூற் கருவைக்காணு
வாண்டதமாம் வாசியோகஞ் செய்வோருக்கு
வாத சித்தியாக வேணு மில்லா விட்டால்
நாண்டமாந் தேவசித்தி தவறிப் போகும்
ஞானமெல்லாம் வெறும்பாழாய்ப் போச்சு போச்சே. 4

போமென்ற பூரணமாம் ஆத்தாள் சொன்னப்
புத்தியை நாம் கேட்டு இந்த எண்ணூறு தன்னில்
வாமென்ற ரத்தினம் போல் இம்மொழியைச் சொன்னோம்
வசனித்தோம் கருக்களெல்லாம் காணச் சொன்னோம்
நாமென்ற வறுவதனி லின்னூல் பாடி
ஞாயமாய்க் காணுதற்கு அருளிச் செய்தோம்
காமென்ற பரிபாஷை கருவாய்ச் சொல்வோம்
கனகரத்தின பூபதியே காணுகாணே. 5

வாசியோகநிலை

காணுதற்கு வாசியோகஞ் செய்வாராகில்
கன்னியென்ற மாயக் கன்னி மோகமாக
வாணுதற்கு வஞ்சியர் மேலாசை கொண்டால்
வாலையென்ற பருவமெல்லாம் அழிந்துப் போகும்
ஓணுமென்ற வோருறுதி தவமே யாகில்
ஓடிவிடும் ஆசையது ஒழிந்துப் போகும்
வேணுமென்று காயசித்தி நிலைக்கும் வாறு
விருத்தாந்தப் பயனறிந்து விளம்புவோமே. 6

விளம்புவோஞ் சுந்தரமே நன்றாய்க் கேளு
விந்தொழிய வேதாந்தம் வேறொன்றில்லை
விளம்பக்கேள் விந்தைவிட்டால் நொந்து போவாய்
விதிதவறும் மதியதனால் நோய் தானாச்சு
விளம்பக்கேள் விந்து கல்லாகும் நேர்மை
விசிதமதாய்ச் சொல்லுகிறோம் ஏழாங்காண்டம்
விளம்பக்கேள் ஞான காவியத்துக் காசு
வெகுநலமாய் மொழியுணர்வோம் விரும்பக்கேளே. 7

எட்டுத்திங்கள் பிண்டம் -பஸ்பம்

கேளப்பா புலத்தியனே ராசயோகி
  கெணிதமதாய்ச் சொல்லுகிறோஞ் சகலத்துக்கும்
பேளப்பா வெட்டுத் திங்கள் பிண்டம் வாங்கி
  பேரான ஊமூலஞ் சுத்தி செய்து
நாளப்பா செல்லாது சவ்வைப் போக்கி
  நளினமதாய் ரோமமெல்லாங் கழட்டெறிந்து
மூளப்பா மூலஞ்சுத்தி நன்றாய்ச் செய்து
  மூதண்ட பிண்டமதை சரகாய்ச் செய்யே. 8

செய்யப்பா சுந்தரமே உலர்ந்தசர கெடுத்து
  செயமான நாகத்தின் உணிபலந்தான் கொண்டு
அய்யப்பா சரகுஉணி யிரண்டதுவுங் கொண்டு
  அடவான கல்லுரலிலிது ரெண்டு மிட்டு
வையப்பா சாமம் ரெண்டு இருப்புலக்கை யதனால்
  வளமாகச் சாடயிலே மாப்போலது வாகும்
மெய்யப்பா மாவதனைத் தோண்டிப் பாண்டத்திட்டு
  செயலான பனிநீரு விந்து நாதமாமே. 9

நாதவிந்து ஒவ்வொன்றும் பலம் ஐந்துவாங்கி
  நளினமதாய்ப் பனிநீரு படியொன்று விட்டு
ஆதமாங் காமதுவால் கலக்கியதைக் கரைத்து
  அண்ணு முழுதொருநாளுந் தெளிய வைத்திராகில்
வாதமென்ற மஸ்துவைப் போல வாத நீராகும்
  வசநித்தோம் மறுநாளில் பாத்திரேயாகில்
சேதமொரு நாளுமதுவாரா தையா
  செப்பினோம் மாமுனிவர் செந்தமிழிதாமே. 10

செப்பினதோர் தெளிவை மறுபாண்டத் திலிருந்து
  செதார மலடுப்புமேல் பாண்டமதை வைத்து
அப்பினதோர் அடுப்பேற்றி அன்பாகத்தான்
  அடவாக ஒருசாமங் கொதிக்க வைத்திராகில்
நப்பினதோர் வெண்மைக் குழம்பாகு மதுபாரீர்
  நன்றாக வைப்பாக கண்டிக்கி வைத்து
வப்பினதோர் தனையை வைத்துப் பார்த்திராகில்
  வாவநீராகு மதுசேஷாவி லிட்டிடாயே. 11

மதப்பூலேகியம்

இட்டிடாய் மனோன்மணிதன் வாலைபூசை செய்து
எய்துமென்ற கருமமெல்லாம் இதிலாட வெண்ணுங்
கட்டிடாய்க் கமலமலர் அமுர்தமுண்டது போல்
கருணைபெறு வம்பாள் மனக்கருவின் பூசைசெய்து
நட்டிடா யிவள்முருக்கைப் புனல் முருங்கையாகில்
நலமான வதினுடைய பட்டையது வாங்கு
காட்டிடாய் சங்கம்பட்டை புங்கம் பட்டையாகில்
சமத்தான வெள்ளைக் காக்கணும் வேருமாமே. 12

ஆமென்ற பூலவிருக்ஷ்க் கற்பானி பட்டை
ஆதண்ட பட்டையதாரி வில்வவேர் பட்டை
நாமென்ற நன்னாரிவேர் பட்டையாகும்
நத்தைச் சூரிவேர்ப்பட்டை நாயுருவி வேர்பட்டை
வாமென்ற அத்திப் பட்டை ஏரழிஞ்சிப் பட்டை
வளமான அமுக்குரா கருந்துளசி வேரும்
போமென்ற பொன்னாரை வேரு மதுவாகும்
புகழான ஆண்டுநூறு மாம்பட்டையாமே. 13

பட்டையாம் இதுவகைகள் பலமைந்து வாங்கி
பாடினோம் ஒவ்வொன்றும் இந்தப் படியாகில்
கட்டையாங் கடுக்காய் பஞ்சாதிக்காய் பலந்தான்
கற்கடகங் சிங்கிபலம் ஏலம்பலமாகுந்
தொட்டையாந் தேத்தாங் கொட்டை பலமதுவுமகுந்
தெளிவான லவுங்கப்பட்டை யதுவும் பலமாகும்
வெட்டையாம் வெண்கரந்தை சமூலம் பலமாகும்
விளங்கு நல்லமிளகு பலஞ்சுக்கு பலமாமே. 14

பலமான சன்ன தும்பறாஷ்டகம் பலந்தான்
பரிவான தேவதாரம் அரத்தை பலமாகுஞ்
செலமான சீரகந்தான் பலமதுவு மாகுஞ்
செங்கொட்டையைந்து பலங்கண்டு திப்பிலி பலந்தான்
வலமான விதுவகைகள் ரவி உலரவைத்து
தாரஞ் சென்றெடுத்ததனை கல்லுரலில் தாக்கி
குலமான எஃகுஉலக்கை கொண்டு இருசாமங்
கூறாக இடித்ததனை மாவது போலாச்சே. 15

சமாதி மண்டலம்

ஆக்கியே மாவதுபோல் வருதலது வாங்கி
அப்பாகமது கண்டு தோண்டி யம்மாவை
வாக்கியே சட்டிகொண்டு சீலைவாய்க் கட்டி
மாவதனை யரித்து பதமாக்கி நீகொண்டு
போக்கியே வாமநீரில் இம்மாவையிட்டு
பூரணமே மனதுகந்து கரைத்ததனையையா
மாக்கியே மண்சீலை கவசமது செய்து
மண்டலந்தான் சமாதிக்குள் புதைத்திடுவீர் தானே. 16

தானென்ற மண்டலந்தான் சென்று தானால்
தருவானவதை எடுத்துச் சீலைமண் வாங்கி
பானென்ற பாண்டமதை பார்த்தீரே யாகில்
பரியொளுவு நிறமதுபோல் பண்பாய்க் காணும்
வானென்ற வாழ்மறையோர் முன்னோர் சொன்ன
மகத்தான நன்னூல்களிட மறப்பெல்லாந்தான்
தேனென்ற மொழியது போலிந்த நூலுந்
தெளிவாக வசனித்தோம் எண்ணூறாமே. 17

வசனிப்போஞ் சுந்தரமே நன்றாய்க் கேளு
வளமான வாமத்தால் நீர்தானாச்சு
அசனிப்போம் அன்னீரு கிருதம் போலாம்
அக்கிருதம் எடுத்ததனைப் பதனம் பண்ணும்
நசனிப்போம் நாலுகண் சட்டிதன்னைக் கொண்டு
நல்ல பனைவெல்லஞ் சேர்சட்டி தனிலிட்டு
புசனிப்போம் அடுப்பேற்றி வன்னியதை மூட்டி
புகழான சட்டியதை யடுப்பு மேலேத்தே. 18

யோகத் திறுதம்

ஏற்றியடுப் பேற்றி மூட்டி யதனால்
என்னசொல்வோம் பாகதுபோல் வருதலதுவாகும்
பூத்தமலர் வாசமது போலதுவும் வீசும்
போதரவாய் இரு சாமம் பாகமதுவானால்
நாத்திசையுங் கீர்த்தி பெரும் இந்தக் கிறுதந்தான்
நாதாக்கள் செய்யுமுறை நளினமதுவாகும்
பாத்திபனே இருசாமஞ் சென்றுதே யாகில்
பலந்தவறாய் வாமகிறுதம் பாகுதனில் சேரே. 19

சேர்த்து கனவாக்கினி போல் வன்னியதைமூட்டி
செய்பாகந் தவறாமல் செப்பினோங் கிண்டிடுவாய்
சேர்த்துவதைக் கிண்டிடவே செழுமை நிறங்காணும்
சிவசிவா அதின்பெருமை செப்ப வொண்ணாது
பார்த்து விந்த கிறுதமது வென்னாற் சொல்ல வெளிதோ
பண்புடைய புலத்தியனே பண்பாயிதைக் கேளும்
பூத்தமலர் வாசமது போலே அதுவீசும்
பூரணமாங் கிறுதமது பூசை செய்திடீரே. 20

செய்திடுவீர் மகராச யோக பூபதியே
செப்பினதோர் கிறுதமதை யிறக்கி ஆறவைத்து
செய்திடுவாய் சிதம்பரத்தின் பூசையது செய்த
செயமாக வாலை மனோன்மணி பூசைசெய்து
செய்திடுவாய் சத்திசிவ தவபலங் களாலே
செப்பினோஞ் செய்தையாகில் சித்திக்கும் உண்மை
செய்திடுவாய் கிருதமதை சீஷாதன்னிலிட்டு
சிவயோகமுன் சித்திராச யோகஞ் செய்யே. 21

வெண்பா

செய்யு மடமாமயிலே செய்ராச யோகமதின்
உய்யக் கண்டுணர்வாய் உற்பவித்தோம் தப்பிலா
செய்யு மடமாதேகேள் செகமனிதா சிவயோகக்
கைவல்லியமாகவிதின் கருவதனைக் கண்டுணர்வாய்
செய்யு மடமாதேகேள் சிவயோகஞ் செய்யும்மெய்யதனால்வீதம்
மைவிழி சேர்மாதவள் தன்மாய்கையதால் வெய்யவுயிர்
செய்யு மடமாதேகேள் செடமழிந்து விந்திளகும்
பொய்யில்லை கர்மநோய்புகலு மாதே. 22

மதியறிவு வயறிவு

மாதேகேள் பூமாதே வையகத்தில் பிறவிசென்மம்
போதமதி னறிவுடையோர் புவியதனில் மெய்யுடையோர்
மாதேகேள் மவுனகுரு வாக்கியத்தால் வசனித்த
செகமனிதர் அறியவென்று செப்பினோம் செந்தமிழால்
மாதேகேள் துலாராசி மகத்துவத்தால் மற்றவிதி
பேதமில்லை நல்வினையின் பெண்பாவம் பூதமைந்தில்
மாதேகேள் ஆறுண்டுமறை நாலுவேத
முதல் ஆதியது வங்கமெனும் அட்சரமே. 23

வாசியோகம்

சிடமான சீவரத்தினஞ் சொல்லக் கேளப்பா
குறிமடமாது யோனிதனில் மாண்டிடுவார் கடிவிஷந்தான்
செடமானப் படுமனமே சித்திர வதையிதற் கெதிரோ
படைவெல்லும் பாம்போடே பழகாதே யெதிருனக்குப்
படையான நாககற்பம் பாரிலுள்ள சீவனுக்கு
இதுவதிகமாது விஷமே வருமறி யுலக
விதிநடமாடும் பதுமைகளின் நாட்டில் பேய்ச்சுடையிதுதான்
உதமான யோநியை விட்டு ஒழிந்தவற்கே. 24

ஒழியாத மாந்தருக்கு ஒருநூறே யாண்டொழிய
பழிபாவ தீவினையால் பாதியரைகுறை வில்லைபார்
பழியாதே அவரவர் தன்பரி பூரணமே யொழிய
மதியறிந்து தீவினையால் வருங்கன்மம் மனமறியும்
கழியாதே வளிகண்ணால் காணுவதே மெய்யொழிய
விழிபினத்தை யுந்தான் மேவுங்காண் மேவினதால்
அழியாதே மனமறிந்து மகிழாதே யாண்மைவரும்
பழியான பாவமதின் கூடப் பகைவருமே. 25

வருமதியா லவ்வுமதி மயங்குந் திறவியத்தால்
செய்யுமதி யிந்தமதி செயலறியார் நல்லமதி
வருகுமதி பொய்யாது மவுனகுரு நாயனருள்
பெருகுமதி யெந்தமதி பிறவி சென்மமட ஒருவனுண்டு
தருகுமதி மெய்ஞ்ஞானமது தானாபதி பூபதியோர்
எவர்க்குமிந்த மதியிருந்தா லெய்துங் காண்அறுவதுதான்
புருகுமதி யோனிக்குள் பிறந்த கசுமாலருக்கு
வருகுமயல வர்களுக்கு வண்மையதே. 26

வேறு - விருத்தம்

வண்மையென்ற புலத்தியனே யுனக்குறையச் சொல்வோம்
மாதளம்பூ நிறமுடையோர் வாசியோகம்
அண்மையென்ற வதுயோகம் யார்தான் செய்வார்
அருளுகிறோம் சுந்தரமே அடவாய்க் கேளு
உண்மையென்ற மவுனயோகஞ் செய்வாரையா
அழிஞ்சிப்பி நிறமுடையோர் அறிந்து கொள்ளு
நண்மையென்ற முன்சொன்ன சிவயோக மாகும்
நாதசித்தி யோகம்பின் சொன்னதாமே. 27

யோகிகள் நிறம்

சொன்னதொரு வகராச யோகஞ் செய்தால்
　சொர்ணம் போல் நிறமுடையோர் அவர்தானாகும்
அன்னதொரு ராசாந்த யோகஞ் செய்வோர்
　அவர்வெளுமை சந்திரன் போலாவாரையா
சன்னதமாஞ் சாதியோகஞ் செய்வோருக்கு
　சமத்தான ரவிசூரிய நிறமே யாகுங்
கன்னதொரு கனயோகஞ் செய்வோரை
　கஸ்தூரி நிறமுடையோர் அவர்தானாமே. 28

அவரான குளிகை வாயிலிட்டு தம்பித்தால்
　அருளான குளிகையோக நிறம் பளிங்குபோலாம்
தவறாது ஞானயோகஞ் செய்தாராகில்
　தரணிதனில் அதுவதிக மேருநிறமு மாகும்
பவரான பசுபத யோகஞ் செய்தால்
　பஞ்சலோகமது போல நிறமதாகும்
கவரான அஷ்டயோகம் நவயோகம் பார்
　கருணைப் பெறச் சொல்லிவிட்டோம் போகமாமே. 29

குளிகை யோகம்

யோகமா மதுக்கெல்லாம் முன்சொன்ன கிறுதம்
　ஓகோகோ சொல்லுகிறோம் உற்றுக் கேளு
ஆகமாம் மதனபூபதி லேகியந்தான்
　அருளினதோர் யோகத்துக்கு மாதியாகும்
நாதமாம் வாசியோகஞ் செய்ய வென்றால்
　நல்ல பூபதி மதன லேகியந்தான்
வாகமாம் வாசியது கட்டிப் போச்சு
　மண்டலந்தான் ஒன்று இரண்டு வேளை யுண்டுபாரே. 30

உண்டுபார் குன்றியிடை பிரமாணங் கொண்டு
　உறுதிபெறுஞ் சவுமியத்தின் சூஸ்த்திர மென்னூல்
கண்டுபார் கருவிடயமாகச் சொன்னோம்
　கைப்பாகஞ் செய்ப்பாக மிடைபாகஞ் சொன்னோம்
விண்டோம்பார் கிறுதமது வுண்பதற்கு
　விளங்கினோம் நால்வருஷம் யோகத்தோற்கு
தொண்டுபார் யாகாதி யோகமது செய்தால்
　துன்பவினை யணுகாது துரைபூபதி நீயே. 31

நீயான வாசியோகம் செய்ய வென்றால்
நிகரொருவர் உலகமதில் நின்போ லுண்டோ
வாயான மாயவலை யதற்குள் அகப்படாதே
மாண்டிடுவாய் மாய்கை விஷங் குடித்துதாகில்
காயான கனிமரத்தி லிருந்தாற் கண்ணுக்கழகுக்
கனியொத்தக் காயிருந்தால் கார்க்கு நிழல் மரத்தை
பேயாகத் திரியாதே எடுபிணம் ஆவாய்
பெற்ற தாய் உண்டசாரம் பிள்ளையுண்ணும் பாரே. 32

வெண்பா - கவி

பாரும் பத்தினி மாதேகேள் நன்றாய்ச் சொன்னோம்
பாடினோம் வாசியோக மதைதான் கேளு
தாரு மதனலேகியந்தான் தனியுந்தன் மாவித்
தேறுமா வின்பால் பசளைச் சொன்னோம்
பேருமுனியோர் மகிழ் பெறவே
பேணியே மண்டலங் கொள்
வீருயரச் சென்றால் சொல்லெளிதோ
வயதோ பதினாறு வருகு மென்றேபார். 33

தண்மைக் கனிமாதரசே கேள்தாழை நெல்லிக் கருந்துளசி
திண்மைவருகாதிதுமூன்றுன்திருசார்பிழிந்துசிறங்கையெனும்
உண்மையாவின் பால்நாழி ஒக்கவிட்டுக் கலந்தீறாய்
நண்மை ஒருமண்டல முண்டால் நாளுமொன்றுக்கிருவேளை
துண்மை வருந்துன்பமொரு நாளணுகாது
அன்பன்னைப்போல்நீயாவாய்அருள்சாயுச்சியபதவியெனும்
வண்மைபெறும் பதினாறு வாழ்வாய் மவுனபூபதி நீயாவாய்
பண்மையேகிய மிருபோது பருவாயுண்பீர். 34

மவுனயோகத்துக்குக் கனுபதனம்

மாலே மவுனயோகம் அதால்வாசிகொண்டு விருநாழி
பாதையது வழிகரை காண்பாய்பாலித்திருப்பாய்வெகுகாலம்
மாதேயிதுவழிமவுனமெனுமாற்வோர்மனிதர்களில்வழிவிடித்தார்
பாதையவ் வழியதனை யறிவோர் பாவக்குறியை
மோதேமவுன யோகமதால் வாழ்ந்தார் பண்போர்
வாழ்க்கை காலையறிவார் தலையறிவார் கடந்தார்
மாதேமவுன பரிபாஷை யாருமறியார் கரைகாணார்
போதமறிந்திடும்புண்ணியர்கள்புவியிலொருவன்புகழிதுவே .35

நாடி விருத்தம்

புகழ மகாராச யோகஞ் சொல்லக்கேளு
  பூபதியேப் பனினீரு மாவின் பாலும்
வசஞ்சரி ஒவ்வொன்றும் பலந்தானாலு
  வண்மைபெறுங் கையாந்தகரை அவுரிபொடுதலையும்
நிகழுவொன்று அதில்விதம் பலமுமெட்டு
  நேற்பெறவே வாங்கிச் சார்பாலதனிற் கலந்து
மகிழும் பூபதி மதனலேகியந்தான் குன்றி
  மண்டலத்தா னிருபோது விண்டு பாலுண்ணே. 36

ஒருமுலைப்பால்

உண்ணுமொரு முலைப்பாலும் மதனப்பாலும்
  உபயாசஞ் சீவிப்பால் வனமூலிப்பாலும்
வண்ணமகா ராசயோக வாமப்பாலென்றும்
  வடக்காக்கினிப் பாலுந்திரி கோணப்பாலும்
அண்ணு மமுகண்ணிப்பா லென்றும் பேரு
  ஆதிதொழு கன்னிப் பாலென்றும் பேரு
கண்ணுற வாடியதோர் நெற்றிப்பா
  லொருமுலைப்பாலின் பேரே. 37

பாலான லேகியமும் பாலுந்தானும்
  பரிவான மண்டலம் இருபோது கொண்டால்
வாலான வாசியதை தம்பித் தேயாகில்
  மகத்தான வாசியது மண்டலத்தில் கட்டும்
காலான வெமனோடிப் போவான்பார்
  கருவான மகாராச யோகஞ் சித்தியாச்சு
மேலான லேகியமும் பாலும் உண்ணாட்டால்
  விருதாவிற் சடமழிந்து விளங்காய் நீபாரே. 38

பாரப்பா சுந்தரமே ராசானந்த யோகம்
  பாடுகிறோம் அதுநிலைக்கப் பண்மைபெறத்தாலும்
காரப்பா கற்பூரவள்ளிச் சாறுபலம் நாலு
  கருப்பு வெற்றிலையின் சாரதில் பலம் நாலு
தேரப்பா வேளைச்சா ரதிற் பலம் நாலு
  தெளிவான மூன்றுசார் ஆவின் பசும்பாலில்
ஆரப்பா வாறுபலம் பாலமுர்தந் தன்னில்
  அச்சாரே விட்டு நாளிரு போதுண்ணே. 39

திண்ணப்பா லேகியந்தா னிருபோதுண்ணு
உருவான பாலதுதா னிருபோதுண்ணு
கண்ணப்பா மண்டலந்தா னிவ்விதங் கொண்டு
கருவான ராசானந்த யோகஞ் செய்வீராய்
நண்ணப்பா வாசியது நாற்பது நாள்தன்னில்
நளினமதாய்க் கட்டுமது நாம்சொன்னோம் பாரு
எண்ணப்பா இந்தப்படி நாளொன்றுக் கையா
இரண்டரை நாழிகை வீதமூன்று வேளை தம்பியே. 40

சமாதி யோகம்

வேளையென்ற மூன்று தரம்தம்பித்தா யானால்
விளங்குமந்த வாசியது சகலகலை விளங்கும்
நாளையென்ற வெகுநாள் நீயிருப்பாய் தானும்
நலமான ராசானந்த யோகமதனாலே
காளையென்ற கற்போலாந் திரேகம் வச்சிரமாகும்
காயசித்தி யாச்சுதப்பா கருவாய் நாம் சொன்னோம்
கோழையென்ற கோழையெல்லாம் அண்டத்திற் போச்சு
கூறினோம் இராசானந்த யோகமது வாமே. 41

யோகமென்ற யோகமதுக்கெல்லாம் பேரிதையா
ஓகோகோ சமாதியோகம் உறுதி பெறச் சொல்வோம்
ஆகமென்ற ஆனைநெரிஞ்சில் பலம் நாலுமாகும்
அருளினோஞ் சிதேவிச் சாறுபலம் நாலு
வாகமென்ற திருமேனிச் சாறு பலம்நாலு
வளமாக இடித்துச் சார்பிழிந்து நீயையா
யோகமென்ற ஆவின் பாலெட்டுப் பலமாகும்
இச்சாறும் அப்பாலு மொன்றாய்த் தாக்கே. 42

தாக்கியே பனைசக்கரை பலமொன்று தாக்கி
தருவான சீரகத்தூள் அரைப்பலந் தானிட்டு
ஆக்கியே அதைமத்தித்து லேகியத்தை யுண்டு
அதின்பிறகு இருநாழி யடவாகச் சென்றால்
பாக்கியே பாலதனையும் கொண்டீராகில்
பரிவாக சடலமெலாங் குளிர்ச்சி போற்காணும்
வாக்கியே யிந்தப்படி மண்டல மிருபோது
வலமாகக் கொண்டிடவே வாயுவைக் கட்டும் பாரே. 43

பாரப்பா சுந்தரமே வாசியெல்லாங் கூடி
பண்பு பெருஞ்சிகாரவீடு பீடமதி லொடுங்கும்
ஆரப்பா சமாதி யோகம் ஆரறியப்போரார்
அறிந்தவர்தான் சாகாத காலை அறிந்திருப்பார்
ஏரப்பா அதுகொண்டு ஏறி விளையாடு
இரண்டரை நாழி தம்பித்து மூன்றுவேளை சாதி
ஊரப்பா திடங்கொள்ள இந்தவித்தை பாரீர்
ஓகோகோ இப்பாலை உண்டு லேகியத்தை உண்ணே. 44

கனயோகத்துக்கு அநுமானம்

உண்ணையிலே வாமநீர் ஊருமதுவாகில்
ஒட்டியந்த வமுதர்தமதை உள்ளுக்கு வாங்கி
அண்ணையிலே அவ்வமுர்தம் உள்ளுக்குக் கொண்டிடவே
ஆறுவகை யதிசயமுமண்ணும் பார்க்கலாகும்
நிண்ணயமாய் நாம்சொன்னோம் வெளியாய்த்தானும்
நிருவிகற்ப மிதனுடைய நேர்மை யெல்லாம்
வண்ணையிலே முன்னோர்கள் உரைத்தாரய்யா
மகத்தான கருவையெல்லாம் வெளிவிண்டேனே. 45

வெளியாகச் சொல்லுகிறோம் சுந்தரமே கேளு
விளங்கினோஞ் சமாதி யோகங் கேள்
அளியாமல் அனேக காலம் இருக்கலாகும்
அடவான பிரமியிலைச் சாறுபலம் நாலு
வெளியாத விஷ்ணு கிரந்தி சாறுபலம் நாலு
வெண்ணாரம் உள்ளிச் சாறதுவும் நாலுபலமாகும்
எளியாத இவைமூன்று சாரதுவுங் கொண்டு
எட்டுபலம் பாலதனிற் கலந்து நீகொள்ளே. 46

கொள்ளப்பா புலத்தியனே ராசயோகி
கொண்டு விடுலேகியந்தான் நாளுக்கு இருவேளை
எள்ளப்பா இதுரெண்டு பால்ரெண்டு வேளை
என்மகனே மண்டலந்தான் உண்பாயானால்
வெள்ளப்பா வெண்சாறே தேகம்போல்
விளங்கினோஞ் சடலமெலாங் கட்டிப்போகும்
அள்ளப்பா அதுதேகம் வாசி போலாகும்
அளவிறந்த சதாகாலம் வாழலாமே. 47

வாழ்வோர்கள் நாளொன்று மூன்றுவேளை
வாசியைத் தான்இழுத்து கனயோகஞ் செய்தால்
ஆழ்வோர்க ளதிந காலமிருக்கலாம் பார்
அருளினதோர் சட்டையெல்லாம் கழன்றேபோகும்
தாழ்பவர்கள் ஒருவரில்லை புலத்தியா கேள்
தந்தை விதியமைப்பிருந்தால் தானேயெய்தும்
மாழ்பவர்கள் அதிதகாலம் இருக்கலாம் பார்
மகத்தான கனயோகஞ் செய்யலாமே. 48

குளிகையோகத்துக் கனுமானம்

செய்யலாங் குளிகையோகஞ் செப்பக் கேளு
சிறுகீரைச் சாறுபலம் நாலு வாங்கி
தொய்யப்பா தொட்டால்வாடிச் சாறுபலம் நாலு
துருவானப் பசளைச் சாற்றில் பலம்நாலு
அய்யப்பா இவைமுன்றுச் சாறுதனை வாங்கி
ஆவின் பாலெட்டு பலம்அதை அளவத்தினியாகில்
மெய்யப்பா அச்சாறு அச்சாறு பாலில் விட்டுக் கலந்து
மேன்மை பெறும் லேகியமும் பாலுங்கொண்டிடாயே. 49

கொண்டிடுவாய் லேகியத்தை முன்னிமையாய்க் கொண்டு
கூறாக விருநாழி சென்றதே யாகில்
வண்டிடுவாய் பாலைகொண்டு அதின்பிறகு
வசனித்தோம் பத்தியங் கொள்ளதன் பின்பையா
அண்டிடுவாய் மண்டலந்தான் கொண்டாயாகில்
அதன்வேகமென் சொல்வேன் புலத்தியாகேள்
கண்டிடுவாய் தொண்ணூற்றாற் சட்டையது கழலும்
கைலாச தேகமதாய்க் கனகம் போலாமே. 50

கனகமெனும் ஓராண்டு இவ்விதங் கொண்டால்
கைப்போலாம் சடலமது காயம் பெலப்படுங்காண்
அனகமெனு மாற்று வாசியதற்கு அழிவோயில்லை
ஆதியெனும் மெய்ஞ்ஞானப் பதவியாவார்
வனகமெனுங் குளிகையோகம் அவனே காண்பார்
மகத்தான ரசவித்தை எல்லாஞ்சித்தி
நகையெனும் வாலைசித்தி வசியமுதல் சித்தி
நலமான ரசமணிகள் சித்தியாச்சே. 51

சித்தியாம் ஞானயோகஞ் செய்யும் பேர்க்குத்
சிதறாமல் வாசிபுலஞ் செப்பக்கேளு
பத்தியாம் உறுதி தவம் அதீத ஞானம்
பல்பலவாஞ் சஞ்சலத்தை வென்றபேர்க்கு
புத்தியாம் புருஷரத்தினம் அவவரேகும்
பூச்சக்கிர புவனமெல்லா மவரேயாவார்
வித்தியாம் பிண்டவித்தை அவர்க்கு என்னாளும்
வேறுபல தொழில்களுடன் சேரொட்டாதே. 52

ஒட்டாத கருமமெல்லாம் ஒழிந்த தானால்
ஒருபுத்தி அப்பவல்லோ சித்தியாச்சு
விட்டாசை அப்பவல்லோ ஒழிந்து போச்சு
வெற்றி தவங்களெல்லாம் வேறுமாச்சு
தொட்டான அப்பவல்லோ உதயமாவார்
தொழிலவர்க்குச் சூரிய சந்திரன் போலக்காய்வார்
ஒட்டினால் ஞானிகட்கு வெட்டறாது
வேதமெல்லாம் அவரவர்க்கால் விளம்புந்தானே. 53

தானான ஞானிகளாய்ச் சென்மக் கூறு
தரணிதனில் ஆதியிலே ஒருவருக்கு
வானானசிவ னுமையாள் பிறவி செய்தார்
வையகத்தின் ஒருவருக்கும் வாயாதையா
மானான ஞானமதைக் காணொணாது
மாணாக்காள் சிவயோகம் மகிழ்ந்து செய்வார்
வேனான மெய்ஞ்ஞான யோகஞ் செய்தால்
வெள்வேலம் பட்டைச் சார்அத்திப்பட்டைச் சாரே. 54

சாரான மாம்பட்டைச் சாறோடையா
மகத்தாக ஒவ்வொன்று வீதம் பலமே நாலு்
வாரான பூமுலையாள் அமுர்தம் வாங்கி
வளமாக எட்டுப் பலந்தவராய்க் கொண்டு
மாரான சாரைவிட்டு கரமதுவால் கலக்கி
மண்டலம் நாள் இருவேளை கொண்டீராகில்
காரான லேகியந்தான் உண்டபின்பு
காமமென்ற மோகமதைக் கட்டும் பாருண்ணே. 55

உண்டிடவே லேகியமும் பாலும் உண்டால்
ஓகோகோ வெகுகாலம் வாழலாகும்
அண்டிடவே மெஞ்ஞானம் அவர்க்கு சித்தி
அதீத கோடாகோடி யுகமே வாழ்வார்
எண்டிசைக்குஞ் சித்தரென்றும் பேருண்டாச்சு
எல்லவர்க்குங் குருவாச்சு திட்சையாச்சு
கண்டிடுங்காண் மண்டைதனிற் கல்தானொன்று
கருவாளி அவரறிவார் அந்தக் கல்லே. 56

விஷக்கல் எடுக்க

கல்லான கல்லதனை அவருங் காணார்
காசினியில் மானிடரில் ஒருவனுண்டு
அல்லான அவர்தலைச்சன் சூத்திரசாதி
அதுவறிந்து அவர்சிரசில் கல்லைவாங்கி
வில்லான விஷக்கல்லு அதுதானாகும்
வெல்வதற்குங் கொல்வதற்கும் அதனாலாகும்
பொல்லான பாவிகளை மரணமாக்கும்
புவிதனிலே சமாதி தனில் வைத்தபேர்கானே. 57

பேரான அக்கினியிற் கொளுத்தும் போது
பெலமான மண்டைதனில் சூடு கொண்டால்
பாரான படீலென்று தலை வெடிக்கும்
பரக்குமப்பா கேசரந்தான் அகப்படாது
மரான மாணிக்கம் மனுஷரிற் காணும்
மகத்தான பாம்புக்கு மாணிக்கம் உண்டோ
ஆரானக் கல்லை விழுங்கினதே யாகில்
அன்று விந்துகட்டிப் போகும் வாதசித்தியாடே. 58

அஷ்டமா தொழிலாட

சித்தியாம் பறக்கச்சே சித்தர் எதிற்படுவார்
சிவரத்தினம் இதுவென்று வசியஞ்செய்து கொள்வார்
அத்தியாம் அக்கினியி லிறந்த பேர்க்கல்லு
அகப்படாது மாணாக்காள் சமாதிக்கல்லைக் காணு
வெத்தியாஞ் சமாதிதனில் வைத்து மண்டலந்தான்
விளங்கவே சென்று தென்றால் விவேகமதாய்ச் சென்று
வித்தியாஞ் சமாதிக் குழிவெட்டிப் பார்த்திட்டால்
விசிதமா யன்றுவைத்த பிண்டமது போலாமே. 59

மதுவான விஷக்கல்லு மூங்கில் முளைத்தது போல்
மகத்தான வுச்சிவழி வாசலெதிர்ப் படுங்காண்
அதுவான அக்கல்லை எடுத்து சிமிளில் வைத்து
ஆவியாம் மெய்ஞ்ஞானம் பூசையது செய்து
வதுவான உலகமதில் மனிதர் மாண்டிட்டால்
வளமான இக்கல்லை முலைப்பாலில் உரைத்து
பதுவான பாசமதாய் மூன்று வேளை கொண்டால்
பத்மகோடி கோடியுகம் வாழலாமே. 60

வாழ்பவர்க்கு இக்கல்லைச் சுன்னஞ் செய்ய
மாட்டினோஞ் சவுமியத்தில் வளமாய்ச் செய்து
ஆள்பவர்க்கு வக்கல்லைச் சுன்னஞ் செய்து
ஆடுவாய் பிண்டவிந்தை தொழிலுக் கெல்லாம்
வாள்பவர்க்கு விச்சுன்னமதால் பனிநீர் சுத்தி
மகத்தான அண்டசுத்தி பனிநீர் சுத்தி
நாள்பவர்க்கு சுத்தசலம் அதீத சுத்தி
நலமான தொழிற்கெல்லாங் குருவிதாச்சே. 61

ஆச்சப்பா யோகமதின் அனுபானஞ் சொன்னோம்
அட்டமா தொழிலாடக் கருவைச் சொன்னோம்
நாச்சப்பா நன்றாகச் சொல்லிப் போட்டோம்
நாலுதிசைச் சித்தர்களு மறியதாக
வாச்சப்பா புலத்தியனே இந்த வெண்ணீர்
மகத்தான ஏழாவது காண்டமாகில்
பேச்சப்பா ஒன்று மில்லை மற்றதெல்லாம்
பேய்மக்காள் அலையாதே பேணிப்பாரே. 62

பாரப்பா சுந்தரமே இன்னங் கேளு
பாடுகிறோம் யோகமதின் பேரைக்கேளு
தேரப்பா வாசியோக மவுனயோகந்
தெளிவான மகாராச யோகமாகும்
ஏரப்பா முன்னோர்கள் பசுபதியின் யோகம்
இயல்பான ராசானந்த யோகஞ் சமாதியோகம்
வேரப்பா குளிகையோகம் ஞானயோகம்
வேதாந்த யோகமெனுங் கெவுனயோகத்தின் பேரே. 63

மூலாதாரத்தின் பெயர்

பேரான சிவயோகஞ் சித்தி யோகம்
பேசினோங் கும்ப யோகம் பூர்வ யோகம்
தாறான தவயோகம் நிட்டையோகந்
தருங்கவுன அண்டயோகம் விண்டயோகம்
தாரான பிராணாய யோகமாகுங்
கருயோகங் குருயோகந் திக்ஷயோகம்
ஆறான வதித யோக மஷ்ட யோகம்
அருளினோம் நவயோகம் அதீதப் பேரே. 64

அதீத மெனுங்குண்டலிகங் கெவுன லிகம்
அருளான கும்பலிகம் பிண்டாரி லிகம்
வதீதமெனும் வகண்டரச மென்றும் பேரு
வாழ்குண்ட மென்றதற்குப் பேருண்டாச்சு
மதீதமெனு மத்தகஜ மென்றும் பேரு
மகராச பூபதியென்றும் அதற்குப் பேரு
ததீதமென்றுந் தாரமென்றும் அதற்குப் பேரு
தராதார மென்றதற்குப் பேர் மூலாதாரத்தின் பேரே. 65

சுவாதிஷ்டானம்

தாரமென்ற நிராதாறம் நிருவியென்றும் பேரு
தருவான சதுதார மென்றும் பேரு
ஆரமென்ற அகோர பிரமமென்றும் பேரு
ஆதிசார மென்ற அதீதப் பேரு
சிரமென்ற சிராதாரப் பீடமென்றும் பேரு
செயலான சூட்சாதி சூட்சமென்றும் பேரு
சூரமென்ற சூட்சசடா தாரமென்றும் பேரு
சொல்லிவிட்டோஞ் சுவாதிட்டான வதீதப்பேரே. 66

மணிபூரகத்தின் பெயர்

சொல்லியதோர் சூட்சமென்றுந் தூலமென்றும்
சொற்பமென்றும் உருவமென்றும் பேரு
அல்லியதோர் அந்தியென்றும் சந்தியென்றும் பேரு
அர்த்தராத்திரி யென்றுமதற்குப் பேரு
வல்லியதோர் தூதுகரு வென்றும் பேரு
வச்சிரமய மென்றதற்கு வதீதப் பேரு
நல்லியதோர் நாம பீடமென்றும் பேரு
நளினமென்ற மணிபூரகத்தின் பேரே. 67

அநாகத்தின் பெயர்

மணியான கிதாந்தரன் வாதாந்தரனென்றும்
மகத்தான சிவருத்திர மழவென்றும் பேரு
அணியான வத்தராங்கி யென்றும் பேரு
அவரூப சாங்க மென்றுமதற்குப் பேரு
வணியான மந்திர பீடமென்றும் பேரு
வசனித்தோம் புருஷகமென்றும் பேரு
கணியானக் காலைக்கோட்டி விகாரமென்றும் பேரு
காலாதிச மென்றதற்கு அநாகத்தின் பேரே. 68

விசுத்தியின் பெயர்

அநாகதமாம் பூரணாதி யுத்திரமென்றும் பேரு
அடவான விசுவாதி யென்றும் பேரு
பனதாகதமாம் பரசுருப மென்றும் பேரு
பண்மையாதி யென்றதற்கு வதீதப் பேரு
விநாகதமாம் வீகங்க மென்றும் பேரு
வெட்டவெளி யென்றதற்குப் பேருண்டாச்சு
மநாகதமா மதுவாசி யென்றும் பேரு
வசனித்தோம் விசுத்திக்கி யதீதப் பேரே. 69

ஆக்கினையின் பெயர்

வசநித்தோம் யோகசுருபம் ஈசானென்றும் பேரு
வளமான பசும்பாலை யென்றும் பேரு
அசநித்தோம் அனந்தமாம் என்றுமதற்குப் பேரு
அகோர மயமாதி யென்று மதற்குப் பேரு
நசனித்தோம் நவகோசாதி பதியென்றும் பேரு
நமஸ்துவால வென்றதற்கு வதீதப் பேரு
துசனித்த தூதாதி யென்றும் பேரு
துருவமென்று மதற்குப் பேராக்கினையின் பேரே. 70

பேரான பேர்களெல்லாம் பொருக்கி மணிபோல்
பேசினோம் இந்த வெண்ணூற் பிழைவருகாதையா
தேரான செந்தமிழ் மாமுனிவ னென்பேர்
தெக்ஷணாயவர் வசனித்தேன் மொழிபாரிதுவும்
வாரான சித்தர்க் கெல்லாங் குருவாய்ச் சொன்னோம்
வையகத் தோரிதைக் கண்டு வளமாய்ச் செய்வீர்
பாரான காண்டமெட்டுப் பாடலாயிரந்தான்
பண்மைபெறு மெஞ்ஞானக் காண்டம் ஏழாமே. 71

ஆதியின் பெயர்

ஏழான ஆதாரம் ஆறுஞ் சொன்னோம்
இயம்புகிறோம் ஆதியின் பேரியல்பாய்த் தானும்
வாழான வாமமாதி நிமானமாதி
வதந்தாய் உபசார மென்றும் பேரு
ஆழான வுடந்தோழாம் ஆமமாழ
மருளான மனபெந்த வுதநீதமென்றும் பேரு
காழான வதீதமென்றும் பேரு
கருவாகச் சொல்லிவிட்டோம் ஆதியின் பேரே. 72

ஆதியென்றுஞ் சோமநாதி யென்றும் அவநாதி யென்றும்
அகடவான மயநாதி யந்தநாதி யென்றும்
பாதியென்றும் பரமசாதி பரமாத்துவ மென்றும்
பன்மைபெறுங் காமங்கம் பீமதங்கமென்றும்
சாதியென்றும் நாதியென்றும் பேரு
சாமயேம மென்றதற்கு வதிதப் பேரு
நாதியென்றும் நாவவொயிலாதி யென்றும் பேரு
நாம்சொன்னோம் பரிபாஷை அந்தரத்தின் பேரே. 73

விதியின் பெயர்

அந்தமென்ற வாயச நியாசந்தா னென்றும்
அசலோசம் பாசலோசந் தந்தைலோக மென்றும்
விந்தமென்ற விருநியாச மேவியந்தர னென்றும்
விளாயாச மென்றதற்கு வதிதப் பேரு
சொந்தமென்ற சுலோக நாதியென்றும் பேரு
சுகநியாதி யென்றதற்குப் பேருண்டாச்சு
நந்தமென்ற நவமியாதி யென்றும் பேரு
நாம்சொன்னோங் கருக்கிடையாய் விதியின் பேரே. 74

மதியின் பெயர்

விதியான சுருதியாம நிருதியாம மென்றும்
விளங்கினோம் புஷ்ப பண்ணியாமென்றும் பேரு
பதியான வேறுமதி காலனென்றும் பேரு
பட்சடை மகசத்திராதி பலவகை தானென்றும்
சதியான நாதமாய்கை மதிகா னென்றுஞ்
சாத்தினோஞ் சாங்கமதி பீடமென்றும் பேரு
சுதியான முடிவாழ மென்றும் பேரு
சொல்லிவிட்டோம் வெளியாக மதியின் பேரே. 75

புத்தியின் பெயர்

மதியான புகழென்று மகிழ்தானென்றும்
மறப்பென்றுந் திறப்பென்றும் அடைப்பென்றும் பேரு
நதியான நன்மை சாத்திரமென்றும் பேரு
நடசலாதி யிங்கித மென்றும் அதற்குப் பேரு
அதியான அலங்கார மென்றும் பேரு
அதன்புத்தி அதீதப்புத்தி நல்லபுத்தி யென்றும்
கதியான கறேபுத்தி பொல்லாமை யென்றும் பேரு
கருணைபெறச் சொல்லிவிட்டோம் புத்தியின் பேரே. 76

அறிவின் பெயர்

புத்தியெனும் வாஞ்சையொடு பொறுமை யறிவென்றும்
போதமய வறிவென்றும் மனதறிவென்றும்
அத்தியெனும் ஆதியறிவு அந்தவறிவு என்றும்
அனவறிவு வுனதறிவு நிதவறிவு என்றும்
பத்தியெனும் விட்டறிவு தொட்டறிவு என்றும்
பராபரத்தின் அறிவென்றும் பாடினோ மிப்படிதான்
சித்தியெனும் மெத்தறிவு மனவறிவு தானென்றுஞ்
செயம்பெறவே சொல்லிவிட்டோம் அறிவின் பேரே. 77

தீஷையின் பெயர்

அறிவான கணேச திட்சை குண்டலத்தின் திட்சை
அருளான சிவதீக்ஷை சத்தி தீக்ஷையென்றும்
அறிவான மவுனதிட்சை சிதம்பர வாலை திட்சை
அழகான அறுமுகத்தோன் வயிரவன் திட்சை
திருவான யோகதிட்சை மெஞ்ஞான திட்சை
தெளிவான சித்தர் திட்சை லோக திட்சை
கருவான சரியை திட்சை கிரியை திட்சை
சார்பான நவக்கிரக வாமதிட்சையின் பேரே. 78

வாமமெனும் முன்னோர்கள் மறைத்த சூட்சம்
மாணாக்காள் இந்த வெண்ணூர் வசனித்தோம் நாம்
காமமெனுங் காமுகர்க்கு வாயாதையா
கருமிகளுக் கென்ன வருங் கருக்காணாது
நேமமெனுங் கருக்களெல்லாம் வெகுவாய்க் கண்டு
நிறமுடையார் உலகருக்குக் காணச் சொன்னோம்
ஏமமெனுஞ் சிவசொத்து யாருங் காணார்
எல்லவருங் கண்டதினால் எவரெடுப்பாரறியே. 79

இரேசகத்தின் பெயர்

அறிவான சுந்தரமே நன்றாய்க் கேளு
அருளுகிறோம் மாமுனிவன் அருளே காணும்
விறிவான தொன்றுமில்லை மேலாம் பதியென்றும்
மேலான சத்தர மென்றுமதற்குப் பேரு
வெறிவான வேதமென்றும் விந்துவென்றும் பேரு
விகதசமன் நிகழாசம் விலாச போசமென்று
வறிவான வாதவுற் பகமென்றும் பேரு
வாமசதா பூமலிகம் ரேசகத்தின் பேரே. 80

பூரகத்தின் பெயர்

ரேசக மாஞ்சுழி தடுங்கமலை பீடம்
நிலையற்ற முபாய நிசமென்றும் பேரு
வாசமறு கோணபதி நாதகமென்றும்
வடகோணஷ்ட கோணவாலையந்தா னென்றும்
பாசகமாம் பரை புருவமென்றும் பேரு
பாரமென்றும் பிரமாண்ட மென்றும் அதற்குப் பேரு
கோசமென்றும் பீசமென்றும் அதற்குப் பேரு
கூறினோம் பரிபாஷை பூரகத்தின் பேரே. 81

கும்பகத்தின் பெயர்

பூரணமாமந்தி பந்தி பாவனாச மென்றும்
புகழான மனோசத்தி பீடமென்றும் பேரு
காரணமாங் காவியமென்றதற்குப் பேரு
கருக்குருவுவுரு வென்றுமதற்குப் பேரு
கீரணமா மூலபதி யென்றும் பேரு
சிவானந்த வானாதிக மென்றும் பேரு
ஆரணமாம் பிண்டவுரு வாதியென்றும் பேரு
பேதமய நிராமயமாங் கும்பகத்தின் பேரே. 82

வெண்பா

கும்பகத்தின் நேர்வழியே கூறக்கேள் அனைவருக்கும்
துன்பமைத்த பண்போர்கள் சொன்னவிதிப் பயனறிவார்
வம்பகத்தி னேர்விழியே வையகத்து மனிதருக்கு
நண்பர் சொன்ன நடையறியார் விணபரவே
உம்பகத்தி னேர்விழியே உலகமதில் வாய்பினத்தி
நம்பக் கழுத்தறுத்திடுவார் நரசென்னம் நம்பாதே
அம்பகத்தின் நேர்விழியே யனாதி நிலையெவரறிவார்
பண்புடையப் புண்ணியவா னொருவனுக்கே. 83

நாடிவிருத்தம்

வானான சுந்தரமே புலத்தியா கேள்
மண்டலத்தின் பேர்களெல்லாம் வசனிப்போம் பார்
நானான ஆனுவத்தாற் சொல்லிப் போட்டேன்
நாடுதனில் ஒருவனுக்கு நல்ல சித்தி
வேனான வெட்டவெளியாகச் சொன்னோம்
வேதாந்த மெண்ணூறு நிகண்டின் பிடம்
ஆனான பூமலரின் வாசம் போல
வசனிப்போம் அதிதமெல்லாம் வசனிப்போமே. 84

சூரிய மண்டலத்தின் பெயர்

வசனிப்போம் பரமண்டலஞ் சதுர்மண்டல மென்றும்
வளமான நதிமண்டலந் திருமண்டல மென்றும் பேரு
வசனிப்போம் கண்டமெண்டல மென்றும் பேரு
அருளினதோர் சாருபமண்டல மென்றும் பேரு
துசனிப்போந் துதிநாதி மண்டல மென்றும் பேரு
தோதகமாம் ரவிமண்டல மதற்குப் பேரு
நிசனிப்போம் நிராமய மண்டலமென்றும் பேரு
நிகரான சூரியமண்டல மதுவின் பேரே. 85

சந்திரமண்டலத்தின் பெயர்

மண்டலமா மதிமண்டலஞ் சத்தி மண்டலமென்று
மகத்தான நீலாம்புரி மண்டலமென்றும் பேரு
அண்டலமாம் ஆதித்த மண்டலமென்றும் பேரு
அருளினோம் வாசியதின் மண்டலமென்றும் பேரு
பெண்டலமாம் பிராணமண்டலமென்றும் பேரு
பேரான வருணமண்டல மென்றும் பேரு
குண்டலமாம் பூதாதி மண்டலமென்றும் பேரு
கூறினோஞ் சந்திர மண்டலமதுவின் பேரே. 86

அக்கினி மண்டலம்

மதுவான பகிரண்ட மண்டலமென்றும் பேரு
மகத்தான நவகண்டந் திசைகண்ட மென்றும் பேரு
அதுவான வானமண்டல மென்றும் பேரு
அருளினோங் கெவுமேக மண்டலமென்றும் பேரு
வதுவான கெருடமண்டல மென்றும் பேரு
வசனித்தோம் பரப்பிரம்ம மண்டலமென்றும் பேரு
செதுவான நட்சயிடி செகமண்டல மென்றும் பேரு
செப்பினோம் மும்மண்டலத்தின் அக்கினி மண்டலத்தின் பேரே.87

பிராணாயம்

மண்டலமாஞ் சுகசீவ வாத்துமம் என்றும் பேரு
மகத்தான மனப்பூரண மென்றதற்குப் பேரு
அண்டலமா மனப்பொறி மயமானந்த மென்றும் பேரு
அருளினோந் தயாநிதி யென்றதற்குப் பேரு
கண்டமாங் காறணாதி யென்றும் பேரு
கருவிநாத மென்றதற்கு வதீதப் பேரு
பிண்டமாம் பேசாதி காயமென்றும் பேரு
பேசினோம் அதீதமதால் பிராணாயத்தின் பேரே. 88

சாக்கிறம்

மதீதமெனும் மயாசகசம் வினாதமென்றும் பேரு
மகத்தான நிராசமென்றுங் கனயோக மென்றும்
அதீதமெனு வறாதி அனவுயிர் தானென்றும் பேரு
அருளுகிறோஞ் சூரிய நாழாயமென்றும் பேரு
வதீதமெனும் வாமநோதய மென்றும் பேரு
வளமான குருங்காரி யென்றதற்குப் பேரு
பதீதமெனும் பராபர மென்று அதற்குப் பேரு
பாடினோம் இந்தப்படி சாக்கிரத்தின் பேரே. 89

சொற்பனம்

சாக்கிறமாம் பசுப்பவ நீதமென்றும் பேரு
சயநாதி லோபநாதி யென்றும் பேரு
வாக்கிறமாம் வாலைமதி சாமழாடநிக ரென்றும் பேரு
வசனித்தோம் புகாம்பரியென்றும் பேரு
ஆக்கிறமா மவுடமாழி யென்றும் பேரு
அடவான பதுனறாக மென்றும் பேரு
நாக்கிறமாம் நாருபுன்ன மென்றும் பேரு
நாம்சொன்னோம் நளினமதாய் சொற்பனத்தின்பேரே. 90

சுழித்தி

சொற்பனமாஞ் சுகபோத மயாநதி தானென்றுஞ்
சுகபோழா நாகமென்று மதற்குப் பேரு
நிற்பனமா நிலையாதி யென்றும் பேரு
நிசபோக மென்றதற்கு வதீதப் பேரு
கற்பனமாங் கருநாதி வருவநாதி யென்றுங்
கலிபோக புத்திராச மென்ற வதீதப்பேரு
அற்பமென்று நினையாதே ஆழிசங்கமென்றும்
அருளினோம் அதீதமதாய் சுழித்தியதின் பேரே. 91

தூரியத்தின் பேர்

சுழியான வாயவிடமதி நாயக்கந் தூலசூரம்
 யோக விதமென்றும் பேரு
வழியான வாலாளிடங் குமரிதபோத
 வாக்கமா சிளையென்றும் அதற்குப் பேரு
தழியான தலைவிதி பிரமாணம் என்றும் பேரு
 தருவான சிவருதாட மென்றுமதற்குப் பேரு
உழியான வுருவுயர்த்த மதவாசியாகும்
 உளிகாதி மேலுயர்தன் துரியத்தின் பேரே. 92

துரியாதீதம்

துரியமாங் கருணாதிபதி பூசமாபதி
 தோதனாபதி மதனாபதி துய்யபதி யென்றும்
வரியமாம் வஞ்சபதிராச பதியென்றும்
 வாலைபதி சுகவிஸ்வாச பதியென்னும்
தருணாதபதி பூசாபதி யென்றும் பேரு
 தனபதி செயபதி குருபதி மதிபதி சாயுச்சியபதியென்றும்பேரு
கரியமாநாதிபதி கனயோகபதி தான்
 கைலாய பேருமுடி துரியாதீதத்தின் பேரே. 93

பேரென்ற பேர்களெல்லாம் வெளியதாகப்
 பேசுகிறோஞ் சுந்தரமே பேணிப்பாரு
ஆரென்ற ஆதியந்தம் உருவாய் நின்ற
 அண்டபிண்டத்தின் சுடரில் வருகும் நேர்மை
வேரென்ற அச்சுடரில் சுருபத் தோற்றும்
 மேலான பரகெதி வீரதுதான் பாரு
சீரென்ற மேலாறு சபையுமுண்டு
 செயசபையோ ரெவர்க்கும் சிவனொன்றே. 94

சுழியைப் பார்க்கவும்

ஒன்றான சுருபமதை யாருங் காணார்
 ஒடுங்குதுகாண் நங்கெனவே ஓரெழுத்தாய் காணும்
அன்றான அங்கமதில் எங்கும் உயிராய்
 அதீத சொரூப வாசியதாய்ச் செடலமெல்லாம்
என்றான எண்சாணு வீட்டுக் குள்ளே
 எங்கையுந்தான் ஒருவாய்வு இருக்கும் பாரு
நன்றான நாபியடா கமல பீடம்
 நாற்பாங்கு இப்பீடஞ் சுழினைத் தானே. 95

யோகநிலையறிய

சுழியான சுழிதனிலே மனக்கண் ணோட்டி
சொக்கியதோர் வெளிக்கண்ணால் உருட்டிநீயும்
வழியான சூரியவாசல் சந்திர வாசல்
வடகலையும் இடகலையும் ஒன்றாய்ச் சேர்த்து
அழியாத வாசியினால் தம்பித்து நீயும்
மனக்கண்ணாற் சுழினையெட்டக் கும்பித்தாயானால்
விழியான பிராண வழியங்கே காணு
மேல்வாசல் ஆதார வீடுங் காணே. 96

வீடான ஆதார வீடதாகும் மேவிநிற்கும்
வடகலையும் இடகலையுந் தானும்
வீடான வீடதுவுங் கண்டாயானால்
மெய்சித்தி மனஞ்சித்தி யறிவுஞ் சித்தி
பாடான வெப்பாடு மொழிந்தே போச்சு
பரம கைலாய பீடங் காணலாச்சு
பூடான பூட்டதுவுந் தெறித்துப் போச்சு
பூரணமாந் தீபவொளி காணலாச்சே. 97

சூரிய கலை

காணுதற்கு வீறகலையாதி கலையாகும்
கைலாய மேருகலை வாலை கலையாகும்
வாணுதற்கு வாமகலை வஸ்துகலையாகும்
வாதகலை பூதகலை மௌனகலையாகும்
ஆணுதற்கு அகண்டகலை பிர்ம கலையாகும்
அருளான வாசிகலை கெவுன கலையாகும்
நாணுதற்கு ஞானகலை யோககலை யாகும்
நடமான வடகலைதான் சூரிய கலையின் பேரே. 98

சந்திர கலை

சூரியனாஞ் சோதிகலை கருபகலை யாகுஞ்
சூட்சகலை யந்தகலை பிண்டக கலையாகும்
ஆரியனாம் வர்னகலை யண்ட கலையாகும்
அடவான பொரிக்கலையாம் பஞ்சகலையாகும்
வாரியனாங் குளிகை கலைகாயாதி கலைதான்
மாயகலை போதமய விடகலை தானாகும்
தூ ரியனாந் துருவகலை தீட்சை கலையாகுஞ்
சொல்லிவிட்டோஞ் சூட்சமதாய் சந்திரகலையின்பேரே. 99

வேதாந்திகளின் பெயர்

கலையான காபிதமா பிதாவா னென்றுங்
கருவான வேதமயவா னென்றும் பேரு
அலையான பூரணவிசன தாபிசன தானென்றும்
அருளினோம் மதிபாடா வென்றும் பேரு
பலையான பதம் பாசுவானென்றும் பேரு
பத்திரா மூர்த்தி யென்று மவர்க்குப் பேரு
வலையான வாக்கிய வேதாந்தியென்றும் பேரு
வசனித்தோம் இந்தப்படி வேதாந்திகளின் பேரே. 100

வேதமுனிகள் பெயர்

வேதமெனுந் தபசி சந்நியாசி ரிஷி களென்றும்
விளங்குந் தபோதன ரென்றும் பெரியோர் இவரென்றும்
ஆதமெனுஞ் சாதிபரென்ற வர்க்குப் பேரு
அண்டத்தாசி யனென்றும் அனேகம் பேரவர்க்கு
பூதமெனும் பரசுரூப னென்றவர்க்குப் பேரு
புகட்டினோம் மாதவமுனி யென்றும் பேரு
பேதமாம் தபோதனர்கள் என்றும் பேரு
பேசினோம் அதிதமாய் வேதமுனிகளின் பெயரே. 101

மவுனிகளின் பெயர்

பேரான பேர்வாழ பணவயாகுல வானிசன்
பெலத்த குருநாதன் என்றும் அவர்க்குப் பேரு
வாரான வசியசென மவுனியென்றும் பேரு
வளமான மனமுடையான் என்றவர்க்குப் பேரு
காரான கடவுளென்று மவர்க்குப் பேரு
கர்த்தனென்றும் மூபனென்றும் அவர்க்குப் பேரு
ஆரான பாலைபசுபதி யென்றும் பேரு
அருளினோம் புலத்தியனே மவுனியின் பேரே. 102

யோகிகளின் பெயர்

மவுனமென்ற சத்தவான் சுருதிமுடி வென்று
மகத்தான செயவாலை யோகியென்றும் பேரு
அவுனமென்று அங்கவானென் றவர்க்குப் பேரு
அப்பினாச வானென்றும் அவர்க்குப் பேரு
கவுனமென்ற காயவான் என்றவர்க்குப் பேரு
கற்பவான் என்றவர்க்கு கனபேரையா
பவுனமென்ற மநோதயவான் என்றும் பேரு
பண்மைபெறச் சொல்லிவிட்டோம்யோகிகளின்பெயரே.103

ஞானிகளின் பெயர்

யோகியெனும் பூசவாம னென்றும் பேரு
ஒருமனவான் றிருவாசா னென்றும் பேரு
வாகமெனு மனது சஞ்சலிக்கா னென்றும் பேரு
வாதுவசிய யோசனென்றும் அவர்க்குப்பேரு
பாகமெனும் பதுவானிவன் என்றும் பேரு
பரமாத்மன் என்றவர்க்கு அதிதப் பேரு
ஆகமெனு மெஞ்ஞானி பரஞானி தானென்றும்
சுந்தரமே ஞானிகளின் பெயரே. 104

சித்தர் தேறினர்

ஞானமென்ற மாய்கை வல்லவனென்றும் பேரு
நளினமெனுந் தோற்சட்டையுரியோன் என்றும் பேரு
வானமெனுந் தேறுவான் பண்புடையா னென்றும்
வசனித்தோம் நாதனென்றுங் கெவுனி யென்றும் பேரு
மானமென்ற வாசிசித்தன் மவுன சித்தனென்றும்
மகத்தான யோகசித்தர் குளிகை சித்தரென்று
மானமெனுங் கண்டசித்தர் பிரமசித்த ரென்றும்
அருளான ஞானசித்தர் தேறினவர் பெயரே. 105

புலவரின் பெயர்

தேறினதால் மதிவாணர்ச் சித்தாந்த வாணர்
தெளிவான ரறிவாணர் புத்திவாணர்
ஏறினதா விலக்கணவான் சுவரென்றும்
இயம்பினோங் கவிவாணர் ராசிவாணர்
ஆறினதால் அம்பேறதன் தனக்களஞ்சி வாணர்
ஆயிழையாள் வெகுவாயன் பாலென்றும் பேரு
வீறினதால் லோக கஞ்சானென்றும் பேரு
விளங்கினோம் வித்து வாணர் புலவரின் பேரே. 106

சோசியரின் பெயர்

வித்தையாம் பாஞ்சாலன் வீரகங்க னென்றும்
வீறுமாபதி உலக லட்சணவான் பிரியவானென்றும் பேரு
அத்தையாம் அரியாசனம் அருளியாசனம்
அடவான மூர்த்திபங்கன் சுயகரதீதன்
கத்தையாங் கருநாமமே பழகனென்றும் பேரு
கல்விமான் வாக்கியனென்றும் பாக்கியனென்றும் பாரு
சத்தையாங் குருதி வானென்றும் பேரு
தரணி தேவாலையபதி சோசியன் பெயரே. 107

முப்புவாதிகள்

பதியான மூலகுரு ஆசானென்றும் பேரு
பரமான திருபீட னென்றும் அவர்க்குப் பேரு
அதியான வலமதி உடையனென்றும் பேரு
அதிருப பீடகுரு வென்றவர்க்குப் பேரு
சதியான சாதிபுத்திர வாதலோப னென்றுஞ்
சாற்றினோம் இருவாசன் என்றவர்க்கு பேரு
நதியான நான்மறையோன் என்றும்
நாம் சொன்னோம் அதித முப்புவாதிகள் பேரே. 108

தீபார்த்தனையின் பெயர்

பேரான தரனியாசம் கரனியாசம்
பேசுகிறோம் பீனியாசம் நவுனியாசம்
வாரான கெவுனியாசம் சுவனியாசம் வாமன்னியாசம்
வஸ்து நியாசம் ஆத்ம நியாசம்
பாரான பவுன்னியாசம் அங்கி யாசம்
பரிவான யோகநியாசம் அதரனியாசம்
காறான பிரமநியாசம் விஷ்ணு நியாசம் பரிருத்திர
மகேசநியாசஞ் சதாநியாசந் தீபார்த்தனையின் பெயரே.109

தூபார்த்தனையின் பெயர்

சதமான பிறிதி வாயனம் அப்பு நியானம்
சார்வான தேய்வு நியானம் வாய்வுநியானம்
அதமான ஆகாச பூதனியானம் அதிதியானம்
மந்தபான நமஸ்து நியாசம் சதுர்பால மென்றும்
வதனமான சரணபத உபசார மென்றும் பேரு
விளங்கினோம் தூபார்த்தனையின் பேரே. 110

சோடசத்தின் பெயர்

அதிதமாங் கமலபியம் அமலதாச னென்றும்
அடவான சருநிதம மென்றும் பேரு
வதிதமா மூலவண மென்றும் பேரு
வசனித்தோம் உபதாமம் என்றும் பேரு
சதிதமாஞ் சாமசஞ்சீவி தியாக மென்றும்
சாற்றினோ நின்னூறு தீசாந்த மென்றும் பேரு
பதிதமாம் வேததெய்வ கருவானித டென்றும் பேரு
பாடினோம் பெரியோர் வணக்கஞ்சோடசத்தின்பெயரே.111

வேதாந்திகளுக்கு

சோடசமாம் புலத்தியனே சுந்தரமே கேளு
சொல்லுகிறோம் வேதமய உபதேசங்கேளு
ஆடகமாம் யமசிவ வவ்வும் கிறிம் மென்றும்
அருளுகிறோம் நங்கென்றும் ஹறிஓம் வேதாயா
வாடகமாம் வசியநம வவாவென்றும்
வருஷிப்பாய் மண்டலந்தான் முழுதுநின்று
நாடகமாம் உருலட்சம் செய்திரேயாகில்
நளினமெனும் வேதாந்தி வசியமெனுமாமே. 112

மவுனிகளுக்கு உபதேசம்

ஆமப்பா சுந்தரமே மவுனிகளுக் கையா
அருளுகிறோம் வசிய வுபதேசமதைக் கேளு
நாமப்பா சொல்லுகிறோம் நயவசிய வென்று
நளினமெனும் மவ்வும் சிவ்வும் வம்யங் ஹறிஓம் என்றும்
வாமப்பா வசியநம வென்றுந்தான்
வாட்டுவாய் மவுனதோவாயா வென்றும்
பாமப்பா மண்டலந்தான் லட்சமுருச் செபித்தால்
பரிவான மவுனமது வசியமா மென்றே. 113

ஞானிகளுக்கு உபதேசம்

வசியமா ஞானிகட்கு வுபதேசங் கேளு
வசியநமவென்று நீமாட்டு மாட்டு
நசியமாம் நங்கம்யவ்வும் கிறீம் வய்யும்
ஓம்வாவாசிய வென்று ஒருமண்டலஞ் செபி
வசியமாம் லட்சமுரு தாபித்தே யாகில்
மறைநாலு வேதமுதல் வசியமா மையா
அசியமாம் ஞானதேவாய வாவென்று
அருளுவாய் சிவஞான உபதேசமாமே. 114

ஞானமாம் யோகிகளின் உபதேசங்கேளு
நாம்சொல்வோ மெண்ணூறு ஞானபீடநாதன்
வானமாம் வயநமசி ஓமென்று மையா
வசனிப்போம் சிவ்வும் நறீம் யங்வய்யும் ஓமென்றும்
ஆனமாம் ஓம்நமசிவாய மெனுமையா
அருளுவா யோகதேவாயா வாவசிய
ஞானமாம் நமாவென்று ஒருலட்சம் உருமண்டலம்
நாட்டவே யோகமெனும் வசியமாம் என்றே. 115

குண்டலத்தின் பெயர்

வசியமெனும் பெரியோர்கள் விருதின் பெயர்கள்
வசனிப்போஞ் சுந்தரமே வளமாய்க் கேளு
நசியமெனும் அபிலதஞ் சபநகம் வுலகநாதனென்றும்
நளினமெனும் வாலரிசி தறணிகங்க மென்றும்
மசியமெனு மண்டரச மென்றும் பேரு
வசியமெனும் யோகிகளின் பெயர்கள்
விளம்பினோம் பரிபாஷை குண்டலத்தின் பேரே. 116

கவச குண்டலம்

பாஷையது மகாத்துமாக்கள் பெரியோர் வாக்கியம்
பயனறிவோர் அறிவுடையோர் பாத்துக் கருகாண்பார்
ஆசையெனுந் தூத்தல் துருமதுரம் வடிகாலையென்றும்பேரு
அந்த பஞ்ச மென்றதற்கு அதீதப் பேரு
வாழையெனும் பதுமள்ள மென்றும் பேரு
வசனித்தோம் பரிமாண்ட மென்றதற்குப் பேரு
ஏழையெனுங் குவட்ச குண்டநிலை பாதியென்றும்
இயம்பினோங் கவசகுண்டல மதற்குப் பேரே. 117

மாத்திரைக்கோல்

குண்டலமா மங்கலாகாச மறிதுலாட மென்னுங்
கூறினோ மதுகநிதச மென்றும் பேரு
அண்டலமாம் அலைவட்டி மானென்று பேரு
அருளினோங் கனிமாடி யென்றும் பேரு
வண்டலமாய் ஊளிசஞ்ச மென்றும் பேரு
வசனித்தோ முப்பத்திராம மென்றும் பேரதற்கு
வெண்டலமாம் வேதகோலு வென்றும் பேரு
வேதாந்தி மாத்திரைக் கோலதுவின் பெயரே. 118

யோக திண்டு

கொலவான ஆலதிண்டு நத்திடாங்கி
கூரான பதமாலை பலவகைய மென்றும்
அலவான சொறுக்குட மென்றும் பேரு
அடவான சுகநாத மென்றும் பேரு
மலவான அடவாசி யென்றும் பேரு
மகத்தான அமருந்தமென்றும் பேரு
வலவான யோகிகளின் விருதுமார்க்கம் அநேகமுண்டு
எளிதல்ல யோகதிண்டின் பெயரே. 119

காவி வேட்டி

திண்டான துருசிலை நாதசிலை
துருவான பஞ்சாதி பாடாசிலை
அண்டான அருஞ்சித்தி யென்று பேரு
அருளான நாளாவிநாசி யென்றும் பேரு
வண்டான புருசிலை யென்று பேரு
வளமான கருவேட்டியென்று பேரு
கண்டான விதன்பேரு என்னாற் சொல்லக்
கடையாது நாவுமில்லை காவிவேட்டியின் பேரே. 120

கவுபீனம்

காவியாம் அபீனவிடாம் நாபின் சுடரென்றும்
அடவான யெயலாடி யென்றும் பேரு
ஆவியாம் இங்கிதமால மென்றும் பேரு
அடவான புருஷகண்ட மென்றும் பேரு
தாவியாம் புதுலிங்காடை யென்றும் பேரு
தருவான குய்ய கோடகமென்றும் பேரு
மாவியாங் குறும்பட்டிதம் என்றும் பேரு
மகத்தான ஞானிகளின் கவுபீனத்தின் பெயரே. 121

காசாங்கம்

கவுபீனமாம் ஆசாதிகரம் அருநீலாம் புரி
கருவான வாசிபுட்டம் என்றும் பேரு
அபீனமாம் ஆருதக் கருவானென்றும் பேரு
அடவான பிடிது பினமென்றும் பேரு
நபீனமாம் பேச்சி பீனமென்றும் பேரு
நலமான மூலசித்திஞ்ச மென்றும் பேரு
விபீனமாம் ஆத்திவடி நாலமென்றும் பேரு
விளங்கினோம் வேதாந்திகளின் காசாங்கத்தின் பெயரே. 122

கஞ்சாக் குடுக்கை

சாங்கமெனுங் குழப்படக பிரமென்றும் பேரு
சமர்த்தான சுருபநிலை போதகந்தா னென்றும்
ஆங்கமாம் லேபகாரி ஆசான மவுனகுடுக்கை
அருளான ஞானகுளம் யோகபாண்டமென்றும்
வாங்கமாம் பூட்டுப்பாண்ட மென்றும் பேரு
வளமான பஞ்சரு மென்றும் பேரு
பாங்கமாம் பரன்சொன்னா ரிந்த பாஷை
பயனறிந்துநாம்சொன்னோம்கஞ்சாக்குடுக்கையின்பேரே.123

பாதக்குறடு

குறடான பரக்குரட மென்றும் பேரு
கூறான வாதகுரடு நேத்திரக் குறடென்றும்
அறடான நத்திக் குறடென்றும் பேரு
அருளான வச்சிராட்ட மென்றும் பேரு
மறடான ஆழக்குற டென்றும் பேரு
மகத்தான பவனகுற டென்றும் பேரு
வறடான மூலகுற டென்றும் பேரு
வசனித்தோம் பிறமக் குறடு பாதக்குறட்டின்பேரே. 124

குளிகையின் பெயர்

குற்றன்னும் ரசக்குளிகை கெவுனக் குளிகையென்றும்
கூறிய யோகத்தின் குளிகை யென்றும் பேரு
அற்றன்று மவுனத்தின் குளிகை யென்றும் பேரு
அருளான சமாதி குளிகை யென்றும் பேரு
வற்றன்று ஞானத்தின் குளிகையென்றும் பேரு
வளமான பிராணாய குளிகை யென்றும் பேரு
பற்றென்றும் வாலைகேசரக் குளிகையென்றும் பேரு
பரிவான குளிகையென்ற வகையின் பெயரே. 125

நாதாக்கள் சட்டையின் பெயர்

வகையான படாமென்றும் பதனமென்றும் பேரு
வசனித்தோ முதாசரிட மென்றும் பேரு
அகையான வுபசரித மென்றும் பேரு
அடவான மதிவாயிப மென்றும் பேரு
நகையான ரிவிகஞ்ச மென்றும் பேரு
நளினமென்ற வாதியெவனா மென்றும் பேரு
பகையான அந்தலோப மென்றும் பேரு
பாடினோம் நாதாக்கள் சட்டையின் பேரே. 126

புலியாசனத்தின் பெயர்

சட்டையெனும் பாசியான மென்றும் பேரு
சார்வான நெணவாசி கெவுனாசன மென்றும் பேரு
அட்டையெனும் பூதவாசனமென்றும் பேரு
அடவான பரவாசன மென்றும் பேரு
பட்டையெனு முருகாசன மென்றும் பேரு
பரிவான மூவிருதாசன மென்றும் பேரு
முட்டையெனுஞ் சிவசத்தியாசன மென்றும் பேரு
முக்கியமாய்ச்சொல்லிவிட்டோம்புலியாசனத்தின்பேரே. 127

பஞ்சாட்சரம்

ஆசனமாம் ஆதிநியாசன மண்ட நியாசனம்
அடவான தீவாச்சர மென்றும் பேரு
பாசனமாம் அஞ்சக்ஷர மென்றும் பேரு
பரிவான பதுமாசர மென்றும் பேரு
வாசனமாம் நமசிவய மென்றும் பேரு
வளமான சிதாயத மென்றும் பேரு
போசனமாம் பூதாயத மென்றும் பேரு
பொருளானகருவைவ்விண்டோம்பஞ்சாட்சரத்தின்பேரே. 128

அனுட்டானத்தின் பெயர்

சரமான நேத்திரசம் விச்சநேம தவமென்றும் பேரு
சாற்றினோம் பத்தியா யசனமென்றும் பேரு
வரமான வுருதியாயயன மென்றும் பேரு
வளமான நிட்டையாயயன மென்றும் பேரு
சுரமான மெய்யாயன மென்றும் பேரு
கருமான மூலத்தியாயன மென்றும் பேரு
அரமான கறமாயன மென்றும் பேரு
அருளினோம் அதிதமதாய் அனுட்டானத்தின் பேரே. 129

செபத்தின் பெயர்

மதிதமெனும் பதலிக மனோவலிக மென்று
மடவான சல்புத்தி ராயமென்றும் பேரு
வதிதமெனுங் கெங்காயன மென்றும் பேரு
வசனித்தோம் சருபாயன மென்றும் பேரு
நதிதமெனும் பணியாதட மென்றும் பேரு
நலமான மவுனவுரு வென்றும் பேரு
சுதிதமெனுஞ் ஞானவுருத மென்றும் பேரு
கருவான யோகாந்திர உதமசெபத்தின் பெயரே. 130

சடலத்தின் பூசை

செபமான அங்கபூசை யாத்மபூசை யென்றும் பேரு
செயமான வாசிபூசை யென்றும் பேரு
நடமான காயபூசை யென்றும் பேரு
நலமான மூல பூசையென்றும் பேரு
கடமான வுள்மூலபூசை யென்றும் பேரு
கருவானக் கணேச பூசை சிவசத்தி பூசை
மடமான பிராணாய பூசையிண்ட பூசையென்றும்
அருளினோம் சடலத்தின் பூசையதின் பேரே. 131

வஸ்துபாத்திரத்தின் பெயர்

பூசையாம் ரசபாத்ரங் காந்தத்தின் பாத்திரம்
பிண்டபாத்திரம் அண்டபாத்திரங் கபால பாத்திரம்
வாசையாந் துத்திநாகப் பாத்திர மென்றும் பேரு
வளமான அயபாத்திரம் என்றும் பேரு
நாகையாம் தாம்பர பாத்திரம் என்றும்! பேரு
நலமான வங்கபாத்திரம் என்றும் பேரு
ஆகையாம் வெண்கல பாத்திரம் என்றும் பேரு
பொன்வெள்ளி பாத்திரம் அருளானவாமஸ் பாத்திரத்தின்
பேரே. 132

பாத்திர மாஞ்சிதம்பர பூசைவாலை பூசை
பரிவான நவக்கிரக பூசை யென்றும்
தாத்திரமாந் தீட்சை பூசை அஷ்டமாபூசை
தருவான சித்தர் பூசை லோகயென்றும் பேரு
வாத்திரமா முப்பூவின் வாத பூசை
மணிமந்திர வயித்திய பூசையென்றும்
ஆத்திரமாஞ் சமாதி பூசை கும்பத்தின் பூசை
அடவான மவுனமதின் பூசையதின் பேரே. 133

பூசையெனுஞ் சகலகரு வெளியதாகப்
புகட்டினோ மேழாங் காண்டம் புதுமையாகும்
வாசையெனும் பரிபாஷை யுரைய தாக்கி
வசனித்தோஞ் செந்தமிழால் சித்தர்க்கெல்லாம்
ஆசையெனு மெய்ஞ்ஞானக் கருவை விண்டோம்
அடவான பேர்களெல்லாம் வெளியாய் விண்டோம்
பாசையெனு ஞானகண்ட மேழாம் பீடம்
பாலித்தோம் முழுது ஆதியந்த முற்றே. 134

ஏழாவது காண்டம்

முற்றிற்று.

கடவுள் துணை

அகத்திய முனிவர்

திருவாய் மலர்ந்தருளிய

பஞ்ச-காவிய நிகண்டு-800

எட்டாவது காண்டம்

ஆதிபரிபூரணத்தின் சோதிபாத மகண்ட பல
சிவனுமையாள் அயனும் போற்றி
சோதியெனும் பூரணமாம் வாதசுரூப
சுதிமுடிவான சர்வானி போற்றி
வேதியெனும் விசுமனுட கமலம் போற்றி
விதியான நான்மறையோன் வேதமாம் போற்றி
பாதிபூரண சிவகாமி பாதம்
பண்புடைய முன்னோர்கள் பாதங்காப்பே. 1

முன்னான கரிமுகவன் கந்தன் காப்பு
மொழிநாலு வேதமறை முன்னோர் காப்பு
அன்னான நவசித்தாள் ஐவர் காப்பு
அருளான பஞ்சபூதந்தான் காப்பு
கன்னான சிதம்பரத்தின் கருவின் காப்பு
கைலாச மூர்த்தியருள் கமலங் காப்பு
சன்னான பிரமசர சோதித்தாய் காப்பு
சண்முகன் சடாதாரங் கமலங் காப்பே. 2

கமலமெனும் லட்சண நூல் அதீதமான
கருவான பாஷையதின் கருவை யெல்லாம்
வமலமெனுங் கமலம் போல் எண்ணூ றின்னூல்
வசனித்தோங் காண்டம் எட்டுங் கடைகாண்டம் பார்
அமலமெனு மெட்டாவது காண்டம் பாரீர்
அருளான லட்சணத்தின் உயிரெல்லாந்தான்
நமலமெனும் பாஷையென்ற மறைப்பெல்லாங் காண்
நன்றாகப் பார்ப்பவர்க்குச் சொன்னோங் காணே. 3

காணப்பா சுந்தரமே புலத்தியா கேள்
கருவான முப்புண்ட லட்சணத்தின் கூறும்
வாணப்பா வாத்தி லட்சணத்தின் கூறும்
வயித்திய மாந்திரிகத்தின் லட்சணத்தின் கூறும்
நாணப்பா ஞான வேதாந்தத்தின் கூறும்
நலமான யோகமதின் லட்சணத்தின்கூறும்
ஆணப்பா ஆண்பெண்ணின் லட்சணத்தின் கூறும்
அஷ்டவசியக் கூறும் அருளுவோமே. 4

அருளுவோ நாதவிந்தின் லட்சணத்தின் கூறும்
அடவான வாதபித்த சிலேத்பனத்தின் கூறும்
மருளான மவுனத்தின் லட்சணத்தின் கூறும்
மகத்தான காயாதி கற்பத்தின் கூறும்
வருளுவோம் புருஷலட்சணக் கூறுந்தான்
வசனிப்போம் வாதமதின் லட்சணக் கூறுந்தான்
நருளுவோம் அண்ட லட்சணத்தின் கூறும்
நளிநமாம் பிண்ட லட்சணத்தின் கூறாமே. 5

கூறான அத்தினியின் சங்கினியின் கூறும்
கூறரிய சித்தினி பத்மினியின் கூறும்
நாறான நாற்சாதி லட்சணத்தின் கூறும்
நாதாக்கள் மறைத்த பரிபாஷைக் கூறும்
வாறான லோகசித்தர் கருவிக் கூறும்
வளமாக லோக லட்சணத்தின் கூறும்
ஆறான ஐம்பூதக் கருவின் கூறும்
அதீதமெனும் இலட்சணத்தின் கூறுசொல்வோமே. 6

சொல்லக்கேள் புலத்தியனே ராசயோகி
சூட்சாதி சூட்சமத்தின் கருவைக்கண்டு
வல்லக்கேள் இந்தஎண்ணூர் காண்ட மெட்டும்
வசனித்தோம் சகலகலை நிகண்டாய்ச் சொன்னோம்
அல்லக்கேள் ஆயிரத்து அறுபத்துக்குள்
அறுபத்து நாலுகலை பாஷை சொன்னோம்
வல்லக்கேள் மாமறையோர் மறைத்த சூட்சமெல்லாம்
வெளியாகச் சொல்லிவிட்டோம் இந்தநூற் கருக்காணே. 7

கருவான முன்னோர்கள் பாடியதோர் நூல்கள்
கண்டுஅதின் கருஅறிவது அரிது பாரீர்
கருவான நூலிதுபார் அகராதி நிகண்டு
காணரிது காணரிது அமுர்தையது வாகில்
கருவான கருக்களெல்லாம் அவர்க்கே எய்தும் பாரு
கருமிகட்கு காணாது கருவிடையம் பார்த்தால்
விரிவான விரிவெல்லாம் இந்நூலிற் காணும்
வேதாந்திகட்காக விளம்பினோம் பாரே. 8

சையோகலட்சணம் -வெண்பா

விளம்பக்கேள் சுந்தரமே விந்து தனிலாண்பெண்ணும்
உளம்பக்கேள் உற்பவித்த உருதியைக்கேள் உயிர்வாழ்க்கை
விளம்பக்கேள் சுந்தரமே விந்தொன்று ஆணழியப்பந்து
வொளிஞால மதிற்பதிந்த தெண்ணால் சுரோணிதந்தான்
விளம்பக்கேள் சுந்தரமே விந்து பெரிதாகியது
அகண்ட பரிவாசல் கடந்து சென்றால் கருப்பற்று
விளம்பக்கேள் கருவான விந்து எவ்விதமென்றால்
புருஷர் சையோக ரதிபுணரிதுவே. 9

இதுவான லட்சணந்தான் எவரறியுஞ் சிவயோகி
மதுவான வமுர்தமது பூரணத்தால் அபானனது
இதுவான புருசதி யிழைந்து புணர்ந்தாரானால்
ததுவான சுவாச மொன்றில் அறுலீலை காமதுயல்லதிகார
இதுவான சுவாச மொன்று மெழுந்து கூத்தாடி னின்றால்
பவனித மமுர்தம் பொங்கிடக்கல் வரும் இடது பக்கம்
இதுவான செயலறிந்து வேந்திழையே நீகேளாய்
வலது பக்கங் கரமதனால் வாச்ச முக்கே. 10

மகனான புருஷரைத் தான்மருவலிதஞ் செய்மாதரசே
கபடான சூதறிவாய் கன்னியே கேளுன்னிதமாய்
மதனான திரேகமெல்லாம் மகிழ்ந்து தொண்ணூற்றாறு கருவி
உதமாக விந்தில் வருமோகேள் அபானவாய்வு
மதனான வாய்வு வொன்றுமண்பூதமைந்து பேரறிய
தசமாக விந்தில் வருதன்மையறி யுண்மையிது
மதனான வாழ்மயிலே மண்டியிட்டுத் தட்டி னாக்கால்
சதமான லிங்கமதில் கழன்றிடுமே. 11

சுவாசலீலை

அகன்ற போதேமயிலே காணிரே சுவாசமது
அண்டத்தனு நீண்டுவருந் தோணியது போல்வில்நாணி
அகண்ட பருவதம்போல் அபானவாய்வு உட்சேர்ந்து
உகாந்த காலம் வரும் ஆண்மையுடனாகி வரும்
விதங்கேளு அகன்ற கருமாதி புகைபுக்கின தோராமாகில்
மனமுவந்து ரதிபேரில் மனம்புகழாம் காமமயம்
நயன்ற மயமன் மதரதியு நன்முயல்போல் முத்தமிட்டு
மருவி விளையாடிடுவார் மனமகிழ்ந்தே. 12

வேறு

மனமான புருஷருக்கு அபான வாய்வு எழுந்தால்
மகத்தான லிங்கமது தானுபோல் நீளும்
அனமான மாயாசத்தி மையல்பார் அதிதம்
அச்சணமேஸ்திரி மோகி சுவாச லீலையாகும்
கனமான கபீலீலை செய்யலாம் பார்
கன்னியர்க் கெட்டங்கு லத்தட்டடுமை யாலாகி
நனமான உதானனுடை பார்வையானால்
நாட்டலாந் தனுவாலே நாதங் கனியாமே. 13

கனியமா மவள்நாதங் கயளுமதையா
கருவான நூலதனில் நாதம் வாங்கி
பெனியமாம் பீங்கானிற் பிழிந்திரு பலந்தான்
பிலமான ரசபற்பந்தான் விராகனிடையிட்டு
வனியமாஞ் செவ்விளநீர் நாழிசலம் விட்டு
வளமான ஆவின் வெண்ணையிரு பலந்தானிட்டு
மணியமாம் நாற்பதின் மேல்மேகக்கூர்தான்
மாதுரதி யாலேசட நொந்ததாமே. 14

செடமான மேகமது இருபத்தொன்றும்
செப்பிவன மண்டலத்தில் ஓடிப்போகும்
அடமான விதமெல்லாம் மத்தித்தாயானால்
அருளினோம் புருஷயோகக் கிருதமது வாகும்
வடமான விம்முறைதான் பலிதமது வாகும்
வஞ்சியர் மேலாசை விட்டுக் கிருதமதையுண்ணு
நடமான நாளொன்றில் இருநேரமையா
நாட்டுவாய் கெச்சக்காய் பிரமாணந்தானே. 15

தானென்ற மண்டலந்தா னந்தப் படியுண்டால்
　　தப்பாது விந்து கல்லாகி விடுமையா
ஏனென்ற இரண்டு மண்டலம் இதனைக் கொண்டால்
　　இளகி விட்ட முட்டெல்லாம் மெழுகது போலாகும்
நானென்ற ஆனுவத்தாற் சொல்லி விட்டோம் இதனை
　　நாட்டிலே காமுகர்க்கு நாடினதேயென்றால்
வானென்ற மாமரையோர் சாயமது வெய்தும்
　　மகத்தான வித்தையெல்லாம் அழிந்துபோம் என்றே. 16

கிருதம்

என்றான போகிகளுக் கடுத்ததே இக்கிருதம்
　　என்னாணை புலத்தியனே இதை வெளிவிடாதே
அன்றான கிருதமதை உண்டு சதாகாலம்
　　அருள்பெறவே வாசியதை யண்டக் கல்லாக்கி
சண்டான மௌனயோகம் ராசயோகஞ் செய்வீர்
　　சமர்த்தான ராசானந்த யோகமது செய்வீர்
நன்றான மகாராச யோகமது செய்வீர்
　　நலமான சமாதியோகங் குளிகையோகஞ் செய்யே. 17

செய்யப்பா சௌமியத்தில் சூஸ்திர மெண்ணூறில்
　　செப்பினதோர் அறுபத்துநான்கு யோகஞ் சொன்னோம்
ஐயப்பா வறுபத்து நான்கு யோகத்திற்கும்
　　அருள்பெறவே செய்யும் விதம் அன்பாய்ச் சொன்னோம்
மெய்யப்பா அதற்கெல்லாம் இந்தக் கிருதங் கொண்டால்
　　மேலான பரகதியில் மேலாம் பாரு
பொய்யப்பா சொல்லவில்லை பூபதியே கேளு
　　புகழான சித்தர்க் கெல்லாங் குருகிருதமாமே. 18

கிருதமதில் உலகமதில் தேறும் பேராகில்
　　கெணிதமதாய்ச் சொல்லுகிறோம் புலத்தியாகேள்
வருதமெனும் வேதநூற் பாஷையதை
　　அறிந்து வசனித்த சாகரத்தின் வண்மையதைக் கண்டு
விருதமெனும் பெரியோர்கள் விஞ்சையை யறிந்து
　　விளங்கினோ நல்வினை தீவினையைக் கண்டு
மிருதமெனும் பாவபுண்ணிய விசிர்தமதை யறிந்தோன்
　　மிகவும் பண்போர்களுக்கதிக மவர்தானே. 19

அதிகமாம் சிவயோகி யவர்க்குப் பேர்நாமம்
அவர்சரிதை யோகமதில் அடிப்பட்டவராகில்
மதிகமாங் கிரிகைதனில் மாந்தரீக மாய்ந்த
மட்டுப்படா வாசியதை வளமாய்க் கட்டி
மதிகமாம் பஞ்ச லக்ஷணமதை ஆய்ந்து
அறுபத்து நான்குகலை சித்து விளையாடி
பதிகமாம் இக்கிருதம் பூதாதி கிருதம்
பஞ்சபூத யத்துக்கு குருகிருத மாமே. 20

ஆமப்பா சுந்தரமே சகலகலை யறிந்து
அதிகமா மெஞ்ஞான வேதமயமாகி
வாமப்பா பலபல சஞ்சலத்தை விட்டு
மண்டல நாள் இருபோது வளமாய்க் கொண்டால்
போமப்பா வெள்ளரிசி தாழியது கொண்டு
ஓகோகோ கழுதைப்பால் அரைப்படிதான் கொண்டு
பாமப்பா பசும்பாலும் அரைப்படிதான் சேர்த்து
பனிநீரு நாலுபலம் பரிவாயதிற் சேரே. 21

சேர்த்து சலமரைப்படி தானிட்டு அதிற்றாக்கி
செயமான வெள்ளரிசி யேழுதரம் கழுவி
ஆர்த்துவப் பாண்டமதில் அரிசியதை இட்டு
அடுப்பின் மேலேற்றி வன்னியக்கினியை மூட்டி
நார்த்து அதைச் சமைத்து அன்னமாறி வைத்தையா
நாளொன்றுக்கு இருவேளை கொடுக்காபுளி கூட்டி
பார்த்து கறிஉப்பதனை மூன்றுதரங் காச்சி
பண்மைபெறுஞ் சுத்த கரிஉப்பதனைக் கொள்ளே. 22

பத்தியச் சிறுபயறு

கொள்ளப்பா சிறுபயறு குழம்பதுவு மாகும்
கூறான பத்தியமிது குணமுள்ளோர் செய்வார்
அள்ளப்பா அக்கிருதம் உண்ணும் பண்போர்கள்
அடவான பத்தியமிது யாருக்கும் விள்ளலாகா
அள்ளப்பா அபினி கெஞ்சா வஸ்துவை நீதள்ளு
ஆரிழையார் சையோகம் புணர்ச்சி தள்ளு
விள்ளாதே ஒருவருக்குஞ் சுந்தரமே கேளு
விளங்கினோம் பத்தியத்தால் வெகுசித்தியாமே. 23

ஆண்சாதி நாலுக்கு

சித்தியென்ற ஆண்சாதி நாலுண்டு கேளு
செப்புகிறோம் புலத்தியனே இந்த எண் ணூறில்
வித்தியெனும் விதவஸ்த சுபசாதி யென்றும் பேரு
விவேகமுள்ள பயிரபதி சாதியென்றும் பேரு
சுத்தியெனுஞ் சாமசாதியென்றும் பேரு
சைதன்னியப் பிரகாச சாதியென்றும் பேரு
முத்தியெனு ஆண்சாதி நான்கின் பெயர்கள்
முக்கியமாய்ச் சொல்லிவிட்டோம் ஆண்சாதி நாலே. 24

நாலான ஆண்சாதி நான்கினுட பேர்கள்
நளினமதாய்ச் சொல்லுகின்றோம் ஒவ்வொன்றாய்க்கேளும்
காலான கருக்குருவாம் இந்த எண்ணூறில்
கருணைபெறச் சொல்லுகிறோங் கடைக்காண்டம்இதனில்
ஆலான பரிபாஷை அ'தீதமெலாங் கண்டு
அனைவர்க்கு மகாத்தெளிவா யருளுவோம் நாம்
தூலான தூலமதின் பூட்டெல்லாம் சொல்வோம்
துதிபெறவே அகத்தியனும் சொல்லுங் கவியாமே. 25

அஸ்தசுகஜாதி

கவியான பிரேமாகசாதி யென்றும் பேரு
கருவான திபனாத சாதியென்றும் பேரு
பவியான மதிநில நாதியென்றும் பேரு
பழவங்க வுபசாந்த சாதியென்றும் பேரு
பவியான பதிபால சாதியென்றும் பேரு
பரிவான குமணதனு சாதியென்றும் பேரு
தவியான தவபோத சாதியென்றும் பேரு
தருவஸ்து சுகசாதி லக்ஷணத்தின் பேரே. 26

சைதன்னியப் பிரகாதசாதி

சாதியென்று மபரித வுயல்சாதியென்றும் பேரு
சார்வான வீரபோக சாதியென்றும் பேரு
ஆதியெனும் மரவசாதி யென்றும் பேரு
அந்த பரிமளசாதி விநோத சாதியென்றும் பேரு
பாதியெனும் பாங்கிவிம்ப சாதியென்றும் பேரு
பாடினோம் இந்தப்படி பதமோதக சாதி
வேதியானு விகளோங்க சாதியென்றும் பேரு
விளம்பினோம் பயரபதி சாதிலக்ஷணத்தின் பேரே. 27

பேரான பதிசுரோத சாதியென்றும் பேரு
பேசினோ முயல்காம சாதியென்றும் பேரு
வாரான பாலைநிதம் பசிளதாதி யென்றும்
வசனித்தோம் மதனவட புகழ்சாதி யென்றும்
காரான கனபேதம் நிப்பானசாதி யென்றும்
கருவான நிகழ்சாதியென்றும் பேரு
தேரான திசநித சாதியென்றும் பேரு
தெளிவான சாதி லட்சணத்தின் பேரே. 28

தெளிவான மருழோத சாதியென்றும் பேரு
திருபுவன சாதியென்று மவைமாசாதி யென்றும்
வளிவான தயநாத சாதியென்றும் பேரு
வசனித்தோம் மெய்ஞ்ஞான உபதேச மென்றும் பேரு
களிவான கண்ணாதசாதி யென்றும் பேரு
கருணைபெறு மசிகரந்த சாதியென்றும் பேரு
நளிவான விந்துலாதி நாதியென்றும் பேரு
நாம்சொன்னோம்சைதன்னியபிரகாதசாதிலட்சணத்தின்பேரே.29

பேரென்ற ஆண்சாதி நாலினுட பேர்கள்
பேசினோம் ஒவ்வொன்றாய்ப் பிரித்துப் பரிபாஷை
ஆரென்ற யோகசித்தர் அனைவருமே தேற
அருளினோம் இந்த எண்ணூறு அதித நிகண்டாக
வாரென்ற புருஷ லட்சணம் நீயேயானால்
வசனித்த பொருளறிந்து வளமாய்ச் செய்வீர்
நேரென்ற நிகண்டிது தான் ஆயிரமும் பார்த்தால்
நிகரில்லாப் பொருள்களெல்லாம் நேராகத்தெரியும்பாரே. 30

நேரான மர்மமெல்லாம் நிகண்டு தனிலறியும்
நிகரில்லாப் பொருள்களெல்லா நிராமயம் போற்றோற்றும்
வாரான மாமறையோர் முன்னோர்கள் சொன்ன
மகத்தான நிகண்டல்லாம் ஆய்ந்து கணக்கிட்டால்
வேரான வித்துவான்களின் மார்க்க மெல்லாந் தோன்றும்
விசிதமுள்ள யோகியென்றால் விதமறிவார் பார்
ஆரான அகத்திய மாமுனிவனுட வாக்கியம்
அருளினோஞ் செந்தமிழால் இந்த வெண்ணூறே. 31

பெண்சாதி நாலுக்கு

நூறான ஆண்சாதி நாலினுட பேர்கள்
ஓகோகோ சொல்லிவிட்டோம் உண்மையிது பாரு
வாரான பெண்சாதி நாலுண்டு கேளு
வசனிப்போம் அத்தினி சங்கினி தானென்றும்
தேறான சித்தினி பத்மினி தானென்றும்
செப்பினோம் மகாதெளிவாய்த் தெர்ந்தோருக்கும்
காறான சாதியிலே பெண்சாதி நாலு
கருவாகச் சொல்லிவிட்டோம் ஒவ்வொன்றாய்க் கேளே.32

கேளப்பா சுந்தரமே புலத்தியனே கேளு
கேவலமாய்ச் சொல்லுகிறோம் உனக்காய் நாமும்
வேளப்பா எரித்த சிவன் அனைவோருக்கும்
விந்துதனிலுற் பவித்தார் வேறொன்றில்லை
கேளப்பா வாராது கொடும்பாவி யல்ல
குருபுத்திரனானதனால் லட்சணமாய்ச் சொன்னோம்
ஆளப்பா எனைஆண்ட கர்த்தன் சொல்ல
அறிந்து மனதறிவதனால் அருளினோமே. 33

அத்தினி சாதியின் பெயர்

அருளினோம் உத்தம தேசியென்றும்
ஆதிபரி பூரணமாம் பீதசமென்றும் பேரு
முருகுவோம் பதசகமம் என்றும் பேரு
முலாவிவம்ப மென்று மதற்குப் பேரு
வருளுவோம் விவ்வித சாதியென்றும் பேரு
வளமான வருமழிங்க சாதியென்றும் பேரு
பருளுவோம் முதல்பதுமாதர்சாதி யென்றும் பேரு
பாடினோம் அத்தினி சாதி லட்சணத்தின் பேரே. 34

சங்கினி சாதியின் பெயர்

சாதியெனும் வினோத விபங்கும் பதிசாதி
சாபரதி யதீதமெனுஞ் சாதியென்றும் பேரு
வாதியெனு மருரத்தான விசேக்ஷணி தானென்றும்
வதனநிஞ்ச சுந்தரமெனுஞ் சாதியென்றும் பேரு
வேதியெனும் விடைகாலிரதனே சாதியென்றும்
விரும்பும் பசுங்கிளிமாது சாதியென்றும் பேரு
நீதியெனும் ஞானமறிந்த பரிபாஷை
நிலைபெறுங்காண் சங்கினி சாதிலட்சணத்தின் பெயரே. 35

சித்தினி சாதியின் பெயர்

சங்கமெனும் மதனசம் போகியென்றும் பேரு
சாரவொயில் நேத்திர விழிசாது னிதானென்றும்
அங்காமனு மாத்தும சியோதி யென்றும் பேரு
அச்சுகுயில் மாதரென்று மவர்க்குப் பேரு
துங்கமெனு மோகசயல் சாதியென்றும் பேரு
துந்தம விதரத்தின சாதியென்றும் பேரு
கங்கமெனுங் காமரதி விமோதமென்றும் பேரு
காமியதி மோக சித்தினி லட்சணத்தின் பெயரே. 36

பத்மினியின் பெயர்

அதிதமெனும் பதுராந்த மாதுவென்றும் பேரு
அபிநிதம பாதுமிது பீதமிதா னென்றும்
வதீதமெனு மதுபரிமாது வென்றும் பேரு
வாதப சிரோமணி யென்றதற்குப் பேரு
மதிதமெனும் சிவித பராயணி தானென்றும்
மறஞ்சயனு சாதியென்று மவர்க்கு நாமம்
பதிதமெனும் பதிவிரம மாட்டென்றும் பேரு
பாடினோம் லட்சணமாய் பத்மினி சாதிலட்சணத்தின்
பேரே. 37

பாடினோம் இந்தப்படி எண்ணூறு தன்னிற்
பரிபாஷை அதீதமெல்லாம் பார்த்து ஆய்ந்து
ஓடினோ முண்மை தீமையிவ் விரண்டுந்தான்
நாம்சொன்னோம் ஆயிரமாய்க் காண்ட மெட்டாய்
சாடினோம் அப்பொருளை அறிந்தாராகில்
சமர்த்தான மெய்ஞ்ஞானி அவர்க்கீடுண்டோ
பேடியாய்த் திரிந்ததனால் ஆவதென்ன
பேய்மக்காள் இதைஅறிந்து பேசுவீரே. 38

பேசுவோம் சகலகலைக் கியான மெல்லாம்
பேரான யிந்நூலிற் கருவி யெல்லாம்
நாசுவோம் அகராதி வேதாந்த பீடம்
நண்பனான சிவயோகி நலமாய்க் காண்பார்
மூசுவோ முப்பூவின் சாதிநாலு
மூணியே சொல்லுகிறோம் உண்மையாக
வாசிவோம் வாசிமலர் பரிமளங்கள்
வசனிப்போம் வழலை யென்றும் பேரே. 39

பூநீர்

வாலையென்ற பூநீறு யிது மூன்றாகும்
வாதநிதுக் காதியெனு மகத்தாம் பேரு
காலையெனுஞ் சாதிமூன்றும் முப்பூ வாச்சு
காரசாறங் கணமுதலான அதிதமாச்சு
நாலையென்ற பொருளெல்லாம் மூலமாச்சு
ஞாயமாறாக வென்றால் முப்புதானும்
ஆலையென்ற கன்னிமது சலம் பொசிப்பார்
ஆத்துமாவி னிலைஅறிவார் அறிந்தோராமே. 40

முப்பூ

அறிவோர்கள் முப்பூவை அறிய வேண்டும்
அதையறிந்து சிவயோகஞ் செய்ய வேண்டும்
மறிவோர்கள் அதன்பிறகு வாசி காணவேண்டும்
மகத்தான அப்பியாசம் செய்யவேண்டும்
மதனலேகியம் கிருதமுண்ண வேண்டும்
நறிவோர்கள் மவுனநிலை யறிய வேண்டும்
ஞானவேதாந்த மெய்ஞ்ஞான பரகெதியே. 41

பூநீர்

பரமான குருபத மென்றும் வாசமென்றும் பேரு
பரிவான பூதநீசிசைய மென்றும் பேரு
அரமான அசிதமயப்பூ வென்றும் பேரு
அக்கவள மென்றதற்கு அதிதப் பேரு
சரமான சாத்திரவசமென்றும் பேரு
சமரபரிவான பூதகலைய மென்றும் பேரு
துறமான திரேசன்னியென்றும் பேரு
துருவான பூநீறு லட்சணத்தின் பேரே. 42

பேறான வாமப்பூ வாழமணத்தா னென்றும்
பேசினோம் பஞ்ச சங்காத மென்றும் பேரு
வாறான ரவிசஞ்சமென்றும் பேரு
வளமான சிவபோத மென்றும் பேரு
தேரான சிரோதயல மென்றும் பேரு
தெளிவான கருவடமே என்றும் பேரு
ஆரானஆத்திசிரட மென்றும் பேரு
அருளினோம் பூநீரிலட்சணத்தின் பேரே. 43

வாலை பூநீர்

பூணமெனும் பூபதி நீர்காதுட மென்றும்
போதகமா மென்றதற்குப் பேருண்டாச்சு
வாணமெனு மரகத வாஞ்சை யென்றும் பேரு
வளமான பீசமெனு மதற்குப் பேரு
தானமெனு மணரும் வேதவிஸ்தார மென்றும் பேரு
தாசவகை வினோத பூசையென்று மதற்குப் பேரு
ஆனமெனும் ஆதவாழ் பூடென்றும் பேரு
அருளினோம் வாலைபூநீரிலட்சணத்தின் பேரே. 44

வெண்பா

பூநீறது மூன்றினுட போதகமே சொல்லிவிட்டோம்
மாதரசே நீ கேளாய் மதியறிவை சாதனை செய்து
பூநீறது மூன்றினுட புகழதனையே யாரறிவார்
பேணியது போவேற இயம்பினோம் உண்மையறி
பூநீறது மூன்றினுக்குப் போதமயமா மாகில்
வாதமெல்லா மனதறிவால் வணங்காண்பான்
பூநீறது மூன்றினுட பொருள் தனையே
நாமறிந்தோம் சேதியிது மாமயிலே செப்பு. 45

கவிலட்சணவாணர்-வேறு

செப்புவோம் சுந்தரமே நன்றாய்க் கேளு
திருவருளா வுருவருளா குருவருளா ரென்றும்
அப்புவோம் அயமானர் என்றும் பேரு
அருளான லெட்சணவாளர் என்றும் பேரு
நப்புவோம் நயபுரு கோதனென்றும் பேரு
நாதநந்த ஈசையதாம் லெட்சணவானென்றும்
தப்புவோம் லோகசன நாதரென்றும் பேரு
சாற்றினோம் லட்சணவாணரின் பெயரே. 46

பண்டிதர் லட்சணம்

வாணராம் புனரோதயம் அமவாரி யென்றும்
வருக்ஷரிக அண்டித லட்சணவா னென்றும்
ஆனராம் ஆமடங்க பண்டித ரென்றும் பேரு
அனோத லட்சணம் என்றுமவர்க்கு நாமம்
கானராங் கருவாளி புருநீதமென்றுங்
கருநாத பண்டித லட்சணவா னென்றும் பேரு
பூணராம் புவனோத விரோதமென்றும்
புகட்டினோம் பண்டிதர் லட்சணத்தின் பேரே. 47

கலுவலட்சணம்

பண்டிதராம் பரிமள குகணத்தந்தா னென்றும்
பாடினோம் சூரியத மென்றும் பேரதற்கு
அண்டிதமா மண்டவாரு வென்றும் பேரு
அடவான பூதவன மென்றும் பேரு
கண்டிதமாம் கபாலாட மென்றும் பேரு
கலகண்ட வென்றதற்கு வதிதப் பேரு
மண்டிதமாம் ராசிதக மென்றும் பேரு
மகத்தான பேரிதற்கு கலுவ லட்சணத்தின் பேரே. 48

சாத்திர லட்சணம்

மதுவான வேதழதமயமா மென்றும் பேரு
மகத்தான ஞான போதக மென்றும் பேரு
அதுவான மவுனபத பாஷை யென்றும் பேரு
ஆரியம் சராரிய மென்றதற்குப் பேரு
ததுவான சலவித்த மென்றும் பேரு
சத்த குஞ்சர மென்றதற்குப் பேரு
வதுவான வாலமய மென்றும் பேரு
வருஷித்தோஞ் சாத்திர லட்சணத்தின் பேரே. 49

வருஷமெனும் பூதாதி ஐந்தருவினாலே
வசனித்தோஞ் சுந்தரமே சொல்லக் கேளு
திருஷித்த நிராமயத்தின் அனுக்கிரகத்தினாலே
நிகழ்த்தினோஞ் சித்தருக்கு நெகிழ் பந்தமாக
அருட்சித்தோம் ஆரறிவாரிந்த வெண்ணூர் கருவை
அறிந்த சிவயோகி யவரறிவார் பாரு
தெசனித்த நிகண்டுவகராதி யாகச் சொன்னோம்
தெளிந்த பண்பே அறியும் வெகுசித்தி முத்தியாமே. 50

முத்தியெனுஞ் சித்தியதை அறிய வேண்டும்
மூலமுதல் ஆறுவரை ஏறவேண்டும்
சித்தியெனும் மாயத்தினாசை தள்ள வேண்டுஞ்
சாமீபப் பதவியிலே சார்வாராகில்
அத்தியெனும் வாசியது அப்புறம் போகாது
ஆனை மதயானை பலம் அருளும் உனக்கையா
நித்தியெனும் வேதாந்தி நீயே யானால்
நிராசையத்து நேமநிட்டை செபதபங்கள் சய்யே. 51

செய்யுஞ் செபதீட்சை பெருசத்தியுட தீட்சை
தெசதீட்சை நயதீட்சை தியான சித்திவேண்டும்
ஐயஞ் சிவயோக சத்தியோகஞ் செய்ய வேண்டும்
அருளினதோர் மகராஜ யோகஞ் செய்ய வேண்டும்
பையுமுடற் கூறுதத்துவ மதனை யறிய வேண்டும்
பண்போர்கள் செய்பாகங் கைபாகம் வேண்டும்
மையுமகராதி யின்னூல் நிகண்டதுவும் வேண்டும்
மகராச யோகியென்று இத்தனையுங் காணே. 52

காணப்பா சுந்தரமே இந்த எண்ணூறுதான்
காமுகர்க்குங் கள்ளருக்குங் காண்பித் திரானால்
ஏணப்பா யிடிசிதற முடிமேல் வீழும்
எய்துமென்ற கருமமெல்லாம் எய்தாது பாரீர்
வாணப்பா இந்தநூல் அறிவுள்ளோர் பார்த்தால்
வாதியெனுஞ் ஞானியாவர் வளமாக வாழ்வார்
நாணப்பா சடலமதின் கருவதனைக் கொண்டு
நளினமதாய்ச் சொல்லிவிட்டோம் ஞாயமதாய் நாமே. 53

விந்துவிட்டால் யோகங்கள் வெளிவிடாதே

நாமென்ற இந்த நூலெண்ணூறு தன்னை
நாடதிலே ஒருவருக்கும் நாட்டிடாதே
வாமென்ற புருஷரத்னம் நீயேயானால்
வாதமென்ற கருக்குருவை வளமாய்க் காண்பாய்
ஏமென்ற இந்தநூல் எட்டாங் காண்டம்
இயம்புகிறோம் லட்சணமாய்க் கருவைக் கேளு
வெமென்ற புலத்தியனே ராசயோகி
விருதாவில் நூலிதனை விளம்பிடாதே. 54

விளம்பக்கேள் லட்சணவான் நீயேயானால்
விந்ததனை வீணாக விட்டா யென்றால்
விளம்பக்கேள் யோகமென்ன மவுன மென்ன
வேதாந்தஞ் சித்தாந்த ஞான மென்ன
விளம்பக்கேள் வாதமென்ன விருதாவாகும்
வேதாந்த மிதுக்கு நடுமை யாகும்
விளம்பக்கேள் விவேகமென்ன சுகந்தானென்ன
வேதாந்தி நீயானால் விளங்குஞ் சித்தே. 55

கலிப்பா - விருத்தம்

சித்தாகிய வெகுலட்சணக் குருவாகிய குறிகள்
செயலுஞ் சுழிமவுனக் கருகழியாகிய சடலம்
வித்தாகிய விரைகண்டனர் விந்தாகிய நாதம்
இதுலட்சணம் மொழி நூலது மேன்மைப் படுமாகில்
சத்தாகிய பூநீர்தன்னில் சாரச்சலமாகில்
சார்வாயதில் பனிநீர்விடு சமர்த்தாய் புலத்தியனே
நெத்தாகிய விந்தால் சலநேர்மைப் படுமாகில்
நிகழும் வெகுகுறி கேளுறுநிலை கண்டனரறியே. 56

குருபதிகட்டு

நிலையாகிய நாதமதில் நீரைக்கலக்கிடவே
நெகமுஞ் சலமது போலது நேர்மைப்படுமாகில்
விலையாகிய பூநீர் குழம்பது போலதுவாகும்
விந்தால் ரசமேவும் ரவிவித்தால் அதைக் கட்டும்
அலையாகிய விதுதானறி அருளும் பெரியோர்கள்
அவர்தானருள் குருவாகிய பூநீர் சவர்க்காரம்
கலையாகிய மனமாலிகைக் காணப்படும் அருமை
கருணைப்படு மொழிபோலது கட்டுங் குருபதியே. 57

முப்பு முரு

பதிமேவுதல் மெழுகாமிது பண்மைக் கரமதனால்
பரிவாகிய வுரமேவகல் பலகையது போல
அதிமேவுதல் கருவாகிய பூநீர் சவர்க்காரம்
ஆறுமதி தலமாகிய தேறுமிது குருவால்
மதிமேவுதல் பொதியைப் பதி மவுனக்குருவாகில்
மனமே வுறிகனந்தனைக் குணமாவினதக்காண்பீர்
நதிமேவுதலோகந்தனில் ஞானியார் அறிவர்காண்
நலமான புலத்தியனே கருநளினமிது அறியே. 58

சவர்க்கார கன்னம்

கருவாகிய பூநீர் சவர்க்கார மிதுவாகில்
கவிவிந்துட நாதம்விடு கருவாகிய சிலை
மருவாகிய அண்டக்கரு மூன்றுமொரு இடையாயதன்
மேலருள் பதிஏழுடன் மறுவாலதைச் செய்வீர்
அருவாகிய தன்மேலிரு கவசந்தளைச் செய்து
அடவாய் ரவியில் உலர்ந்ததனில் அதுபாகமுமாகில்
குருவாகிய மயில்மேற் புடமே குறிகண்டுடன் செய்தால்
கூராகிய மதிமேவுதல் நிறமத்தனைப் பாரே. 59

விருத்தம்

இதற்குச் சூட்சம் சௌமிய சாகரம்

பாரப்பா புலத்தியனே மெய்யாய்ச் சொன்னோம்
பாகமறி சௌமியத்தில் இதுதான் சூட்சம்
ஆரப்பா சொல்வார்கள் சொல்லாரையா
மகத்தான சுன்னமிதால் வேதைகோடி
கோரப்பா தவப்பலந் தானதிக மாகில்
குருசுத்தி யாகுமப்பா கொடிதாஞ் சுன்னம்
சாரப்பா யிச்சுன்னஞ் சவர்க்காரச் சுன்னம்
சாயுச்சிய பதவியிலே சேர்ந்து நில்லே. 60

நில்லப்பா சுந்தரமே ஒருநிலையாய்த் தான்
நிச்சயமாய்க் கருக்களெல்லா நிலையாய்ச் சொன்னோம்
கல்லப்பா மன்மதனை யெழுத்து ணாக்கிக்
கசடான கோழையெல்லாம் கழட்டினாக்கால்
சொல்லப்பா சுந்தரம் போலமுர்தமாகுஞ்
சோதித்தாருஞ் செய்யார் சுரூபநிலை கண்டு
புல்லப்பா சவர்க்கார மறிந்தாரானால்
புலத்தியனே யுனக்கொவ்வாம் புகழ்ந்து பாரே. 61

புகழ்ந்துபார் அதித நூலெண்ணூற் பீடம்
பூநீர் சவர்க்காரச் சுன்னம் கடுகளவினாலே
அகழ்ந்துபார் தாம்பரஞ் சேர்உருக்கில் நீயும்
அதிற்பாய்ச்சு மிச்சுன்னங் கடுகளவு போட்டால்
நகழ்ந்துபார் ராசயோகத் தங்க மாகும்
நலமான வங்கமதிற் கடுகளவு பாய்ச்சு
வகழ்ந்து பார் வங்கமெல்லாந் தங்கமாகும்
மகத்தான வெள்ளிதனில் தாக்கிப் பாரே. 62

தாக்கினால் ரசித தங்கமாற்றோ கோடி
தவறாது சூதமதைச் சுத்திசெய்து
வாக்கினாற் சொன்ன தென்றுமலைய ாதே மக்காள்
வாலைரசம் ரவியில்வைத்துச் சுன்னங்கடுகளவிட்டால்
நீக்கினாற் காமவிளை நீங்காதையா
நிசமான தசமதுவுங் கட்டிப் போகும்
பாக்கியவான் செய்தாரென்றாற் பழுதோயில்லை
பறைமக்கள் செப்பும் வித்தை பலிதமென்றே. 63

அத்தினி புருஷலட்சணம்

பலிதமென்ற அத்தினியின் லட்சணத்தைக் கேளு
பண்மை பெரியோர்கள் சொல்லும் பழமையாலே
அலிதமென்ற முடிமயிர் தங்கம் போல்நிறமாம்
அகண்டமெல்லாங் கோழியென்ற முட்டைசவ்வினாகில்
கலிதமென்ற கண்ணொளிவு ரவிபோலச் சுந்தரங்
காந்தியிலே அதுவதிகம் புருவங்குல வாலாம்
சலிதமென்ற சந்திரன்தான் நேத்திர நேர்மை
சைதன்னிய கண்டம் கடவாய்க் கோவையென்னே. 64

கோவைக் கனிவாயுதடு மேற்கீழாகுங்
குருந்த வடைபரியோமமுருளையாகில்
பாவையிலே யிதுவதிக மத்தினி சாதி
பாதிதனில் மானிடரில் பிறவி நீரும்
நாலையிலே விருகரும விலர்பத்தாகும்
நட்சத்திர சோதியொளி நடைமேதுவாம்
ஆவையிலே யவள்பாதமலர் தாமரைக்
கஞ்சது நடுவில் விலையில்லா யிதழ்மலராமே. 65

கலிப்பா விருத்தம்

மலராகிய கரமாகுதல் விரல்கந்தமுமாகில்
மதனப்படுமலர் மல்லிகை நிறமாகுதல் பாரீர்
கலராகிய வெகுலட்சண மிகுசுந்தரமாகில்
கலை பாரிதுதுடையத்தனை கதிலிக்காணுவாழை
அலறாகிய வெகுபாரிது மழகத்தனை யிதுதான்
ஆறுமறியார்களிதின் அருளத்தினி சாதி
வலராகிய வசியந்தனில் ஞானகக்கருமேவும்
அது காவிடை புரியாரிட மகிபூபதி யறியே. 66

விருத்தம்

பிதியான துடைபவனி யோனி சிறுவாசல்
பளிங்கு நிறமது போலாம் பாரீர் பண்போரே
சதியான அத்தினிதான் சாதியிது வாகுங்
சாயலறிவ ரெவரும் அறிதலரிதாகும்
நதியான சங்கினி யினிலட்சணமே கேளு
நாம்சொன்னோம் லட்சண காவியமதனைப் பாரு
அதியான வறியுடையோரறி தலிதுவாகில்
ஆசானையடுத்துக் கருவறிந்துப் பாரே. 67

சங்கினி லட்சணம்

அறிந்திடுவீர் சங்கினிதான் முடிலட்சணங் கேளு
ஆரணியில் பிறக்கரிது பிறந்தேயாகில்
கறிந்திடுவீர் முடிமுடி மயிர்தான் கருமஞ்சள் போலாம்
கண்டுபிடி மூன்றுமயிர் துடிக்கும் பாரீர்
வறிந்திடுவீர் வாதியென்றால் மயங்காதே கேளுமவளுடைய
அண்ட முடியாமை முட்டை போலாம்
சறிந்திடுவீர் சடலமெல்லாம் பூவரசம் போலாம்
சங்கினியின் கண்ணொளிவு சந்திர களையாமே. 68

களையான புருவமதின் கருக்குருவு வாலாம்
கடைஞ்ச குமிழ் போலொளி முகநிறந்தான் மஞ்சள்
தலையான தரிப்பாச்சல் மேருவது போலாம்
தருவான புங்கமதின் காதொளிவுமாகில்
பளையான பழமையிது பாரீர் பண்போரை
பரிவான மூக்குநிறங் கிளிமூக்கு வாகும்
எளையான யிந்திர கோபம் உதடு நிறமாகும்
எலுமிச்சம் பழமிது போல் ஸ்தன பாரமாமே. 69

ஆமென்ற தனுசுமிரு கிழ்மேலுதடாகில்
அருமதென வாறிழவ பாளையத்தின் குரும்பி
நாமென்ற நாவொளி வுவரசயிலை போலாம்
நயனமிரு முழிசெவ்வாலரணி நிறமாகில்
வாமென்ற யிடைபிடி அடையாள மேலதான்
வாய்திறந்தவள் பாடுங்குயிலோசைகாணீர்
வேமென்ற விதுலட்சணக் குறியிது வுமாகில்
மேலான விருதுடையுங் கதலிநடுத் துண்டாமென்றே. 70

சங்கினிசாதி

என்றான கணுக்காலும் பசும்பொன் நிறமாகில்
இயல்பான பாதமது மருகோவை நிறமாகும்
நன்றான நாபிவெண்தாமரை யினொளி போல்
நளினவொயில் நடையதுவு நாரைநடைபோலாம்
அண்டான பவனிவாசல் யோனிசிறு குழையாய்
அடையாளஞ் சங்கினி சாதியதிக் குரலோசை
கண்டாயோ கால்விரல் கைவிரல் பத்தாங்
காணிரோ பண்போரே சங்கினி சாதியாமே. 71

காணீரோ மாமயிலே கருவிதனி லுதித்தவிதம்
நாணமாய்ச் சொல்லிவிட்டோம் நளினமதாய்க் கண்டு
காணீரோ யிக்குறியைக் காசினியில் மானிடர்கள்
வேணுமென்று வோருருதி விபரமதாயறிவதனால்
காணீரோ சங்கினியில் கருவதனைக் கண்டுணர்ந்து
மூலப்பொருளான விந்து முப்பறிவார் யோகிகள்தான்
காணீரோ மாமயிலே காவியந்தானைந்துக்கும்
பயனறியப் பரிபாஷை பாடினதே. 72

கலிப்பா விருத்தம்

பாடுங்கவி யறிவாகிய பாஷையிதுபோல பாடார்
பொருள் மூலத்தனை பண்போரறிவார் தானும்
நாடும் பதினெண் பேருட நூலதனைக் கண்டால்
நவிலுமவர் வெகுபாரிது ஞானமதுவாகில்
தேடுமறை முறையாகிய பொதிகைதனில் மேவுஞ்
செயமான முனியுரைப்பாரிது தெளியுங் கவியாகில்
கூடும் ரவிமதியாகிய வித்தா லுயிராகில்
குருலட்சன வேதந்தனைக் கூறுமுயிராமே. 73

உயிராகிய குருபாரிது உலகந்தனின் மனிதர்
மூலந்தனையறியார் வெகுகூரத்தனை பாரு
உயிராகிய கருகண்டவர் உலகந்தனில் அரிது
உண்மைப்படு தன்மைக்கரு உறுதிப்படுமாகில்
பயிராகிய செனங்களை வித்தா லுயிராகில்
படருஞ்சுரைக் கீரைபோலவும் பத்தும் விதியதனால்
வயிராக்கி யத்தினிச் சடமதனாற் குறிகேளு
மனமத்தனை பேயாகுதல் மதி தீவினையாமே. 74

மதியால்வருங் கருமங்களை மனுவா வறுத்திடலார்
மணமாலறி கொலைபாதக மறையாகிய சடலம்
ததியாகிய பருவந்தனி லுறையார் பொருளாகில்
தசமாலது சிசுபாதங்குலை கூறிது காணீர்
விதியால் வரும் வினையத்தனை மதியா லுரை யாமே
விழிமாதர்கள் கருவாகிய வித்தா லுயிர் நாதம்
ததியாகிய ஸ்திரியத்தனை கூறாய் வருஞ்செனனம்
சத்தானது வித்தாலதை சவரட்சணையாமே. 75

இணையாகிய வரையாறிது துறை கண்டனர்
பெரியோரின மாமது குணலட்சண மனமிச்சையாலாகும்
துணையாகிய துருகந் தனிலேறி விளையாடுந்
துதிபூபதி கனசத்தியில் துறைகண்ட வராகில்
அணையாகிய வாதந்தனை அறிவால் அறிவார்காண்
அதனாபதி மகிபூபதி யமராபதி யவர்தான்
கணையாகிய புலவாணரில் கவிவாணர்கள் அவர்தான்
கரைகண்டனர் வெகுலட்சண கரைகண்டனராமே. 76

கவிவாணர்

கருகண்டனர் உலகந்தனில் காணப்படு மருமை
கண்கோடியி லொரு மானிடன் கருகாணுவ தருமை
அருகண்டனர் வாறாகுதல் அமுதக்கவியாகி
ஆருமறியார்களிது அதுகாணுவது அருமை
சுருகண்டனர் சுருதிமுடி சுழியாகிறசுட்சஞ்
சொல்லலர் பெரியோர்களது துதியாவதுமருமை
குருகண்டனர் யெமசார்வனி குடிகொண்டவராகில்
கூறுங்கவி செய்வாரிது குணலட்சண மென்றே. 77

குணலட்சண மறியாதவர் குலதீவினையாகில்
குறிவாசி யிலுரையாமலுங் கூற்காணுவ தருமை
கணலட்சணக் கவியாகிய மவுனப் பொருளாகில்
கருணைப்படு சிவயோகிகள் கருசொல்வது மருமை
மனலட்சண மிதுபோலவும் அறியாதவர் அருமை
மனதால் வரும் கருமங்களை வஞ்சிப்பதும் அருமை
மெனலட்சணமிது போலவு மியல்வாவது மருமை
இயல்வஞ்சக் குலைகாமுர்கக் கிதுலட்சண மென்றே. 78

இதுவாகிய மடமாதரில் நடையாகிள குறிகேள்
இலவக்கினி குறிலட்சண மகப்பட்டு தேயாகில்
இதுவாஸ்திரி சாதியில் விஞ்சிப்பதும் விரல்தான்
இயல்பாமிது வீழ்பார்வையி லெவெர்பேரிது மயலாம்
இதுவாகிய மிடைகுஞ்சரத் துடைபாரிது மெதுவாம
இசையாடையாயுமது பாரிது விசையாகிய குறிகேள்
இதுவாகிய மதனாகிரி பொதிகதனில் மேவும்
இயல்பாமுனி மொழிபாரிது குணலட்சண மிதுவே. 79

இதுவாகிய உலகந்தனில் அவர்தான் மயல்மாது
இனிவாழ்குயில் தொனிபோலவும் இனிவாளுயல் வாக்கு
மெதுவாகிய மதுவத்தினி மிவர் சாதியின் குறிகாண்
மேன்மைப் படுங்கவி லெட்சண மேலாகிய புலவோர்
மதுவாகிய அமுர்தந்தனை மறுவால் சகிப்பார் காண்
மனதாலறி நிழல் பாருவை மதியாலது குறிகேள்
அதுவாகிய தவசிந்தனை யெக்காலமு மறவார்
அவர்காணுவர் ருசியாகிய அமுர்தப் பதியென்றே. 80

பதியாகிய வெகுசுந்தரர் பாடுங்கவி யாகில்
பண்மைபெறும் உலகந்தனிற் பழுதொன்றுமே வாயார்
அதியாகிய மொழி நூலது விழியாலமைப்பாகி
வதில்பாரிது கருகண்டன ரவர்காணுவர் குருவைச்
சதியாகிய மதியால்வருஞ் சகிபேச்சியார் காண்
சற்றாகிலுங் கனபாதகம் சாரார் அவர்குறிகாண்
விதியாலவர் உறுகாணுவர் மொழிபாஷை களாகில்
வித்தால் சடமொத்தால் குறிவெகுலட்சண மிதுவே. 81

செடமாகிய வித்தாலெடு செனனமது வாகி
செயலும் பலதுயரங்களைச் சினேகிப்பது மதிதான்
சடமாகிய படையானது குணம்காத்தது மதிதான்
சவரட்சணைக் கற்றாகிலுஞ் சகியாமலு மதிதான்
நடையாகிய விழைதாரியில் மயலானது மதிதான்
நாமிச்சையில் பழிகூறதை நாடிப்பது மதிதான்
இடையாகிய பொருளத்தனை யிகழும் அமைதிதான்
எவராகிலு ணமதாகுவ ரியலிப்பது மதியே. 82

மதியால் வருங்கருமங்களை வசனிப்பது மதிதான்
மனவேதக பொருளாசையில் வர்ணிப்பது மதிதான்
கெதியால் வருங்கனவாண்மையுங் கொடிபாதக மதிதான்
கெருவங்களைப் பகைபோலவுங் கெருவிப்பது மதிதான்
அதியால் வருந் தவபோதக வருளித்தது மதிதான்
அருவந்தனி லுருவானதும் அகமானது மதிதான்
விதியாய் வரும் பதிவாதிகன் வெகுலட்சணமாகில்
மிருபண்டித ருலகந்தனில் வெகுவுத்தம ராமே. 83

வெகுலட்சணமாகில்

உலகந்தனின் மொழிமாதரொரயில் சங்கினியாகி
உயிர்க்குண்டமிகு லெட்சணம் உசிதமிவராகில்
உலகந்தனின் வெகுருத்தினி உபரத்தின மாது
உயலோவர் மயலாகிய வழியோ விழிப்பார்வை
உலகந்தனிற் பரிபாஷைக ளவர்தான் குறியாகில்
யுகமாகிலும் மறுபேதக நினையார் ஒருநாளும்
உலகந்தனிலவர் வாண்மைகள் வெகுபாரிது குறிகேள்
உயலோவவர் நடைகுஞ்சர முயலாவது மொன்றே. 84

முயலாவது வினிகாணுவர் தொனிசங்கது போல
மொழியாவது விடிபோலவு முதிரு மழைமாரி
முயலாவது பதுமாதிவர் விழியோசுழி மஞ்சள்
மேல்பாரிது வடபாருவை விழிகண்களுமாகில்
முயலாவது கழியா செடமுதவாதது பாரு
மூலகந்தனிலவள் சங்கினி மூலக்குறியிதுதான்
முயலாவது விருகாணிரு புருஷோத்தும யோகி
முயலாடையில் வெகுமஞ்சளாய் முதலட்சணமாமே. 85

கனயோகிகள் லட்சணம்

முதலாகிய சயிலந்தனி லுணர்வா ரவராகில்
முதிசுந்தர மோகக்கனி முயல்பாதிவள் காணும்
முதமாகிய கடைவாயிதழ் முதிரும் பளபளென
முதவிஞ்சையில் துயிலஞ்சுடன் முவாடை வள்குறிகாண்
விதமாகிய விவர்சாடையில் பரிபாஷை களுயலம்
வெகுசித்திர பதுமைக்கினி மேவும் வடிமாது
சதமாகிய வுயர்சங்கினி சாதியிவராகில்
சார்வாயறி கனயோகிகள் சாய லிதைக்காணே. 86

சயலானது சிவயோகிகள் சாயலிதைக் கேளும்
சாற்றாகிலு மனவேதகம் சகியா ரொருநாளும்
பயலானது மவுனந்தனிற் பகருங் குறியதனால்
பரிபாஷைகள் அறிவாரவர் பண்போரவர்தானும்
மயலாகிய வுலகந்தனின் மடவார்கனயோகி
மகிழ்பாரிது கனவண்மையு மதியுண்மையு மறவார்
புயலானது வடபாரிசம் விழியாகிய நேர்மை
புவனங்களில் அவருத்தமர் புகழத்தனையாமே. 87

புகழாகிய விழிநேர்மையின் போதந்தனை கேளும்
புலவோர்களி லவராகுவர் பொதுமைத்தனை யாகில்
அகழாகிய விழிசோதியில் அமருங் கனரவிபோல
அவுசாந்தியில் வெகுரட்சணம் அறியப்படுமாகில்
மகழாகிய மவுனங்களை அறிவா ரொருநாளும்
மாளாதொரு வாசிதனில் மருவாரவர் காணும்
நகழாகிய துடைபாரிது வெகுபாச்சலுமாகில்
நமனாகிலு மவர்பேரிலே தாடாரிது குறியே. 88

நாடாகிய வுலகோர்களில் நாமத்தனை கேளும்
நஞ்சாகிய விஷம்போலவு நகையாரவர் சேரார்
காடாகிய கிரிச்சாரலில் திரிவர் பெரியோர்கள்
கனகந்தனை வேண்டாரவர் கருமங்களிற் சேரார்
பாடாகிய சிவவேடமே பலநாளுமே புகழ்வார்
பருமாதரை வருகோ லுடன் படிலிங்கமே யுணர்வார்
கோடாகிய குறிலட்சண மிகுலட்சண யோகி
குறிபாரவர் குறிகுண்டல மகிபூபதி யவரே. 89

அவராகிய செவியந்தனில் அழகாய்த் தொடுப்பார்காண்
அதுவானது கறதுங்களை அருள்வார் பழியிலை
பவராகிய பழந்தனில் பண்மைப் பெருங்குறடாம்
பகலாகிய ரவிநேர்மையில் பற்றுங்கனல் போல
மவராகிய கலையாசன மறவார் பெரியோர்கள்
மடிமீதிலே வெகுநீறுடன் அணியுஞ் செபமாலை
நவராகிய நாமங்களைக் குறிலட்சணமாக
நவிலும் பதிபொதிகைக் கிரிஞானக் குருபதியே. 90

பதியானது வெகுஞானிகள் பரஞானிகள் குறிகேள்
பகருங்குறி குணலட்சணப் பறியுங் கலைமறிவாய்
விதியான தால்சடலந்தனை விலக்காம லுந்தடுப்ப
வித்தா லுயர் விரதங்களை மேவாற்பரதேசி
சதிமானது மெவர்பேறிலுங் குற்றங்களை நினையார்
சதாகாலமு முலகந்தனி லெளியோர வராகில்
மதியானதே படிலிங்கமாய் மவுனந்தனில் செவிப்பார்
மணிமந்திர அவுடதந்தனை மதிஞானிகள் குறியே. 91

குறியத்தனை மிகுலட்சண பரதேசிய மவர்தான்
குலகப்பரை வரமாகிய கரமீதிலே யுணவார்
குறியத்தனை யெழுவச்சிரக் கூறத்தனை சடலங்
குலவாக் கதிவெகு ஞானிகள் குருபத்தரு மவர்தான்
குறியத்தனை யெவர்கைத்துடல் சடமொத்த வராகில்
குறிலட்சண மிதுபோலவுங் குறியாயுணரார் காண்
மறியத்தனை பொதியைத்தனின் மகிழுமுனி நாதன்
வசனிப்பது நூலிது மறிவிப்பது மென்றே. 92

என்றாகிய சடையொன்றுடனிருப்பா ரவருண்மை
இமைச்சாரலில் வலமாகிடு மிதுகேசரக் குளிகை
நன்றாகிய குருநந்தியின் வாக்கதன்னைக் காண்பார்
நமனேயவர் வபமானிக ளெதிராளி களுண்டோ
வண்டாகிய வடிவங்களை வரையாறுமோ காண்பார்
வசியந்தனை நசியங்களை மறவாரொருக்காலும்
கண்டாயிது மிஞ்சுந்தர கவிபாரிது வசனங்
கருவாளிக ளறிவார் கனகமலக்கலை யென்றே. 93

கலையானது துரியந்தனில் கதறாமலும் வாசி
கற்போலவும் வெகுவித்துடன் கட்டுங்குகைவாசல்
மலையாதிரு புனல்மாதரில் மயலாகிய மனிதர்
மவுனந்தனில் சாரார் குறிமளிப்பாள் ரதிமாது
குலையாதிரு கொண்டுடன் குலைமாதகறாவார்
குருநிந்தனை சிரமீதினிலிடி போலவு மாகில்
துலையாதிது மிகுபாதகம் புலையரவ றாகில்
துருமார் பகையொரு நாளுமே துசனிப்பது விதியே. 94

விதியால் வரும் விசிதங்களைபதி மேவுதவபோல
மிவராசர கள்சுறுவானில் புலவோரிவராகில்
மதியாலுணர் வெகுலட்சண குறிப்பார் புலத்தியனே
மவுனந்தனில் கருவாளிகள் வர்க்கந்தனைக் கேளும்
சதியாலவ ரொருநாளுமே சாராரவர் காணுஞ்
சடைமூன்றுட செபமாலைகள் அரவசன மாகில்
பதியால் வரும் ரசபாத்திரங் கெவுனக்குளியாகில்
படைபோலவு மெதிர்பாருவை பரமாத்துமம் அவரே. 95

படையாகிய மனவாசியில் பகருமவராகில்
பலனாவித யுககாலமு மவுனந்தனை யறிவார்
சடையாகிய சிவயோகிகள் குருவாகிய வாசான்
சதமாகிய புலவோர்களில் சாரவித்தனையாகில்
நடையாரவர் துரைசண்டனர் நவப்பிரமமு மவர்தான்
நாள்தோறுமே அப்பியாசம்ப் நவ்வுமவராகில்
கடையாகிய மவுனக்குறி கருகண்டவர் வசனங்
கர்மத் தொழிலுணர்வதனை கலையாதிருமனமே. 96

சித்தினி சாதிக்குறி

திருவானது மருவக்குயிலரு சித்தினிசாதி
செயலட்சண குறிகேள் மனதெளிவத்தனை யதனால்
மருவானது முகலட்ச நிறகோவதி நிறமாம்
மவுனக்கிளி யிருவாசியில் மகிழ்வத்தனை போல
இருவானது அவர்சாதியில் வெகுலட்சண மாகில்
ஆடைத்துடைமிகு பேடியா மவர் சேதியைக் கேளும்
குருவானது சிரமோமுடி மருவந்தனைமாத்
குமிழோ குகம் விழியோரவி குணமித்தனை மனமே. 97

குணமாகிய ரதிமன்மத கூறாகிய செனனம்
குலமோஅவர்மான மிச்சையில் குயிலோ அவள்குரல்தான்
மனமாகிய மயிரோநிறம் வயிடூரியம் போலா
மவர்சுந்தரவா யோகினி மாதித்தனை குறிகாண்
செனமாகிய சென்மச்செவி யொயிலோவவள் நடைகேள்
செயலானயதயின் குறிகாணித செயல்சித்தினிசாதி
கனமாகிய கடைவாயிதழ் கமுகத்தனை நிறமாங்
கதிரர்க்கினி கோவைப்பழங் கண்சாயல் கேள்மனமே. 98

செயலான வரிவளாகுதல் சசியோ யிவராகில்
சவுனப் போதினில் வெகுலீலைகள் சகிவாளிவள் மாது
மயிலாகிரி துயில்சாரிடுங் குயிலோயிவன் வாக்கு
வலமோயிடம் புசபாரிச மயிலோ ஒளிவாகில்
நயலாமதிகளை சுந்தர மொழியோயுரை யெட்டு
மயிரோ கணுபாதம் வரை நாடியுமயிர்மான்
பயலான வளதிமோகினி பாளையிவராகில்
பரிவத்தனை குறிலக்ஷணம் பண்மை பெறுமனமே. 99

பன்மைபெற மனமாமிது பரிலட்சணமாகில்
பண்போ ரிதையறிவார் செயல்பரிபாஷை யுமாகில்
உண்மைக்குரு திறமாகிய வுலகந்தனில் பற்றே
யொருமைப்படு மவர்சாதியின் குறியித்தனை விதமாம்
தண்மைக்கரு புருஷத்தனமருவித்த வறாகில்
தன்மந்தனை பிதிர் போலவுந் தருவார்சுகபோகி
வண்மைக்குரு பொதிகைதனில் வளருங்குரு நாதர்
மனமால் மகிழுரையாகிய வசனிப்பது மனமே. 100

வசனிப்பது மதுசித்தினிகைச் சாடையுமாகில்
வருஷிப்பது மயில்பாஷையும் விழிபார்வையு மாகில்
துசனிப்பதுந் துயிலாடையுங் கரநீக்குர வராகில்
துயரங்களும் விசனங்களுந் தோன்றுமவராகில்
நசனிப்பது மேல்பார்வையு நயனம் சுழலாகில்
நரமானிட ரிவர்காண் குறி நவசித்திர மாது
அசனிப்பதும் அவர்லட்சணம் அறிவோர் பெரியோர்கள்
வசனித்தனை குணலக்ஷண விதமித்தனை மனமே. 101

பத்மினி லட்சணம்

மனமித்தனை முணலட்சண விதமெத்தனை குறிகாண்
மதுபற்மினி உருலட்சணம் நிறவுத்தமறாகில்
குணமெத்தனை யவர்சாயலின் கூறத்தனை கேளு
குலவர்க்கமு மதுசத்தது குலமித்தனை விதமாம்
கனமித்தனை யவளுத்தமி பத்தினி யாகில்
சடமானி டரவர் சேரிடங் கலவாளிவள்மாது
தனமித்தனை குறிமாறிட வெகுநித்தமுமறவாள்
தவமாகிய வதுசிந்தனை தனவாளிரு மனமே. 102

மனமாலிதை காணப்படு மறையோரிட வாக்கிய
மதியால் பழுசிதறாதிரு மறவாதேகேள் மனதே
புனமாதிவள் ரவுகுஞ்சகி துயிலாடையினிறங் கேள்
புவனைக்கறி கருநீலியின் புகழ்சாயலின் குறிகாண்
அனமாழிதை யறியப்படும் பொறுமைப்பதுமாது
அவள்போறதோவொயில்சாடைகேள்அசல்மான்கலையாகில்
எனமானது முடிசித்திர நிறமோயது பச்சை
இயல்போரச கெவுனக்குளி முடியோ யறிமனமே. 103

அறியாதவ ரிதுநூலட வறிவத்தனை கண்டால்
அவர்ஞானிகள் மிகவுத்தம ரறிவார் பரிபாஷை
குறியா தவமிருவாதவர் குணமத்தனையறியார்
குகைசாரலில் மருவாதவர் சித்தருமல்ல
பரியானதி மணிவாசலின் தசையாகிய மற்றும்
பலனாடியின் குறிகாணுவர் பரஞானிகளாகும்
மறியாதவரவர் போலவும் புரியாருலகத்தில்
மயிலேறியவர் அறிவாக மகிழ்வீர் குருமனமே. 104

விருத்தம்

அறிவாகச் சொல்லிவிட்டோம் புலத்தியனே யையா
அருளினோ நாற்சாதி லட்சணத்தைச் சொன்னோம்
சறுவாகச் சொல்லவில்லை யிவ்வெண்ணூற் பீடஞ்
சாற்றினோம் அகராதி நிகண்டிதாகும்
விரிவில்லாக் காண்டமெட்டு லட்சணமாய்ச் சொன்னோம்
விளம்பினோம் யோகிகட்கு விதமாய் நாமும்
திருவான மருவுருவின் வாசம் போலத்
திரட்டு கருக்கிடையாகச் செப்பினோமே. 105

செப்பினோ மதித நூல் சேதியெல்லாஞ்
செயலான பரிபாஷை யெல்லாந் தேற
செப்பினோம் அதனுடைய கருவைக் கண்டால்
இருக்கலா மிமைச்சாரலில் கற்பங்கொண்டு
ஒப்பினோங் கெவுனங் கொண்டு வோடலாகும்
ஓகோகோரசக்குளிகை போடலாம்பார்
வெப்பினோ மிந்நூலை வெளிவிடாதே
வெளிவிட்டால் திநரகில் விழுவார் தாமே. 106

தாமென்ற யிந்நூலை பதனம் பண்ணுக
தப்பாமற் சிவசத்தி பூசை பண்ணு
வேனென்ற கணேசன் கந்தன் பூசை பண்ணு
மகத்தான பயிரவத்தின் பூசை பண்ணு
வேமென்ற வேதாந்த பூசை பண்ணு
மேலாறாதார மதின்பூசை பண்ணு
நாமென்ற ஆணுவத்தைத் தள்ளிப் போடு
நாற்பது நாள்கற்ப முண்டால் நரைதான்போச்சே. 107

போச்சென்ற கற்பம் உண்ணு முன்பதாகப்
புகழாக நோயணுகா அமிழ்த முண்ணு
வாச்சென்ற மேற்சூடு அற்றுப் போனால்
மகத்தான மேகச் சூடற்றுப் போகும்
நோச்சென்ற நோயணுகாமற் றானேவுறுதி
படும்வச்சிரம் போலத்தேக மாகும்
காச்சென்ற கன்மநோய்ற்ற அற்றதானால்
கயிலாய தேகமதாய் காணுங் காணே. 108

காணப்பா சுந்தரமே சொல்லக்கேளு
கழன்ற தென்றாற் சட்டையது காயம்பிலப் படுங்காண்
ஆணப்பா நீயானா விந்நூல் பாரு
அசடரென்ற மாந்தரென்றால் அடுத்திடாதே
நாணப்பா சிவதீட்சை சத்தி தீட்சை
நாள்தோறும் மறந்திடா நளினமாக
கோணப்பா குறையேது வறுமை யேது
குருவாசான் உனதிடமே கொஞ்சுவாறே. 109

வாறான வாசிபலம் நன்றாய்க் காணும்
வாசியிலே சுவாசமதின ஒடுக்கங் காணு
மாறாத மப்பிராச மகத்துவங் காணு
மகத்தான ரசகுளிகை வளமாய்க் காணும்
பேறான பஞ்சகாவிய முங்காணும்
பேசினதோ ரின்னூலின் பெருமை காணும்
தேறான கருக்களெல்லாந் தெளிந்து தேறு
தெய்வத்தின் செயமாகில் தேறுவாயே. 110

தேறுதற்கு யோனியாசை விடாதே பாரு
திண்டியிலே மனதை வைத்தால் சிதறிப்போகும்
வீறுதற்கு விந்தாலே மதியைக் கூடு
விந்ததனால் நாதமதை விதமாய்க் கட்டும்
கோறுதற்கு கற்குருதா னிரண்டினாலே
கோடான கோடிவித்தை தொழிலேயாடும்
மேருவைத்தா னீராக்கும் இந்த வித்தை
மேலான சித்தர் செய்யும் விதமதாமே. 111

விதமான பண்டிதருக்கிடோ சொல்வோம்
மேலான யீடதற்கு யீடுண்டாமோ
அதுவார் சத்துருமித்துருக்க ளெல்லாம்
அஷ்டவசிய மாடும் தனவசியம் ஆடும்
செதமானார் ஸ்திரீ வசியம் புருஷ வசியந்தான்
செகவசிய முலகமெல்லாம் மிருக வசியந்தான்
உதமாகும் மகராஜ வசியந்தாடும்
உகவசியம் பூதகண வசியமதுவாமே. 112

சர்வவசியயீடு

வசியமாம் ரதிமாது பிறவிடையா நாதம்
அதிலெட்டுப் பலம்வாங்கிப் பாண்டமதிலிட்டு
அசியமாமாம் ஆண பிள்ளை பிறந்தேயாகி லதின்மேல்
மாக்கருத்தாண்டிப் படியும் பாரு
மசியமாமாக்கருள் நான்கு பலம் வாங்கி
மகத்தான நாதம் விட்ட பாண்டமதில் தாக்கி
பசியமாம் பேக்கருப்பஞ்சாறு படிவிட்டு
பணங்கள்ளு வொருபடிதான் பாண்டமதில் வாரே. 113

வாரப்பா வெள்வேலம் பட்டைச் சாறாயம்
வாரப்பா ஒருபடிதான் வளமாய் நீயும்
வேரப்பா வெண்சாவல் உதிரம்படி வாரு
வெள்ளைப் பாஷாணமதில் எட்டுப் பலம்தாக்கு
காரப்பா காட்டெருமை கொழுப்பு சேர்தாக்கு
கருவை ரத்தம் பிச்சுகருவாகப் போடு
ஆரப்பா ஆந்தைகோட்டான் பிச்சதனிற் போடு
அருளினோம் இந்திரகோபம் அரை சேருபோட. 114

போடப்பா புலத்தியனே ராசயோகி
பிண்டசரக் கதிலேயிரு பலந்தான் போடு
நாடப்பா நாதவிந்து விருபலந்தான் வாரு
நளினைமனுஞ் சுத்தசலமெண் பலந்தான் வாரு
பாடப்பா கவித்தும்மை நன்னாரி படரழிஞ்சி
பருவான வேல்வீதம் பலந்தான் போடு
தேடப்பா கழுதை நெய்தான் ஐம்பலந்தான்வாரு
சிறுகட்டு கொடிச்சாறு அரைப்படிதான் வாரே. 115

தானான யிவ்வகைகள் வீதங்குதையாகா
தப்பாமலிடை தவறாப் பாண்டமதிற் றாக்கி
வாறான சானக்கை அதன்மேல் மூடி
அண்டகருமை மெழுகதனாற் சந்துவா செய்து
கோனான கோழிவிந்தாற் சீலையேழுஞ் செய்து
குருக்கல்லு மன்னதின் மேற்குருங்கவசம் செய்து
ஆனான மண்டலந்தான் பூமிக்குழிதன்னில்
அப்பாண்டம் வைத்ததன் மேற்சமாதியெரு மூடே. 116

மூடியே மண்டலந்தான் பூமிதனிலிருந்தால்
மூதண்ட வான்குமரி நாதமிறங்கும் பார்
நாடியேயத நாடியிற் செழுமை மாக்கருதான்
நவநீத பாகதுபோல் நலமாய்க் காணும்
தேடியே யப்பாகம் செய்பாகமானால்
தெளிவான பாண்டமதை யெடுத்து நீ ஐயா
பேடியாய்த் திரியாதே மண்கவசம் வாங்கி
பேறான சீலையெல்லாங் கழற்றெறிந்து போடே. 117

போட்டந்த பாண்டமதைப் போர்த்திரேயானால்
பூதகண வேதாளம் அதனருகே காணும்
நாட்டந்த வான்குமரி நாதமதையப்பா
நலமான சிஷாவில் தெளிவை மிகவாரு
சாட்டுநீ அடியில் நின்ற பாகதனை யெடுத்து
சார்வான கல்வமதிற் சம்பிரதாய் நாடி
ஆட்டிந்த நாதமதை ஆறுபலம் விட்டு
அடவாக வற்றவற்ற ஆறுநாள் தானாட்டே . 118

ஆட்டினால் கருமெழுகு போலாகும் பாரு
அம்மெழுகை வழித்துக் குன்றியிடையது தான்பாகம்
நாட்டியே யிடுகுளிகைமாத்திரையாய்ச் செய்து
நாதாந்த சிரோன்மணியின் வாலைபூசை செய்து
காட்டிடா யிக்குளிகை கருணைபெற வேண்டுங்
கலியுகத்து மாந்தரெல்லாம் சைவசமா மென்னும்
பாட்டியே பண்டிதரே கேளுமதிதனிலே யுலர்த்தி
பதனமாய் சுரைசெப்பில் குளிகை தனைவையே. 119

குளிகையா மிக்குளிகை கைவசிய மானால்
குருவென்ன இதற்கீடு கூறப்போமோதான்
நளியாதே லோகமதின் பண்டிதரே கேளும்
நாட்டிலே மானிடர்க்கு நோய்வருமே யானால்
அளிகையாம் விஷமீதி லொருகுன்றியிற் கடுகு
அதற்கலந்து நோயாளிகட் கீந்தாயானால்
உளிகையாம் நோயெல்லாம் உடலைவிட் டோடும்
ஓகோகோ அவருனக்கு ஒருமைப்படுவாரே. 120

ஒருவனும் சதாகால முனைவிட்டுப் பிரியார்
உயிர்போகு நாள்வரைக்கு முனதிடமே யிருப்பாள்
அருமையெனு மிவ்வீறி ஆர்மக்களாவார்
அறிந்வர்களிம் முறையைத் தொழிலாகச் செய்வார்
வறுமையெனு முந்தனுக்கு வராதிது குளிகை
மண்டலமெல்லா மதனால் வசியமாமையா
சிறுமைவாரா துனக்கு அதித யீடுபாடும்
செப்பினோந் திரவியங்கள் கொடுப்பார் செகத்தோரே. 121

ஓரான யிடுபாகஞ் சொல்லக் கேளையா
ஓகோகோ மனிதருக்கு அவிழ்தம் அதிற்கொடுப்பாய்
பாரான யிடுமருந்து பரிட்சையது பாரு
பனைவெல்லம் காசிடையில் குன்றியிரு கடுகு
ஆரான தூள்செய்து அன்னமதிற் கலந்து
அவ்வெல்ல மதில்சேர்த்து நாயின் முன்னே வைத்தால்
ஆூர்தோறும் திரியுங் கருநாயது உண்ணும்
ஓகோகோ வெகுமயக்கம் உன்பிறகே வருமே. 122

ஸ்ரீவசியம்

வருகுமென்று நாயகனை வரவழைத்தால்
வாய்திறக்கும் போதிலது வருகும் பாரையா
நறுகுமென்ற விடுகுறியை நன்றாய்ச் சொன்னோம்
நாட்டிலே மனிதருக்கு நாட்டினாலையா
உறுகுமென்ற என்சிரசு படீரென்று வெடிக்கும்
ஓகோகோ பொதிகை நாயகன் சொன்னவுறுதிவாக்கு
அருகுமென்ற ஆரிழைமார் ஸ்ரீவசியம் கேளு
அண்டம் காக்கை அண்ட வித்திலுரைத்தது தாக்கே. 123

தாக்கியே வாவென்று ஸ்தனத்தை தொட்டால்
தப்பாமலுன் பிறகே தையல் வருவாள்காண்
நாக்கியே உந்தனுக்கு வேண தெல்லாங் கொடுப்பாள்
நாட்டிலே மனிதருக்கு யீடுயிதுதான்
வாக்கினால் சொல்லிவிட்டோம் பின்னுமொரு வசியம்
வசனிப்போம் புலத்தியனே புருஷ வசியந்தான்
போக்கிலே சொன்னதென்று மலையாதே மக்காள்
புருஷரத்தின மாகியப் பொடியறிவாய் நீயே. 124

புருஷ வசியம்

பொடியரிய கஸ்தூரி புனுகு விதமுழுந்து
போதரவா யெடுத்து கரம்நடுவில் வைத்து
அடியறிய செவ்வால் அரணைபித்துஞ் சேர்த்து
அரகராயிவ் வீட்டில் கடுகுவீதஞ் சேர்த்து
கடிகைக்குள் கன்னிமுலைப் பாலிடைதானிட்டு
கரமதுவால் மத்தித்து கருணை பெறவழித்து
நொடிக்குள் நெற்றிதனில் திலதந் தானிட்டு
செயம்பெறவே வீதிநகர் சுத்திவாவென்னே. 125

சுத்தியே மாநகரை வருகையிலே யப்பா
சுருதியாம் புருஷ ரெல்லாம் எதிர் கொண்டுபணிவார்
அத்திமத யானையைப்போல் வட்டமிட்டுச் சென்றால்
அவரவர்கள் திரவியங்கள் கொண்டுனக்கு தருவார்
புத்தியுள்ள சுந்தரமே புலத்தியனே யப்பா
புருஷரெல்லா மிவ்வீட்டில் போதமய மாவார்
குத்தமில்லை யிவ்வீட்டில் கோடாகோடி வசியங்
கூறினோம் ஆடும்பாம்பாயிது வாமே. 126

கலிப்பா

குரிவாகிய மொழிநூலது குணலட்சணமாகில்
குறிபார் சிவசனயோகி கூறத்தனையதனால்
மருவாகிய மலரா வாடையின் வாசமதமயனால்
மதியாகிய கலைசந்திர அதிசுந்தர மாகில்
திருவாகிய கருவாளிகள் அறியப்படு மின்னூல்
தெளிவாமிது அமிர்தக்கவி புலவோரருளுரைதான்
சருவாகிரி தாரலின் சாற்வத்தனை கண்டோர்
சமாதிக் குறிமிகுலட்சண வெகு உத்தமர் மொழியே. 127

மொழியாகிய வழிபாதைகள் முதலாய்க்குறி சொன்னோம்
முனையாகிய சுழியாதல மூலவரை யதனால்
வழியாகிய சலமாகுதல் மொழியுமொரு பொதிகை
வளரும் செழுதமிழாகிய வரையுங்கவி புலவர்
தழியாகிய சேனாபதி தழையுங் குருவமர்
சரணம்பணி விழலொன்றுள் தருவித்ததுமறுவால்
சுழியாகிய செடலத்தனை காரமலுங்காயம்
கனவாதைகள் கனமானதால் கருவானதும் செடமே. 128

வெண்பா

செடமுழுது மாமயிலே செப்பக்கேள் காண்டமெட்டும்
மருவளஞ் சித்தருக்கு வசனித்தோ மதிதநூல்
செடமுழுது மாமயிலே செகமதிலே மானிடர்கள்
சடவழியினாசை விட்டு நல்வினையால் நல்மனதாய்
செடமுழுது மாமயிலே தெளிந்து பஞ்சகாவியமும்
பலிதமதா சித்திபெறப் பலகலையும் பாடினோம்
செடமுழுது மாமயிலே செனித்த வெண்ணூ ராயிரந்தான்
அவர்கவியோ சொன்னதிந்த வாக்கிதுவே. 129

வாக்கான தின்னூலில் வசனிப்ப தெல்லாமருந்து
போக்கான பாதந்தனில் போட்டுவைப்பா யெட்டெட்டில்
நாக்காக லட்சணமா நாலுதிசை புலவருக்கும்
சாக்காகச் சொல்லவில்லை கார்குழலேநீ கேளு
போக்கான தெல்லாமறிந்து புகட்டிவிட்டோம் இன்னூலில்
வாக்கான வரிசையுள்ளோர் வசனிப்பார் கருக்களெல்லாந்
தேக்கான தென்பொதிகை தெட்சணாயனருள்
மொழிதான் பாகுபெறச் சொல்லிவிட்டோம் பயனறியே.130

விருத்தம் - காண்டம்

பயனறியா வாதத்தின் கருவை விண்டோம்
பாடினோம் மூன்றுகாண்ட முழுதுஞ் சொன்னோம்
அயனறிய வயித்தியத் திலிரண்டு காண்டம்
அருளினோம் சொச்சமில்லை முழுதுஞ் சொன்னோம்
மயமறிய மாந்தரிக மொருகாண்டஞ் சொன்னோம்
மருளுமெஞ்ஞானம் அதுவொரு காண்டஞ் சொன்னோம்
சயவறிய பஞ்சலட்சணத்திலொரு காண்டஞ்சொன்னோம்
பண்போரே சார்ந்தாரே. 131

தொகுப்பறியவும்

சார்ந்துபார் பஞ்சலட்சணங்கள் பார்ப்போர்
சாஸ்திரத்தின் வடசார்வு கண்டோர்
சார்ந்துபார் சிவயோகி மெஞ்ஞானத் தோர்
சமாதி குகையிருந்தபசி சித்தர்க்கெல்லாஞ்
சார்ந்துபார் வேதாந்தங் கற்றோர் பண்போர்
தவுசி முனிரிஷி மவுனிசார்ந்தோர்க் கெல்லாம்
சார்ந்துபார் யின்னூலு அதிதப் பீடம்
சகலகலை அறுபத்து நாலுசித்தே. 132

சித்தான அறுபத்து நாலு கலக்கியானம்
செப்பினோ மதினுடைய தெளிவைச் சொன்னோம்
முத்தான பதினெண்பேர் சித்தர்சொன்ன
மொழிகளெல்லாம் குருநூ லா மொழிந்தோ நாமும்
கற்றாலும் இது பொருளைக் காக்க வேணும்
கயிலாச மூர்த்தி யெனுமிருக்க வேணும்
சுத்தப் பரியுத்தமனாய் யிருக்க வேணும்
சூட்சசடாதார பீடமுழுதுங் காணே. 133

காணுதற்கு பரிபாஷை பேர்கள் சொன்னோம்
கடைக்காண்ட மெட்டாகில் கருவுஞ் சொன்னோம்
வேணுதற்கு பஞ்சகாவியத்தின் சூட்சம்
வெளிவிட்டோம் இன்னூலில் விளக்கமாக
வேணுமென்று கருவியெல்லாம் நன்றாய்ச் சொன்னோம்
உத்தமற்கே அதிதசித்தி உண்மையாகும்
தோணுமது அமர்ந்தந்த நீதம் போல
திரட்டினார் நிகண்டுரைத்தார் அகராதியாதியாமே. 134

ஆமென்ற அகராதி சொச்ச மெல்லாம்
அருளினோம் ஆயிரத்து அறுபதுக்குள்
காமென்ற கருக்க ளெல்லாம் வசனித்தோம்பார்
கடத்தேற செடலம் பெலப்படுக வென்று
நாமென்ற மாமுனிவன் உரைத்த நூலு
நளினமெனும் பதினாறு லக்ஷக்கவியாகில்
வேமென்ற காவிய நிகண்டாய்ச் சொன்னோம்
இதுகளெல்லாம்திரட்டியின்னூலின்மொழிசொன்னோமே.135

சொன்ன வாக்கியங்கள் பாசத்தால்
　　சுருபநிலை தான் இந்நூல் வெளிவிடாதே
அண்ணமொழி பஞ்சகாவியமும் இந்நூல்
　　அருளினதோர் சவுமியத்தோ டேழுநூலின்
மின்னமில்லா சூத்திரங்கள் அனந்தஞ் சொன்னோம்
　　பிரளாமலதுகளிட கருவை சொன்னோங்
சுன்னமொழி சிதம்பரமா வால பீடம்
　　கமலபத சரணமென்ற யெண்ணூற் முற்றே. 136

8-வது காண்டம் முற்றிற்று

பஞ்ச காவிய நிகண்டு - 800 முற்றிற்று.